பின்ன ரன்னவன் சிலதியர் யாரையும் பிறையூர்
பொன்னின் வார்சடை யெம்பிராற் காக்கிய புனித
னின்ன செய்தரு வமைச்சனை யுயிரொழித் திகழா
மன்னு நாய்களை வாளெறிந் தாருயிர் மடித்தான்.

(இ - ள்.) அதன்பின்னர், அவ்வைசியனுடைய தோழிகள் யாவரையும் பிறைச்சந்திரன் தவழும் பொன்போலும் நீண்ட சடையையுடைய எமது சிவபெருமானுக்குரித்தாக்கிய புனிதனாகிய அம்மன்னவன், இப்படிச்செய்யாதமந்திரியை உயிர்போக்கி இகழ்ச்சிசெய்திருந்த அவ்வைசியனை வாளால்வீசி உயிர்போக்கினன். எ - று. (௨௦௮)

அனைய ரீங்கிவர் வச்சிர மதலையுற் றழுங்கக்
கனைகொ ழுந்தழ லாங்கவர் மெய்யுறக் கழிந்த
நனைநி ணத்துளி நெய்யினா லெழுவன நம்பற்
கினைய செய்குநர் படுவன கொடுநர கிப்பால்.

(இ - ள்.) அப்பாதகஞ் செய்தவர்களாமிவர்கள். வச்சிரத்தூணைத் தழுவியிருந்த, சத்திக்கின்ற தீச்சுடர் அவர்களை உடலிலதாக்க, அவ்வுடல்களினின்றொழுகிய குளிர்ச்சிதங்கிய நிணத்தின்றுளிகளாகிய நெய்யினால் அக்கினியானது மீண்டும் ஓங்கிவளர்கின்றது. சிவபெருமானுக்கு இத்தகையபாவங்கள்செய்தவர்கள் அநுபவிக்கின்ற கொடூரமாகிய நரகங்கள் தாம் இப்பக்கலிலுள்ளன.

என்ற னத்தொடு நிகழ்த்தினன் கமலவீட் டிறைவ
னன்று ணர்ந்தன வோதிம மகமுற் றணுங்கி
நின்று மீண்டது நெடுமலரப் பீடிகை நிமலன்
சென்று தன்னுடைப் பதவியிற் றிருந்தகஞ் சிறந்தான்.

(இ - ள்.) என்று, கமலாசனனாகிய பிரமதேவன் தன்வாகனமாகிய அன்னத்துடன் சொல்லினன். அப்பொழுது இவற்றையுணர்ந்துகொண்ட அன்னம் பயமெய்திவருந்தி, அங்குநின்றுந் திரும்பியது. சிறந்ததாமரைமலர்ப்பீடத்தையுடைய பிரமன் அங்கிருந்துபோய்த் தனது சத்தியலோக பதவியில் மனமகிழ்ந்து வீற்றிருந்தனன். எ - று. (௨௧௦)

என்ப யாவையுஞ் சூதமா முனியெடுத் தியம்ப
வன்பி னோர்ந்தறி முனிவர ரதிசய மடைந்தார்
முன்பு முப்புர மெரித்தவன் முறைபிற ழாது
நன்ப கற்கழி தரச்செல வரிதென நவின்றார்.

(இ - ள்.) என்று சொல்லப்படுவனவாகிய சரிதங்களையெல்லாம் சூதமகாமுனிவர் எடுத்துத் திருவாய்மலர்ந்தருளவும், அன்புடன் ஆலோசித்தறிந்துகொண்ட நைமிசாரணிய முனிவர்கள் ஆச்சரியமுற்றவர்களாய், பூர்வத்தில் முப்புரங்களை யெரித்தருளிய சிவபெருமான் திருவாய்மலர்ந்தவேத சிவாகமங்களின் முறைமைகளில் மாறுபடாது நல்லகாலமாகக் கழியும்படி யொழுகுதல் அரிதாகுமெனச் சொன்னார்கள். எ - று. (௨௧௧)

அளவை யீதுகொண் டமைந்ததோ வவமதித் தனராய்ப்
பிளவி ளம்பிறைக் கண்ணியோற் பேணல ராகி
யுளநி கழ்ந்துள விகழ்ச்சியா லொழிவறு நிரையத்
திளகு றுதொழி பதகரை யிசைப்பன கேண்மின்.

(இ - ள்.) இவ்வளவிலேமுடிந்ததோ? பிளவுபட்ட இளம்பிறைச் சந்திரனை மாலையாகவணிந்த சிவபெருமானை அவமதிப்புடையவர்களாய்ப் பூசியாதவர்களாய், தாங்கள் மனதிற்கொண்டிருந்த அலட்சியத்தினால் அவியாத நரகத்தில் மீளாமலிருக்கின்றபாதகர்களைச்சொல்லுகின்றோம். நீங்கள்கேட்பீர்களாக.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பகரு மெண்வகை யோகமுந தனித்தனிய பயின்றியல் சிவயோகி
புகலு மாகம கடந்தரு நாவினன் புண்ணியப் பொருப்பன்னு
னிகலு முக்குறும் பெறிதரு சதானந்த னெனும்பெயர் சிறப்புற்றோ
னகில மோர்பதி னான்கினு மொல்லைசென் றறிநதொரு கணத்தெய்தும்.

(இ - ள்.) சொல்லுகின்ற (இயமம் நியமம் ஆதனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதியென்னும்) அஷ்டாங்கயோகங்களையும் தனித்தனிசெய்துதேர்ந்த சிவயோகியும், சிவபெருமான் திருவாய்மலர்ந்த சிவாகமங்களையோதியுணர்ந்த நாவையுடையவரும், புண்ணியமலைபோன்றவருமாகிய, பகைக்கின்ற முக்குற்றங்களையுங்கடந்த சதாநந்தரென்னுஞ் சிறந்த பெயர் பெற்றவர். உலகங்கள்பதினான்கும் அதிவிரைவாய்ச்சென்று பார்த்துக்கொண்டு ஒருக்ஷணநேரத்தில் திரும்புவர். எ - று. (உ௧௩)

வையம் யாவையு மொல்லைசென் றகனிலை மன்பதைப் பரப்பெல்லாஞ்
செய்த யாவையு மன்னர்செங் கோன்முறை யாவையுந்தெரிந்தீண்டப்
பைத ரும்பணி வேணியோன் சந்நிதிப் பகர்தரும் படந்தாங்கப்
பெய்த மாநிலக் கண்ணுற விண்ணுறப பெயர்ந்தன னொருகாலம்.

(இ - ள்.) உலகங்களெல்லாவற்றிலும் விரைவாய்ச்சென்று, இடமகன்ற உலகிலுள்ள ஆன்மாக்களெல்லாம் புரிந்தசெயல்களெல்லாவற்றையும், ஆங்காங்குள்ள மன்னர்கள் செலுத்துஞ்செங்கோன் முறைகள்முழுவதையும் உணர்ந்துகொண்டுவரும்படி, படத்தோடுகூடிய பாம்பையணிந்த சடையையுடைய சிவபெருமான் சந்நிதியில் விண்ணப்பஞ்செய்துகொண்டு, ஆதிசேடனுடைய சிறந்த பணமுடிதாங்கிய பெரிய பூலோகத்தைக்காணும்படி ஒருகாலத்தில் ஆகாயவீதியிற் சென்றனர். எ - று. (உ௧௪)

மேரு மால்வரை சூழ்வரு முலகெலாம் விண்படர்ந் தெழுந்துற்றான்
சார்வ ருந்தனித் தென்றிசை யடைந்தன னத்திசைத் தனிநாதன்
வார்க ழற்றிற லந்தக னெதிர்ந்தனன் யோகியை வழிபட்டான்
பேரொ ளிப்புனை யாசனத் திருத்தினன் செய்வன பலபேணி.

(இ - ள்.) பெரிய மேருமலையைச் சூழ்ந்துள்ள உலகங்களெல்லாவற்றிற்கும் ஆகாயவழியாய்ச்சென்று சேர்ந்தான். ஏனையோரால் அடைதற்கரிய ஒப்பற்ற இயமபுரத்திற் புகுந்தபோது, அந்நகரிலுள்ள ஒப்பற்ற தலைவனாகிய நெடிய வீரக்கழலணிந்தவல்லமையுடைய இயமன் அச்சிவயோகியை யெதிர்கொண்டர்ச்சித்து, செய்யவேண்டிய உபசாரங்களெல்லாவற்றையுஞ்செய்து, மிக்க பிரகாசமுடைய ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்தனன். எ - று. (உ௧௫)

மயிலை யோர்புடை யமைத்தரு ளெம்பிரான் வளரொளிப் பழங்காலக்
கயிலை நீத்திவ ணடைந்தனை யான்செயக் கடவதித் தவமன்றே
யெயிலை ரீத்தவற் காட்படு மவர்பெறும் பேறுபெற் றனனென்னு
வயிலை யேற்படை யந்தக னுரைத்தலு மருந்தவ னுரைசெய்வான்.

(இ - ள்). மயிலின்சாயலையுடைய உமாபிராட்டியாரை ஒருபாகத்திலமர்த்திய நமது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் மிக்க ஒளியுடைத்தாயப் பழைமையாகிய திருக்கைலாயகிரியை நீங்கி ஈண்டெழுந்தருளினீர். அடியேன் செய்யத்தக்கது இத்தவமல்லவா? முப்புரங்களை யெரித்தருளிய சிவபெருமானுக்கு அடிமைபூண்டவர்கள் பெறத்தக்க பேற்றையெய்தினேனென்று, கூரிய வேலேந்திய இயமன்சொல்லவும், அருந்தவஞ்செய்த சநாநந்தர் சொல்லுகின்றனர். எ - று. (உகச)

உலகம் யாவையு மொல்லைசென் றடைந்தன முன்னுடைத் தென்பால்வந், தலகி னீணர யப்பாப் பறிகுவா னடைந்தன மாற்போற், புலையர் தீங்குறு நரகெலாங் காட்டுதி யென்றலும் பொறிகாலுங், கொலைசெய் முத்தலைச சூற்படை யந்தகன் றெழுதுடன் கொடுபோனான்.

(இ - ள்.) உலகங்களெல்லாவற்றிலும் விரைவிற்சென்று திரும்பினோம். உன்னுடைய இயமபுரத்திற்குவந்து எண்ணிறந்த பெருநரகங்களின் பேதங்களையுணர்ந்துகொள்ளும்படிவந்தோம். சிவபெருமானைவணங்காத நீசர்கள்படிந்திருக்கும் கொடுந்தங்கிய நரகங்களெல்லாவற்றையுங் காட்டுகவெனக்கூறவும், தீப்பொறிகளைச் சிந்தத்தக்கதும் கொலைத்தொழில் செய்தற்குரியதுமான மூவிலைவடிவாயமைந்த சூலப்படைதாங்கிய இயமன் பணிந்து தன்னோடு அழைத்துப் போயினன். எ - று. (உகரு)

கூசு வெந்தழ லொழுகுறக் காசிய கொடுநுனை யுடக்கிட்ட
ஊசி யெங்கணு நிரைத்ததி னேட்டலு முள்ளுடல் புதைந்தூன்ற
வாசை யெங்கணு மழுகுர லலைப்புற வலறுவா ரவர்புன்றோன் [டார்.
மூசு வெந்தழல் வெதுப்பிய குறட்டொடும் பிடுங்குவார் முனிந்திட்

(இ - ள்.) கண்டோர் விழிகள் கூசத்தக்க வெவ்விய அக்கினியெழும்பக் காய்ச்சி வளைவாகிய கூர்மையும் உள்ளேதிருகலும் அமைந்த ஊசிகளையெங்குங்கோத்து அதைக்கொண்டு உடலிலழுத்தியவுடனே, அவ்வூசிகள் உடலினுட் புகுந்து தைக்கவும், திசைகளிலெல்லாம் அழுகுரலோசை முழங்க அழுகின்றார்கள். கோபமெய்திய இயமகிங்கரர்கள் அவர்களுடலின் மீந்தோலை மிகக் கொடுமையாகிய அக்கினியிற்காய்ச்சிய குறட்டினாற் பிடுங்குவார்கள். எ - று.

ஒழுகு சோரியொத் தூருக்கிய செம்பினிட் டமுக்குவ ருடற்புன்றோன், முழுகி வெந்துற வெடிப்பது வெண்ணிணங் கொதிப்பது மூளைச்சே, றிழுகு வெண்ணெயொத் துருகுவ திவைபொரு தெழுதொறு மிவைநோக்கிக், கழுநு னைப்படை கோத்தெடுத் தமுக்குவர் கண்மணி யெடுத்தோட.

(இ - ள்.) சோரியின்ற் உதிரம்போன்ற நிறமுடையதாயுருக்கிய செம்புக் குழம்பிற்போட்டு அழுத்துவார்கள். அப்பொழுது அவர்கள் உடலினுள்ளவுண் மையாகியதோல்முழுவதும் வெந்துவெடிக்கின்றது. வெள்ளிய நிணங்கொதிக்கின்றது. மூளைகள்சேறுகி வழுவழுப்பாகிய வெண்ணெய்போல உருகுகின்றது. இவ்வேதனைசகியாது எழுந்திருக்கும்போதெல்லாம் இத[illegible]ண்டிருந்து கழுமரத்திற் செருகுகின்றகூர்மைதங்கிய ஆயுதத்[illegible]தெடுத்து, கண்ணினுள்ளேயிருக்கும் மணிகளுட்தெறித்தோடும்படி [illegible]ர்கள்,

இறுக்கு பாசமிட் டிருமருங் கமைத்தனர் கிடத்திநெட் டீர்வாளிட்
டறுப்பர் செந்தழ லொழுகுறக் காய்சிய சலாகைகொண் டவர்நாசி
நிறுப்ப ரன்னவர் செவித்தொளை சுறுக்கொள நிறுத்துவர் நெடுங்கூடம்
பொறுப்பர் மற்றவர் கவுட்புற நெரிதரப் புடைப்பர்தெண் புலத்துதர்.

(இ - ள்.) இருபுறங்களிலும் பாசத்தால் இறுக்கிக்கட்டிக் கீழேகிடத்தி, பெரிய ஈர்வாளினலறுப்பார்கள். சிவந்த தீப்பொறிசிந்தும்படி காய்சிய இருப்புச்சலாகைகளை அவர்கள் நாசித்தொளைகளிலும் நுழைப்பார்கள். அப்படியே அவர்கள் இருசெவித் தொளைகளிலும் சுறீலென்றுபற்றும்படி செருகுவார்கள். பெரியசம்மட்டியை யெடுத்துக்கொண்டு அவர்களுடைய இருகன்னங்களும் நெரிபடும்படியடிப்பார்கள். எ - று. (௨௨௦)

கருவி யூழ்முறை பற்பல நிரைத்ததிற் கிடத்தியக் கருவிக்கூ
ருருவி யோடநீ டுரத்திடைக் கூடமிட் டோசசுவர் புலநதோறுங்
குருதி பீர்விடக் கதைமடுத் திறுக்குவர் கொழுநதழற் பிழம்பேந்திப்
பருக வாய்மடுத் துறுக்குவா பருகுறுர் நாபபிடுங் குவர்பல்கால்.

(இ - ள்.) வரிசைப்படி ஆயுதங்களை யெண்ணிறந்தன வாகநட்டு, அவற்றின்மேலேகிடத்தி, அவ்வாயுதககட்டு அவர்களுடலிற் பாய்ந்துருகும்படி மார்ப்புறத்தில் சம்மட்டிகொணடடிப்பார்கள். ஐம்புலங்களின்வழியே உதிரவெள்ளம் ஊற்றெடுக்கும்படி கதாயுததைச்செலுத்திச் செலுத்திக் குத்துவார்கள், செவ்விய அக்கினிப் பிழம்பினையெடுதது வாய்நிறையவுண்ணும்படி யதட்டுவார்கள். அப்படிப் பலமுறை யுணணுதவர்களுடைய நாவைப்பறித்தெறிவார்கள்.

ஒல்லை மாநிலத் துயிர்செகுத் துண்டவா வருதிரென் றுருத்தன்னோர்
பல்லு நாவும்வெந திருகிவெம புகையெழக் காச்சிய தழற்பாளஞ்
செல்ல வாய்மடுத் திருஙகதை யோசசுவா செலுத்துவர் மணிப்பாச
மல்லன் மாக்களத திறுக்குவர் தழற்பர லுரிஞுகற வலித்தீர்ப்பார்.

(இ - ள்.) பெரியபூமியில் பலவுயிர்களையும் கொன்றுதின்றவர்களே! அதிவிரைவில் வருகவென்று அழைத்து அதட்டி அவர்கள் பல்லும் நாவும் வெந்து கரைந்து தீப்புகையெழும்படி, தீயிற்காச்சிய இருப்புப் பாளங்களைவாயிற் செல்லப்பாய்ச்சிப், பெரியகதாயுதத்தால் தள்ளுவார்கள். பெரிய மணிக்கயிற்றை அவர்கள் கழுத்திற் பிடித்திறுககி, அக்கழுத்தில் வெவ்விய பருக்கைக்கற்கள் உறுத்தும்படி கெட்டியாயிழுப்பார்கள். எ - று. (௧௨௨)

என்பு தோறசை நரம்பிவை தெரிவுறு திருந்தழ லிருப்புச்செக்
கன்பி லாருட லரைபடத் திருக்குவா பிறர்மனை யகலியபோம்
புன்பு லைப்படு பாதகர் நெஞ்சொடு புயததுணை புகைமண்ட
வன்பொ றித்தழற் றுணகந் தழுவுறப் பிணிக்குவர் மணிப்பாசம்

(இ - ள்.) எலும்பு தோல் தசை நரம்பு ஆகியவிவைபுறத்தோன்றுந் [illegible] ருணிய மில்லாத அவர்களுடல் அரைபடும்படி பெருந்தீயிற்காய்ந்திருக்கும் இருப்புச்செக்கிலிட்டு [illegible]வார்கள். பிறர்மனைவியரையழைத்துக்கலந்த இழிந்தபுலைத்தன்மையுடைய பாவிகளை, நெஞ்சிலும் இருதோளிலும் புகையெழும்படி கொடிய தீப்பொறிபறக்கும் அக்கினித் தம்பத்தைத்தழுவும்படி மணிக்கயிற்றால் இறுக்கிக்கட்டுவார்கள், எ - று. ([illegible])

குருக்க ளந்தணர் மேலவர்க் காண்குறி னெழுதாராக் கொடியோரை
யிருப்பு வெந்தக டழலெழக் காச்சிமீ திருத்துவ ரெளியோரை
வெருக்கொ ளப்புரி படிறரை யடுசின வெள்ளெயிற் றிரும்பாந்த
ளுருத்து யிர்ப்பெறி நெடுந்தொலைப் பிலத்திடை வீழ்த்துவருறுக்குற்று

(இ - ள்.) ஆசிரியர் அந்தணர் பெரியோராகிய இவர்களைக்கண்டால் எழுந்திராத துஷ்டர்களை, பெரிய இருப்புத்தகட்டைத்தீயிற் பழுக்கக்காச்சி அதன் மேலுட்காரவைப்பார்கள். ஏழைகளைப்பயப்படும்படி செய்ததூர்த்தர்களைகொல்லத்தக்க கோபமுடைய வெள்ளிய பற்கள்பொருந்திய பெரியமலைப்பாம்பு கடூரமாய்ச்சீறிக்கொண்டிருக்கின்ற மிக்க ஆழ்ந்தங்கிய பிலத்திலே அதட்டிக்கொண்டு சென்று அமிழ்த்துவார்கள். எ - று. (௨௨௪)

ஆறலைத்தரும் பொருள்கவர் பதகரை யருந்தசை யெயிறான்றக்
கூறு செய்துணுங் கழுதுறு நரகிடைக் குப்புறப் பிடருந்திச்
சீறி யொன்றொடொன் றிகலியன் னவர்புலா தின்பன தெரிகிற்பா
ரேறெரித்தலைக் கழுநுனைக் கிடந்துவ ரெரியெழ விழிக்கின்றார்.

(இ - ள்) வழிமறித்துப்பொருளை யபகரிக்கும் பாவிகளை, உடலிலுள்ளகொழுந்தசைகளில் பற்களழுந்தப்பகிர்ந்தெடுத்துப்புசிக்கும் பசாசங்கள் நிறைந்த நரகத்தில் கழுத்தைப்பிடித்துத்தள்ளி, அப்பசாசங்கள் ஒன்றோடொன்று கோபித்துப் பகைத்து அவர்கள் மாமிசத்தைத் தின்பதைப்பார்ப்பார்கள். அக்கினியெரிந்து கொண்டிருப்பதாகிய கழுமுனையிற் படுக்கவைப்பார்கள். தீப்பொறி சிந்தப்பார்ப்பார்கள். எ - று. (௨௨௫)

குதைக்கொடுஞ்சிலைப் பகழியிற் கானமாக் கொன்றுதின் றுறுப்பெல்லா
முதைப்ப வீங்கிய நிணத்தசை யரிந்தரிந் திருப்பகல் வறுத்தொண்பற்
புதைக்க வவ்வுறச் சுடச்சுடத் தீற்றலும் வாய்ப்புறைப் புகைமண்டிச்
சிதைத்த நாசியின் புறம்புக வுயிர்த்துயிர்த் தாற்றுவர் சிலதீயோர்.

(இ - ள்.) வளைந்தவில்லின்குதையிற் பூட்டிய அம்பினால், காட்டு மிருகங்களைக்கொன்றுதின்று, எல்லாவவயவங்களும் பருக்கும்படி மிக்கநிணத்தோடுகூடிய தசைகளையறுத்து இருப்பகலில் வறுத்து, ஒளியுள்ளபற்கள் கிட்டிக்கொள்ளத் தின்னும்படி சுடச்சுட ஊட்டுதலும், அவர்கள் வாயின் வழியிற்றோன்றும் புகைமிகுந்து, வெகுதுள்ள நாசித்தொளைகளின் வெளியிலேவர, சிலபாவிகள் பெருமூச்செறிந்து பெருமூச்செறிந்து சகிப்பார்கள். எ - று. (௨௨௬)

மாதிரஞ்சுழல் புட்குலம் படுப்பவர் மறிதிரை பொருநீர்வாழ்
சாதி தூண்டிலிற் படுப்பவ ரணரியிற் சங்கிலி முடக்கேற்றி
மீது கற்றறி விட்டமிட் டசைத்தவர் கீழ்ப்பட வெருளிந்தீ
யோது நெய்சொரிந் தெழுப்புவ ரவருடம் புருகிய நிணஞ்சோர.

(இ - ள்.) திசைகளிற் சுழலும் பறவைக்கூட்டங்களைக்கொல்லுகின்றவர்களும், சுருட்டுகின்ற அலைகள்மோதும் நீரில்வாழ்கின்ற சீவராசிகளைத்தூண்டிலிலே பூர்வத்திற்கொன்றவர்களுமாகிய இவர்களை, கீழ்ப்பாகத்தில், சங்கிலிவளையங்கள் தொங்கவிட்டகற்றூணொன்றைநட்டு மேலே உத்தரம் போட்டு அதன்மேலிருத்தி அவர்களின் கீழே அவர்களுடலிலுள்ள நிணமுழுதும் உருகிச்சொரிய, ஒலிக்கின்ற கடுந்தீயை நெய்யைச்சொரிந்து வளர்ப்பார்கள். எ - று.

செருமு கந்தணித் தருளிய வேந்தரைத் தெவ்வடுந் திறநோக்கி
வெருவி யோடிய பதகரைச் சுழல்வழி வீங்கிரு ணிரையத்துக்

கருணை காதுறச் சுற்றுற விடுத்தனர் கன்றொழித் தினக்கன்றுற்
றுருவு கள்வரைக் கற்கறை மடக்கியிட் டிடிபடத் துவைக்கின்றார்.

(இ - ள்.) யுத்தங்களில் வெற்றிகொண்ட மன்னவர்களைப்பகைவன்சொல் வதாயுள்ள தன்மையைப்பார்த்துப் பயந்தோடிப்போன பாவிகளை, சுழல்வழியை யுடைய இருண்மிகுந்த நரகத்திலே, ஆயுதங்கள் நாற்பக்கலிலும் கொல்லும்படி சுழலவிட்டவர்கள், இராக்காலத்தில் கன்றுகளைவிட்டுப்பசுக்களைத் திருடிய திருடர்களைக்கல்லுரலில் மடக்கிப்போட்டு அவர்களுடல் நன்றாகத் துவளும்படி இடிக்கின்றார்கள். எ - று. (உஉஅ)

ஒறுத்த நல்குர வுடற்றுற விரப்பவர்க் குதவிய துதவாது
மறுத்த பாதக ரடைக்கலப் பொருள்கவர் வஞ்சக ரினையோரைத்
தெறுப்ப தங்குழி திரைநதெழு நரகிடை வீழ்ததலுஞ் சினவாலிற்
சுறுக்கொ ளுந்தொறு மோவென வரற்றுவர் துள்ளுவர் துடிப்புற்றார்.

(இ - ள்.) வருத்துகின்ற தரித்திரமானது துன்புசெய்வதால், யாசகருக்குக்கொடுப்பதைக் கொடாது தடுத்த பாவிகளும், காப்பாற்றிக்கொடுக்கும்படி வைத்த அடைக்கலப்பொருளை யபகரித்த வஞ்சகர்களுமாகிய இவர்களை, தேள்கள் மிகுதியாகக் கூடிநெருங்கியுள்ள நரகத்திற்போட்டவுடனே கோபங்கொண்டு அவைகொடுகினாற் கொட்டும்போதெல்லாம் ஓவென்று புலம்பித்துள்ளித் துடிக்கின்றார்கள். எ - று. (உஉகூ)

இனைய யாரையுங் காட்டுற நோக்கின னிருந்தவச் சிவயோகி
யனைய துன்புழந் தலமர லுளந்தடைத் திரங்கின னதுநோக்கி
வனைபொ லன்கழ லந்தக னெந்தைநீ யிதற்கிரங் கினைவாளா
னினையு நெஞ்சமு நடுக்குறு மிங்கிதற் கப்புற நெடுங்கும்பி.

(இ - ள்.) இப்பாவிகளெல்லாரையும் இயமன் காட்டிக்கொண்டுவர, அருந்தவஞ்செய்த சிவயோகிபார்த்தனர். அப்படித்துயரடைந்து சுழன்றுகொண்டுள்ளதைத் தமது மனதிற்கருதிவருந்தினர். அழகினையுடைய பொன்னாலாகிய வீரகண்டாமணிதரித்த இயமன் அதனைக்கண்டு, எமது தந்தையே! தேவரீர் இதற்கேவருந்துகின்றீர். இதற்கப்பால் கும்பிபாகமென்னும் பெருநரகமுள்ளது அதனைநினைக்கின்றமனமும் நடுங்கும். எ - று. (உ௩௰)

என்று ரைத்தன னந்தக னுலகெலா மேத்துறுஞ் சிவயோகி
நின்று நோக்கின னீங்கிவண் வருகெனப் பின்னரு கிகழ்ந்தாமுன்
சென்று நோக்கினன் வடவையங் கொடுந்தழ னடுவுறத் தீகின்றூ
ரன்ற ரற்றுறப் பிளந்தவாய் தொறுநதழற் கொழுந்துதித் தழல்வாரை.

(இ - ள்.) என்றியமன் சொன்னான். உலகினரெல்லாம் துதிசெய்கின்ற சிவயோகியானவர், அங்கிருந்துபார்த்துக்கொண்டிருந்த இயமன் இங்கேவாருமென்று மீண்டும் கூறுவதன்முன்னர், கொடியவடவாக்கினியின் நடுவேயிருந்து வேகின்றவர்களையும், அப்போது புலம்பிக்கொண்டிருக்க அவர்கள் திறந்த வாய்களிலெல்லாம் தீக்கொழுந்தெரிந்து சுடவேகின்றவர்களையுஞ் சென்றுகண்டனர். எ - று. (உ௩௧)

காரி ருட்டுறும் படைத்தவெம் பிலத்திடைக் கடுங்கண் வெம்பிருஞ்சிற்றச்
சாருமுள்ளரா வெண்புட னிறக்குறச் சுற்றியத் தறுகண்ணேர் [டி-
சோரி வாய்மடுத் துறிஞ்சவ வாலுனை செவித்தொளை தொளைத்தொட்
வீர நாக்கடித் தெயிற்றொடு மிறுக்குற வெவ்வெழு வுயிர்ப்போரை.

(இ - ள்.) கரிய இருட்டொகுதிசேர்த்த குகையிலே செந்தீப்போலக்கடுங் கோபமுடையவர்களாய், நேராக ஓடும் ஒளியுள்ளபாம்புகள் எலும்பும் இறும் படி சுற்றிக்கொண்டு, அப்பாவிகளின் உதிரத்தைவாய்திறந்து பருகிக்கொண்டு ன்னதையும், அவற்றின்வாலின் நுனிகளைச் செவிகளின் தொளைகளைத் தொளைத் துக்கொண்டு உள்ளே செலுத்த, குளிர்ந்த தங்கள் நாவைப்பற்களாற் கடித்துக் கொண்டு எலும்பும் மேலெழும்படி நெட்டுயிர்ப் பெறிகின்றவர்களையும்.

சுரித்த நெட்டுட லொளித்தகா ரட்டையங் குப்பியுட் டொலைவின்றி
விரித்த பாழிவாய் விழுங்கவுங் கக்கவும் பற்பல கடிததீர்த்தங்
குரித்த சோரிவாய் மடுக்கவுந் தசைகழிந் தொழுகவு முடற்காந்தி
யெரிப்ப வுங்கிடந் தரற்றியக் கும்பியுண் முழுகினின் றெழுவாரை.

(இ - ள்.) சுரிப்புற்ற நெடிய உடலைநெளித்துள்ளகரிய அட்டைகள் நிர ம்பிய நரகத்திலே அவை ஓய்வின்றித்திறந்துகொண்டிருக்கும் அகன்றவாயினால் விழுங்கவும் மீண்டும் உமிழவும, மற்றும்பலபல அட்டைகள் கடித்திழுத்துச்சிந் தும் உதிரத்தைவாய்நிறையக் குடிக்கவும், தசைகளெல்லாங்கழிந்து சிந்தவும், உடல் வெம்மையால் எரியவும், அங்கேபுரண்டழுது அந்நகரத்தில் முழுகிக்கிட க்கெழுகின்றவர்களையும். எ - று. (௨௩௩)

அடுத்த யோசனை யித்தனை யகலமென் றளப்பருஞ் சலக்கும்பி
யெடுத்த வள்ளுகிர்ப் பகுத்தவாய் நெட்டுட லிடங்கரி னிடைப்பட்டுப்
படுத்த காலொடு கைகடித் தருந்துறப் பதைத்தவைக் காற்றாய்க்
கடுத்த சிந்தையி னெடுத்தெடுத் தமைத்துவீழ்ந் தேக்குறக் கழிவாரை.

(இ - ள்.) அதற்குரிய அகலம் இத்தனை யோசனையென்று அளவிடுதற் கரிதாயுள்ள சலக்கும்பியெனும் நரகத்தில், கூரிய நகங்களையும் பிளவுற்ற வாயை யும் நெடிய வுடலையுமுடைய முதலைவாயிற் சிக்கி, அவை தங்கள் கால்களையுங் கைகளையுங் கடித்துத்தின்ன, அவற்றிற்குத் தாளாதவர்களாய்த் துடிதுடித்து வருந்திய மனதோடு அதிக வுரத்துககூவி விழுந்து பிரலாபித்து அழுகின்றவர் களையும். எ - று. (௨௩௪)

ஓர்கை கீழ்ப்படக் கிடத்துவ ரடிக்குறங் கோரடி மிதித்தூன்றி
வாரி யோர்குறங் கிசித்துறப் பிளந்தறை யோசகுவர் வகைபட்ட
பேரு டற்பனை முன்னைய தாதலின் பிடித்தெடுத் தழன்மாட்டிச்
சோரி யாங்குறப் புரட்டுவர் பின்னை மடர்த்துறத் துயர்வாரை.

(இ - ள்.) ஒரு கையைப் பூமியிற் பொருந்தவைப்பார்கள். அடித் தொடையை ஒரு காலால் மிதித்தூன்றிக்கொண்டு மற்றொரு தொடையைப் பற்றி இழுத்துக்கிழித்தெறிவார்கள். பிளவுபட்ட பெரியவுடல் [illegible] பாதி யாதலால், அதைப்பிடித்துத்தீயிலிட்டுக்கொளுத்தி உதிரம் [illegible] புரட்டு வார்கள். இப்படி வருத்தத் துக்கிக்கின்றவர்களையும். எ - று. (௨௩௫)

வாரு மூலமிட் டிருங்கயி றிறுக்குற வரிந்திறை யுளையகத்துச்
சேரு முன்னுனை யூசிவெள் ளுகிரிடைச் செறுத்துய்ச் வடலைச்சூ
டேறு முதடு மணற்குகை யிறக்குவ ரிங்கிவை பொறுத்தாற்று
தாரு மற்றொடு மழுதழு தரற்றினின் றலமரு துறுவாரை.

(இ-ள்.) தோளடியிலே பெரிய கயிற்றைப்பிணித்து இறுகவிழுத்து முதுகிலுள்ள இறகைகளையெலும்புகள் வரையிற்கட்டி, சிவக்கக்காய்ச்சிய நுண்ணிய கூரிய ஊசிகளை வெள்ளிய நகங்களிலே குத்துவார்கள். தீயின் வெம்மை தணியாது வெந்துகொண்டிருக்கின்ற மணற்குகையிலிடுவார்கள். இவ்வேதனை கட்குச் சகிக்கமுடியாது பெருந்துயரோடு புலம்பிப்புலம்பிக் கதறிக்கொண்டு சுழல்பவர்களையும். எ-று. (உ[illegible])

நோக்கி னான்சிவ யோகிநின் றவருழக் கிருந்துயர் நுதலிப்பண்
டாக்கு மாநிரை யக்கொடு வெம்மைகண் டயிர்த்தன னிவைக்கப்பாற்
றூக்க ழற்பெருஞ் சாடிநெய் கொதித்தெழத் தழற்சிகை புகைமண்ட
மேக்கு யர்நதழூக் குயிர்ப்புறு தததழ னெய்யிடை மிதக்கின்றார்.

(இ-ள்.) அப்பாவிகள் அநுபவிக்கும் பெருந்துயரங்களையும் சிவயோகி அங்கிருந்தே கண்டு ஆலோசித்து, பூர்வத்திற் படைக்கப்பட்டுள்ள பெரு நரகங்களின் கொடுமைகளை நன்றாயுணர்ந்தனர். இவற்றிற் கப்புறம், தீயிற் காயவைத்திருக்கும் பெரிய கொப்பறையில் நெய் கொதித்துக்கொண்டிருக்க, அத்தீக் கொழுந்தின் புகை மேலெழும்ப, மேலே யுயர்ந்த நாசித்துவாரங்களில் சுவாசமற்றவர்களாய் அநதத்தீக்குழம்புபோன்ற நெய்யிலே மிதக்கின்றார்கள். எ-று.

கொதிக்கு நெய்யிடைக் குப்புறக் கிடத்தினருயிர்த்திலர் கொடிதுற்று
மதிக்கி னீங்கிவர் யாவரென் றுணர்ந்தில மறலிமற் றுரையெனன [ர்
விதிக்கு மேல்விதி யுணர்தரிய நாயக வெய்துறு மிவரிந்தப்
பதிக்கு முந்தர சறிவருந் தன்மையரென்றனன் பணிந்தன்னான்.

(இ-ள்.) கொதிக்கின்ற நெய்யில் கவிழும்படி போட்டுவிட்டார்கள். சுவாசம் விடாதவர்களாய்க்கொடிய வேதனையுற்றார்கள். யோசிக்கையில் இவர்கள் எவ்வகைப்பாவிகளென்றறியோம். ஆதலால், இயமனே! நீ சொல்லுகவெனக்கேட்க, இப்போதுள்ள பிரமனுக்கு முற்பட்ட பிரமனையும் அறிந்துள்ள தலைவரே! வேதனையுறும் இவர்கள் இவ்வியமபுரத்திற்கு எனக்கு முன்னுள்ள அரசனும் அறிதற்கரிய காலவரையறையுடையவர்களென்று கூறி, அந்த இயமன் மறுபடியும் வணங்கி. எ-று. (உ[illegible])

பவத்து ரோகரிற் பாதகர் படுவன மேற்படப் படுகின்றார் [செப்பக்
சிவத்து ரோகரென் றுரைப்பரென் றவர்கெதிர் தென்றிசை யவன்
கவர்த்த வார்சடை யோகிசெங் கரங்கொடு கண்புதைத் தலமந்தா
னுவர்த்த வேர்பொடித் துடனடுக் குற்றன னுளத்தொடு ம[illegible]னான்,

(இ-ள்.) பாவஞ்செய்யும் [illegible] பலருள்ளும் சிறந்த மகாபாவி[illegible]யும் வேதனைகளை[illegible] வேதனை யநுபவிப்பவர்கள் சிவத்துரோ[illegible]களென்று [illegible]ர்களென்று, அச்சிவயோகிக்கு இயமன் [illegible] [illegible] நீண்ட சடையையுடைய சிவயோகி தமது [illegible] [illegible]களைப்பொத்திக்கொண்டு பயந்தவராய் உடல்வெயர்த்து [illegible] [illegible] மனங்கலங்கினர். எ-று. (உ[illegible])

வெறுத்த சிந்தனை யோகியுத் தரதிசை மீண்டனன் றனிச்செங்கோல்
பொறுத்த தென்றிசை நாயகன் பின்னரும் யோகிபொற்பதம்போற்றிச்
செறுத்த பாதக ரிவர்நிலை நான்முகச் செல்வனை வினவுற்றான் [வாய்.
மறுத்து ரைப்பன கேட்குதி யறிவனே லுணர்த்துவன் மனக்கொள்

(இ - ள்.) வெறுத்த சித்தமுடைய சிவயோகிவடதிசையாகத்திரும்பினார். ஒப்பற்ற செங்கோலையேந்திய தென்றிசைக்கிறைவனாகிய இயமன். சிவயோகியின் அழகிய பாதங்களைத் துதிசெய்து, கொடும்பாதகர்களாகிய இவர்கள் தன்மையைக்குறித்து, நான்கு முகங்களையுடைய பிரமதேவனைக்கேட்டால், அதற்கப்பிரமதேவன் விடையிறுப்பதைக்கேட்பீராக. அவருக்குத்தெரிந்திருந்தால் அவர் தெரிவிப்பார். அதனையும் தேவரீரே மனதிற்றெரிந்துகொள்ளலாம்.

கலிநிலைத்துறை.

என்றான்மற லிப்பெய ரோனனி நிற்றி யென்றா
னின்றான்மறை யோகிநெ டுந்தொலை நீள நாளப்
பொனாருட்பொகுட் டாசன னான்முக னாடு புக்கா
னின்றாரண வெல்லைக டந்தவ னாங்கெதிர்ந்தான்.

(இ - ள்.) என்று மறலியென்னும் பெயருடைய இயமன் கூறினன் சிவயோகி நிற்கவென அவன் நின்றனன். வேதமுணர்ந்த சிவயோகி நீண்ட நாளமுடைத்தாய்ப் பொன்போலுந் தாள்படைத்த தாமரை யாசனமுடைய பிரமதேவனுடைய சத்தியலோகஞ்சேர்ந்தனர். அப்போது வேதங்களின் முடிவையுணர்ந்த பிரமன் அவரை யெதிர்கொண்டான். எ - று. (௨௪௧)

எய்தப்பெறு மாதவம் யாவரி னிழைத்த தென்னாச்
செய்தற்குரித் தாகிய யாவையுஞ் செய்த மைத்தான்
மைதக்க ளத்தர னென்னுழை வந்த வாபோன்
மொய்பொற்சடை யோகநெ டுந்தவ முன்னி னாயால்.

(இ - ள்.) தேவரீர் இங்கெழுந்தருளத்தக்க சிறந்த தவத்தை யாவர் செய்தனரென்று செய்யத்தக்க உபசாரங்களையெல்லாஞ்செய்து முடித்தான். விடம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானே அடியேன் பால் எழுந்தருளியதுபோல, நெருங்கிய பொன்போலுஞ் சடையையுடைய சிவயோகம் வல்ல பெருந்தவசியே! தேவரீர் ஈண்டெழுந்தருளினீர். எ - று. (௨௪௨)

என்னைப்புகழ் நான்முக வந்தண னேத்தி நிற்பத்
துன்னற்சடை யோகிய வறமெதிர் சொல்வ தானான்
றென்னற்றிசை யெய்தின மத்திசை தீய ரும்பி
யின்னற்படு வார்க்கு ளருந்துய ரெய்தி நின்றார்.

(இ - ள்.) என்று பிரமன் சிவயோகியைப்புகழ்ந்து துதிசெய்து நேரே நிற்க, நெருங்கிய சடையையுடைய சிவயோகி பிரமனை நோக்கிக்கூறுகின்றார். சிறந்த இயமபுரத்திற்குச்சென்றோம். அந்நகரிலுள்ள கொடிய கும்பிபாக நரகங்களில் துன்பமடைகின்றவர்களில், சிலர் மிகப்பெருந்துயரடைந்திருக்கிறார்கள்.

அவர்செய்தன வந்தகன் றானும றிந்த தன்றா
லிவர்யாவரி னிழைத்தன யாதெனு ரைத்தி யென்றான்
றவராயிரந் தோடுடைத் தாமரைத் தூய செல்வன்

(இ - ள்.) அவர்கள் செய்தபாவங்கள் இயமனும் அறிந்ததல்ல. இவர்கள் யாவர்? செய்தபாவங்கள் யாவை? இவற்றைச்சொல்லுவீராகவென வினவினர். செந்நிறமமைந்த ஆயிரம் இதழ்களையுடைய கமலாசனனாகிய பிரமன், கப்புவிட்டு நிறைந்த சடைமுடியையுடைய சிவயோகி யுரைத்ததைக்குறித்துத் தன் மனதிலாலோசித்தனன். எ - று. (௨௪௪)

உள்ளத்து ளியற்றிய யாவுமு ணர்ந்து கண்டா
னெள்ளப்படு பாதகர் தந்நிலை யாது நேரான்
றள்ளற்கரு மாதவ நின்னுழை சாற்றி லன்னோ
ரள்ளற்குழிப் பட்டது யானறி தல்ல வென்றான்.

(இ - ள்.) மனதினுலேயே தான் விதித்தவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்தான், யாவரும் பழிக்கத்தக்க பாதகர்கள் தன்மையாதும் உணராதவனாய், விலக்கற்கரிய பெருந்தவமுடையவரே! அப்பாவிகள் நரகக்குழியில் வீழ்ந்ததைக் குறித்துத் தேவரீரிடத்திற் கூறுவதற்கு அடியேன் அறிந்துள்ள தன்றென்று கூறினன், எ - று. (௨௪௫)

என்போலியர் யாவர்ப டைத்தவர் யாது கால
முன்போன துணர்ந்திலன் கற்பமு டிந்த தொன்றோ
நின்போலியர்க் கல்லது தொன்மைநி கழ்த்த லாமே
மின்போற்சடை யாயென வேதன்வி ளம்பி விட்டான்.

(இ - ள்.) என்போன்ற பிரமர்களில் யார் எக்காலத்திற்படைத்ததோ? இப்போது முடிந்தது ஒரு கற்பமோ? முன் கடந்த கற்பங்களின் செய்தி அடியேன் அறிந்திலேன். அக்கற்பாந்தங்களின் செய்திகளெல்லாவற்றையும் மின்னல்போலுஞ் சடைமுடியுடையாரே! தேவரீரை யொத்தவர்களல்லது பிறராற்கூறமுடியுமா? என்று பிரமன் சொல்லினன். எ - று. (௨௪௬)

அக்காலையெ ழுந்தன னாயிரம் வாய்வி ரிக்கும்
பைக்கார்விடப் பாம்பணை மாதவன் பாற்க டற்கே
புக்கானவ னங்கெதிர் கண்டெதிர் போக லுற்றான்
மிக்கானெதிர் வெய்தினி னெய்தினன் வேத யோகி.

(இ - ள்.) அப்போது அச்சிவயோகி அங்குநின்றும் எழுந்தருளி ஆயிரம் வாய்கள் பொருந்திய பணாமுடியைத்தாங்கிக் கரிய விடந்தங்கிய சேஷசயனத்திற்றுயிலும் திருமால் வீற்றிருக்கும் க்ஷீராப்தியை யடைந்தனர். அங்கே அச்சிவயோகியைக்கண்ட மாத்திரமே திருமால் எதிர்கொண்டனா. வேதங்களையுணர்ந்த சிவயோகியார் அவருக்கு நேரே விரைவிலடைந்தனர். எ - று. ()

யோகற்குவப் புற்றன யாவுமு வந்து செய்தான்
வேகத்தனி யோகியு முள்ளம்வி யப்ப நின்றா
னேகைப்பட வென்னுழை வந்தது ரைத்தி யென்றா
னாகத்தணை யோன்சிவ யோகிந விற்று வானால்.

(இ - ள்.) சேஷசாயியாகிய திருமால் சிவயோகி மகிழத்தக்க உபசாரங்களையெல்லாம் சந்தோஷித்துச்செய்தனர். அதிதீவிரபக்குவமுடைய சிவயோகியாரும் மனமகிழ்ந்திருந்தனர். அப்போது திருமால் தேவரீர்களிக்கும்படி இங்கெழுந்தருளிய காரணத்தைக்கூறி யருளவேண்டுமென்றனர், சிவயோகியார் கூறுகின்றார். எ - று. (௨௪௮)

தென்றிசைக்கினி ரும்பட ரெய்திய தீமை யாளர்
பொன்றப்படு தீமைமி னுவதும் பூர்வ மூரவே
னென்றுற்றுணர்ந் தோர்ந்தன னுள்ளமற் றொன்று மெய்தான்
சென்றிற்றது சிந்தனை யுந்தெரு மந்து நின்றான்.

(இ - ள்.) இயமபுரியிலே கொடுந்துன்பெய்திய பாவிகள் இப்படி அழிதற்குக் காரணமாகச்செய்த பாதகம் யாதென்று கேட்கவும், அழகிய துளசிமாலை தரித்த திருமால், மனதை ஒருவழிப்படுத்தி ஆலோசித்துப்பார்த்தனர். மனதில் ஒன்றுந்தோன்றாமல் எண்ணங்களெல்லாம் அழிந்து மயங்கியிருந்தனர்.

என்னாலறி யப்படு பாதக ரல்ல ரின்னோர்
முன்னாள்கழிந் தார்களென் போலியர் மூற்றி யிற்றோ
ரன்னோரறி வார்கொல நிந்தில மையு செய்ய
பொன்னார்சடை மாதவ வென்றுபு கன்று விட்டான்.

(இ-ள்.) இவர்கள் என்னால் உணரப்பட்ட பாதகர்களல்லர். அடியேனைப் போன்று பூர்வத்தில் இப்பதவியையாண்டு நாள்கழித்திறந்தவர்கள் அறிவார்களோ அறியார்களோ? அதை யானறியேன். அழகிய செம்பொன்போலும் நிறந் தங்கிய சடைமுடி தரித்தவரே! என்று திருமால் கூறினர். எ - று. (௨௰)

பாலாழிய ராவணை துஞ்சிய பச்சை மாயோற்
கேலாதன வுற்றுணர்ந் தேகியெ வர்க்கு மெட்டா
நாலாரண வெல்லை கடந்துறை நம்ப னம்பொற்
சேலார்விழி பங்க னிருந்துழிச் சென்று புக்கான்.

(இ - ள்.) திருப்பாற்கடலில் அராவணையில் யோகநித்திரைசெய்யும் கரிய திருமாலுக்கு, அறிதற்கரியதாயிருப்பதை ஆலோசித்துணர்ந்து அங்கிருந்து நீங்கி, யாவராலும் அளவிடற்குமுடியாத சதுர்வேதங்களின் முடிவையுங் கடந்துள்ள பெருமானாகிய, பேரழகுடைய சேல்போலும் விழியுடைய பார்வதி பாகர் எழுந்தருளிய கைலாயகிரிக்குப்போய்ச் சேர்ந்தனர். எ - று. (௨௰௧)

இமையக்கிரி யெய்தரு மாதவத் தெய்தி நின்ற
வுமைபக்கமு மக்கணி தோளுமு ருத்த நஞ்ச
மமையத்தரு கண்டமு நெற்றிய லர்ந்த கண்ணுங்
குமையப்படு வேணிவ யங்கும திக்கொ ழுந்தும்.

(இ - ள்.) இமயமலையானது பெறுதற்கரிய பெருந்தவத்தாலடைந்து தோன்றிய பார்வதிபாகமும், எலும்புமாலைகளணிந்த திருத்தோள்களும், அச்சம் விளைத்த ஆலகாலம்பொருந்திய கண்டமும், நெற்றியில் விளங்கும் நேத்திரமும் துவளப்படுஞ்சடையில் விளங்கும் பிறைச்சந்திரனும், எ - று. (௨௰௨)

கண்டானெதிர் கண்டுக ளிந்துக ளிந்த சிந்தை
விண்டானரு ளொந்தைப ரிந்தருள் வெள்ள வாரி
யுண்டானுடைந் தாடினன் பாடின னுள்ள நெக்கான்
பண்டாரண வெல்லைக டந்தப தம்ப ணிந்தான்.

(இ - ள்.) கண்களின் நேரே தரிசித்துக் களிப்பெய்தி [illegible] திருபாசமுத்திரமாகிய எமது பெருமானுடைய திருவருள் [illegible] யுட்கொண்டனர். உடனே ஆனந்தக்கூத்தாடிப்பாடி மனமுருகி [illegible] யாகிய வேதங்களின் அளவிற்கு மேம்பட்ட திருவடிகளை [illegible]. எ - று.

என்குற்றனை யெய்திய தென்னைகொ லென்றெ மேழை
பங்குற்றவ னோதலும் பாவர்கி டந்த தெய்ய
லங்குற்றனன் மாநிரை யப்புரப் பாய வெல்லாஞ்
செங்கட்டிற லந்தகன் காட்டினன் சென்று கண்டேன்.

(இ - ள்.) என்னுவந்தனை? வந்த காரணம்யாது? என, ஒப்பற்ற பார்வதி பாகராகிய சிவபெருமான் வினவவும், பாவிகளிருக்கின்ற இயமபுரத்திற்குப் போயினேன். பெரிய நரகங்களின் பேதங்களையெல்லாம், சிவந்த விழிகளையுடைய வல்லமையிருந்த இயமன் காட்டினன். அவற்றையெல்லாஞ்சென்று கண்டேன். எ - று. (உ.அ)

அத்தென்புலத் தாழ்நிரை யத்தில ழுந்து வோரின்
முத்தன்சிவ பாதக முற்றமு டித்து நின்றார்
தத்துண்டப டுந்துயர் கண்டுத ரிக்கி லாமை
யித்தன்மையர் யாரெனக் கூற்றுமற் றீதி சைத்தான்.

(இ - ள்.) அந்த எமபுரத்திலுள்ள ஆழ்ந்த நரகங்களில் அழுந்துபட்டவர்களெல்லாரிலும், சிவபெருமானுக்கேலாத சிவத்துரோகங்கள் முழுதுஞ் செய்திள்ளவர்கள் தலைகீழாகவீழ்ந்து அநுபவிக்கும் வேதனைகளைக்கண்டு மனந்தாளாமல் இவர்கள் யாரெனக்கேட்க, இயமன் இப்படிச்சொல்லினன். எ - று. ()

யானோவறி கின்றிலன் யானிவ ணெய்து முன்ன
ரானுநிரை யத்தி லழுந்துகின் றார்க ளென்றான்
றேனார்கம லத்தவற் கேட்புழிச செய்கை முற்றிப்
போனான்முகற் குந்தெரி யாதவா புன்மை யென்றான்.

(இ - ள்.) யானோ அறியேன் யான் இப்பதவிக்கு வருவதன்முன்னரே சகிக்கவியலாத நரகத்தில் அழுந்திக்கிடக்கின்றார்களென்றான். தேன்பொருந்திய தாமரைமலர்ப்பீடத்தையுடைய பிரமதேவனைகேட்டபோது முன்னிருந்த பிரமனுக்கும் அப்பாவிகளின் பாவம் இன்னதெனத்தெரியாதென்றுசொன்னான்

பையாயிரந் தாங்கிய பாம்பணைப் பள்ளி யானு
மையாதன துள்ள மளந்தறி யாமை சொற்றான்
மையார்களத் தெந்தையன் னோர்புரி வன்க ணென்றும்
பெய்யாவொருங் கேயுணர்த் தென்றடி பேணி நின்றான்.

(இ - ள்.) ஐயனே! ஆயிரம் பணமுடிகளையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தில் துயில்புரியும் திருமாலும் தன் மனதில் ஆலோசித்தறிந்து தெரியாதென்று சொல்லினர். விஷந்தங்கிய கண்டத்தையுடைய எந்தையே! அப்பாவிகள் செய்த பாவங்கள் ஒன்றையும் விடாமல் முற்றும் உணர்த்தவேண்டுமென்று பாதங்களைப் பணிந்து நின்றனர். எ - று. (உ.ள)

வெள்ளேறுயர்த் தோனிவ் யோகினி எம்பு மாற்ற
முள்ளுற்றுணர்ந் தோர்தனி நந்தியு ரைத்தி யென்ன
வெள்ளைமறை யோகினி யோதியாது முள்ளாம
லொல்லாதவன் ராசெனத் தேறுதல ரங்கொ ரேத்தான்.

(இ - ள்.) வெள்ளிய இடபக்கொடியையுடைய சிவபெருமான், அச் சிவயோகி சொல்லிய வார்த்தைகளைத் திருவுளங்கொண்டு, ஒப்பற்ற நந்தீ! அதனை நீ சொல்லக்கடவாயென்று, இகழப்படாத வேதங்களையுணர்ந்த அச் சிவயோகி கேட்டவற்றையெல்லாம் அவர் திருவுளத்திற்கொண்டறிந்து விரிவாகச்சொல்லும்படி வரம்பாலித்தனர். எ - று, (௨௧௮)

அதுகாலையி னந்தி யருந்தவ யோகி யோடும்
விதுவார்சடை யெந்தைபி ரான்விடை பெற்ற கன்றான்
புதுமாமணிக் கோபுர மாளிகை கொண்டு புக்கான்
பதுமாசன மண்டபத் தன்பு பகர்ந்தி ருந்தான்.

(இ - ள்.) அப்பொழுது, திருநந்திதேவர், அருந்தவஞ்செய்த சிவயோகியாரோடு, சந்திரசேகரராகிய எமது சிவபெருமான்பால் விடைகொண்டு அங்கு நின்றும் விலகி, புதுமையாயுள்ள சிறந்த இரத்தினங்கள் பொருந்திய முதற் கோபுரவாயிலிலுள்ள திருமாளிகையில் அழைத்துக்கொண்டுபோய், அங்குள்ள மண்டபத்திலே அச்சிவயோகிக்கு அன்புள்ள வார்த்தைகளைச்சொல்லிப் பதுமாசனமிட்டு வீற்றிருந்தனர். எ - று. (௨௧௯)

அவ்வெல்லை யரும்பவிழ் குல்லை யலங்கலோனுஞ்
செவ்வேரி நறுவிரி தாமரைச செல்வனோடு
மெவவேலையு மெண்ணுறு மன்பின னாகி நன்னீர்
தவ்வாவிரைச சென்னி பதந்தொழ வந்து சார்ந்தான்.

(இ - ள்.) அச்சமயத்தில் அரும்புகள் விரியுந துளசிமாலைதரித்த திருமாலும் மணந்தங்கிய செந்தேன் நிரம்பிய தாமரை மலர்ப்பீடத்தையுடைய பிரமனோடு, சதாகாலமும் தியானிக்கின்ற அன்புடையவனாய், கங்காசலம் நீங்காமல் ஒலித்துக்கொண்டிருக்கும் திருமுடியையுடைய சிவபெருமான் பாதங்களை வணங்கும்படி வந்து சேர்ந்தனர். எ - று. (௨௨௦)

வெள்ளைக்கயி லைக்கிரி வாயிலின் மேவி நின்றார்
வள்ளற்றிற னந்தியைக் காண்கிலர் வாயி லுற்றார்
தள்ளற்கரு மாதவ யோகியுந் தானு மாக
வுள்ளத்தி லுவப்பொடும் வேறிடத் துய்த்தி ருந்தார்.

(இ - ள்.) வெண்ணிறந்தங்கிய திருக்கைலாயகிரியின் முதற்கோபுரவாயிலில் வந்து நின்றார்கள். வள்ளற்றன்மையுடைய திருநந்திதேவரை அங்கே காணாதவர்களாய் அக்கோபுரவாயிலினுள்ளே போனார்கள். அங்கு வேறோரிடத்தில் நீக்குதற்கரிய பெருந்தவஞ்செய்துள்ள சிவயோகியாரும் தாமுமாகத் திருவுள்ளக்களிப்புடன் வீற்றிருக்கின்றார். எ - று. (௨௨௧)

என்றன்னவ ரோதிய சொற்கொ டெழுந்து போகிக்
குன்றன்ன நிரைத்தெழு மாளிகைக் கோயில் புக்க
நின்றன்னவ ரெய்தியி ருந்துழி யன்பி னுற்றார்
வன்றிண்புய நந்தியை யன்பின் வழுத்தி னாரால்.

(இ - ள்.) என்று, அங்குள்ள சிவகணங்கள் கூறிய வார்த்தைகளைக்கேட்டுக் கொண்டு அங்கு நின்றுஞ்சென்று, மலைகள்போலும் வரிசையாயமைந்துள்ள மாளிகைகளையுடைய திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, சிவயோகியாரும்

திருநந்திதேவரும் வீற்றிருந்த இடத்திற்கு அன்புடனேட்டுத் மிகுவல்லமைமுற்ற தோள்களையுடைய திருநந்திதேவரை உண்மைப்பக்தியோடு தோத்திரஞ் செய்தார்கள். எ - று. (௨௪௨)

செந்தாமரை மேலுறை மங்கை சிறந்த மார்பற்
கந்தாமரை மேலுறை நான்முகற் கன்பு கூரப்
பிந்தாவருண் மாதவ யோகியிற் பேணல் செய்யா
நந்தாவரு ணந்தி யிருப்பிட நல்கி னானால்.

(இ - ள்.) சிவந்த தாமரைமலரின்மேல் வசிக்கும் திருமகளை மார்பிலுடைய சிறந்த திருமாலுக்கும், அழகிய தாமரைமலர்ப்பீடத்தையுடைய பிரமதேவனுக்கும் அன்புமிகுந்து, அதன்பின் அரும்பெருந்தவஞ்செய்த சிவயோகியாரை விரும்பி, திருவருள்குன்றாத திருநந்திதேவர் அவர்கட்கு ஆசனங்களளித்தனர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புலக்கவேண் டுமக் காதை யிதுவெனப் புகலி னும்பால்
விலக்கற விருப்பி மற்றும விரிக்குதும் வினாதி யென்னு
நலத்தகை நந்தி கேட்பச சதாநந்த னவைதீர் யோகி
யுலப்பறு தவத்தி னின்றோ னிகழ்ந்தவை யுரைப்ப தானான்.

(இ - ள்.) நாம் தெரிவிக்கவேண்டிய சிறந்த சரித்திரம் இதுவென்று சொன்னால், உம்மிடத்தில் தவறாது விருப்பத்தோடு அச்சரிதையை விளக்குவோம். ஆதலால் கேட்பீராகவெனக்கூறுகின்ற நன்மைமிக்க நந்தியெம்பெருமான் கேட்கும்படி குற்றமற்ற அளவிறந்த தபோமார்க்கத்தி லொழுகியவராகிய சதானந்தரென்னும் சிவயோகியார் நடந்தவற்றைக் கூறலாயினார். எ - று.

பைக்கடும் பாந்த ளேந்து முலகெலாம் படர்ந்து மற்றைத்
தெக்கண நிரையங் காண்பான் சென்றனன் சிகரத் திண்டோண்
மிக்குயர் தருமச செங்கோல் வேந்தனுற் றெதிர்ந்தா னென்னோ
டொக்குறு நிரைய மெல்லாமுடன்கொடு தொகுத்துச்சொன்னான்.

(இ - ள்.) கொடிய ஆதிசேடன் பணாமுடியிற் சுமக்கின்ற உலகங்களெல்லாவற்றிலுஞ்சென்று, அதன்பின்னர், இயமபுரத்திலுள்ள நரகங்களெல்லாவற்றையும் பார்க்கும்படி சென்றனன். மலைச்சிகரங்கள்போன்ற வலிய தோள்களையும் மேலாகிய தருமநெறியிற் செலுத்துஞ் செங்கோலையுமுடைய இயமன் எதிர்கொண்டுவந்தனன். அவன் என்னைத்தன்னோடழைத்துச்சென்று, கூட்டமாயுள்ள நரகங்களையெல்லாந் தொகுப்பாகக்கூறினான். எ - று. (௨௪௩)

அன்னவ னோடும் பாவர் படுவன வலைய நோக்கித்
தென்னிலை நிரைய முற்றுங் கண்டனன் றீமை யாளர்
புன்னிலை நிரையத் தாழ்ந்து படுவன புகலி னம்மா
வென்னுளந் துணுக்க மெய்தும் யாதென வுரைக்கற் பாலது.

(இ - ள்.) அந்த இயமனோடும் பாவிகள் படும் வேதனைகள் முழுவதும் பார்த்து இயமபுரியிலுள்ள எல்லா நரகங்களையுங்கண்டேன். அப்பாவிகள் பலவேறான நரகங்களில் விழுந்து அநுபவிப்பனவாகிய வேதனைகளைச்சொன்னால், அம்மா! என் மனம் நடுங்குகின்றது. அவை என்னவென்று சொல்லத்தக்கன? எ - று. (௨௪௪)

ஆயவர் தம்மின் மற்றோ ரருநர கடைந்த பாவத்
தீயரைச் செம்பி ளுற்றுங் கடாரத்தி னெய்யிற் சேர்த்திக்
காயெரி நெய்யிற் காச்சிக் கொதியெழ மிதப்பக் கண்ணுற்
றேயவா மறலி யேனும் வெருக்கொள மிடரி னுற்றார்.

(இ - ள்.) அப்பாதகர்களிலே, வேறொரு பெரிய நரகத்திலே வீழ்ந்த பாவிகளை, செப்பினாற்செய்த கடாரத்திலுள்ள நெய்யிலிட்டு, எரிந்துகொண்டிருக்கும் அக்கினியில் நெய்யைக் கொதிக்கும்படி காய்ச்சி, அதில் அவர்கள் மிதந்துகொண்டிருக்கக் கண்ணாற்கண்டேன். இயமனே யானாலும் அச்சமுறத்தக்க துன்புற்றிருக்கின்றார்கள். எ - று. (௨௬௭)

காய்ச்சிய சலாகை கண்ணி னாசியிற் காதிற் காந்தப்
பாய்ச்சினர் மயிர்க்கா றோறும் பன்னூசி பூசி மாட்டி
மீச்செலா துறப்புத் தோறும் வெவவிருப பாபபு மிட்டா
ராச்சிய வனலிற் குப்புற் றுங்கவர் கிடப்ப தானார்.

(இ-ள்.) காய்ச்சிய இருப்புச்சலாகையைக் கண்களிலும் நாசித்தொளைகளிலும் செவிகளிலும் வேகும்படி செருகுகின்றார்கள். மயிர்க்கால்களிலெல்லாம் கூரிய பல ஊசிகளைக்குத்தி, அவை மேல்வாராதபடி அவயவங்கடோறும் கடினமாகிய இருப்பாப்புமடித்தார்கள். நெய் கொதிக்கின்ற நெருப்பில் அவர்கள் கவிழ்ந்து கிடப்பதானார்கள். எ - று. (௨௬௮)

ஈங்கிவர் யார்கொ லென்ன வெம்மனோர்க் கறிய வொண்ணாத்
தீங்குள ரவர்க ளென்று னிவணுறை திசைமு கத்தோன்
வீங்குநீ ருலகக் காவ லிவனொடும் வினவ வின்னோர்
யாங்ஙன மறிவ தெம்மா லறிவதற் கெளிய வன்றே.

(இ - ள்.) இப்பாவிகள் யாரெனக்கேட்க, எம்மைப் போன்றவர்களுக்கு அறிதற்கேலாத பாவிகளாவார்களென்றான். இங்கேயிருக்கிற பிரமதேவனையும் கடல் சூழ்ந்த நிலவுலகத்தைக் காக்கின்ற விஷ்ணுமூர்த்தியாகிய இவரையும் கேட்டகாலத்தில், இவர்களிருவரும் இவ்விடயம் எப்படி யறிவது? இது எங்களால் அறிதற்கெளிதானதன்று. எ - று (௨௬௯)

என்றெடுத் தியம்பி விட்டா னீங்கிவர் தீமை யோர்வான்
பொன்றழை யிதழி பூத்த புரிசடைப் புனிதற் போற்றி
நின்றனை னிகழ்த்தி யென்னை நிகழ்த்தின னினனை யென்று
னன்றவ னுரைப்பக் கேட்ட நந்திமுற் றறைவ தானான்.

(இ - ள்.) என்றெடுத்துச் சொல்லிவிட்டனர். இப்பாவிகள் செய்த பாவங்களையுணர்ந்து கொள்ளும்படி, பொன்போலும் இதழ்களமைந்த சிவபெருமானைத்துதித்து நின்றேன். தேவரீரை நோக்கி நீ சொல்லவெனக்கட்டளை தந்தாரெனக்கூறினர். அப்பொழுது சிவயோகியார் சொல்லக்கேட்ட திருநந்தி தேவர் முழுதுந் திருவாய்மலர்ந்தருளலாயினர். எ - று. (௨௭௦)

மெலியவ ரெளிமை நோக்கி வேதனுன் மரபி னின்று
வலிகெழு தறுகட் பாவ மறத்துறை யகற்றி வாழ்கின்றன்
கலிகெழு கடலந் தானைக் கனைகழல் விசய சேனன்
ஒலிபுன லுடுத்த விஞ்சி விதர்ப்பநாட் டொருசெங் கோலான்.

(இ - ள்.) ஒலிக்கின்ற நீர்மயமான அகழிசூழ்ந்த மதிலையுடைய விதர்ப்ப நாட்டை யரசாண்ட ஒப்பற்ற செங்கோலையுடையவனுகிய சத்திக்கின்ற கடல்போன்ற சேனையையும் வீரகண்டாமணியையுமுடைய விசுவசேனனென்னும் மன்னவன், ஏழைகளின் வறுமையைக்கண்டு உபகாரஞ்செய்து வேதசாஸ்திரங்களின் ஒழுக்கத்திலிருந்து, வலிமை மிக்க அஞ்சாமையாற் செய்வதாகிய பாவத்திற்குரிய கொடுமைத்தன்மை நீங்கி வாழ்கின்றவன். எ - று. (உஎக)

ஆங்கவ னகன்று வேட்டத் தெழுந்தன னருவிக் குன்றப்
பாங்கடை வனம்புக் கேகிப் பல்விலங் கொறுத்து மீண்டா
னோங்கருஞ் சுரத்து முன்னி வேடைகொண் டுயங்க லுற்றான்
றேங்குநீர்ச் சடிலத் தோன்சித் தேசுரஞ் சென்று வீழ்ந்தான்.

(இ - ள்.) அம்மன்னவன் தன் நகரைவிட்டுப் புறப்பட்டு வேட்டைக்குச் சென்று அருவியாறொழுகும் மலைச்சாரலிலுள்ள காட்டிற்புகுந்து திரிந்து பல மிருகங்களைக் கொன்று திரும்பினான். திரும்பும்போது மிகக்கொடுமைதங்கிய பாலைவன மெய்தி, தாகமுற்றுச் சோர்ந்திருந்து தேக்கெடுக்குங் கங்கைசூடிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் சித்தீச்சுவரமென்னுந் திருக்கோயிலிற்போய் வீழ்ந்தான். எ - று. (உஎஉ)

வீழ்ந்தவ னிராச ராசன் மெல்லடி வருடி நீவத்
தாழ்ந்துறு கருத்த னாகிக் கிடத்தலுந் தானைச் செல்வர்
போழ்ந்துறு மனத்த ராகி வருந்தினர் புலம்பு கொண்டார்
சூழ்ந்தன ருடம்பு நீவித் திமிர்ந்துறத் தொடங்கு கின்றார்.

(இ - ள்.) அப்படிவிழுந்த இராசராசனுடைய அவனது மெல்லிய பாதத்தைப் பிடித்துத் தடவிக்கொண்டிருக்க, உணர்வற்றிருந்தவனாகி யிருத்தலும் சேனாநாயகர்கள் கண்டு வருந்திய மனமுடையவராய் வருந்தித் துக்கப்பட்டார்கள். பின்னர் அம்மன்னவனைச் சூழ்ந்துகொண்டு உடலிற்பரிச வுணர்ச்சியுண்டாகும்படி தடவித் தேய்க்கத்தொடங்கினார்கள். எ - று. (உஎ௩)

முருகினோண் கனியு மற்றை யெண்ணெயு நாட முன்னி [றார்
யொருவருங் கொணர்ந்தா ரல்லர் செய்வதொன் றுணரார் மின்
செருகிய சடில வேணி சினகரத் தகவை சென்று
றொருதனித் தகளி யெண்ணெ யக்கனி யுடன்கொண் டுற்றார்.

(இ - ள்.) சிறந்த எலுமிச்சம் பழமும் நல்லெண்ணெயுந் தேட நினைத்து ஒருவருங் கொண்டுவரவில்லை. யாவரும் செய்வகையொன்று மறியாதிருந்தார்கள். பிறகு முடிந்து செருகியுள்ள சடைமுடி பொருந்திய சிவபெருமான் திருக்கோயிலுட் சென்று, ஒப்பற்ற அகலிலிருந்த எண்ணெயை எலுமிச்சம் பழத்துடன் கொண்டுவந்தார்கள். எ - று. (உஎ௪)

உடைத்தனர் முருகி னொண்கா யரசனை யுடலந் தீற்றித்
துடைத்தன ரெண்ணெய் தொட்டுத் திமிர்ந்தன ரதனைக் கேட்டு
விடைக்கொடி யுயர்த்தோன் கோயில் பரிக்குநர் வேந்தற் கிது
கடைப்பட வுரைத்தா ரென்றுங் கேட்டிலன் கழற்கால் வேந்தன்.

(இ - ள்.) சிறந்த எலுமிச்சம் பழத்தையுடைத்து உடலிற் தேய்த்துத் துடைத்துவிட்டு எண்ணெயைத் தொட்டுத் தேய்த்தார்கள். அப்படிச்செய்ததை இடபக் கொடியையுடைய சிவபிரான் திருக்கோயிற் காவலர்கள் கேட்டு, அந்த மன்னனுக்கு இச்செய்தியை விளங்கச்சொன்னார்கள். வீரக்கழல்தரித்த அம்மன்னவன் அவ்வார்த்தையொன்றையுங் கவனிக்கவில்லை, எ - று. (உஎ௫)

ஆயது கழிந்த பின்னர் நாள்பல வகற்றி யன்னோன்
பாய்திரை யுலகக் கோன்மை பரித்துயி ரிறந்த ஞான்று
காய்சின மறலி தூதர் கடுகினர் கழுத்திட் டீர்த்த
பாசவெங் கயிற்றாற் பற்றிச் சென்றனர் பதகன் றன்னை.

(இ - ள்.) அது நடந்தபின்னர், அம்மன்னவன் அலைகள் பாயுங் கடல்சூழ்ந்த உலகத்தை யரசாளும் செங்கோலைத்தாங்கிப் பலநாள்கழித்து உயிர்நீங்கியபோது, கடுங்கோபமுடைய இயமதூதர்கள் அதிவிரைவில்வந்து கழுத்திற்போட்டிழுத்த கொடிய பாசக்கயிற்றால் அப்பாவியைப் பற்றிக்கொண்டு சென்றார்கள். எ - று. (௨௭௬)

கோடியோர் நாலே ழாய கும்பியுட் கிடத்திப் பின்னர்
வீடிலாத் தவத்தோ யிந்த வெந்துய ருழக்க விட்டார்
நாடியக் காலத் திட்ட தூதரு நமனும் போனார்
நீடிய கற்பங் கோடி கழிந்தன காலை நீத்து.

(இ - ள்.) இருபத்தெட்டுக் கோடி நரகங்களிலும் அமிழ்த்தித் துன்பு செய்தபின்னர், இக்கொடிய வேதனை நுகரவிடுத்தார்கள். காலங்கள் சென்று இப்போதைக்கு விசேடித்த காலவளவை யுடையதாகிய கோடி கற்பங்களாய் விட்டன. அழியாத் தவமுடையோரே! இவன் பாவத்தைக் கணக்கிட்டு அக்காலத்தில் நரகத்திற்சேர்த்த தூதிவர்களும் இயமனும் மாறிவிட்டார்கள். எ-று.

பல்லுயி ருலகத் தோடு படைத்துறு பதுமத் தோனும்
மெல்லொளி பரப்பு நேமி யீர்ந்துழா யலங்க லோனுஞ்
செல்லுறு காலத் தோடுஞ் சென்றன ரளவை யற்றார்
சொல்லுவ தெங்ங னூழி தொலைந்தன சொல்லற் பாற்றோ.

(இ - ள்.) பல சீவராசிகளையும் அவைவசிக்கும் உலகங்களோடு படைக்கின்ற பிரமனும், சூரியன்போலக் காந்திவீசுஞ் சக்கராயுதமேந்திய குளிர்ந்த துளசிமாலை தரித்த விஷ்ணுவும் அவரவர்கட்குரிய காலநியதியின்படி கணக்கில்லாதவர்கள் இறந்தார்கள். அவர்கள் தொகையைக் கூறுவதெப்படி? கற்பங்கள் பல கழிந்தவற்றைச் சொல்லமுடியுமோ? எ - று. (௨௭௮)

ஈங்கிவன் பகலி னீரே ழிந்திர ரிறப்பர் செய்ய
தேங்கமழ் கமலச் செல்வர் சென்றன ரிலக்க மற்றோ
ராங்கல ரிறந்த தென்னு லளப்பரி தைய வென்றான்
பூங்கழ லலங்க னாதி முடித்திலன் புகல்வ தானான்.

(இ - ள்) இவன் இந்த நரகில்விழுந்த காலமுதல் அறுபத்து மூன்று இந்திரர் மாண்டார்கள். செந்தேன் மணங்கமழும் தாமரைமலர்ப் பீடத்தையுடைய பிரமர்கள் எண்ணிறந்தவர்கள் இறந்தார்கள். இப்படி இறந்தவர்கள் தொகையை என்னால் அளவுபடுத்திச் சொல்லமுடியாதென்று அழகிய வீரகண்டாமணியையும் மாலையுமணிந்த திருநந்திதேவர், சரித்திரத்தை முடிக்காமல் மேலுஞ் சொல்லுவாராயினர், எ - று. (௨௭௯)

வேந்தனோ டுழவாத் துன்ப முழப்புற வெய்ய வெந்தீக்
காந்துற நெய்யிற் றோய்வா ரன்னவர் கேளீர் கண்ணுற்
றாய்ந்தவர் புன்மைத் தொன்மை யறிகுவ தரற்க லானு
மோய்ந்தவர்க் குரைக்க லாமே யென்றன னுணர்வு மிக்கான்.

(இ - ள்.) அடையமுடியாத துயரத்தில் அவ்வரச்சனும் வருந்தும்படி கொடிய பெருநீப்பற்ற நெய்க்கொப்பரையில் மிதப்பவர்களாகிய அவர்களைப் பற்றிக் கேட்பீர்களாக. அப்பாவிகள் வேதனையைப் பார்த்து ஆலோசித்து அவர்கள் வேதனையின் பழமையை யறிந்துரைப்பது சிவபெருமானுக்குத்தான் இயலுமன்றி, மற்றவர்களுக்குக் காலவளவைக் கணக்கிட்டுச் சொல்லலாகுமோ? என்று அறிவிற்சிறந்த திருநந்திதேவர் திருவாய்மலர்ந்தருளினர். எ - று.

அறிந்தன னனைத்துங் கேட்டா னருந்தவ யோகி யங்கம்
பொறிந்தெழு மயிர்க்கால் பொங்கப் பொருமினன் புகல்வ தானுன்
பிறிந்தவர்க் கருகா யுற்ற பெருந்துயர் நரகி னுற்றார்
மறிந்தவர் படுவ சொல்லின் மனந்துளக் குறுவ தென்றான்.

(இ - ள்.) அருந்தவஞ்செய்த சிவயோகியார் இவற்றையெல்லாங் கேட்டறிந்து, உடல்முழுதும் படிந்த மயிர்கால்தோறும் வியர்வரும்பத் துக்கித்துக் கூறுகின்றார். வேறுபட்டு அப்பாவிகட் கருகேயுள்ள விசேட துன்பமுடைய நரகத்தில் வீழ்ந்திருப்பவர்கள், அந்நரகத்தில் மாறிமாறிப் படுகின்றனவற்றைக் கூறப்புகின் மனநடுங்குமென்று கூறினர். எ - று. (௨அக)

உருக்கிய செம்பொ னேந்தி யொன்பது தொளையும் வாக்கிக்
கருக்கிய பொதிந்த வாக்கைப் புன்றசை கருவி நாட்டி
யிருத்துவ ரரிவ ரீர்வ ரின்னவீ திழைப்ப ரின்னோர்
பெருக்கிய பாவ மீதென் றுணரத்துதி பெரியோ யென்றான்.

(இ - ள்.) செம்பை யுருக்கி யெடுத்துக்கொண்டு நவத்துவாரங்களிலும் ஒழுக்கி, உடலிலுள்ள சிறு தசையிலும் ஆயுதங்களைச் செருகிக் குத்துவார்கள். அத்தசைகளை யறுத்தீர்ப்பார்கள். இவ்வகைத் துன்பங்களைத் தூதர்கள் செய்வார்கள். இப்பாவிகள்செய்த பாவ மிதுவென்று பெருந்தகைமை யுடைய நந்திதேவரே! அடியேனுக் கறிவிக்கவேண்டுமென்று சிவயோகி கேட்டனர்.

எனச்சிவ யோகி கேட்டு வினவலு மிருந்த நந்தி
மனக்கினி துணர்ந்து நோக்கி யவரிலை வகுப்ப தானுன்
கனப்புய லணவு மிஞசிக் கலிங்கநாட் டரசா கோமா
னனைத்தொடை நெடுவேற் சந்த்ராங் கதனெனு நாம வேலான்.

(இ - ள்.) என்று சிவயோகி வினவியதை அங்கெழுந்தருளிய திருநந்திதேவர் திருச்செவியுற்று, தமது திருவுள்ளத்தில் நன்கு கருதிப்பார்த்து, அவர்களுடைய தன்மையைச் சொல்லுகின்றனர். மேன்மைதங்கிய மேகங்கள் தவழும் மதில் சூழ்ந்த கலிங்கநாட்டை அரசுபுரிந்தவனும் குளிர்ந்த பூமாலைதரித்த வேற்படை தாங்கியவனுமாகிய சந்திராங்கதனென்னும் பெயர்பெற்ற மன்னவன் ஒருவனுண்டு. எ - று. (௨அ௩)

உவன்பெறு மதலை வீரக் கிராதனென் றொருபே றுற்றோ
னிவந்தவெண் கவிகை யந்த மைந்தற்கு கிறவிப் போனு
னவன்தொலைத் தயனை நோக்கி யருந்தவ மாற்றி நின்று
தவந்தரு புனித வேந்த னுன்முக னுலகஞ் சார்ந்தான்.

(இ ள்.) அம்மன்னவன் பெற்ற புதல்வன் வீரக்கிராதனென்னும் ஒப்புற்ற பெயர்பெற்றவன். அவன் தந்தை தன் பரவிய வெண்கொற்றக் குடை

மை அப்புதல்வனுக் களித்துச்சென்று நீலிலைகளை விலக்கிப் பிரமதேவனை நோக்கி அருந்தவம் புரிந்துகொண்டிருந்து புனிதனாகிய சந்திராங்கதன் அந்தவத்தாலெய்திய சத்தியலோகத்தை யெய்தினன். எ - று. (௨அ௪)

"அன்னவன் புதல்வன் வீரக் கிராதனென் றவனி காத்து
மன்னுயிர் புரந்து நீதி வரம்பினின் றரசு செய்தான்
றன்னுழை விரும்பி யாக வேச்சர னெனுமோர் தன்மைத் [வான்.
தொன்னிலை மறையோ னேற்பா னினைந்துளந் துணிந்து செல்

(இ - ள்.) அவன் புதல்வனாகிய வீரக்கிராந்தன் சிங்காதனத்திலிருந்து உலகினைக் காத்துச் சீவகோடிகளை, ரக்ஷித்து மநுமுறையில் நின்று அரசு நடத்தினான். அவன்பால், யாகவேச்சுரனென்னும் பெரிய ஒப்பற்ற நிலைமைதங்கிய புராதனமான அந்தணர்குலத்திற் பிறந்தவன் யாசிக்கு நிமித்தங் கருதி மனந் துணிந்து செல்கின்றான். எ - று. (௨அ௫)

செல்லுமா நகரத் தோர்பாற் பழமறை தெரிந்து போற்றிச்
சொல்லிய பரம சோமேச் சுரர்திருக் கோயில் போற்றிப்
புல்லவே றுயர்த்தோற் போற்றிச் சைவதே சிகனைப் போற்றி
மல்லிகை மாலை வேந்தற் கருளென மறையோன் கேட்ப.

(இ - ள்.) செல்கின்ற அப்பெரிய நகரின் ஒருபக்கத்தில், பழமையான வேதங்களுணர்ந்து துதித்துச்சொல்லிய பரமசோமேச்சுவரரென்னும் சிவபெருமான்திருக்கோயிலை வணங்கி, இடபக்கொடிதாங்கிய சிவபெருமானைப்பணிந்து, அக்கோயிலிலுள்ள சிவாசாரியரை நமஸ்கரித்து, சிவபெருமானுக்குச்சாத்தியுள்ள மல்லிகை மலர்மாலையை மன்னவனுக்குக் கொண்டுபோம்படி கொடுப்பீரென்று யாகவேச்சுரனென்னும் வேதியன்கேட்க. எ - று. (௨அ௬)

கொடுத்தன னுவந்து சைவ தேசிகன் தொடுங்குங் காலைத்
தொடுத்தணி பொன்னூ லந்தத் தொங்கலிற் றுவண்டு செல்ல
விடுத்திவ ரறியார் கொண்டு வேந்தன்முன் புகுந்தான் வேதம்
படித்துணர் மறையோ னாசி பகர்ந்தவன் கழுத்தி லிட்டான்.

(இ - ள்.) அச்சிவாசாரியர் அப்படியே மனங்களித்து கொடுத்தனர். அப்படிக் கொடுக்கையில் சிவபெருமானுக் கணிந்திருந்த பொன்னூலாகிய முப்புரிநூல் அம்மாலையோடு கலந்துபோகவும், சிவாசாரியர் அறியாராயினார். வேதங்களை நன்குணர்ந்த யாகவேச்சுரவேதியன் அதனைக்கொண்டு சென்று மன்னவன் முன்னடைந்து ஆசிவசனங்கூறி அவ்வரசன் கழுத்தில் மாலையை யணிந்தான். எ - று. (௨அ௭)

உவப்புடை யரச னோக்கி யொளிகெழு பசும்பொற் பூணூ
லெவர்க்குள தென்ன நின்ன தென்றனன் மறையோன் வேந்த
னிவப்புறு தேரனு நூலு நோக்கின னெகிழ்ந்த சிந்தை [டான்.
கவர்த்திலன் மறையோற் பார்த்துத் தன்னுளங் களிப்புக் கொண்

(இ - ள்.) களிப்புடைய மன்னவன் இதனைக்கண்டு அதனோடுசேர்ந்த ஒளிதங்கிய பசும்பொன்னூலாகிய முப்புரிநூல் யாவருடையதென்றுவினவ, அவ்வந்தணன் உம்முடையதேயெனக் கூறினன். உயர்ந்தவனான் தன்தேசிகனையும் முப்புரி நூலையுங்கண்டு, இரங்கிய மனதை மறைக்காதவனாய் அவ்வந்தணனைநோக்கித் தன் மனங்களிகூர்ந்தான். எ - று. (௨அ௯)

சந்தன னீதிய மந்த வேதிய னிருகை யேந்திப்
போந்தனன் போந்த பின்ன ராற்கணி பொன்னூல் காணார்
காந்திய மனத்த ராகி யரசன்முற் கடிது புக்கார்
வேந்தநம் பரமர் பொன்னூல் வேதியன் கொணர்ந்தா னன்றே.

(இ - ள்.) அவ்வரசன் பல திரவியங்களைக் கொடுத்தான். யாகவேச்சரன் இருகையாலும் பெற்றுக்கொண்டு போயினன். அதன் பின்னர், சிவபெருமானுக் கணிந்திருந்த பொன்னூலாகிய பூணூலைக்காணாத ஆலய பரிபாலர்கள் வருந்திய மனத்தினராய் மன்னன் முன் அதிவிரைவிற் சென்று, அரசனே! நமது சிவபெருமானுக்குத் தரித்திருந்த பொற் பூணூலை உம்மிடம் வந்த அந்தணன் கொண்டுவந்தான். எ - று. [உ௪]

தொடைபடு மாலை யோடு துளங்கொளிப் பசிய பொன்னூல்
மிடைபடக் கிடந்த தந்த வேதியன் கொணர்ந்து தந்தான்
மடலுடை யலங்கன் மார்ப தருகென் றுரைப்ப வாளா
கடைபடக் கேட்டுங் கேளா னொத்தனன் கழற்கால் வேந்தன்.

(இ - ள்.) தொடுக்கப்பட்ட மல்லிகை மாலையோடு மிகக் காந்தியுடைய பசும் பொற் பூணூல் சேர்ந்து கலந்திருந்ததை அவ்வந்தணன் கொணர்ந்து உம்பாற் கொடுத்தனன். இதழ்கள் பொருந்திய மலர்மாலை சூடிய மார்புடைய அரசனே! அப்பூணூலைத் தரவேண்டுமெனச் சாற்ற, இவ்வார்த்தைகளையெல்லாங் கேட்டும் வீரக்கழலணிந்த பாதங்களையுடைய அவ்வரசன் ஒன்றையும் அறியான்போ லிருந்தனன். எ - று. (உ௫)

மறுகின ரெந்தை கோயில் பரிப்பவர் மன்னன் செய்கை
கூறுகின ருரைத்தார் சைவ தேசிகன் குழைந்த சிந்தை
தெறுசின மெடுப்ப வேந்தன் றன்னுழைச் சென்று னன்னோ
னுறுமணித் தவிசி னன்பி னிருத்தின னுவகை கூர்ந்தான்.

(இ - ள்.) எமது சிவபெருமான் திருக்கோயிற் பரிபாலகர்கள் மனம் வருந்தியவர்களாய், அம்மன்னவன் செய்கையைச் சிவாசாரியர்பா லெய்திச் சொன்னார்கள். அச்சிவாசாரியர் தமது உருக்கமெய்திய மனதிற் கடுங்கோபமெய்தியதால் அவ்வரசன்பாற் போயினர். அம்மன்னவனும் ஆங்குள்ள இரத்தின பீடத்தில அவரை அன்போடு வீற்றிருக்கச்செய்து சந்தோஷமிகுந்தான், எ-று.

அந்தண னரசற் பார்த்து வேதியற் கருளி னீந்த
பைந்துண ரலங்க லோடு மரனணி பசும்பொற் பூணூல்
வந்தது திரும்ப வந்த மாவிடை யவற்கீ கென்னத்
தந்திலை யாயின் மீளாப் படுகுழி நிரையஞ் சார்வாய்.

(இ - ள்.) சிவாசாரியர் மன்னவனைநோக்கி, யாகவேச்சுவரனெனும் வேதியனுக்கு அன்போடுகொடுத்த பசிய கொத்துக்களாலாகிய மல்லிகை மாலையோடு சிவபெருமானுக் கணிந்திருந்த பசும் பொற் பூணூலும் வந்துவிட்டது. அதனால் மீண்டும் அப்பூணூலை அப்பெருமானுக்கே தருவாயாக. இப்போது நீ தராவிடின் எக்காலும் மீட்கப்படாத படுகுழியாகிய நரகத்திற்சேர்வாய். எ - று. ([illegible])

இன்னணஞ் சிவத்து ரோகத் தவர்படு நிரைய மெய்து
மன்னவன் கதைபொன் றுண்டாற் கேண்மதி காம ரூபி
பொன்னுநாட் டரச னின்ற வசுவெனு மதலை யென்னை
பொன்னனிர் சடையோன் கோயில் புகுந்திருந் தாட லுற்றான்.

(இ - ள்.) இத்தகைமையான சிவத்துரோகிகள் வீழ்கின்ற நரகத்தைச் சேர்ந்த மன்னவன் சரிதமொன்றுள்ளது. அதனைக் கேட்பாயாக. காமரூபி யெனும் நாட்டினை யரசுசெய்த மன்னவன் பெற்ற வசுவென்னும் பெயர்பெற்ற புத்திரன், எமது பிதாவாகிய பொன்போலப் பிரகாசிக்குஞ் சடையையுடைய சிவபெருமான் திருக்கோயிலுட்போய் அங்கு விளையாடியிருந்தனன். எ - று.

வெண்மணல் குவித்துக் கூட்டி யாடுறு மெல்லை வேந்தன்
கண்மணி யனைய பால னோர்பணங் கண்ணிற் காணூ
வுண்மகிழ்ந் தெடுத்துக் கைக்கொண் டோடினு னிலவு காலுந்
தண்மணிக் கழற்காற் பெற்ற தந்தைபாற் கொடுத்து நின்றான்.

(இ - ள்.) வெள்ளிய மணலைச் சேர்த்துக் குவித்து அவன் விளையாடுஞ் சமயத்தில், அவ்வரசனது கண்மணிபோன்ற வசுவெனுஞ் சிறுவன், ஒரு பொற்பணத்தைக் கண்ணிற்கண்டு மனங்களித் தெடுத்துக கையில் வைத்துக்கொண் டோடி ஒளிவீசும் குளிர்ந்த இரத்தினங்கள் பதித்த வீரக்கழலணிந்த பாதத்தையுடைய தன் தந்தைபாற் கொடுத்து நேரில் நின்றான். எ - று. (௨௬௪)

ஈன்றசே யெடுக்கப் பெற்ற வோர்பண மங்கை யேந்தித்
தான்றனிக் கருவூ லத்தி னளித்தனன் றருண வேணி
மூன்றுகட் பெருமாற கென்னப் பரிப்பவர் கேட்டு முன்னிக்
கான்றொளி யலங்கு பைம்பொற் கழலர சருகு சென்றார்.

(இ - ள்.) தான்பெற்ற புதல்வன் கண்டெடுத்த ஒரு பொற்பணத்தைக் கையிலேந்திக்கொண்டு தன் ஒப்பற்ற பொக்கிஷத்திற் சேர்த்தான். இளஞ் சடைபொருந்திய திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானுக்கென்று திருக்கோயிற் பரிபாலகர்கள் கேள்விப்பட்டு, மன்னனைக் கேட்கக் கருதி, ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பசும்பொன்னாலாகிய வீரகண்டாமணி தரித்த மன்னனிடஞ் சென்றார்கள். எ - று. (௨௬௫)

சேவுயர் பெருமா னெம்மான் சினகரத் தகவை யுள்ள
யாவுமப் பரமற் கல்லா லரசருக் குரிய வன்றாற்
கோவிளங் குமர னங்க ணெடுத்தனன் கொணர்ந்து நின்பா
லீவதப் பணத்தை யீசற் களித்தியென் றிரப்ப வன்னோன்.

(இ - ள்.) இடபக்கொடியை யுயர்த்திய பெருமானாகிய எமது சிவபெருமான் திருக்கோயிலினுள்ளே உள்ளனவெல்லாம் அவ்விறைவனுக்கேயன்றி மன்னர்கட்குரியனவல்ல. ஆதலால், உன் அரசிளங்குமரன் அங்கே கண்டெடுத்துக் கொணர்ந்து உன்பாற் கொடுத்த அப்பொற்பணத்தைச் சிவபெருமானுக்குக் கொடுக்கவெனப் பிரார்த்திக்க, அதுகேட்ட மன்னவன். எ - று. (௨௬௬)

என்னிளங் குமரன் முன்ன ரெடுத்ததொன் றீயே னென்னத்
தன்னுடைக் கருவூ லத்தி னளித்தலுந் தழற்கட் பெம்மான்
முன்னவன் முனிவிற் கோயின் முழங்கழற் கொழுந்தீ வேவ
வங்கிலே யொதுக்கி யாவுங் கள்வரா லழிந்த வன்றே.

(இ - ள்.) என் இளங்குமரன் வசு, முதலிலே கண்டெடுத்த ஒன்றினைத் தரமாட்டேனென்று தன்பொக்கிஷத்திலேயே யிட்டுவைக்கவும், தீவிழியையுடைய பெருமானாகிய ஆதிதேவன் கோபத்தினால் அவ்வரண்மனையில் ஜ்வலித்தோங்கிச் சிகைவிட்டெரிந்த தீப்பற்றிக்கொண்டு எரிந்து அங்குள்ள பொருள்களெல்லாம் கள்வரால் அபகரிக்கப்பட்டன. எ - று. (௨௬௭)

ஓர்பணை மீசற் கென்று வுதவில னுடைமை யாவுந்
சோர்வுற வறுமை யெய்தித் துயருழந் திடுக்க ணுற்றான்
பாரர சொழிந்து தன்னுள் கழிந்தனன் மறலி பாசத்
தீர்வையிற் றென்பாற் சென்று வெந்நர கிடைப்பட் டானால்.

(இ - ள்.) ஒரு பொற்பணத்தைச் சிவபெருமானுக்கென்று கொடாத அம்மன்னவன் திரவியம் யாவும் அழிந்துபோக, தரித்திரமெய்தித் துன்பத்தினால் வருந்திக் கவலையெய்தினான். உலக அரசுரிமையும் நீங்கித் தன்னுயுள் கழிந்து மரித்தான். உடனே இயமன் தன்பாசக்கயிற்று லிழுக்க இயமபுரமெய்திக் கொடிய நரகில் விழுந்தான். எ - று. (௨௯௮)

பின்னர சியற்றி நின்று னவனுழைப் பிறந்த பாலன்
றன்னையும் பகைத்த வேந்தர் தனிசசிரந் துணிப்பத் தானுந்
துன்னரு நிரையம புகருத் துயருழந தழியா நின்று
னின்னலுற் றிவர்வீழ் கும்பிக் கொடுமையா ரிசைக்கற் பாலார்.

(இ - ள்.) அவன்பாற் பிறந்த அவன்புதல்வன் வசு, அவனுக்குப் பின்னே அரசாட்சி செய்துகொண் டிருந்தான். அப்புதல்வனையும பகைமையெய்திய மறுபுல மன்னர்கள் ஒப்பற்ற சிரத்தைத் துணிப்ப, அவனும் அடைதற்கரிய நரகத்தில் விழுந்து துன்பெய்தி வருந்துகின்றான். துக்கமெய்தி இவர்கள் விழுந்த நரகத்தின் கொடுமையை எடுத்துரைக்கத்தக்கவர் யாவர். எ-று. (௨௯௯)

என்றெடுத் தெடுத்துச் சைவ தேசிக னியம்பக் கேளாக்
குன்றெடுத் தனைய தோளான் குணித்தில னுளத்தி லொன்று
மன்றவற் கமைசசி னின்றார்க் குரைத்தன னவர்க்கு முள்ளஞ்
சென்றில பொன்னா ஸீசற் களித்திலர் தறுகட் டீயோர்.

(இ - ள்.) என்றிப்படி யெடுத்தெடுத்துச் சிவாசாரியர் சொல்லக்கேட்டு, மலைகள் பூரித்தாற்போன்ற தோள்களையுடைய சந்திராங்கதன் கருத்திற் சிறிதும் கவனிக்கவேயில்லை. உடனே அவனை நீங்கி அம்மன்னவனுக்கு மந்திரியாயுள்ளவர்களுக்குச சொல்லினர். அவர்கட்கும் அவ்விடயத்தில் மனஞ்செல்லவில்லை. கருணையற்றவர்களாகிய அகக்கொடியோாகள் பொன்னுபவீதத்தைப் பெருமானுக்குக் கொடுக்கவேயில்லை. எ - று. (௩௦௦)

அரசனுங் கொடிய னன்றே னமைச்சரு மறமொன் றோரார்
புரகித னிவரிற் பாவி யென்றகம் பொருமா நின்று
பரகதி யுணர்ந்த சைவ தேசிகன் பரிவிற் போனான்
வரதனுக் கலங்கு பொன்னூல் வேறுற வகுத்துக் கொண்டான்.

(இ - ள்.) மன்னவனுங் கொடியவன். அவன் மந்திரிமாரும் தருமமென்பதொன்று தெரியாதவர்கள். புரோகிதனுயுள்ளவன் இவர்களைக் காட்டிலும் பாவியென்று மனம் வருந்தியிருந்து, முத்திசாதன முணர்ந்துள்ள அச்சிவாசாரியர் துயரத்தோடு சென்று சிவபெருமானுக்குரிய ஒளிதங்கிய பொன்னுபவீதம் வேறொன்று செய்துகொண்டனர். எ - று. (௩௦௧)

போயது சிலநா ளந்தப் பொன்னவிர் புரிநூல் பூண்ட
தீயவல் லரசன் மேனி புழுக்குலந் திளைப்பச் செந்நீர்

ரய்தரக் குட்டம் பற்றி யிறந்தனன் பாசம் வீசிக்
காய்சின மறலி தூதர் தெழித்தனர் கழுத்திட் டீர்த்து.

(இ - ள்.) சிலநாட்கள் சென்றன. பொன்னூற்சமைந்த விளங்கும்பூணூலை யணிந்திருந்த பாவத்தினால் வலியமைந்த அம்மன்னவனுடைய உடலிற் புழுக் கூட்டங்கள் நெளிய உதிரமொழுகும்படி குட்டநோய் கண்டிறந்தான். பெருங் கோபமுடைய இயமதூதர்கள் பாசத்தைவீசிக் கழுத்தில் மாட்டி யீர்த்துக் கர்ச்சித்தார்கள். எ - று. (௬௦௨)

வயங்கொளிப் பொன்னூ லீந்து மாங்தி யேற்ற வன்கட்
கயங்கெழு சிந்தை யோனு மமைச்சருங் கழற்கால் வேந்தற்
கியங்கிய சிந்தைக் கேய்ந்த புரகித னென்று ளோனும்
முயங்குநாள் கழியச் சென்றார் தென்புல மறலி மூதூர்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற காந்தியுடைய பொன்னூபவீதத்தைக்கொடுத்துப் பொருள் பெற்றுக்கொண்டவனாகிய கெடுதி மிக்க மனமுடைய யாகவேச்சுவரனும் வேதியனும் மந்திரிகளும் வீரக்கழல் தரித்த பாதத்தையுடைய அம்மன்னவன் துர்புத்திக்கேற்ற புரோகிதனும் தங்கள் ஆயுளொழிய இறந்து தென்றிசையிலுள்ள இயமபுரஞ் சேர்ந்தார்கள். எ - று. (௬௦௩)

கொற்றவன் றந்தை யுந்திக் கமலத்தோன் கொடுத்த நாடு
பெற்றவ னிருந்தான் றன்னை யீங்கிவர் கிளையைப் பேழ்வாய்
சுற்றிர ளனைய திண்டோட் கடுந்திறற் கால தூதர்
பற்றினர் கொண்டு சென்று படுகுழி நிரையத் திட்டார்.

(இ - ள்.) உந்திக்கமலத்திலுதித்த பிரமதேவன் கொடுத்த சத்தியலோக பதவியைப்பெற்றுக்கொண்டு அங்கிருந்த இவ்வரசன் பிதாவையும் உறவினரையும், பிளவுபட்டவாயையும் மலையின் திரட்சிபோன்ற வலிய தோள்களையுமுடைய பெருவல்லபந்தங்கிய இயமதூதர்கள் பற்றிச்சென்று ஆழ்ந்த நரகக் குழிகளிற்றள்ளினார்கள். எ - று. (௬௦௪)

ஆயிடைத் தென்பா லெய்தி யருநர குழப்பக் கண்டு
நீயெடுத் துரைத்தோ ரின்னோ ரென்றன னந்தி நீண்ட
காயெரி சடில யோகி கண்ணுதற் பரன்பா லுள்ளம்
போயுறப் பொருும லுற்று மயிர்ப்புறம் பொடிப்ப தானன்.

(இ - ள்.) அங்கே தென்றிசையெய்தி அரிய நரகத்தில் வருந்துவனைக் கண்டு, நீர் முன்னே சொல்லியவர்கள் இவர்கள் தாமென்று திருநந்திதேவர்கூறியருளினர். நீண்ட செந்தீப்போலும் நிறந்தங்கிய சடையையுடைய சிவயோகி நெற்றிக்கண்ணையுடையவராகிய சிவபெருமானிடத்தில் மனமானது சென்று பொருந்த வருந்தி உடல்முழுதும் புளகாங்கிதரானார். எ - று. (௬௦௫)

கலிநிலைத்துறை.

எல்லை நீத்தெழு முவகையி னிருந்தமர் யோகிக்
கல்லி நாண்மலர் நான்முதற் கைம்படை பெர்[illegible]
குல்லை யோற்கிரு செவித்தலங் குளிர்ப்புற [illegible]
மல்லன் மாக்கதை பின்னுமொன் றெடுக்கன[illegible] வ[illegible]

(இ - ள்.) எல்லையின்றி மிகுந்த களிப்பெய்தியிருந்த சிவயோகியாருக்கும் அகவிதழுடைத்தாய் அன்றலர்ந்த தாமரை மலர்ப்பீடத்தையுடைய பிரமதேவனுக்கும், பஞ்சாயுதங்களை யேந்திய துளசிமாலைதரித்த திருமாலுக்கும், இருசெவிகளுங் குளிர்ச்சியுண்டாம்படி திருநந்திதேவர் மிகமேன்மைதங்கிய வேறோர் சரித்திரத்தைச் சொல்வாராயினர். எ - று. (௬௦௬)

ஆடெ ரிப்படு நெய்யிடைக் கிடப்பவர்க் கயலோர்
மாடு வெவ்வழற் கொழுந்தறத் துடித்தனர் மருள்வார்
கோடு சிந்தையிற் களங்கறுத் தொழித்தருள் குரவர்
தேட ருந்திரு வுளங்கறுத் திடப்புரி தீயோர்.

(இ - ள்.) ஜ்வலிக்கின்ற நெருப்பிற்காய்ந்துகொண்டிருக்கும் நெய்க்கொப்பரையில் விழுந்திருப்பவர்களுக்கு அருகிலுள்ளவர்களாய், தங்கட்கருகேகொடுந்தீயான துசிகைவிட்டெரியப் பதைபதைத்து மயங்குகின்றவர்கள் யாவரும், ஒழுக்கற்றமனத்தின் களங்கங்களெல்லாவற்றையும் நீக்கித்திருவருள்புரிந்த ஆசாரியர்களுடைய தேடற்கரிய திருவுள்ளமானது கோபிக்கும்படி புரிந்தகொடியோர்கள். எ - று. (௬௦௭)

அனையர் செய்கைமுற் றுறைகுது மருந்தவ கேட்டி
நனைந றும்பொழிற் கவுளதே யத்தொரு நகரங்
கனைபெ ரும்புன லுடுத்தது கவுளமென் றுளதால்
வினைஞ னத்திரு நகர்க்குள வணிகனோர் வெய்யோன்.

(இ - ள்.) அப்பாவிகள் செயலை முற்றுஞ் சொல்லுகின்றோம். அருந்தவமுடையோரே! கேட்பீராக. குளிர்ந்த நன்மணம் வீசுஞ் சோலைசூழ்ந்த கவுளநாட்டில், சத்திக்கின்ற பெருநீர் சூழ்ந்த கவுளமென்னும் ஒரு நகரமுள்ளது. அந்தச்சிறந்த நகரத்திலே தீமைமிகுந்த கொடியோனாகிய ஒருவணிகனிருந்தான். எ - று. (௬௦௮)

வணிக னன்னவன் பெறுபெயர் பெருநிதி வரதன்
றணிவில் வெங்கதிர்க் கடவுளைத் தினந்தொழுந் தகையான்
பணிசெய் பீடமண் ணொழித்தது செங்கலிற் படுப்பான்
றுணிவு கொண்டனன் செங்கலெங் குளவெனத் துணிவான்.

(இ - ள்.) அவ்வைசியன் பெருமைதங்கிய பெயர் நிதிவரதனெனச் சொல்லுவார்கள். அவனோ அடங்காதகொடூரமாகிய சூரியபகவானை நாடோறும்வணங்குந் தன்மையுடையவன். தான் சூரியனை வணங்குகின்ற பீடம் மண்ணினாலிருப்பதை யகற்றிச் செங்கல்லாலமைக்கும்படி தீர்மானித்தான். அதற்குபயோகப்படத்தக்க செங்கற்கள் எங்குள்ளனவென யோசித்தான். எ - று.

கோள வெற்புறை பழமறைச் சைவகோத் திரத்தோன்
றாள தாமரைக் கிழவனுக் குவமைசான் றுடையோன்
வாள ராவணி பரமர்கோ ளேச்சுரர் மலர்த்தாண்
மூளு மன்பினிற் பரவுதற் புருடன்மூப் புடையோன்.

(இ - ள்.) கோளகிரியில் வசிக்கின்ற பழமையான வேதங்களையுணர்ந்த சைவகோத்திரத்திற் சனித்தவரும், தாளையுடைய கமலாசனனாகிய பிரமனுக்கு

ஒப்பிடத்தக்கவரும், ஒளிமிகுந்த சர்ப்பாபரணமணிந்துள்ள சிவபெருமானாகிய கோனேச்சுவரருடைய செந்தாமரை மலர்போன்ற பாதங்களை மிக்க மெய்யன்போடு வணங்கும் வயோதிகமெய்தியவருமாகிய தற்புருடரென்னும் பெயருடையவர். எ - று. (௩௧௦)

> ஈசனைத்தின மருச்சனை செய்வதற் கிசைந்து
> பூசனைப்பெருந் திருமடம் புதிதெடுத் தருள
> வாச றுத்தசெங் கற்குவை கிடப்பன வறிந்தான்
> றேசி கற்கது விலைகொடுத் தெடுத்திடச் சென்றான்.

(இ - ள்.) சிவபெருமானை நாடோறும் வழிபாடு செய்தற்கிணங்கி, பெரிய சிவபூஜா மடமொன்று புதிதாக நியமிக்கக்கருதி, சேகரஞ்செய்த குற்றந்தீர்ந்த செங்கற்குவியல்கள் கிடப்பனவற்றையுணர்ந்து, அத்தற்புருடசிவாசாரியருக்கு அதன்விலையைக்கொடுத்து எடுத்துக்கொள்ளுதற்குச் சென்றான். எ-று. (௩௧௧)

> சென்று போற்றினன் சேவடி பணிந்தனன் செய்யோ
> யென்றி னைத்தொழும் பீடமொன் றெடுப்பதற் கிசைந்தே
> னின்ற தற்குள விலையெலா மளிக்குவ னென்றாத்
> துன்று செங்கலீந் தருளெனப் பின்னருந் தொழுதான்.

(இ - ள்.) அப்படிச்சென்ற நிதிவரதன் அவரைத் துதிசெய்து செவ்விய பாதங்களிற் பணிந்து, செந்நெறியுடையோரே! சூரிய நமஸ்காரஞ் செய்யப் பீடமொன்று கட்டுதற்குக் கருதினேன். இப்பொழுதே அக்கற்களுக்குள்ள விலைமுற்றுங் கொடுத்துவிடுகின்றேனெனக் கூறி, நெருங்கிய செங்கற்களைக் கொடுக்கவேண்டுமென்று மீண்டும் பணிந்தான். எ - று. (௩௧௨)

> குரவ னாங்கது கொடுப்பது பொருந்திலன் வணிகன்
> விரவு சிந்தனை வெள்குற மீண்டன னிவனைப்
> பரவி நங்குரு வென்பதும் பழியென மதித்தான்
> புரவ லற்குள மருத்துவ னிவற்கெதிர் புகுந்தான்.

(இ - ள்.) அவ்வாசிரியர் அக்கற்களைக்கொடுத்தற்கிணங்கவில்லை. நிதிவரதனெனும் வைசியன் தன்மனதில் நாணமெய்தித் திரும்பினான். இப்படிப்பட்டவரைப் பணிந்து நமது ஆசாரியரென்று சொல்லுவதும் இழிவாகுமெனக்கருதினான். அச்சமயத்தில் அத்தேசத்தின் மன்னவனுடைய வைத்தியன் இந்நிதிவரதனுக்கு எதிரேவந்தனன். எ - று. (௩௧௩)

> அருகு நோக்கினன் வணிகனை யருங்கவ லெய்தி
> யொருவ ருந்துய ரெய்தினை யென்கொலென் றுரைப்பக்
> குருவின் மாட்டுறச் சென்றதும் புகன்றதுங் குரவன்
> மருவு செங்கன்மற் றிலையென வுரைத்ததும் வகுத்தான்.

(இ - ள்.) அவ்வைத்தியன் வைசியனைச் சமீபத்திற்கண்டு, அரிய கவலைகொண்டு நீக்கற்கரிய துன்பமடைந்திருக்கிற காரணம் யாதெனச்சொல்ல, தனதாசிரியன்பாற் சென்றதும் தான் அவருக்குச் சொன்னதும், அதனைக் கேட்ட ஆசிரியர் தன்பாலுள்ள செங்கற்களைக் கொடுப்பதில்லையென மறுத்துச்சொன்னதும் ஆகியவற்றை நிதிவரதன் அவனோடு சொன்னான். எ-று. (௩௧௪)

நீய தற்குளம் வருந்தலை யவர்க்குநா னிக்ழ்த்தி
யாய செங்கலீந் திடப்புரி குவனென வடைந்தான்
றாய தேசிகன் மருத்துவன் சொன்மறுத் திருந்தான்
போயி னனது வணிகனுக் குரைத்தபின் புகல்வான்,

(இ - ள்.) நீ அதற்காக வருத்தப்படவேண்டாம். நான் அவ்வாசாரியருக்குச் சொல்லி அச்செங்கல்லைக் கொடுக்கும்படி செய்வேனென்று சேர்ந்தான். புனிதராகிய அவ்வாசாரியர் வைத்தியன் சொல்லையும் மறுத்துச்சினந்தனர். அவ்வைத்தியன் மறுபடியும்போய் ஆசாரியர் சொன்னதைச் சொல்லி மேலுஞ் சொல்லுகின்றான். எ - று. (௬௰௫)

உள்ள மோர்ந்துணர் குரவனீ துரைத்தன னென்று
வள்ள னீயது மனக்கொள லாங்கவன் மனையி
னுள்ள ருங்குவைச் செங்கன்மற் றியாவையு நாளைக்
கொள்ளை போவன காண்டியென் றுரைத்தனன் கொடியோன்.

(இ - ள்.) மனநிலைமையையறிந்தவராகிய நமதாசாரியர் இப்படிச் சொல்லினரென்று, வள்ளலே! நீ அதனை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டாம். அவ்வாசிரியர் வீட்டிலுள்ள இகழ்ச்சியற்ற செங்கற்குவியல்களையெல்லாம் நாளையதினம் கொள்ளைகொள்வது நீ காணுகவென்று அவ்வைத்தியக் கொடியோன் சொல்லினன். எ - று. (௬௰௬)

ஈது ரைத்தனன் போயினன் மருத்துவ னிதுநா
ளோது வெண்குடைப் புரவல னொருத்தன்மால் யானை
காது வெம்பிணி யுடற்றுறக் கவளமுண் ணாது
மீதெ ழுஞ்செவி தாழ்த்தது துணைவிழி விளர்த்த.

(இ - ள்.) வைத்தியன் இப்படிச் சொல்லிச்சென்றான். இத்தினத்திலே, யாவரும் துதிக்கின்ற வெண்கொற்றக்குடையையுடைய அரசனது பெரிய ஆண் யானையைக் கொல்லத்தக்க கொடும்பிணி துன்பு செய்வதால் அது ஆகாரமேற்றுக்கொள்ளாமல் அதன் தாழ்ந்த காதுகள் மேலுயர்ந்தன. இருவிழிகளும் வெண்ணிறமுற்றன. எ - று. (௬௰௭)

கொற்ற வற்குரைத் தவன்றனிப் பணிதலை கொள்ளா
வற்றை நாளிரா மருத்துவன் யாங்கென வடைந்து
தெற்றெ னக்கொணர்ந் தரசுவாக் காட்டலுந் தீயோன்
பெற்ற செங்கலிற் பிழைக்குமிக் களிறெனப் பேச.

(இ - ள்.) யானைப்பாகர் அச்செய்தியை மன்னவனுக்குணர்த்தி, அம்மன்னவன் சிறந்தகட்டளையைச் சிரமேற்றாங்கி அன்றிரவிலேயே வைத்தியன் எங்குள்ளானென்று தேடிப்போய், அதிசீக்கிரத்தில் அழைத்துவந்து அந்த [அரசுவா] பட்டத்துயானையைக் காட்டியவுடனே, கொடியவனாகிய அவ்வைத்தியன் இந்தயானை செங்கல்லினாலே உயிர்பிழைக்குமென்றோத. எ - று. (௬௰௮)

பாக ராரிருட் படுமறைக் கங்குலிற் றேடிப்
போக வெங்குள செங்கலென் றயிர்த்தலும் பொலிந்த

தீர்க நங்குரு மடத்திடைக் கிடப்பதென் றறைந்தா
ஞனை யுற்றன ரெடுத்தன ரோடின ரொருங்கே.

(இ - ள்.) பாகர்கள் மழைபெய்து இருணிரம்பிய அவ்விரவில் தேடிச்செல்லு, செங்கற்கள் எங்கிருக்கின்றன வென்று சந்தேகிக்கவும், வைத்தியன் செங்கற் குவியல் விளக்கமாக நமது ஆசாரியர் மடத்தில் உண்டென்று சொன்னான். பாகர்கள் சந்தோஷித்தவர்களாய் ஒன்றுகூடி யோடிப்போய் அக்கற்களை வேண்டியமட்டும் எடுத்தார்கள். எ - று. (௩௧௯)

எடுத்த செங்கலை யிடித்திரென் றுரைத்தனன் யார்க்குங்
கொடுத்த னன்சில விடித்தனன் மருந்தொடுங் கூட்டிக்
கடுப்பு றுங்கறை யடியொடு மெருத்தமுட் கழுத்து
மடுத்தெ டுத்தெடுத் தொற்றுவித் திருந்தனன் மருத்தன்.

(இ - ள்.) எடுத்துவந்த செங்கற்களை யிடியுங்களென்று வைத்தியன் சொல்லிப் பலர்க்குங்கொடுத்தான். அப்பொடியிற் சிறிது மருந்துடன்சேர்த்து, நோய்கொண்டுள்ள யானையின் உரல்போன்றகால் பிடர் கழுத்தடி இவ்விடங்களில் எடுத்தெடுத்து நிரம்பப்பூசிக்கொண்டிருந்தான். எ - று. (௩௨௦)

செயற்க ருந்திறம் யாவையுஞ் செய்தனா சினவெங்
கயக்க டுங்களி றொருத்தல்பட் டிறந்தது கங்குல்
வயக்கொ டும்படை மன்னவற் குரைத்தனன் மன்னன்
பெயர்த்து ரைத்திலன் வருத்தமீப் பிறங்கெழ விருந்தான்.

(இ - ள்.) செய்தற்கரிய பரிகாரங்களை யெல்லாஞ் செய்தார்கள். கொடுந் துன்பெய்தியிருந்த ஆண்யானை அன்றிரவுமரணமெய்தியது. வெற்றிதங்கிய பெருஞ்சேனையை யுடைய அரசனுக்கு இச்செய்தியை உணர்த்தினார்கள். அதனைக் கேட்டமன்னவன் மறுமொழி சொல்லாதவனாய் மேன்மேலும் வருத்தமதிகரிக்க விருந்தான். எ - று. (௩௨௧)

குணக்க ருங்கடற் பரிதிவந் தெழுந்தது குரவன்
புணர்த்த துன்பொடு மரசனிற் புகுந்தனன் புரப்பான்
வணக்க முற்றளித் திருத்தலு மன்னனை நோக்கி
யுணர்த்து வான்றன செங்கலுற் றெடுத்தவா றுணர.

(இ - ள்.) (மறுநாளுதயத்தில்) கீழ்க்கடலிற் சூரியன் வந்துதித்தான், ஆசாரியர் தனக்குற்ற மனவருத்தத்தோடு இராசசபையில் வந்தனர். உலகரக்ஷகனாகிய மன்னவன் ஆசாரியருக்குச் செய்யவேண்டிய வந்தனை வழிபாடுகள் முழுவதுஞ் செய்து வீற்றிருந்தபோது, ஆசாரியர் அரசனை நோக்கித் தமது செங்கற்களை வந்தெடுத்துக்கொண்ட செய்தியைத் தெரிவித்தனர். எ - று. (௩௨௨)

வந்து கேட்டனன் செங்கலீ கெனநிதி வரதன்
றந்தி டப்படா தென்றன மவற்கெனச் சார்ந்து
முந்தி யெம்வயிற் செங்கல்கேட் டனனற முனிந்தேம்
வெந்த சிந்தையின் மருத்துவ னித்திறம் விளைத்தான்.

(இ - ள்.) சிதிவரதன் என்பால்வந்து செங்கற்களைக் கொடுவெனக் கேட்டான். அது கொடுக்கப்படாதென்று மறுத்துச் சொன்னேம். அதன்பின் வைத்தியன் அவனுக்காக எம்மிடம் வந்து அச்செங்கற்களைக் கேட்டான். அப்போது நாம் அதிகமாகக் கோபித்துக்கொண்டோம். அவ்வைத்தியன் அதுகாரணமாகக் கடுங்கோப மெய்திய மனத்தால் இப்படிச்செய்தான், எ - று. (௩௨௩)

எடுத்த சீற்றமிக் கெம்மடத் தகவையின் முன்றிற்
படுத்த செங்கலை யரசுவாப் படுபிணிக் கென்ன
விடுத்த பாகரா லெடுத்தற முடித்தனன் வேந்தே
யடுத்த வாறிதென் றறைந்தன னருமறைப் புனிதன்.

(இ - ள்.) உண்டாகிய கோபமதிகரித்து, எமது மடத்தின் வாயிலிற் குவித்திருந்த செங்கற்குவியலை, பட்டத்து யானைக்குநேர்ந்த வியாதிக்குவேண்டுமென்று சொல்லி, பாகர்களாற் கொணடுவரச்செய்து முற்றும் பொடிப்படுத்திவிட்டான். அரசனே! எனக்குற்றதன்மையிது. வென்று, அரியவேதமுணர்ந்த புனிதராகிய ஆசாரியர் சொல்லினர், எ - று. (௩௨௪)

ஓர்ந்தி ருந்தன னொற்றரைத் தியாவையு முணர்ந்தா
னார்ந்த மாநிதி வரதனைக் கொணர்மினென் றறைந்தான்
வார்ந்த வாளெறிந் தவனுயிர் செகுத்திட வலித்தான்
கூர்ந்த சிந்தைய ருழையர்கொண் டவன்சிரங் குறைத்தார்.

(இ - ள்.) இவற்றையெல்லாங் கேட்டிருந்த மன்னவன் ஒற்றரைவிடுத்து அவற்றையெல்லாம் உண்மையென்றுணர்ந்து, பொருந்திய செல்வமுடைய நிதிவரதனை அழைத்து வருகவென்று கட்டளையிட்டு, அவன்வந்த வுடனே, நீண்டவாட்படை வீசி அவனுயிரை யகற்றும்படி உத்தரவுதந்தான். நுட்பபுத்தியுடைய ஏவலாட்கள் அவனையழைத்துச்சென்று அவன்தலையைவெட்டித் துணித்தார்கள். எ - று. (௩௨௫)

பரும யானையின் பாகரை மருத்துவன் பணியாற்
றருவு செங்கலன் றெடுத்தவர் யாரையுந் துணித்துக்
குருவின் முன்னரின் மருத்துவற் கொணர்கெனக்கொணர்வான்
வெருவி யோடின ருழையராங் கவற்கொடு விடுத்தார்.

(இ - ள்.) அங்கி பூண்ட யானையின் பாகர்களையும், ஆசாரியர் சம்பாதித்த செங்கற்களை வைத்தியன்கட்டளைப்படி அன்று எடுத்துவந்தவர்களையும் வெட்டி, ஆசாரியருக்கு முன்பாக அவ்வைத்தியனை யழைத்துவரும்படி கட்டளை தர, ஏவலாளர்கள் அப்படியே அழைத்துவரும்படி பயந்தோடி அவனைக்கொண்டு வந்துவிடுத்தார்கள். எ - று. (௩௨௬).

எங்க ளீசனுக் கருச்சனை புரியுமெங் குரவர்
செங்க லீந்தி வரதனுக் கார்சிதை வுறுத்தாய்
வெங்க யப்பிணி செங்கலால் விளியுமோ வரும்ம
பொங்கு சிந்தையா மீங்கிது புரிந்தனை போலும்.

(இ - ள்.) எங்கள் சிவபெருமானுக்குப்பூசைசெய்கின்ற எமதாசாரியருடைய செங்கற்களை, நீ நிதிவரதனென்னும் வணிகனுக்காகப் பாழ்ப்படுத்தினை. வலிமைதங்கிய பட்டத்துயானையின் நோயானது செங்கற்பொடியால் தீருமோ? பகைமிகுந்தமனதினால் இச்செங்கற்களை இப்படிச் செய்தாய். எ - று. (௩௨௭)

என்று வெஞ்சினத் தெரியெழ விழித்தன னிவனைக்
கொன்று தீர்திரென் றுரைத்தலு மமைச்சுளோர் குறுகித்
துன்று பைங்கழ லரசனைத் தொழுதன ரொருபா
னின்று வாய்புதைத் தவனிலை நிகழ்த்துவ தானார்.

(இ - ள்.) என்றுரைத்திக்கடுங்கோபத்துடன் தீப்பொறி சிந்தப்பார்த்து, இவனைக்கொலைசெய்து விடுங்களென்று கட்டளையிடுகையில், மந்திரிகளானோர் நெருங்கிய பசும்பொன்னாலாகிய வீரகண்டாமணி தரித்த அரசனை நெருங்கி வணங்கி, ஒருபுறத்தினின்று வாய் பொத்திக்கொண்டு, அவ்வைத்தியன்தன்மையைச் சொல்வாரானார்கள். எ - று. (௩௨௮)

அரச நின்னுழை யருப்பிணி யுடற்றுறு மந்நாள்
பரவு மிந்திரன் பதியகன் றிப்பதி படர்ந்தார்
வரம ருத்துவர் நினதுநோ யொழித்தனர் வானம்
விரைவி னேகுவா னுணர்ந்தவ ரேகுறும் வேலை.

(இ - ள்.) அரசனே! உனக்கு அரிய வியாதியொன்றுண்டாகி வருந்திய அப்பொழுது, பணிகின்ற இந்திரனுடைய சுவர்க்கலோகத்தைவிட்டு, மேன்மையான தேவவைத்தியர்கள் இவ்வூருக்குவந்து, உன் வியாதியை யகற்றிவிட்டு, தங்கள் தேவலோகத்திற்கு விரைவாகச்செல்லக்கருதியதை நாங்களறிந்து, அவர்கள் செல்லுஞ் சமயத்தில். எ - று. (௩௨௯)

யாமெ லாமுணர்ந் திந்நிலப் பெரும்பிணி யொழிப்பான்
றாம நூலொரு மருத்துவற் றருதிரென் றிரப்ப
வேமு றும்படி சோபரி யெனுமிவன் றன்னைச்
சேம மாய்நமக் களித்தன ராங்கவர் சென்றார்.

(இ - ள்.) நாங்கள் யாவரும் அவர்கள் செல்வதை யுணர்ந்து, இந்த நிலவுலகத்திலுள்ள பெரிய நோய்களை விலக்கும்படி ஆயுள்வேதத்தின் ஒழுங்குணர்ந்த ஒரு வைத்தியரை எங்களுக்குத்தரவேண்டுமென வேண்ட, நாங்கள் சந்தோஷமெய்தி இறுமாக்கும்படி, சோபரியென்னும் பெயர்வகித்த இவ்வைத்தியரை நமக்குக்காவலாகக்கொடுத்து அவர்கள் போனார்கள். எ - று. (௩௩௦)

அன்று தொட்டுநின் குடைநிழ லவனியி னுள்ளோ
ரின்றும் வெம்பிணி தெறுதர விறந்தவ ரில்லை
கொன்று தீர்ந்திடி லிவனிகர் குவலயத் துளரோ
வென்றி றைஞ்சினர் நகைவிளைத் தரசனீ துரைப்பான்.

(இ - ள்.) அன்று தொடங்கி உன் குடையானது நிழல்செய்யும் இத்தேயத்திலிருப்பவர்களுள், இன்று வரையில் கொடிய வியாதி வருத்துவதால் மரணமெய்தியவர்களில்லை இப்போது இவரைக் கொலைசெய்துவிட்டால் இவரை

யொத்தவர்கள் இவ்வுலகில் இருக்கின்றார்களோ? என்று கூறி வணங்கினார்கள். அது கேட்ட மன்னவன் நகைத்து இப்படிச்சொல்லுகின்றனன். எ - று. (௩௩௧)

மேல்வி ளைந்தன விளைகின்ற வினைவன யாவும்
பாலு ணர்ந்தறி யமைச்சர் நும் போலிது பகரார்
கால மோர்ந்தறி குரவரிற் பிழைத்தவர் கருங்கார்
நீல கண்டனிற் பிழைத்தவர் நிரையமுற் றழிவார்.

(இ - ள்.) முன் நடந்தவைகள் இப்போது நடப்பவைகள் இனி நடக்கப் போகின்றவைகள் என்னும் எவற்றையும் பகுத்துணர்ந்த மந்திரிகள் உங்களைப் போல இப்படிச்சொல்லார்கள். திரிகாலவர்த்தமான முணர்ந்து தெளிந்த ஆசாரியருக்குத் துரோகஞ்செய்தவர்கள் யாவரும் கரியமேகம்போன்றவிடந்தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமானுக்குத் துரோகஞ்செய்தவர்களாவார்கள். நரகில்விழுந்து வருந்துவார்கள். எ-று. (௩௩௨)

ஆத லாலிவ னுயிர்செகுத் திலமெனி லழல்வாய்த்
தீதா ழ்குழி நிரையமுற் றிழிவது திண்ண
நீதி யோர்ந்திலீ ரென்றமைச ருரைத்தன னீத்தான்
போதிர் கொண்டென வுரைத்தன னறமெலாம் புரப்போன்.

(இ - ள்) ஆதலால், இவனுயிரையொழிக்காவிடின், தீ நிறைந்த கொடிய ஆழ்ந்த நரகத்தில் விழுந்துவருந்துவது சத்தியம். நீங்கள் இந்நீதியையுணரவில்லையென்று, அம்மந்திரிகட்குரைத்து அவர்களைவிடுத்து, தருமங்களையெல்லாம் பாதுகாப்பவனாகிய அவ்வரசன் ஏவலாளரைநோக்கி இவனைக்கொண்டு போங்களென்றாக்ஞாபித்தான். எ-று. (௩௩௩)

பகுத்து ரைத்தன யாவையு மரசனுட் படானென்
றுகுத்த சிந்தைய ரமைச்சரொன் றுரைத்திலர் போனார்
தொகுத்த பாதக மருத்துவன் மணித்தலை துமித்துச்
செகுத்து நீங்கின ரரசனு மகமகிழ் சிறந்தான்.

(இ - ள்) விரித்துச்சொல்லிய வெல்லாவற்றையும் மன்னவன் சம்மதியானென்று வருந்திய மனமுடைய மந்திரிகள் ஒன்றுங்கூறாதவர்களாய்ப் போய் விட்டார்கள். பாதகங்களை விளைவித்தவைத்தியனுடைய தலையை வெட்டித்தள்ளித்திரும்பினார்கள். அதன்பின் அரசனும் மனமகிழ்ச்சி மிகுந்தான். எ-று.

அடிகள் போதிரென் றிசைத்தவர்க் காவன புரிந்து
படிமு டித்தலை படப்பணிந் தெழுந்தனன் பலகாற்
றொடிபொ லிந்துறு தடக்கையான் றுளங்கொளிப்பொன்னான்
முடிவு றப்படு செங்கல்செய் தெடுத்தனன் முறையால்.

(இ - ள்) சுவாமிகளே! செல்லலாமென்று சொல்லி அவருக்குச் செய்ய வேண்டிய மரியாதைகள் செய்து, பூமியில் தன்முடியணிந்த சிரம்படியும்படி பல்முறை நமஸ்கரித்துநின்று, கடகமணிந்த பருத்தகைகளையுடைய அவ்வரசன் ஒளிவிளங்கும் பசும்பொன்னால் கணக்கிடமுடியாத செங்கற்களைச் செய்தெடுத்துக்கொண்டுபோய், எ - று. (௩௩௫)

சைவ தேசிகற் களித்தவ னிணையடித் தலத்துப்
பெய்த சிந்தையிற் பணிந்தனன் பணிதலும் பெருவான்
றெய்வ துந்துபி முழங்கின திசைமுகத் தவனும்
மைவ ரும்புயல் வண்ணனும் வானுளோ ரெவரும்.

(இ - ள்.) அச்சிவாசாரியருக்குக் கொடுத்து அவர் உபய பாதங்களில் மனவிருப்போடு பணிந்தான். அப்படிப் பணிந்தவுடனே, பெருமைதங்கிய சுவர்க்க லோகத்திலுள்ள தேவ துந்துபிகள் கோஷித்தன. பிரமனும் கருநிறந்தங்கிய மேகவண்ணராகிய விஷ்ணுமூர்த்தியும் தேவலோகத்திலுள்ள பிறதேவர்களும்.

சோனை மென்மலர்ப் பூமழை சொரிந்தன ரொன்றி
வான டைந்தனர் மன்னவற் கினிதருள் வழங்கி
யேனை மன்னரி னின்னையொத் துளரெவ ரென்றார்
கான லர்ந்ததார் வேந்தனுந் தொழுதுளங் களித்தான்.

(இ - ள்.) சோனைமாரிபோல அழகிய மெல்லிய புஷ்பமாரி சொரிந்தார்கள் அத்தேவலோகவாசிகள் யாவரும் ஒன்று சேர்ந்து, அம்மன்னவனுக்கு இனிய திருவருள் பாலித்து மற்றுமுள்ள மன்னர்களில் உன்னைப்போலுள்ளவர்கள் யாவரென்றார்கள். கற்பகச்சோலையில் மலர்ந்த மலர்மாலை சூடிய இந்திரனும் அம்மன்னவனை வணங்கி மனங்களித்தான். எ - று (௩௩௭)

நினக்கு வேண்டுறு வரமெது நிகழ்த்துதி யென்று
மனத்து ணர்ந்தற மன்னனிம் மாநிலப் பரப்பி
னினக்கொ டும்பிணி யிலவென வருளுதி ரென்றான்
புனத்து ழாய்முகி லயனிது வழங்கினர் போனார்.

(இ - ள்) உனக்குவேண்டிய வரம்யாது? சொல்லுகவெனக்கேட்க, தருமத்தைப்பாதுகாக்கும் மன்னவன் தன்மனதில் ஆலோசித்துணர்ந்து இப்பெரிய நிலவுலகில் கூட்டமாகிய தீய பிணிகளில்லையென்று சொல்லும்படி திருவருள் செய்வீராகவெனக்கேட்டனன். அழகமைந்த துளசிமாலை தரித்த திருமாலும் பிரமனும் இவ்வரத்தைக கொடுத்துப் போனார்கள். எ - று. (௩௩௮)

அரசு வாப்பயிற் றியபெரும் பாகரு மந்நாட்
குரவ னிற்புடு செங்கல்கொண் டளித்திடு மெவரு
மரபி னீங்கிய வணிகனு மருத்துவ னவனும்
விரைய மெய்தின ரருந்துய ருடற்றுற நின்றார்.

(இ - ள்) பட்டத்துயானையைப்பழக்கிக்கொண்டிருந்த பெரியபாகர்களும், அத்தினத்திலே அச்சிவாசாரியர் மடத்திலிருந்த செங்கற்குவியலைக்கொண்டு வந்து கொடுத்தவர்கள் யாவரும், நீதிதவறிய நிதிவரதனென்னும் அவ்வைசியனும், வைத்தியனும் நரகில் விழுந்து கொடிய துயரத்தால் வருத்தமுற்றிருக்கின்றார்கள். எ - று, (௩௩௯)

அந்த நால்வருஞ் சிவத்துரோ கியரவர்க் கருகே
வெந்த சிந்தையின் வெந்துய ருழந்தனர் மீள்கா
பைந்து ணர்த்தொடை வெண்குடைப் பார்த்திப ரெருமா
னெந்தை சைவநூ லோங்குற விருநிலம் புரந்தான்.

(இ - ள்) அந்த நால்வகைப்பட்டோரும் சிவத்துரோகிகளாய் வருந்துவோர்கட்கருகே, மனவருத்தத்தோடு கொடுந்துயரெய்தியவர்களாய் நரகத்தினின்றும் மீளாதிருக்கின்றார்கள். பசிய மலர்க்கொத்துக்களாலாகிய மாலைதரித்த சந்திரவட்டக்குடையையுடைய அரசர் பெருமானாகிய அம்மன்னவன், எமது சிவபெருமானருளிய ஆகமவிதிகள் தன்தேசத்தில் சிறப்பெய்தப்பெரிய உலகை அரசு செய்திருந்தான். எ - று. (௬௦)

இத்தி றத்தின வாங்கவ ரியற்றிய தென்று
மெய்த்தி றத்தவ யோகிபால் விரித்தன னந்தி
யத்தி றந்தெரி யோகியு மதிசய மடைந்தான்
மைத்த னிக்கள னியறைகயை வெருக்கொடு மதித்தான்.

(இ - ள்.) அவர்கள் செய்த சிவத்துரோகங்கள் இத்தகையனவென்று உண்மைத்தன்மைபொருந்திய தவமுடைய சிவயோகியாருக்குத் திருநந்திதேவர் திருவாய்மலர்ந்தனர். அவ்வுண்மையுணர்ந்த சிவயோகியாரும் ஆச்சரியமெய்தியவராய் ஒப்பற்ற நீலகண்டராகிய சிவபெருமான் விதித்த விதிகளினியல்பை அச்சத்தோடு எண்ணினார். எ - று. (௬௧)

உருகு காதலி னுருத்திர வக்கம்வெண் ணீறு
பெருகு காதலிற புனைசிவ னடியரிற் பிழைத்தார்
திருகு வெஞ்சின மறலிபாற் றென்புல மடைந்து
பொருகொ டுஞ்சுழல் நிரயம்வீழ்ந் துழப்பது புகல்வாம்.

(இ - ள்.) தமது [காதலின்] புத்திரர்பா லுதிக்கும் உருகுகின்ற மிக்க அன்புடன் உருத்திராக்கமணியையும் திருவெண்ணீற்றையும் அணிகின்ற சிவனடியவருக்குத் துன்புசெய்தவர்கள், மாறுபடுகின்ற கடுங்கோபமுடைய காலனிடத்துள்ள இயமபுரஞ்சேர்ந்து, ஒப்பற்ற கொடுமைபொருந்திச் சுழல்கின்ற நரகத்தில்வீழ்ந்து வருந்துவதைச்சொல்லுவோம். எ - று. (௬௨)

செந்நெல் வேலிசூழ் சிடந்துள சிந்துதே யத்து
மன்னு மாநகர் சானந்த மதனிலே வகுப்பின்
மின்னி மைத்திடு நவமணிக் காந்தியின் விளங்கு
மன்ன மாநகர்க் கரனெனுந் தனிக்குடை யரசன்.

(இ - ள்.) செந்நெற்பயிரே வேலிபோற்சூழ்ந்த சிந்து நாட்டில், சானந்தமென்றும் ஒரு சிறந்த நகரமுள்ளது. அச்சானந்த நகரத்தின் சிறப்பைச் சொல்லவேண்டுமானால், ஒளிவீசுகின்ற நவரத்தின காந்தியால் விளக்கமெய்தியிருக்கும். அந்தச்சிறந்த நகரத்திற்கு மன்னவன், ஒப்பற்ற சந்திரவட்டக் குடையையுடைய கரனென்னும் பெயர் பெற்றவன். எ - று. (௬௩)

இரங்கு சிந்தைய னிகலொழி குணத்தின னென்றும்
பரந்தெ ரிந்துள சைவநூ லிடையறப் பயில்வான்
புரங்க டந்தவ ரடியரிற் பொழியுமன் பினனுய்ச்
சிரந்த வத்துறப் படிந்தெழு மியற்கையிற் சிறந்தான்.

(இ - ள்.) இரக்கமுற்ற மனத்தினன், பகைமைதவிர்ந்த குணத்தினன், எக்காலமும் சிவபரம்பொருளின் இயல்பையுணர்த்தும் சிவாகமங்களை யிடையி

டின்றி வாழிப்பவன், முப்புரங்களை யெரித்த சிவபெருமானுடைய அடியர்கள்பால் மிக்க அன்புடையவனாகி, தன் கிராமானது நிலமிசைத்தோயும்படி நமஸ்கரித்தெழுகின்ற தன்மையினால் சிறப்பெய்தியவன். எ - று. (௬௪)

விழிக்கு மாயிரங் கண்ணுடை விண்ணுடை வேந்தன்
வழிப்பு லஞ்செல மாதவ மியற்றின னெடுநாட்
கொழித்த் வன்பொடு மிந்திர னங்கவற் குறுகி
யொழிப்ப ருந்தவ மியற்றினை யென்கொலென் றுரைப்ப.

(இ - ள்.) பார்க்கின்ற ஆயிரங் கண்களையுடைய தேவலோகமன்னனாகிய இந்திரன், தன் கண்ணுக்கு நேரில் வரும்படி வெகுகாலம் பெருந்தவஞ்செய்தான். அதனை யறிந்த இந்திரன் மிகவும் அன்பெய்தியவனாய், அவன் தவஞ்செய்து கொண்டிருந்த இடத்திற்கு வந்து அவனருகேபோய், நீக்கற்கரிய அருந்தவத்தை யாது காரணமாகச்செய்கின்றனையென வினவ. எ - று. (௬௫)

மகப்பெ ருந்தனி வேந்தனை மன்னவ னோக்கி
யகத்து நின்னல துணர்ந்திலன் யானென வருளி
மிகப்ப டுந்திறற் குலிசம்வேண் டினனென விளம்ப
நகைக்கொ டுந்தனிக் குலிசமீந் தாங்கவ னடந்தான்.

(இ - ள்.) மகபதியென்னும் ஒப்பற்ற பெருமைதங்கிய இந்திரனை அம்மன்னவன் கண்டு, என் மனதில் தேவரீரை நீககப்பிறிதொருவரை யுணர்ந்திலேனென்று சொல்லி, வல்லபத்தின் மிக்க வச்சிராயுதத்தைப்பெறக கருதினேனெனக்கூற, இந்திரன் ஒப்பற்ற ஒளிதங்கிய பெரிய வச்சிராயுதத்தை அவ்வண்ணமே தந்துபோயினான். எ - று. (௬௬)

வாங்கி னானுல கொருகுடை நிழற்றிய மன்னன்
பூங்க ழற்றொழா மன்னரைக் கொடுவனம் போக்கித்
தேங்கு நேமிசூழ் நெடுநில மொருதனிச் சிறந்தா
னோங்கு சைவமுற் றோங்கிடப் புரந்தன னரவோன்.

(இ - ள்.) உலகமுற்றும் வெண்கொற்றக்குடை நிழற்றிய அம்மன்னவன் அதனைப்பெற்றுக்கொண்டு, தன் அழகிய பாதங்களில் வணங்காத பகையரசர்களைக் கடுங்காட்டிற்குத் துரத்தி, தேங்கிக்கொண்டிருக்கும் கடல்சூழ்ந்த நெடிய நிலவுலகத்திற்கு ஏகமன்னவனாய்ச்சிறந்து, சைவசமயமே மேம்பாடாக எங்கும் பரவும்படி அறிஞனாகிய அம்மன்னவன் ஆளுகை செய்தான். எ - று. ()

இதுவு ணர்ந்தன னிவனொடு மிகலெடுத் துடற்று
மதுவெ னும்பெயர் வனைகழன் மன்னனீங் கிவனோ
டெதிர்த்தொ ழிநதிடப் புரப்பவ னெனப்பொறான் பொருமிக்
கதுமெ னப்புகுந் தசுரவேந் தனையுளங் கருதி.

(இ - ள்.) இவ்வரசனோடு பகைகொண்டெதிர்த்து துன்பு செய்துகொண்டிருந்த மதுவென்னும் பெயரினனாய், அலங்கரிக்கின்ற வீரக்கழல் தரித்த மன்னவன் இதனையுணர்ந்து, இவ்வுலகில் இவனொருவனுளனோவென நத்தன்மை கடிந்து ஏகராஜ்யாதிபத்தியஞ்செய்பவனென்று தானாதலையும் அதிசயித்து, விரைந்துசென்று அவுணர் தலைவனை மனதிற் கருதி. எ - று. (௬௮)

அரிய மாதவ மியற்றின னங்கவ னடைந்து
புரிய வேண்டுவ தியாதென வசுரர்கோன் புகல
விரிக டுந்திறற் சேனைகொண் டென்னொடு மேவி
விரிக ழற்கரன் றன்னொடு மண்டமர் மலைந்து.

(இ - ள்.) அரும்பெருந்தவத்தைச்செய்தான். அப்படியே அவ்வவுணர் தலைவன் அவ்விடத்திற்கு வந்து, யான் செய்யவேண்டியது யாது? எனவினவ, கொடூரமாகிய வல்லபமமைந்த மிக்க சேனைகளை யழைத்துக்கொண்டு என்னோடு துணையாகவந்து, வரிநதி கட்டுகின்ற வீரகண்டாமணி தரித்த கரனென்னும் அரசனுடன் பெரும்போர்செய்து. எ - று. (௩௪௯)

எனது வெண்குடை யெனக்கென வாக்கிமற் றவனைத்
துனைக டுந்திறற் சேனையைத் துணித்தனை யாகி
நினது மாநகர் போகுதி யென்றவ னிசைத்த
வினவி நின்றவ னதுவுணர்ந் தெரியெழ விழித்தான்.

(இ - ள்.) அவன் வெண்கொற்றக்குடையை யெனக்கே உரித்தெனச் செய்து, அந்தக்கரனென்பவனையும் வேகத்தோடு கடூரவல்லபமுடைய அவன் சேனைகளையும் வெட்டித்தள்ளிவிட்டபின்னர், உனது சிறந்த நகரத்திற்குச் செல்வாயாகவென்று அம்மதுவென்போன் சொல்ல, அதனைக்கேட்டுக்கொண்டிருந்த அவுணர்தலைவன் (கரன்தேவபூஜிதனாகலின், தன்மரபிற்குப்பகைவனெனும்) அதனை யுணர்ந்து தீப்பொறிசிந்தப்பார்த்தான். எ - று. (௩௫௦)

கரனெ னும்பெயர் வேந்தனை முதலறக் களைந்து
விரவு சேனையு மடித்தவன் வெண்குடை யுனக்குத்
தரநி னைந்தன னென்றுதன் னுடைப்பெருந் தானை
வரவு ரைத்தலு மடைந்தன ரளவொழி வரத்தார்.

(இ - ள்.) கரனென்னும் பெயர்பெற்ற அம்மன்னனை உயிரகலும்படி யொழித்து, கலந்துள்ள சேனைகளையும் நாசஞ்செய்து, அவனது வெண்கொற்றக்குடையை உனக்கே தரும்படி யெண்ணினேனென்று சொல்லி, தனது பெரிய சேனைகளை வரும்படி சொல்லியமாத்திரமே, கணக்கிறந்த சேனாவீரர்கள் யாவரும் வந்து சேர்ந்தார்கள். எ - று. (௩௫௧)

மழைக்கு லந்தழீஇ யெழுமோர் காலையின் வழங்கத்
தழைத்த பேரொலிப் பிரளய மொருவழித் தவழ்ந்தாங்
கிழைத்த மாதவப பெருமைய ரிருஞ்சினத் தெதிர்ந்தார்
முழைப்ப டும்பில வாயன ரிடிக்குரன் முழக்கா.

(இ - ள்.) (மணி நீர் பொன் பூ மண் கல் தீ ஆகிய விவற்றை முறையே பொழியும் சம்வர்த்தம் ஆவர்த்தம் புட்கலாவர்த்தம் சங்காரித்தம் துரோணம் காளமுகி நீலவர்ணமென்னும்) சப்த மேகஙகளும் ஒன்றுகூடி ஒரு காலத்திற் பெய்ய, மிக்க பேரொலியுடன் பெருகிய பிரவாகமானது ஒரு வழியாய் வந்ததுபோல, முன்செய்த பெருந்தவத்தினால் மேன்மை பெற்றுள்ள அசுரர்கள், முழைபோன்ற பிலத்தையொத்த வாயையுடையவர்களாய், இடிமுழக்கம் போன்று கர்ச்சித்துக்கொண்டு கடுங்கோபத்தோடெதிர்த்தார்கள். எ - று. ( )

முளைத்த வெண்பிறை முழுமுகிற் செருகிய வன்ன
வளைத்த வாளெயிற் றடுசினக் கடுந்திறன் மறவ
ருளைத்த வாரிதி யுலகெலா மொருதனி யொருங்கே
திளைத்து வாய்ப்பெயுந் திறலினர் வடவையிற் றீயோர்.

(இ - ள்.) உதித்த வெள்ளிய பிறைச்சந்திரனைச் சூல்கொண்ட மேகத்திற் செருகிவைத்தாற்போன்ற கூர்மைதங்கிய வக்கிரதந்தங்களையும், கொல்லத்தக்க கொடிய கோபத்தையும் கொரேவல்லபத்தையுமுடைய வீரர்களும், ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த உலகங்களையெல்லாம் ஒன்றாக்கி அவற்றையெல்லாம் வாய்நிரம்பப் போட்டுக்கொள்ளும் வலிமையுடையவர்களும், வடவாமுகாக்கினியினுங் கொடியவர்களும். எ - று. (௯௰௩)

படர்ந்த செக்கரிற் படர்ந்தெழு குஞ்சியர் மேருக்
குடங்கை கொண்டெடுத் தாடுறுங் கொள்கையர் கடைநாட்
டொடர்ந்த வெள்ளநீர் புறவடி தோய்கலர் தொக்கா
ரடைந்த சேனைமுற் றளப்புறி னயனுக்கு மரிய.

(இ - ள்.) படர்ந்த செவ்வானம்போலப் பரவி வளர்ந்த தலைமயிருடையவர்களும், மேருமலையை உள்ளங்கையிலெடுத்துப் பந்தாடுந் தன்மையுடையவர்களும், ஊழிகாலத்திற் பெருகவெடுக்கும் பிரளயவெள்ளமானது புறங்காலும் நனையாத உயர்வுடையவர்களும் ஆகிய அவுணர்கள் வந்து சேர்ந்தார்கள். அங்கே வந்த சேனைகளையெல்லாம் கணக்கிடத்தொடங்கின் பிரமதேவனுக்கும் அரிதாகும். எ - று. (௯௰௪)

எடுத்த சக்கரந் தோமரங் குந்தம்விட் டெறிவேல்
பிடித்த கூர்மழுப் பிண்டிபா லங்கொடுங் கலப்பை
யடுத்த தண்டொர் முகப்படை பொறுத்தன ரழலகான்
மடித்த வாயினர் மின்னெனத் துடித்துறும் வாளர்.

(இ - ள்.) கையிற்றாங்கிய சக்கரம் [தோமரம்] இருப்புலக்கை கைவேல் எறிவேல் கையிற்பிடித்திருக்கும்கூரியமழு பிண்டி பாலம் வளைந்தகலப்பை சேர்ந்துள்ள தண்டாயுதம் வில் என்று சொல்லப்படும் இவ்வகையாயுதங்களை யேந்தியவர்களும் தீயைச்சொரிந்துகொண்டு இதழ்களை மடித்துக்கொண்டிருக்கும் வாயையுடையவர்களும். எ - று. (௯௰௫)

வந்தி ரைத்தனர் நோக்கினன் றதுவர்கோ னரசு
சிந்தை மிக்கெழுஞ் சினத்தினு னவரொடுஞ் சென்றான்
சந்த வார்பொழி லுடுத்தசா னந்தமா நகர்சூழ்
மந்த ரம்பொரு கொடிநக ரிஞ்சிசூழ் வளைததார்.

(இ - ள்.) ஒருசேரவந்து ஆரவாரித்தார்கள். அவுணர் தலைவனாகிய அரசன் கண்டு மனத்தில் மிகுந்த கோபமுற்றவனாய் அச்சேனையோடு சென்றான். சந்தன மரங்களின் நெடிய சோலைசூழ்ந்த சானந்தமென்னுஞ் சிறந்தநகரைச்சுற்றியுள்ள மந்தரமலையைப்போன்று, கொடிகள் நிறைந்திருக்கும் மதிலின் நாற்புறங்களிலும் வளைந்துகொண்டார்கள். எ - று. (௯௰௬)

ஈது ணர்ந்தனன் றனிக்குடைக் கரனெனு மிறைவன்
யாது செய்துமென் றிருந்தனன் வெருவரு மெல்லை
யோது வெஞ்சினத் தெய்தினன் விசயனென் றொருவ
னீதி வேந்தனைக் குறுகின னிவையிவை நிகழ்த்தும்.

(இ - ள்.) ஒப்பற்ற வெண்கொற்றக் குடையையுடைய கரனென்னுந் தலைவன் இதனையுணர்ந்து, இதற்குப்பரிகாரம் யாது செய்வோமென்று கருதி யிருந்தான். இப்படிப் பயப்படுஞ்சமயத்தில் விசயனென்னும் பெயர்வாய்ந்த வொருவன் சொல்லுகின்ற கடுங்கோபத்தோடு வந்து நீதிமார்க்கமுடைய மன்னவனை யணுகி இப்படி யிப்படிச் சொல்லுகின்றான். எ - று. (௫௭)

என்னை நீமதித் திருந்தனை யிப்பெருஞ் சேனை
முன்னர் யான்புகின் முதலற முடிவது சரத
மின்ன சிந்தையி னையுற லாதிநாட் டொடங்கி
யுன்னு மானிட மடங்கலி னருச்சனைக் குரியேன்.

(இ - ள்.) நீ இந்தப்பெரிதாயிருக்குஞ் சேனையைப் பெரிதாக மதித்திருக் கின்றதென்னகாரணம்? நான் ஒருவன் மாத்திரம் முற்பட்டுப்போவேனாயின் அவை யாவும் அழிவது நிச்சயம், அப்படியானபடியால் உன் மனதில் இது காரணமாக ஐயமுறவேண்டாம். என் இளம்பருவமுதல் யாவரும் தியானிக் கின்ற நரசிங்கத்தின் பூசைக்குரியவனாயிருக்கின்றேன். எ - று. (௫௮)

வருதி யென்றனுங் கணத்திடை யெய்தும்வா ளசுரர்
குருதி யூற்றறக் குடிபப றுமடுத்தவெஞ் சேனை
யொருகை வாரிவாய்ப பெய்வது தீயரெங் கொளிப்பார்
கருதி யோர்புடை நின்றுநீ யதனிலை காண்டி.

(இ - ள்.) நீ யென்னோடு வரக்கடவாய். இங்கெய்திய ஒளிதங்கிய அசுரர் களின் உதிரத்தை ஒரு கணத்திற்குள்ளாக மீண்டும் சுரக்காமற் பருகுவதையும், நிரம்பிய கொடிய சேனைகளை ஒருகையாற் சேர்த்து வாரி வாயிலிட்டுக்கொள் வதையும். அத்தீயோர்கள் எங்குப்போய் மறைவார்களோ அதனையும் நீ கருதிக் கொண்டு ஒரு புறத்திலிருந்து அதன் நிலையைக் காண்பாயாக. எ - று. (௫௯)

நினக்கு வச்சிர மளித்தவற் கடும்பகை நீச
ரினத்தொ டின்றொடு முடிவது காண்டியா லிறைவ
நினைத்த காரிய முடிக்குவ னெழுகென நிகழ்த்தக்
கனைபொ லன்கழன் மன்னனோ டெழுந்தனன் காண்பான்.

(இ - ள்.) மன்னவனே! உனக்கு வச்சிராயுதமளித்த இந்திரனுக்குக் கொல்லத்தக்க சத்துருக்களாகிய அசுரர்கள், தங்கள் கூட்டத்தோடு இத்தினத் திலேயே யழிவதைக்காண்பாயாக. நீ யெண்ணிய கருமத்தை முற்றுவிக்கின் றேன். புறப்படுகவென்றுரைக்க, சத்திக்கின்ற பொன்னாலாகிய வீரகண்டாமணி யணிந்த பாதங்களையுடைய கரனென்னுமரசன் இவற்றை யறிந்து அப்படியே நிகழ்வனவற்றைக்காணப்புறப்பட்டான். எ - று. (௬௰)

வருத்த சேனைகொண் டரசனோர் மருங்குநின் றொழியத்
தொகுத்த மந்திரத் தன்மைதன் னுளத்தொடுஞ் சேரிய

நெகிழ்த்த சிந்தையி னின்றனன் விசயனங் கிலையிற்
செகுத்த சீற்றமிக் கெழுந்தது மானிடச் சீயம்.

(இ-ள்.) பகுத்துள்ள சேனைகளைத் தன்னோடழைத்துக்கொண்டு அம் மனைவன் ஒருபுறத்திலிருக்க, விசயனென்பவன் நரசிங்கமூர்த்திக்குரிய தொகுப்பாகிய மந்திரத்தின் நிலைமையைத் தன் மனதிற் பதியும்படி உருக்கமான சித்தத்தோடிருந்தான். அப்பொழுது நரசிங்கமூர்த்தமானது அழிக்கத்தக்க கோபாதிக்கியத்துடன் தோன்றியது. எ-று. (௩௧௧)

கைக ளாயிர மாயிரங் காவதங் கடந்த
மொய்கொ ளம்புயந் திகந்தமுற் றாிஞ்சின முடிபோய்
வெய்ய விண்முக டளநதது வெள்ளெயிற் றகல்வாய்ப்
பைய ராமுடி நெடுநிலம் புதைத்தன பதங்கள்.

(இ-ள்.) அம்மூர்த்தியின் கைகள் அநேக ஆயிரங்காதங்களைக்கடந்து நீண்டிருந்தன, வலிமைதங்கிய அழகிய தோள்கள் எட்டுத்திசைகளின் முடிவும் நிரம்பின. திருமுடி மேலோங்கிப் பெரிய ஆகாயமுகட்டையளாவியது, திருவடிகள் வெள்ளிய பற்களையும் அகன்ற வாயையும் படத்தையுமுடைய ஆதிசேடன் தன் முடியிற்றாங்கும் நீண்ட நிலவுலகத்தை யமிழ்த்தின. எ-று. (௩௧௨)

வாரி வாயிலிட் டதுக்குறு மாதிரப் பொருப்பிற்
சோரி தூங்குறப் புரட்டுறுந் தொளைத்துணை நாசி
சேர வாங்கிமீண் டுயிர்த்திடுஞ் சினவுகிர்க் கரத்தாற்
பேரு டற்பொறை நுளயபெனக் குழம்பெழப் பிசையும்.

(இ-ள்.) சேனைகளிற் சிற்சிலவற்றைச் சேர்த்து வாயிற்போட்டு மெல்லும். அஷ்டதிசைகளிலுள்ள அஷ்டகுலபர்வதங்களில உதிரமொழுகப்புரட்டும் நாசியின் இரு தொளைகளிலுண்டாகும் சுவாசத்தால் உட்கொண்டுபோய் மீண்டும் வெளியேதள்ளும். போர்செய்கின்ற நகங்களையுடைய கைகளால் பெரிய உடற்சுமையை [நுளம்பு] கொசுப்போல் மதித்து உதிரக்குழம்புண்டாம்படி பிசையும்.

தின்னு மென்புட னெறுக்கெனக் கறித்திடுஞ் சினத்திற்
றொன்னி லம்படத் தேய்த்திடு மவுணர்தந் தொகையைப்
புன்னு னிப்பனி சிதைந்தெனப் புறப்படத் திடறுங்
கின்ன கங்கொடு பொதுத்திடுங் கிள்ளுப கிளைக்கும்.

(இ-ள்) சிற்சிலவற்றை, எலும்போடு நெறுக்கென்று கடித்துத்தின்னும். கோபத்தோடு அவ்வவுணர் கூட்டத்தைப் பழமையாகிய பூமியிற் இடகரும்படி தேய்த்துவிடும். ஸஹஸ்ரமானது அறுகம்புல்லின் முனையிற்பொருந்திய பனித்துளிபோல வெளிக்காணும்படி, விரல்களில் ஒட்டிய நகங்களால் தொளைத்துக் கிள்ளிக்கிள்ளி மேடுபடுத்தும். எ-று. [கினகம் - கின்னகம்.] (௩௧௩)

கொடுங்கை மாகரி கோடுதொட் டிழுத்தெரு வேனு
நெடுங்கை யானைமத் தகம்பிளந் தோச்சுறு நெடுநீர்க்
கிடங்கு போய்விழ வூதுறுங் கிளர்பெருஞ் சேனை
நடந்து கொன்றிடுங் குருதியா றிடையற நடக்கும்.

(இ - ள்.) பெரிய யானைகளின் துதிக்கையையும் தந்தங்களையும் பற்றி யீர்த்து, நெடிய துதிக்கையுள்ள ஒருகோடி யானைகளின் மத்தகத்தைப்பிளந்து மிக்க நீர் நிரம்பிய கடலிற்சென்று விழும்படி எறிந்து ஆரவாரிக்கும். விளக்க முற்ற பெரிய சேனைகள்பாற் சென்று கொல்லும். அப்போது பெருக்கெடுக்கும் உதிர நதியானது ஓயாது பெருகிக்கொண்டிருக்கும் எ - று. ([illegible])

அளவில் சேனைகொண் டெறும்வலித் தடக்கையி னடக்கி
வளைத டங்கடற் குமிழிகள் றிரைத்தெழ மாட்டுங்
கிளைநெ டுந்தலை கடித்துமிழ்ந் ததிருறக கிடைத்தார்
முளையெ யிற்றடி பொதுதது றுங் கடற்பட முழங்கும்.

(இ - ள்.) எண்ணில்லாத சேனைகளைப்பெருவல்லபமுடைய பரந்த கரங்களாற் சேர்த்துப்பற்றிக்கொண்டு, உலகத்தைச்சூழ்ந்து பரந்துள்ள கடலிற் குமிழிகள் தோன்றி யொலிக்கும்படி எறியும். நேரில்வந்த பெரிய சேனைத்தொகுதியின் தலைகளைத் தறிபோன்ற பற்களால் தொளைத்துக்கடித்து உமிழும். கடல் முழக்கென்று சொல்லும்படி கர்ச்சிக்கும். எ - று. ([illegible])

அதிர்பெ ருங்குர லானைகொண் டநீகவெஞ் சேனைக்
குதிரை மாக்கடல் குழப்பிடுங் குதிரைகொப் புளித்த
வுதிர வாற்றிடைத் தேர்புதைத் தமிழ்த்திடு மொழித்து
மதுகை யாருயிர் குடித்ததம் மானிட மடங்கல்.

(இ - ள்.) அதிர்கின்ற பெரிய கர்ச்சனையுடைய யானையின்மேலும் கடல்போலப் பெருகிய குதிரையின்மேலும் ஏறியிருந்த பெரிய சேனைகளைக்கலக்கஞ் செய்யும் குதிரைகள் மிதந்துகொண்டிருந்த உதிர நதியிலே தேர்களைப் பூமியிலழுந்தும்படி யழுத்தும். அந்நரசிங்கமூர்த்தம் இந்நால்வகைச் சேனைகளின் வலிவை யழித்து அவற்றின் உயிரையுண்டது. எ - று. ([illegible])

பொருசி னத்தெழு மசுரர்கோன் றிரட்படை போக்கி
யொருவ னாகியோட் டெடுத்தன னொருதனிக் கவிகைக்
கருணை வேந்தனு முளையங் கடலொடு களித்தான்
மரு[illegible] [illegible]நற்றிறல் விசயனை தொழுதனன் வழுத்தி.

(இ - ள்.) போர் செய்யத்தக்க கோபத்தோடெதிர்த்த அவ்வசுரத்தலைவன், தன் திரண்ட நால்வகைச் சேனைகளையும் இப்படி யழித்தமாத்திரத்தில், தான் தனிப்பட்டவனாகி யோடினான். ஒப்பற்ற ஒன்றியாகிய சந்திரவட்டக்குடையையுடைய தயாளுவாகிய கரனென்னும் அம்மன்னனும் களிப்பென்னுங் கடலிலமிழ்ந்து மகிழ்ந்து, ஒருவருக்கும் பொருந்துதற்கரிய வலிமைதங்கிய விசயனென்பவனைத் துதித்து வந்தனைசெய்தான். எ - று. ([illegible])

ஆய காலையின் மானிட மடங்கலை யகற்றி
மேய திண்டிறல் விசயனும் வெள்ளவெம் படையுந்
தூய மனத்தனு மீண்டனர் தொன்னக ரடைந்தார்
பேரொளி மிக்கதி ரணிமணி மண்டபம் புகுந்தார்.

(இ - ள்.) அச்சமயத்தில், நரசிங்கமூர்த்தத்திற்கு விடைதந்து அனுப்பி பொருந்திய மிக்க வல்லபமுடைய விசயனும் வெள்ளச்சேனைகளாகிய

பெருஞ்சேனைகளும் புனிதனுகிய அவ்வரசனும் அங்கேயிருந்து திரும்பிப்போய் தங்களுக்குரிய பழமையாகிய நகரத்திலடைந்து, ஒளி வீசுகின்ற இரத்தினங்க ளமைந்த மண்டபத்திற் புகுந்தார்கள். எ - று. (௫௬௯)

விசைய னைத்தனி யாசனத் திருத்தினன் வேந்தன்
வசையி லன்பொடும் வழுத்தின னெங்குல மன்னர்க்
கசைவி லாப்புக ழளித்தனை யெனவள வளாவிக்
குசைநெடும்பரிப் புரவலன் வேண்டுவ கொடுத்தான்.

(இ - ள்) அரசன் விசயனென்பவனை ஒப்பற்ற ஆசனத்தி லுட்காரச் செய்து, பழிப்பற்ற அன்போடு துதித்து, என் குடியிற் பிறந்துள்ள மன்னர்க ளெல்லாருக்கும் அழியாத கீர்த்தியைப்பாலித்தாயென்று அளவளாவிக்கூறி, கடிவாளம் பூட்டிய பெருங் குதிரையையுடைய அரசன் அவ்விசயனென்ப வனுக்கு வேண்டிய திரவியங்களைப் பரிசாகக்கொடுத்தான். எ - று. (௫௭0)

இறந்து நாள்பல கழிந்தன விருங்கழ லிறைவன்
சிறந்து மன்பதை புரக்குநாள் விசயனிற் சிறந்து
பிறந்த மைந்தனோர் சூரனென் றுளனவன் பிறழாத்
துறந்த சிந்தையன் பிறர்மனை யகவுறுந் தொழிலான்.

(இ - ள்.) இப்படிப் பல தினங்கள் சுழிந்துபோயின. பெரிய வீரக்கழல் தரித்த கரனென்னும் அம்மன்னவன், சிறப்பெய்தியவனுய் மன்னுயிர்களைத் தன்னுயிர்போலக்காத்து வருங்காலத்தில், விசயனென்பவனுக்குப் பெருமையோ டுதித்த ஒரு புதல்வன் சூரனென்னும் பெயரேற்றவனுயிருநதான். அவன் முறை தவறி நீதி கடந்த சித்தமுடையவன். பிறர் மனைவியரைச்சேரும் விபசாரத் தொழிலுடையவன். எ - று. (௫௭௧)

இயங்கு நாளையி னிந்நகர்ச் சிவனடிக் கமல
முயங்கு சிந்தையன் றருமனென் றுளனொரு முதியோன்
வயங்கு வெண்டுக ளுருத்திர மாமணி வனைவான்
றயங்கு கொன்றையோன் சைவநூல் வளர்த்தவன் சரிப்பான்.

(இ - ள்.) இப்படி நடக்குங்காலத்தில், சானந்தமெனும் இந்நகரிலெழுந் தருளிய சிவபெருமான் பாததாமரைகள் குடிகொண்ட சித்தமுடையவனும், தருமனென்னும் பெயரேற்றவிருத்தனும், விளக்கமுற்ற திருவெண்ணீறும் உருத்திராக்கமணியும் அணிபவனும், சிறந்த கொன்றைமலர்மாலை தரித்த சிவபெருமானுடைய சிவாகமநெறிகளைப்போதித்து வருவோனுமாகிய ஒருவ னிருந்தான். எ - று. (௫௭௨)

சரிக்கு மன்னவன் றன்மனைக் களவழிச் சார்ந்து
சுரித்த வார்குழற் றோகைகற் பழித்தனன் சூரன்
விரித்த வார்கலை யுருத்திர மென்மணி பொதிந்து
பொருந்தி வைத்தவை யவனெடுத் துடன்கொடு போனான்.

(இ - ள்.) இப்படி வசிக்கும் அத்தருமன் வீட்டிற்குத் திருட்டுவழியா யெய்தி, சூரனென்பவன் சுரித்தலையுடைய நீண்ட கூந்தலைப்படைத்த அவன் மனைவியின் கற்பைக்கெடுத்தான். உருத்திராக்கமணியை உள்ளேவைத்துச் சுருட்டியிருந்த விலையேறிய பெரிய பீதாம்பரமொன்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். எ - று. (௫௭௩)

மறுத்து நோக்கலுங் கண்டிலன் றருமனும் மனைவியா
ளிறுத்த சிந்தையட் கேட்டலு மாங்கவ ளிசையாள
கறுத்த நெஞ்சகச் சூரனக் கலையெடுத் துடுப்பப்
பொறாந்து ருனிது வென்கலை யென்றெதிர் புகன்றான்.

(இ - ள்.) தருமன் மீண்டும் அவ்வஸ்திரத்தைப்பார்த்தபோது காணாதவனாய், கற்புகெட்டமனமுடைய தன் மனைவியைக்கேட்கையில், அவள் அதனைச்சொல்லவில்லை வஞ்சகநெஞ்சினனான சூரனென்பவன் அப்பீதாம்பரத்தையெடுத்து அணிந்துகொண்டவுடனே, அதைத் தருமன் கண்டு மனந்தாளாதவனாய் இது என்னுடைய பீதாம்பரமென்று அச்சூரனுக்கெதிரே சொன்னான்.

தருமனங்கது வுரைத்தலுந் தழல்விழி புரட்டி
வெருவ நோக்கின னுருத்தனன் வெந்திறற் சூர
னொருவி யாங்கவன் றனைபா லுரைத்தலு மவனைக்
கருதி நோக்கில னன்னவ னடுதிறற் களியால்.

(இ - ள்.) தருமன் அப்படிச் சொன்னமாத்திரத்தில், கொடிய வல்லபமுள்ள சூரன், தீப்போற் சிவந்த விழிகளையுருட்டி அச்சமெய்தும்படி நோக்கிக் கர்ச்சனைசெய்தான். தருமனென்பவன் சூரனைவிட்டு நீங்கித்தந்தையாகிய விசயன்பாற்சென்று சொன்னபோது, அவன் யாரையும் வெல்லும் வல்லபமுள்ள களிப்பினால் அத்தருமனை (இறுமாப்பினால்) மதித்துப்பார்க்கவில்லை.

இனியி தற்குநாஞ் செய்குவ தெதுவென வெண்ணிப்
பனிநெ டுங்குடை வேந்தனுக் கீங்கிது பகர்ந்தா
னனைய வேந்தனுஞ் சூரனை யிரந்திரந் தருள
வினையி ருந்தவா வரசனோர்ந் துரைத்தன வினவான்.

(இ - ள்.) இனி யிதற்கு நாம் யாது செய்வோமென்றாலோசித்து, குளிர்ச்சி தங்கிய நெடிய சந்திரவட்டக் குடையையுடைய மன்னவனுக்கு இச்செய்தியைச் சொல்லினன். அதுகேட்ட [illegible]னும் அம்மன்னவனும் சூரனென்பவனைப் பிரார்த்தித்துப்பிரார்த்தித்துச் சொல்லியும், தீவினையநுபவமிருந்தபடியால் அம்மன்னவன் தெளிந்தோதிய சொற்களைக்கேட்கவில்லை. எ - று. (௩௭௬)

போதி யென்றனைத் தடுதிறல் விசயனிற் புகன்றான்
காது வெஞ்சினத் தலைக்கொளத் தருமனைக் கண்டாற்
றோது நீதிவிட் டுரைத்தன னுந்தனன் விசயன்
மீதி வர்ந்தெழு கவிகையன் பின்னரும் விளம்பும.

(இ - ள்.) அரசன், நீ செல்கவென்றவனை யனுப்பிவிட்டு, வெற்றிகொள்ளத்தக்க வல்லபமுள்ள விசயன்பாற் சொல்லினன். அப்போது விசயனென்பவன் கொல்லத்தக்க கடுங்கோபமதிகரித்தபடியால் தருமனை நோக்கி, யாவரும் சொல்லுகின்ற நீதிதவறிய வார்த்தைகளைக்கூறிக் கர்ச்சித்தான். மேலோங்கி விளங்கும் வெண்கொற்றக்குடையையுடைய அம்மன்னவன் மீண்டுஞ் சொல்லுகின்றான். எ - று. (௩௭௭)

என்பெ ருக்கணி யெம்பிரா னடியவர்க் கென்றுந்
துன்பி ழைத்தவ ரிழிந்துறு நிரையம்வாய் திறவா
வன்பி ழைத்தவர் கயிலைவீற் றிருப்பவ ரவற்றை
முன்பு ரைத்திடு சுருதியா லுணர்கென மொழிந்தான்.

(இ - ள்.) எலும்பு மாலையையும் வெள்ளெருக்கமாலையையுந் தரித்துள்ள வெமது சிவபெருமானுடைய அடியார்களுக்கென்று துன்பு செய்தவர்கள் வீழ்கின்ற நரகம் வாய திறவாமல், அத்தகைய அடியார்களுக்கு அன்புசெய்தவர்கள் திருக்கைலாயத்தில் வீற்றிருப்பவர்களாவார்கள். அவற்றை நீ முன்பு ஓதியுணர்ந்த வேதத்தால் உணரக்கடவாயென்று சொன்னான். எ - று. (௬௭௮)

சைவ மாரிவ னாரிவன் றறுகணன் பாவி
வையம் யாவையுங் கங்குலிற் கவர்ந்தெழு மறவன்
மைவ ருங்குழற் கணிகையா மனைதொறுஞ் சுழல்வான்
பொய்வ ழங்குவன் புலையரிற் புலவுணும் புலையன்.

(இ - ள்.) சைவம் எத்தகையது? இவன் எத்தகையன்? இவனே கொடுமையுடைய கொலைப்பாதகன். உலகமுழுவதையும் இராக்காலத்திற் களவு செயயுங் கொரேன். மேகம்போலுங் கரிய கூந்தலையுடைய தாசிகள் வீடுகளிலெல்லாம் திரிந்துகொண்டிருப்பவன். பொயமமொழிபுகல்பவன். புலையர் வீட்டிற் புலாலுண்ணும் புலையன். எ - று. (௬௭௯)

இவனை வேண்டினை யிருந்தவத தீன்றவென் மதலை
யவனை வேண்டலை யவமதித் தனையென வழலாக்
கவர்த டம்புய வேந்தனைக் கணித்திலன் விசயன்
புவன நாதனைக் கைதொழா தெழுந்தனன் போனான்.

(இ - ள்.) இத்தன்மையானவனை விரும்பி, பெருந்தவத்தினாற் பெற்ற அப்புத்திரனை நீ வெறுத்தவனாய் அவமதித்தாயென்று கோபமெய்தி, திரண்டு விசாலித்த தோள்களையுடைய மன்னனும் உலகபரிபாலகனுமாகிய அவனைப் பொருட்படுத்தாதவனாய், விசயனென்பவன் கைகுவித்து வணங்காமல் புறப்பட்டுப்போய்விட்டான். எ - று. (௬௮௦)

கரிய கண்டனைப் பணிந்தவ னருச்சனை கருதி
யுரிய நீறணிந் துருத்திர மாமணி புனைந்த
பெரிய ரும்பரிற் பெரியரென் றுளத்தொடும் பேணா
வரிகெ டுஞ்சிலைச் சூரனைத் துணித்திட மதியா.

(இ - ள்.) திருநீலகண்டத்தையுடைய சிவபெருமானை வணங்கி அவருடைய பூசையையே கருதி, அதற்குரிய திருவெண்ணீறணிந்து சிவந்த உருத்திராக்கமணிமாலையணிந்த பெரியோர்கள், தேவர்களைக்காட்டிலும் மேம்பட்டவர்களென்று, மனவொற்றுமையோடு வழிபாடுசெய்யாத, வரிந்துகட்டிய நெடிய வில்லேந்திய சூரனென்பவனை வெட்டுவதற்கு நிச்சயித்து. எ - று. (௬௮௧)

ஏவ லாளரிற் சூரனைக் கொணர்திரென் றிசைத்தான்
வாவி யோடினர் கொணர்ந்தனர் விடுத்தன மன்னன்

பாவி யீங்கிவன் றனைக்கொடு படுகளத் திருத்தி
யாவி வீட்டுதி ரென்றுரைத் தருத்தயின் றழன்றான்.

(இ - ள்.) தன்னேவலாளர்கள்பாற் சூரனையழைத்து வருகவெனக் கட்டளை செய்தான். அவ்வேவலர் அங்ஙனமே விரைந்தோடி அவனை யழைத்துக்கொண்டு வந்துவிட்டவுடனே, அரசன் இங்குள்ள இப்பாவியைக் கொண்டுபோய்க் கொலைக்களத்திலிருக்கும்படிசெய்து இவனுயிரைப்போக்குங்களென்று ஆஞ்ஞாபித்துக்கர்ச்சித்துக்கோபித்தான். எ - று. (௩௮௨

பிணித்தி றுக்கினர் மணிநெடுந் தாம்பொடும் பிணித்துத்
தணிப்ப ருஞ்சினத் தொடுமடுங் கொலைக்களஞ் சார்ந்தார்
திணித்த பாதக னெஞ்சக மழுக்கொடு சிதைத்தா
ரணித்து ரைத்திடக் கடுந்திறல் விசயனீ தறிந்தான்.

(இ - ள்) (மன்னவன் கட்டளை பெற்ற ஏவலாளர்கள்) இறுக்கிச்சேர்த்துக் கட்டிக்கொண்டு தணிதற்கரிய கோபத்துடன் வதைசெய்யுங் கொலைக்களத்தை யடைந்தார்கள். கடும்பாதகனாகிய அசசூரனது நெஞ்சை மழுவாயுதத்தினாற் பிளந்தார்கள். கொடூரவல்லபமமைந்த விசயனென்பவனைச் சிலர் சென்று நெருங்கிச்சொல்ல அவன் கேட்டறிந்தான். எ - று. (௩௮௩)

எழுந்த சீற்றமிக் கெழுந்தன னரசனை யெதிர்ந்தான்
மொழிந்த ருதன யாவையும் பற்பல மொழிந்தா
னழுங்கு சிந்தனைத் தருமனை யருகுகண் டறிந்தான்
முழங்கி முட்டினு னின்னுயிர் முடிக்குவ னென்றான்.

(இ - ள்.) விசயன் தனக்குண்டான கோபமதிகரித்து அங்கிருந்தும் வெளிப்பட்டு மன்னவனுக்கு நேரேவந்து, சொல்லத்தகாத சொற்களாயுள்ளவற்றை யெல்லாம் பலவிதமாகச்சொன்னான். வருந்தும் மனமுடைய தருமனென்பவனையும் அருகே யிருக்கப்பார்த்துணர்ந்து, பெருங் கர்ச்சனைசெய்து குத்தி உன் அரிய உயிரை யகற்றுவேனென்றான். எ - று. (௩௮௪)

வேந்த நின்னுடைக் கவிகையு மடுபுய விறலும்
வாய்ந்த செல்வமும் யானுற வந்தன மதியா
யேந்த லென்னுயிர்ப் புதல்வனைக் கொன்றனை யினிநீ
போந்த பேரர சளிக்குவை யென்றனன் போனான்.

(இ - ள்.) அரசனே! உன் வெண்கொற்றக்குடையும், பகைவரைக்கொல்லுந் தோள்வலியும், நீயடைந்தசெல்வமும், நான் கொடுக்கக்கிடைத்தன வென்பதைக் கருதாமற்போயினை. என் உயிரையொத்த புதல்வனாகிய தலைவனைக் கொலைசெய்தாய். ஆதலால் இதுகாறும் நடத்திவந்த பெரிய அரசுரிமையை இனி நீ நடத்துவையோ என்று சொல்லிப்போயினன். எ - று. (௩௮௫)

பாவ மோர்ந்திலன் சிவனடி யாரெனப் பாரான்
வீவ தாக்குவ னெனக்குறித் தென்னையும் வெருவா
னுவ தேடுதன விருந்தவா ளரசனெஞ் சழன்று
காவல் செய்தவன் மனைவயிற் பொருளெலாங் கவர்ந்தான்.

(இ - ள்.) விசயன், பாவத்தையும் அறியவில்லை கொடியனென்றுங் கருதவில்லை. கொன்றுவிடுவோமென்றெண்ணி என்மேலுங் கோபித்துக்கொண்டான். இதற்கு யாது செய்வேனென்றெண்ணியிருந்த உடைவாளேந்திய அம்மன்னவன், மனங்கொதித்து அவ்விசயன் வீட்டிற் காவல்வைத்து அங்குள்ள பொருள்களெல்லாவற்றையும் அபகரித்துக்கொண்டான். எ - று. (௫௮௬)

வேனில் வேளையோர் விழித்தழன் மாட்டிய விமலற்
கான தொண்டனைப் போற்றின னுடையு மணியு
மேனை யாவையுங் கொடுத்தனை னேகுதி யென்றான்
மான வேற்படை விசயனெஞ் சகத்தினு மதித்தான்.

(இ - ள்.) வசந்த காலத்திற்குரிய மன்மதனை ஒப்பற்ற தமது நெற்றியாற் பொடிபடுத்திய சிவபெருமானுக்குரிய அடியவனாகிய தருமனைத் துதிசெய்து, வஸ்திரங்களும் ஆபரணங்களும் மற்றுள்ளவையும் பரிசாகக்கொடுத்து, நீர் செல்லுகவென விடைதந்தனுப்பினான். சத்துருக்களுக்கு அச்சந்தரும் வேற்படை தாங்கிய விசயன் தன்னுள்ளத்தில் இப்படி யெண்ணினான். எ - று. (௫௮௭)

வரம்பி கந்தன னரசனென் மனையகம் புகுந்து
கரந்தி யாவையு மெடுத்திடப் பணித்தனன் கண்ணுற்
றிரங்கி யிங்கிவன் மனைவிவீழ்ந் தரற்றுற விவனை
சிரந்து ணிப்பது புரிவனென் றரசவை சென்றான்.

(இ - ள்.) இம்மன்னவன் தன்னுடைய நீதியினின்றுந் தவறினான். என் வீட்டினிற் பிரவேசித்து என் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்தபகரிக்கும்படி கட்டளை கொடுத்தான். ஆனபடியால் இவன் மனைவியானவள் பார்த்துத் துக்கமெய்திக் கீழேவிழுந்து புரண்டு புலம்பும்படி இம்மன்னவன் சிரத்தைத் துண்டிப்பேனென்று அரசசபைக்குச்சென்றான். எ - று. (௫௮௮)

சென்று நின்றன மந்திரத் தொருவழி செலுத்த
வன்ற டக்கையிற் பிறந்தது யாளிட மடங்க
லன்ற கண்டமுந் திசைகளு மதிர்ந்திட வதிரா
வொன்றி யோர்ந்துற நின்றதவ் வுறுசின மடங்கல்.

(இ - ள்.) அங்கே போயிருந்து தன் மனதை யொருவழிப்படுத்தி நரசிங்கமூர்த்தியின் மந்திரத்திற் கருத்தைச்செலுத்தவும், அவனது வலிமை யமைந்த பருத்த கையினின்றும் அந்நரசிங்கமூர்த்தம் தோன்றியது. அப்படித்தோன்றிய நரசிங்கமூர்த்தம் அப்பொழுது எல்லா லோகங்களும் எட்டுத்திக்குகளும் அதிரும்படி கோஷித்து மனம்பொருந்தி யுணரும்படி நின்றது. எ - று. ()

வெற்றி வேற்படை விசயனை நோக்கிவெண் கோட்டுப்
பெற்ற மூர்ந்தவ னடியரிற் பிழைத்தனை யுலவா
துற்ற பாதக னுனைவிடே னென்றுருத் தெழுந்து
தெற்றெ னப்புகுந் தெடுத்துயிர் குடித்தச் சீயம்.

(இ - ள்.) வெற்றிதங்கிய வேலாயுதமேந்திய விசயனை நரசிங்கமூர்த்தமானது பார்த்து, கொம்புகளையுடைய வெள்ளிய இடபத்தின்மீது ஆரோகணிக்கும்

செய்தருளும் சிவபெருமானுடைய அடியவர்களுக்குப்பிழைசெய்தாய். ஆதலால் எக்காலத்திலும் நீங்காத பாதகமுடைய உன்னை விடமாட்டேனென்று சொல் லிக்கோபித்தெதிர்த்து அதிசீக்கிரமாக அவனை நெருங்கி அவனையெடுத்து உயிர் குடித்தது. எ - று. (௩௯௦)

விளங்கு வாட்படை வேந்தநீ வெள்விடை யவன்றா
ளளந்த றிந்தனை யடியருக் கடியனு மானா
யுளங்கொ ளன்பொடு சைவநூ லோங்குற வோங்கித்
துளங்கு வெண்குடை நிழற்றுதி யெனப்பல சொல்லி.

(இ - ள்.) ஒளி வீசும் வாட்படைதாங்கிய அரசனே! வெள்ளிய இடப வாகனமூர்ந்தருளும் சிவபெருமான் பாதங்களைப்பத்தியோடு அளவுபடுத்தி அறிந்தனை. அச்சிவபெருமானுடைய தொண்டர்களுக்குத் தொண்டனுமானை. மனதிற்பதித்த உண்மையன்போடு சிவாகமங்கள் அபிவிர்த்தியெய்தும்படி நீ செழித்து, ஒளிதங்கிய வெண்கொற்றக்குடையை நிழற்றக்கடவையென்று பல வார்த்தைகள் சொல்லி. எ - று. (௩௯௧)

நீறு கண்டிகை தரித்தவர்க் காண்குறி னெகிழா
வூறு மன்பினோ டுவப்புறி னொண்மணிக் கயிலை
யேறு யர்த்தவ னிருங்கதி யெயதுவை யெமக்குங்
கூறி லக்கதி கிடைப்பரி தெனமனக் கோடி.

(இ - ள்.) திருவெண்ணீறு உருத்திராக்கமணிமாலை இவற்றைத் தரித்தவர் களைக்கண்டால், மனமுருகிப்பெருகிய அன்போடு களித்தால், ஒளிதங்கிய இரத்தினமயமான திருக்கைலாயத்தில் வீற்றிருந்தருளும் இடபக்கொடியைத் தாங்கிய சிவபெருமானுடைய பெருமைதங்கிய பதவியையடைவாய். சொல்லு மிடத்தில், எமக்கும் அப்பதவி கிடைப்பது அரிதென்று மனதிற் கருதுவாயாக.

எண்ணி லூழ்பல விருநிலம் புரக்குதி யிடையே
யண்ண னின்னுழை யரந்தையா ரியற்றினு மந்நாட்
கண்ணு றுப்பெறிற் கதுமென வருதுமென் றிசைத்து
மண்ண கநதொழ மறைந்தது மாணிட மடங்கல்.

(இ - ள்.) கணக்கில்லாத பல கற்பங்கள் இப்பெரிய நிலவுலகத்தைப் பரிபாலனம்புரிவாயாக. இதனிடையே, பெருமைதங்கிய உன்னிடத்தில் எவரே னும் உன்னைத் துன்புசெய்தாலும், அப்பொழுது நம்மைத் துதிசெய்வாயாயின், அதிசீக்கிரத்தில் வந்து உதவிசெய்வோமென்று சொல்லி, நிலவுலகிலுள்ளார் யாவரும் வணங்கும்படி அந்நரசிங்கமூர்த்தம் மறைந்தது. எ - று. (௩௯௨)

முக்க ணெம்பிரா னடியவர்ப் பிழைத்திவை முயன்ற
மிக்க திண்டிறல் விசையனும் விசையனின் றுதவப்
புக்க னைந்தனுஞ் சிவத்துரோ கர்க்கொரு புடையே
தொக்க வெந்தழற் கும்பியுட் கிடந்துளந் துயர்வார்.

(இ - ள்.) திரிநேத்திரங்களமைந்த எமது சிவபெருமானுடைய தொண்டர் களுக்கு அபராதஞ்செய்து இப்படி நடத்திய, மிகப்பெருவல்லபமமைந்த விசய

புனைபவனும் அவ்விசயன் பெறும்படி புரித்த மகனாகிய ருத்திரனென்பவனும் சிவத்துரோகிகளுக்கு ஒருபுறத்தில் தொகுதியாயுள்ள கொடிய தீமையமைந்த கும்பீபாக நரகத்தில் விழுந்து மனம் வருந்துவார்கள். எ - று. (௩௯)

௪௰ அக மன்னவ ருழக்குவ திதுவென நந்தி
பரவ ருஞ்சிவ யோகிமுற் றுணர்ந்துளம் பதைத்தா
னரக ராவென வுச்சிகை கூப்பின னயர்ந்தான்
விரத நூன்முறை யாங்கவன் விரித்தன வியந்து.

(இ - ள்.) அத்தகையினர் நரகத்தில் விழுந்து வருந்துவதற்கு இதுவே காரணமென்று திருநந்தி யெம்பெருமான் திருவாய்மலர, யாவரும் பணிதற்கரிய சிவயோகி, இவற்றையெல்லாந்தெரிந்து மனம்பதைத்து, அந்நந்தி பகவான் திருவாய்மலர்ந்த சிவாகமங்களிற் சொல்லிய முறைமையான கட்டளைகளைக் கேட்டு, ஹரஹரவென்று சிரமிசைக்கைகுவித்துப் பரவசமாயினர். எ - று. ()

கலிவிருத்தம்.

இவையு ரைத்தன வன்றியு மெய்பிரா
னவைய றுங்குணக் கேள்வி நடத்துது
மவையு ணர்ந்தறி வீரென வாகமச்
சுவைதெ ரிந்தறி நந்தியு ளக்குவான்.

(இ - ள்.) இப்போது சொல்லிமுடித்தனவாகிய இவைகளன்றியும், எமது சிவபெருமானுடைய குற்றமற்ற குணங்களைச் சிரவணஞ்செய்வது பற்றிச் சொல்லுவோம். அவற்றையும் அறிந்து தெளிவீராகவென்று, சிவாகம மார்க்கத்தின் சுவையையுணர்ந்து தெளிந்தவராகிய திருநந்திதேவர் திருவாய்மலர்ந்தருளுகின்றார். எ - று. (௪௧)

அரனை முக்கண வனைய றிந்துள
குரவ னைத்திரு நீற்றைவெண் கோவிடைப்
பரனு ருத்திர மாமணி யைப்பரந்
தரவ ருந்தனித் தொண்டுசெய் சைவரை.

(இ - ள்.) சிவபெருமானையும், திரிநேத்திரங்களையுடைய அச்சிவபெருமானை யறிந்துள்ள ஆசாரியரையும், திருவெண்ணீற்றையும், தலைமைபெற்ற வெள்ளிய இடபத்தையுடைய அப்பெருமானுக்குரிய சிறந்த உருத்திராக்கமணியையும், முத்தியளித்தற்குக் காரணமாகிய ஒப்பற்ற திருத்தொண்டு செய்கின்ற சைவர்களாகிய சிவனடியார்களையும். எ - று. (௪௨)

வந்தி யாது மறுகிலே நின்றுளஞ்
சிந்தி யாதிகழ் தீமையர் தென்புலத்
தந்த கன்பட ராலழிந் தள்ளல்வா
யுந்த வீழ்ந்து படுவது ணர்குவீர்.

(இ - ள்.) வந்தனை புரியாமலும், மனதிற் கருதாமலும், [illegible] நிலைமையிலிருந்து நிந்தித்துப்பேசுங் கொடியவர்கள், தென்றிசையிலுள்ள இயம

கிங்கரர்களால் வருத்தமெய்தி நரகத்திற்றள்ள விழுந்து துயரமெய்துவதைத் தெரிந்துகொள்வீர்களாக. எ - று. (௩௮)

சோன மென்றொரு நாட்டகத் தொன்னக
ரான சோன மதியிருந் தாருயிர்
மான வெண்குடை நீழல்வ ளர்க்குவான்
கான வார்தொடை வேந்தன்க லாதரன்.

(இ - ள்.) ஒப்பற்ற சோனமென்று சொல்லப்படும் நாட்டிலேயுள்ள பழமையாகிய நகரமாகிய சோனமென்னும் நகரத்திலே வசித்து, மன்னுயிர்களையெல்லாம் சிறந்ததன் வெண்கொற்றக்குடை நிழலிலே வளர்க்கின்றவனுமாகி, வாசனைதங்கியதாய் நீண்ட மலர்மாலைதரித்துள்ள கலாதரனென்னும் ஒரு மன்னவனிருந்தான். எ - று. (௩௯)

கலைகள் யாவு மொருநெறி கற்றுணர்
நிலையி னின்றவ னீதியி னீங்கலான்
கொலைம ழுப்படை யெந்தை குரைகழ
றலைசு மக்குறு சைவத் தலைமையான்.

(இ - ள்.) நூல்களெல்லாவற்றையும் ஒரு வழியாக ஓதியறிந்த நிலைமையிலிருந்தான். நீதி வழியினின்று தவறாதவன். கொலைத்தொழிற்குரிய மழுப்படைதாங்கிய எமது சிவபெருமானுடைய சத்திக்கின்ற வீரகண்டாமணி தரித்துள்ள திருவடிகளைத் தன் சிரமிசைத்தாங்கப்பெற்ற சைவசமயத்தில் மேம்பட்டவன். எ - று. (௪௦)

இகலு மன்ன ரெரிமிடை கானகம்
புகவி ழிக்கும் புகர்முக வேலினன்
றகைபெ ருங்குணத் தன்மையன் றொன்மைசா
லகனி லம்பொதுப் போக்கிய ளிக்குவான்.

(இ - ள்.) பகைக்கின்ற மன்னர்கள் தீப்பொறி பறக்கின்ற காட்டிற் சேரும்படி கோபித்துப்பார்க்கின்ற பட்டத்து யானையும் வேற்படையுமுடைய அம்மன்னவன், மேம்பட்ட சிறந்த குணந்தங்கிய இயற்கையுடையவனாய், பழமையானதும் இடமகன்றதுமான நிலவுலகத்தைப் பொதுத்தன்மைகடிந்து காக்கின்றவன். எ - று. (௪௧)

இனைய தன்மைய னீர்ந்திழைத் தேற்றி
புனைம ணித்தனி யாசன மீப்பொலிந்
தனையெ னச்சுரந் தாருளு ளல்கியக்
கனைக ழற்றனி வேந்துறுங் காலையில்.

(இ - ள்.) இவ்வியல்புடைய தன்மையனாய் அலங்காரந்தங்கிய இரத்தினங்களைச் சன்னலிற் பிடித்திழைத்துப்பதித்துள்ள ஒப்பற்ற ஆசனத்தின்மேலிருந்து விளங்கி, தாயைப்போல வெல்லாருக்கும் கிருபைசெய்து, சத்திக்கின்ற வீரகண்டாமணிதரித்த ஒப்பில்லாத அம்மன்னவனிருந்தபோது. எ - று. (௪௨)

அந்த ரத்தினி யங்கும ருந்தவர்
சிந்தை கூர்சிவ யோகிகள் சித்தர்கள்
பந்த நீக்குந் துறவுறு பண்பினர்
முந்தி னாவன் பேரவை முன்னினார்.

(இ - ள்.) ஆகாயத்தில் வசிப்பவர்களாகிய அரிய தவசிகளும், மனக்களிப்புமிகுந்த சிவயோகிகளும், சித்தர்களும், பந்தபாசங்களை விலக்குதற்குக்காரணமாகிய துறவற தருமத்தை மேற்கொண்ட தன்மையாளரும், ஒருங்கு சேர்ந்து வந்து அம்மன்னவனுடைய பெரிய சபையிற் கூடினார்கள். எ - று. (௨௦௩)

அன்ன காலைய ருங்கலை யாவையும்
பன்னி யோர்ந்த பசுபதி பாரதி
துன்னி னனத் தொடுகழல் வேந்தனு
முன்ன ரெய்திய ருச்சனை முற்றினான்.

(இ - ள்.) அப்படிப்பட்டகாலத்தில், அருமையாகிய சாஸ்திரங்களையெல்லாம் (முறைப்படி தக்க ஆசிரியர்பால்) ஓதியுணர்ந்துள்ள பசுபதி பாரதியென்பவர் அங்கேவந்து சேர்ந்தனர். வீரக்கழலணிந்த அம்மன்னவனும் அப்பசுபதி பாரதிக்கு முன்பாகவந்து செய்யவேண்டிய வந்தனை வழிபாடுகளைச்செய்தான்.

அன்பி னோடரி யாசனத் தேற்றினு
னென்பு றக்கனிந் தேத்தியி றங்கினான்
புன்பு ரிசசடைப் புங்கவ னைத்தொழு
முன்பி னன்னவற் காசிமொ ழிந்தனன்.

(இ - ள்.) அவரை அன்போடு சிங்காதனத்தின்மேல் வீற்றிருக்கச்செய்து எலும்பும் நெக்குவிட்டுருகும்படி கனிவோடு துதிசெய்து மனங்கசிந்தான். அற்பமாய் முறுக்கியுள்ள சடையையுடைய சிவபெருமானை வணங்குகின்ற முதல்வராகிய அப்பசுபதி பாரதி அம்மன்னவனுக்கு ஆசிர்வாதஞ்செய்தனர்.

அக்க ணத்தி னரசவை யாயிடைப்
புக்கி ருந்தவர் யாவரும் போற்றினார்
மிக்கெ ழுந்துயர் வெண்குடை வேந்தனை
யொக்க நோக்கி யுணர்த்துதன் மேயினான்.

(இ - ள்.) அச்சமயத்தில், இராசசபையாகிய அவ்விடத்தில் வந்திருந்தவர்களெல்லாரும் அப்பாரதியை வந்தனை செய்தார்கள். மிகவும் மேம்பட்ட சிறப்புத்தங்கிய சந்திரவட்டக்குடையையுடைய அம்மன்னவனை ஒருமைப்பாட்டோடு நோக்கி அறிவிக்கத்தொடங்கினார். எ - று. (௨௦௬)

கட்பு லந்தெரி யேனுதற் கண்ணனை
யுட்பு லத்தி னொருசா ருணர்ந்துளேன்
கொட்பு றும்பரிக் கோமுடி வேந்தவோர்
நுட்ப வுண்மை நொடிவது கேளென.

(இ - ள்.) நெற்றித்திருவிழியையுடைய சிவபெருமானை என் கண்களாற் றரிசிக்கவில்லை. ஆனால் என்னறிவினால் ஒருவகையாக உணர்ந்திருக்கின்றேன். சுழலுகின்ற குதிரையையும் மேம்பட்ட கிரீடத்தையுமுடைய மன்னவனே! நுட்பமாகிய ஒரு நிலைமையை உனக்குச்சொல்லுகின்றேன் கேட்பாயாக.

சைவ மேசம யந்தனிக் கண்ணுதற்
றெய்வ மேபரஞ் சேவுயர்த தெம்பிரான்
வையம் யாவையு மன்பதை யாவையு
நெய்யு மென்னு மெனநிறைந் தானரோ.

(இ - ள்.) சைவசமயமே உண்மைச்சமயமாகும். ஒப்பற்ற நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமானே பதிப்பொருளாகும். இடபத்தைக் கொடியாகவுயர்த்திய அப்பெருமானே உலகங்களெல்லாவற்றிலும் எள்ளிற்குள் நெய்போல எங்கும் நிறைந்திருக்கின்றனர். எ - று. (௬௦௮)

செய்யப் பட்டன செய்பவன் செய்தொழிற்
கையப் பாடில வாய கருவிக
ளுய்யப் பட்டன யார்க்கு மொருநெறி
தையற் பாகன் றழுவினின் றனரோ.

(இ - ள்.) செய்யப்பட்ட கிரத்தியங்களும் செய்பவரும் அச்செய்கைகட் குரித்தாகிய சந்தேகமற்றனவாகிய கருவிகளும், ஈடேறுகின்றவர்கள் எல்லோ ருக்கும் வாய்க்கின்ற ஒரே பேறும், ஆகிய இவையெல்லாவற்றிலும் உமாதேவி யாரை வாமபாகத்திலுடைய சிவபெருமான் கலந்திருக்கின்றனர். எ - று. ()

ஆதி யாகிய யற்சம யம்புகப்
பேதி யாநின்ற பெற்தமு மாயினு
ஞோதி யோதி யுணருமு ணர்சியுட்
சேதி யாவருந் தெய்வமு மாயினான்.

(இ - ள்.) தாமே எல்லாவற்றிற்கும் ஆதிநாயகனாகியும், பல வேறு சமயங் களிற் பிரவேசிகரும்படி வேறு படுத்துகின்ற பந்தமாகவுமாயினர். ஞான நெறியைத்தெளிந்துணர்கின்ற அறிவினுகருள்ளே அழிவற்று விளங்குகின்ற தெய்வமுமாயினர். எ - று. (௬௧௦)

ஓடு தேரகத் தூடுரு வாணியிற்
கூடு தோறுங் கொழுஞ்சுட ராயுட
னோடு பூதமொ ரைந்தவ னாயினான்
வீடு காலமி றநதொழி மெய்யரையான்.

(இ - ள்) ஓடுகின்ற இரதத்திலிருக்கின்ற அஞ்சுருவாணியை நிகர்த்து, அழிகின்ற காலமற்று விளங்கும் உண்மை[illegible]டைய அச்சிவபெருமான், தேக மொவ்வொன்றிலும் ஒளி வீசுகின்ற [illegible], அவ்வத்தேகங்களுக்குத்தேவை யாகிய பஞ்சபூதங்களும் தாமேயாகி விளங்குவர். எ - று. (௬௧௧)

திங்க ளாயிரங் கோடிசி றந்தெனப்
பொங்கு வெள்ளொளி பூத்த கயிலையா
னங்க ளுதனை [illegible] யல்லது
செங்கண் [illegible] யுமற் றொன்றுஞ் செய்கலான்.

(இ - ள்.) [illegible] கோடி சந்திரர்கள் ஒருசேர உதயமானாற்போல மிகுந்த வெண்மையாகிய ஒளியை வீசும் திருக்கைலாயகிரியில் வீற்றிருப்பார். சிவந்த [illegible] போலும் கண்களையுடைய திருமாலும் அத்தகைய நமது சிவபெருமானை பூசைபுரிந்தலர மற்றொன்றுஞ் செய்யமாட்டார். எ - று. (௬௧௨)

ஆகை யாலவற் காட்பட வேண்டினோ
ரேக நாத னிவனல தில்லென
வோகை யன்பின ருச்சனை யோம்பியத்
தோகை பாகனைக் கைதொழு தேத்தினோர்.

(இ - ள்.) ஆகையால், அச்சிவபெருமானுக்கு அடியவர்களாக விரும்பினவர்கள், இவரைத்தவிர ஒப்பற்ற தலைவர் பிறரில்லையென்று மகிழ்ச்சிதங்கிய உண்மையன்பினால் வழிபாடுசெய்து அவ்வுமாதேவிபாகராகிய சிவபெருமானைக் கைகூப்பித் துதிசெய்தவர்களும். எ - று. (௪௧௩)

எந்தை யீசன ருச்சனை யெய்தினோர்
சிந்தை கூர்சிவ வேடஞ்சி றந்தவர்
முந்தை யோன்சிவ காதைமொ ழிந்தவ
ருய்ந்த தொண்டர்க் கடிமையு வந்துளோர்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமானை யருச்சிக்கப்பெற்றவர்களும், மனவுருக்கம் அதிகரிக்கத்தக்க சிவவேடத்தினால் மேம்பட்டவர்களும், அவ்வாதி தேவன் சரிதைகளாகிய சிவசரிதைகளைச்சொன்னவர்களும், உச்சீவித்த சிவனடியார்களுக்கு அடிமைத்தன்மையை அவாவினவர்களும். எ - று.

இவரை நோக்கியி ருங்கம லாசனன்
பவள வெள்ளடி மைப்பாற் கடலையகன்
கவர்த டன்சினைக் கற்பகக் கோமக
னெவரு மேத்தியி ரங்குதல் வேண்டுமால்.

(இ - ள்.) ஆகிய இவர்களை, பெரிய தாமரை மலர்ப்பீடத்தையுடைய பிரமதேவனும், பவளங்களைக் கொழித்துக்கொண்டிருக்கின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலுக்கிறைவராகிய திருமாலும், பிரிவுபட்ட பரந்த கிளைகளையுடைய கற்பகவிருக்ஷ நிழலிலுள்ள இந்திரனும் ஆகிய இவர்கள் யாவருங் கண்டவுடனே துதித்து மனமுருகுதல் வேண்டும். எ - று. (௪௧௪)

ஈசனைத் தங்கள் சிந்தையி ருத்தினோர்
பூசு நீறுபொ லியப்புனைந் தவ
ராசை மீக்கொண் டரனைய டிக்கடி
பேசி யன்புபி றங்கப் பெருக்கியோர்.

(இ - ள்.) சிவபெருமானைத் தமதிதயத்தில் (எக்காலமும் நீங்காமல்) எழுந்தருளச் செய்துகொண்டவர்களும், பூசியத்தக்க திருவெண்ணீற்றை மிகுதியாக அணிந்துள்ளவர்களும், ஆசை மிகுந்தவர்களாய் அச்சிவபெருமானை அடிக்கடி துதிசெய்து மெய்யன்புண்டாகும்படி விருத்திசெய்தவர்களும். எ - று.

ஈச னன்றிமு தன்மைய ரில்லெனப்
பேசி னானிவை பேசனும் பேரவை
பூச லுள்ளம் பொறுமையிற் பொங்கினான்
வாசு தேவ னெனுமொரு வைணவன்.

(இ - ள்.) சிவபெருமானை யல்லாமல் முதன்மையானவர்கள் வேறொருவருமிலரெனத் திருவாய்மலர்ந்தனர், இப்படித் திருவாய்மலர்ந்தவுடனே அப்பெரிய

சபையிலிருந்த வாசுதேவனென்னும் பெயர்வகித்த ஒரு வைணவன் மனந்தாளா மையாற் பேரொலியோடு கோபித்தான். எ - று. (௪௧௭)

சீட ரோடு மரசவை சென்றொரு
மாடி ருந்தனன் மன்னனை நோக்குறா
வோடு கொண்டிரந் துண்டுழல் வான்றனை
வீடு சென்னெறி தாவென வேண்டுமோ.

(இ - ள்.) தன் மாணாக்கர்களோடு அவ்விராச சபையின் உட்புகுந்து ஒரு பக்கலில் உட்கார்ந்திருந்து மன்னனை நோக்கி, ஓர் ஓட்டினைக் கையிற்றாங்கிக் கொண்டு பிச்சைவாங்கிப் புசித்துத்திரிகின்றவனை முத்திக்குச்செல்லும்வழியை யநுக்கிரகிப்பாயென்று கேட்க விரும்புவார்களோ? எ - று, (௪௧௮)

இங்கி ருந்தவ னின்னண மோதிய
புங்க வற்குப் புலித்தோ லுடையொரு
மங்கை யோடும யங்குறு வான்சிரக்
கங்கை கொண்டிடு காடுறைந் தாடுவான்.

(இ - ள்.) இச்சபையிலிருந்த பசுபதி பாரதி இத்தகைய சிறப்புக்களோடு சொன்ன கடவுளுக்குப் புலித்தோலே ஆடையாம். ஒரு பெண்ணோடு மயங்கிக் கொண்டிருப்பான். தலையிற் கங்காசலத்தைத் தாங்கிக்கொண்டு, சுடுகாட்டிலே வசித்துப் பேய்களோடு கூத்தாடுவான். எ - று. (௪௧௯)

தாம தக்குணஞ் சார்ந்துளன் கைதொடா
வீம மாலையெ லும்பணி தாங்கினான்
காமு றாப்புல் லெருக்கணி கண்ணியா
னாம நக்கினத் தோடுந டஞ்செய்வான்.

(இ - ள்.) தாமதகுணத்தையுடையவன். கையினாற் பரிசிக்கப்படாத மயானத்திலுள்ள எலும்புகளின்-மாலையாகிய ஆபரணத்தை அணிந்திருக்கின்றான். ஒருவரும்விரும்பாத அற்பமாகிய எருக்கமலர்மாலையணிந்தவன். அச்சத்தை உண்டு செய்யும் நிர்வாணகோலத்துடன் நடிப்பான். எ - று. (௪௨௦)

என்ற டுத்தவ னோதியி சைத்தன
சென்று றாதுசெ வித்தொளை பொத்தினா
னன்ற கடபொறுத் தாற்றல னாயுளங்
குன்றி மன்னனைப் பார்த்திவை கூறுவான்.

(இ - ள்.) என்று அவ்வைணவன் எடுத்துச்சொல்லிய வார்த்தைகள் உள்ளேபுகவொட்டாமல் இருசெவித் தொளைகளையும் பொத்திக்கொண்டு அப்போது பசுபதி பாரதி மனம்பொறுக்கமுடியாதவராய் வருந்தி மன்னனை நோக்கி இப்படித்திருவாய்மலர்கின்றனர். எ - று. (௪௨௧)

பெருக்கு மண்டப் பிரளய மெய்துநாண்
முருக்கி முன்ன ரரிமுத லோருயி
ரருக்கி யச்சுடு காட்டினின் றாடினா
னிருக்கு ணர்ந்தறி யாப்பிறப் பிறிலான்.

(இ - ள்.) வேதங்களால் தெளிந்துணரப்படாத, பிறப்பும் இறப்புமற்ற சிவபெருமான், பெருக்கெடுக்கின்ற மகாப்பிரளயம் வரும் ஊழிக்காலத்தில், முற்பட்டுத் திருமால் முதலினோர் உயிர்களைப்போக்கியழித்த அம்மகாமயானத்தினின்று கூத்தாடினார். எ - று. (௪௨௨)

அளவி றந்தொழி நான்முகத் தந்தணர்
துளவ நாண்மலர்த் தொங்கல ரண்ணலு
ருளரி றந்தவ ராங்கவ ரோங்குடற்
றளரு மென்பணி மாலைத ரித்தனன்.

(இ - ள்.) கால அளவுகழிந்த நான்கு முகங்களையுடைய பிரமர்களும், அன்றலர்ந்த மலர்களையுடைய துளசிமாலை தரித்த விஷ்ணுமூர்த்திகளும் கணக்கில்லாதவர்கள் இறந்துள்ளார்கள். அப்படி இறந்த தேவர்களுடைய உடலினின்றும் நீங்கிய எலும்புகளையே அழகிய மாலையாக அணிந்துகொண்டனர். எ - று.

ஆதி காலத் தரிபிர மற்கள
சோதி யென்புதொ டுத்தணிந் தானவர்
சாதல் காட்டியுந் தன்னிலை காட்டியு
மோத வேலை யுலகுக் குணர்த்துவான்.

(இ - ள்.) ஆதிகாலத்திலே, விஷ்ணுபிரமனென்னும் இருதேவர்க்குமுள்ள ஒளிதங்கிய எலும்புகளை, அவ்வகைத்தேவர்களுடைய இறப்பையுணர்த்தியும், தமது உயர்நிலையைக் காட்டியும், குளிர்ந்தகடல்சூழ்ந்த நிலவுலகத்திலுள்ள ஆன்மகோடிகளுக்கு அறிவுறுத்தும்படி மாலையாகக்கோத்தணிந்தனர். எ - று. (௪௨௪)

ஏழை பாகத் திருத்தின னெம்பிரான்
வாழி மாநில மன்னுயி ராவையுங்
கேழ்கி ளர்ந்து பிறவிகி ளைத்தெழச்
சூழி னங்கது நான்மறை சொல்லுமே.

(இ - ள்.) பெரிய இந்நிலவுலகிலுள்ள ஆன்மகோடிகள் யாவும் உவமையில்லாத சிறந்த சனனமுண்டாகிக்கடைத்தேறும்பொருட்டு, எமது சிவபெருமான் உமாபிராட்டியாரை வாமபாகத்திலமைத்தனர். அவ்விடயத்தை நான்கு வேதங்களில் ஆராய்ந்தால் அவையுணர்த்தும். எ - று. (௪௨௫)

முப்பு ரந்தெறு முக்கணன் றன்மையை
யொப்ப வோர்ந்தில ராகியு ருத்தெழு
வெப்ப வெந்தழற் கும்பியுள் வீழ்ந்தனர்
செப்ப ருங்கணக் கற்றிடு தீமையோர்.

(இ - ள்.) முப்புரங்களை யெரித்தவராகிய சிவபெருமானியற்கையை, மனவொருமைப்பாட்டோடு உணராதவர்களாகி, சொல்லுதற்கரிய எண்ணற்ற கொடியவர்கள், ஜ்வலித்து உயர்கின்ற வெம்மையுடைத்தாகிய பெரிய அக்கினி பொருந்திய கும்பிபாக நரகத்தில் வீழ்ந்தார்கள். எ - று. (௪௨௬)

எடுத்த சீற்றத் ததீசியி ருந்தவ
னெடுக்கில் பூதியு ருத்திர மாமணி
தடுத்த ணிந்திலீ ரென்றிடு சாபநீர்
விடுத்து ணர்ந்திலீ ரின்னும்வி டுத்திரோ.

(இ - ள்.) ததீசிமுனிவராகிய பெரிய தபோதனா, தமக்குண்டாகிய கோபத்தால், அழிவற்ற திருவெண்ணீற்றையும் சிறந்த உருத்திராக்கமணியையும் எக்காலத்திலும் அணியாதிருக்கக்கடவீர்களென்று கூறிய சாபத்தைத் தீர்த்துக்கொள்ள வகையுணர்ந்தீரில்லை. ஆதலால் இன்னும் நீங்கள் உங்கள் துர்எண்ணங்களை விடுவீர்களோ? எ - று. (சஉஎ)

ஆங்க வன்சொனு மன்றுதொட் டின்றள
வோங்கு தண்டொரு மூன்றுமெடுத்தநீர்
தாங்கு கங்கைச் சடைமுடிப் புங்கவன்
பூங்க ழற்கய லாய்ப்புறம் போயினீர்.

(இ - ள்.) அந்த யாகசாலையில் ததீசிமுனிவர் சபித்த அன்று முதற்கொண்டு இன்றுவரையில், உயர்ந்த திரிதண்டத்தை யெடுத்துக்கொண்டு திரியும் நீங்களெல்லாரும், சடைமுடியின்மேல் கங்கையை யணிந்துகொண்டுள்ள சிவபெருமானுடைய அழகிய திருவடிகளுக்கு வேறாகி வெளிப்பட்டீர்கள். எ - று. (சஉஅ)

ஆர வத்த ரரிபிர மாதியர்
சார வுற்றழித் தக்கன்ம கத்திடை
வீர பத்திரன் பத்திர வெற்றியைச்
சோர விட்டிவை சொலத்தொ டங்கினீர்.

(இ - ள்.) தக்கனுடைய யாகசாலையில் விஷ்ணு பிரமன் முதலினோர் ஆரவாரித்துக்கொண்டு சேர்ந்திருந்தபோது, வீரபத்திரக்கடவுள் தாங்கியிருந்த [பத்திரம்] வாட்படையின் வெற்றிப்பாட்டை மறந்துவிட்டு இப்படிச்சொல்லத் தொடங்கினீர்கள். எ - று. (சஉகூ)

ஓதி நீதியு ருத்திர மாமணி
பூதி யோடு புனையலர்க் காண்குறின்
காது ஞாளி வளர்ப்பவர்க் கண்ணுறுந்
தீது சேர்குவர் திண்மையி துண்மையால்.

(இ - ள்.) நூல்களிற் சொல்லியுள்ள புண்ணியத்தைக்கொடுப்பனவாகிய சிறந்த உருத்திராக்கமணியைத் திருவெண்ணீற்றோடு அணியாதவர்களைக் கண்டால், கொலைசெய்யும் நாயை வளர்ப்பவர்களைக்காண்கின்ற பாவத்தை யடைவார்கள். இது உறுதியான சத்திய மொழியாகும். எ - று. (சஙo)

நீறு பூசியு ருத்திர நீண்மணி
யூறு மன்பி னணியாரு டன்சிலே
கூறி னும்மவர் கொள்கையு ரைப்பினும்
வேறு பாதகஞ் செய்யவும் வேண்டுமோ.

(இ - ள்.) திருவெண்ணீறுதரித்து, பெருமைதங்கிய உருத்திராக்கமணியையும் விசேடித்துப்பெருகும் மெய்யன்போடு அணியாதவர்கள்பால் சில வார்த்தைகள் பேசினாலும், அவர்கள் அபிப்பிராயத்தைச்சொன்னாலும், அப்படிப் பேசினவர்களும் சொன்னவர்களும் மற்றொரு பாதகத்தைச்செய்யவும் வேண்டுமோ? எ - று. (சஙக)

தூய நின்னை யருகுற லஞ்சுதந்
தீய பாதக நின்செய லோதினு

மேய வின்னலி னைழக்குழி ரையம்வீழ்ந்
தோய்வில் காலமு ழக்குவ துண்மையால்.

(இ - ள்.) அத்தகைய உன்னை நெருங்குவதற்கும் அச்சமடைகிறோம். கொடும்பாதகனுகிய உன் செய்கைகளைக்குறித்துப்பேசினுலும், அதிகமாகிய துயரத்தைச்செய்வதாகிய நரகத்திலே விழுந்து, எண்ணிறந்தகாலம் வருத்தப் படவேண்டியது நிச்சயமே. எ - று. (௪௯௨)

உண்மை யீதென் றுரைத்தன னன்மறைப்
பண்வ ருஞ்சொற் பசுபதி பாரதி
கண்ம யஞ்சிறி தின்றிக் கருத்தழி
வண்மை பெற்ற வயிணவ கேசரி.

(இ - ள்.) நான்கு வேதங்களை அவற்றின் பண்ணிசையோடு ஓதியுணர்ந்த பசுபதி பாரதி, நாம் கூறியது உண்மையென்று திருவாய்மலர்ந்தனர். அப்பொழுது ஒரு சிறிதும் தாக்ஷிண்ணியமில்லாதவனுய் மனநிலையழிந்த தன்மையுடைய கேசரியென்னும் வேறொரு வைணவன். எ - று. (௪௯௩)

மாடி ருந்தனன் மாமணி யென்பதோர்
கோடு காய்ப்பன கோமயஞ் சுட்டுற
வீடு சாம்பர் விபூதியி வற்றினுற்
றேடு வீடுசி றந்தவர் யாவரோ.

(இ - ள்.) வாசுதேவனுக்கருகிலிருந்துகொண்டு, சிறந்த உருத்திராக்கமணியென நீர் சொல்லுவது மரத்திற்காய்ப்பன. பசுஞ்சாணத்தைச் சுட்டெரித்தால் தோன்றுகின்ற சாம்பர்தான் திருவெண்ணீறுகும். இவ்விரண்டிலும் முத்தியின் பக்தேடிப் பெருமையுற்றவர்கள் யார்? (ஒருவருமிலர்.) எ - று. (௪௯௪)

தேம்பு கானகத் தீயிடை மாமரஞ்
சாம்ப ராவ ததுவுந்த ரிப்பரே
லோம்பு ஞானத் துயர்ந்தவ ரோவென
வாம்ப ரித்திறண் மன்னவற் கோதினுன்.

(இ - ள்.) பெருங்காட்டில் தோன்றும் காடாக்கினியில் அங்குள்ள பெரிய மரங்கள் சாம்பராகும். அச்சாம்பரையும் தரிப்பார்களானுல் ஆதரிக்கின்ற உண்மை ஞானத்தால் மேம்பட்டவர்களோவென்று, தாவிச்செல்லுங் குதிரைச்சேனையு வல்லபம் பெற்ற அம்மன்னவனுடன் சொன்னுன். எ - று. (௪௯௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கேசரி யுரைத்த வாய்மை பசுபதி கேட்டுப் பின்னர்
மூசிய சினத்த னுகி யாங்கவன் முகத்தை நோக்கி
யீசனை யறியாய் ஞான மெதுவழித் தென்று நோக்காய்
கூசலை யெடுத்த வெல்லாம் பித்துறக் குழறு கின்றுய்.

(இ - ள்.) கேசரியென்போன் சொல்லிய சொற்களைப் பசுபதி பாரதி கேட்டு, அதன்பின் அதிகரித்த கோபமுடையவராய், அவ்வைணவன் முகத்தை நோக்கி, சிவபெருமான் தன்மையை யறியாய். எதனுல் உண்மை ஞானம் உண்டாகுமென்பதையும் ஆராய்ந்துணரவில்லை. வாயில்வந்த வசையெல்லாம் மனங்கூசாது, பைத்தியமுற்றோன்போல உளறுகின்றுய். எ - று. (௪௯௬)

உருத்திர மணியு நீறு மொருங்கெடுத் தணிவோர் தம்மைக்
கருத்துற நினைப்பி னீசன் கழலிணைக் குரிய ராவா
ரருத்தியி னணியார் யாவ ராயினும் புலைய ராவார்
திருத்தற மொழிந்தாய் நீயும் புலையரிற் றீய னென்றான்.

(இ - ள்.) உருத்திராக்கமணியையும் திருவெண்ணீற்றையும் ஒன்றாக எடுத்துத்தரிப்பவர்களை மனமொவ்வாற்றுமையோடு நினைப்பார்களானால், சிவபெருமான் திருவடிப்பேற்றிற்கு உரியவர்களாவார்கள். அன்போடு அவ்விரண்டையும் தரிக்காதவர்கள் எவர்களாயிருந்தாலும் அவர்கள் யாவரும் நீசர்களாவார்கள். ஆதலால் திருத்தமில்லாத வார்த்தைகளைச்சொல்லிய நீயும் நீசர்களிலும் தீயவன் என்று திருவாய்மலர்ந்தருளினர். எ - று. (௬௯௭)

வனைகழ லரச கேட்டி யென்றனன் வன்கட் டீய
வினைபுரி பாதக ரேனும் விபூதியு மணியும் பூணிற்
புனைபுரி சடில வேணி யெந்தையிற் பொலிவ ரென்று
நினைதொறு மறைகள் யாவு மெடுத்திது நிகழ்த்து மென்றான்.

(இ - ள்.) அலங்கரிக்கின்ற வீரக்கழல்புனைந்த அரசனே! கேட்பாயாக வெனக்கூறுகின்றனர். கொடூரசித்தமுடையாராகிப் பாவச்செயல்கள் செய்கின்ற பாதகர்களானாலும் திருவெண்ணீற்றையும் உருத்திராக்கமணியையும் தரிப்பார்களானால் அலங்கரித்து முறுக்கிய சடையையுடைய எமது சிவபெருமானைப்போல விளங்குவார்களென்று வேதங்களெல்லாம் எண்ணுந்தோறும் விரித்துக்கூறுகின்றனவெனத் திருவாய்மலர்ந்தனர். எ - று. (௬௯௮)

ஆகம மறைகள் யாவு மளந்தறிந் தரனை யன்றி
யேகமொன் றிலையென் றோத வுணர்ந்திலை யிவர்க ளுமை
பாகனை யுணரார் மற்றைப் பதிபசு பாச மோரா
மோகரை மறல நோக்கி யிருந்தனை முதல்வ வென்றான்.

(இ - ள்.) சிவாகமங்கள் வேதங்களாகிய யாவும் அளவுபடுத்தித்தெளிந்து சிவபெருமானைத்தவிர மற்றொரு கடவுளில்லையென்று முறையிட்டிருக்கவும் அவற்றை நீ உணராதிருக்கின்றாய். இவர்கள் யாவரும் உமாதேவிபாகராகிய சிவபெருமானைத் தெளியமாட்டார்கள். பதிபசுபாசங்களை யுணராத மாயா சம்பந்தமுடைய இவர்களை, மன்னவனே! நீயும் மயக்கமுடையவனாய்ப் பார்த்துக்கொண்டிருக்கின்றாய். எ - று. (௬௯௯)

பசுபதி யுரைத்த லோடு மவனொடும் பயின்ற சீடன்
வசுவெனு மறைய வன்றன் குரவனை மறுத்துச சொல்வா
னுசிதநீ யுரைப்ப முற்றுங் கேட்குந ரொருவர்க் காணே
னிசிவரு மதற்கு முன்ன மேகுதி நிமல வென்றான்.

(இ - ள்.) பசுபதி பாரதி இப்படிச்சொல்லியவுடனே அவரோடு பழகிய மாணவனாகிய வசுவெனும் பெயர்வாய்ந்த அந்தணன் தனதாசிரியரைத்தடுத்துச் சொல்லுபவனாய், வேதியர் கூறும் மேன்மைகளையெல்லாம் அங்கீகரிப்பவர்கள் ஒருவரையுங்கண்டிலேன். ஆகையால், இராப்பொழுது வருவதன் முன்னரே யெழுந்தருள்வீராக. மலரகிதராகிய ஆசியரே! என்று கூறினான். எ - று. ( )

அன்னவ னுரைத்த லோடும் பசுபதி யவனை நோக்கி
புன்னிலை யாள ரீசற் புகழ்ந்துறு திகழக் கேட்டு

பின்னுயிர் பொறுக்க லாற்றே னிவர்க்கெதிர் புகல்வ னென்றான்
பின்னரு மவனை நோக்கி வசுவிது பேச லுற்றான்.

(இ - ள்.) அவ்வசுவெனும் மாணவகன் இப்படிச்சொல்லியவுடனே பசுபதி பாரதி அவனை நோக்கி, அற்பநிலையுடைய இவர்கள் யாவரும் சிவபெருமானைத் துதிசெய்யாது நிந்திப்பதைக்கேட்டுக்கொண்டும் என் பிராணனை வைத்துக்கொண்டு சகிக்கமாட்டேன். ஆதலால் இவர்கட்குப் பதில் கூறுவேனென்று திருவாய்மலர்ந்தனர். பின்னரும் அவரை நோக்கி வசுவென்பவன் கூறுகின்றான்.

செய்தவர் செய்த தீமை யடைகுவர் செய்கை யோரார்
வைதவர் நரகு வீழ்ந்து மறுகுவ ரெவர்க்கு மொக்கு
முய்தவத் தலைவ போதி யென்றவ னுரைப்பத் தீயோர்
மைதவழ் களத்தாற் சொலலும புன்மைநீ மதித்தி லாயால்.

(இ - ள்.) தீமைசெய்தவர்கள் தீமையையே பெறுவார்கள். தன்றன் செய்கையை யுணராமல் இகழ்ந்தவர்கள் நரகத்தில்வீழ்ந்து வருந்துவார்கள். இவ்விதி எல்லார்க்குஞ் சம்மதமாகும். ஆதலால் உச்சீவித்தற்குக காரணமான தவஞ்செய்த ஆசிரியரே! செல்வீராகவென்று அம்மாணவகன் சொல்ல, கொடியவர்களாகிய இவர்கள் விடம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானைக் குறித்துச்சொல்லுகின்ற பிழைதனையை நீ எண்ணவில்லை. எ - று. (௪௪௨)

என்றவ னுரைத்த லோடுஞ் சீடனென் றிருந்த பாவி
யின்றிவ ணிகலா நிற்றி யானிது வொழிந்தே னென்னச்
சென்றன னதனை நோக்கிச் சிரித்தனர் சிறுமை கூர்ந்தோ
ரன்றொரு மறையோன் சாந்த னுங்கவாக் கருகு சார்ந்தான்.

(இ - ள்.) என்று, அப்பசுபதி பாரதி இப்படித் திருவாய்மலர்ந்தவுடனே, மாணவகனென்றிருந்த அப்பாவி, அப்படியானால் இன்று இங்கே போராடிக்கொண்டிரும். இப்போராட்டத்தினின்று யானகன்றேனென்று போயினான். இழிதகைமையிற் சிறந்தவர்களாய் அங்கிருந்தவர்கள், அப்படி மாணாக்கன் சென்றதை நோக்கி நகைத்தார்கள். அப்பொழுது அச்சபையிலிருந்த சாந்தனென்னும் அந்தணன் அங்குள்ள பசுபதி பாரதிக்கருகு சென்றான். எ - று. ()

வேதமோர் நான்கு மற்றை யாகம விரியின் முற்று
மோதுவித் துணர்த்தி விட்டா யாங்கவ னுன்னைப் பேணான்
போதலும வருந்தே லைய நின்னடி போற்றி நின்றேன்
கோதறு குணத்தோ யெனைச் சீடனாக் கொடி யென்றான்.

(இ - ள்.) ஒப்பற்ற நான்கு வேதங்களும் சிவாகமங்களின் விரிவு முழுவதும் ஓதச்செய்து உணர்த்திவிட்டீர். அவ்வளவைபாராணாத அம்மாணவகன் உம்மை விரும்பவில்லையாயினும்! அவன் போய்விட்டதற்காக நீ வருத்தப்படவேண்டாம். அடியேன் தேவரீர் பாதங்களைத் துதிசெய்துகொண்டிருக்கின்றேன். குற்றமற்ற குணமுடையவரே! அடியேனை மாணவகனாகக்கொண்டருள்வீரென்று வேண்டினான். எ - று. (௪௪௩)

நின்னடி தொழுது நிற்பின் வேதமு மொழிபி னிறைவ
பொன்னவிர் சடையோ னொத்த புராணமும் புகன்று நின்றே
னென்னவை கருதி நின்பா லடைந்தன னெளிய னேனுக்
கின்னருள் புரிதி யென்று நுங்கவ னிசைவ தானான்.

(இ - ள்.) தேவரீர் பாதங்களை வணங்கிக்கொண்டிருந்தால் வேதமும் கிரமமாக ஓதுதற்குவரும். பொன்னைப்போற் பிரகாசிக்கும் சடையையுடைய எமது சிவபெருமானுக்குரிய புராணங்களையும் ஓதியுள்ளேன். அவ்வெண்ணத் தினாலேயே தேவரீர்பால்வந்தேன். ஆதலின் அடியேனுக்கு இனிய திருவருள் பாலிக்கவேண்டுமென்றனன். அதனைக்கேட்ட பசுபதிபாரதியென்பவர் சம்மதித்தனர். எ - று. (சசரு)

சாந்தநீ யுரைத்த வாய்மை நன்றுனைத் தந்த தாதை
யேந்துநீர்ச சடிலத் தோன்று ளிருத்திய கருத்தி னீயும்
வாய்ந்தபே ரன்பி னெந்தை மலரடிக் குரிய னானாய்
யேய்ந்தநின் செய்கை நன்மைத் தன்மையென் றிசைப்ப தானான்.

(இ - ள்.) சாந்தனே ! நீ சொல்லிய உண்மை நல்லதே. உன்னைப்பெற்ற தந்தை கங்கையையணிந்த சடையையுடைய சிவபெருமானுடைய பாதங்களைத் தியானிக்கின்ற இதயமுடையவனாதால், நீயும் அடையப்பெற்ற பேரன்போடு எம்பெருமானுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளுக்கு உரியவனாயினை. உன்பாற்பொருந்திய செயல்கள் நல்லியல்புடையனவேயென்று சொல்வாராயினார். எ - று. (சசசு)

அந்நிலை மாறு பாட்டி னரசவை யிருந்தோர் தம்முட்
பன்னரு மறைமுற் றோராப் பத்திர னென்போ னோக்கிப்
புன்னுனைப் பனியிற் கங்கை பொறுத்தவப் புனிதற் போற்றி
யுன்னருந் தகைமை சான்ற பசுபதிக் குரைப்ப தானான்.

(இ - ள்.) அச்சமயத்தில், அதற்குமாறாக அந்த அரசவையிலிருந்தவர்களில், சொல்லுதற்கரிய வேதமுழுவதுமறியாத பத்திரனென்போன் பார்த்து கங்கைநதியை அறுகம்புல்லின் நுனியிற்றங்கும் சிறுதுளியாக்கிச் சடையிலேற்ற சிவபெருமானைத் துதிசெய்து, யாவரும் நினைத்தற்கரிய பெருந்தன்மை மிக்க பசுபதி பாரதிக்குச் சொல்வானாயினன். எ - று. (சசஎ)

தரித்தநூன் மறையோ னிநதச் சாந்தனற் குலத்துட் டோன்றிச்
சரிப்பது புல்லொ ழுக்கிற கணிகையர் தடந்தோள் சாரும்
விரித்தறி சுருதி யோரான் கொலையஞ்சான் வெகுளி நீரா
னெரிப்படு விரக னென்னென் றியைந்தனை முதியோ யென்றான்.

(இ - ள்.) உபவீதமணிந்த அந்தணனாகிய சாந்தனென்னுமிவன், நற்குலத்தி லுதித்துத் தீயொழுக்கில் நடப்பவன் வேசையருடைய பரந்த தோள்களைத் தழுவுபவன். விரிவாயுணரத்தக்க வேதங்களை யுணராதவன். கொலைக்கஞ்சாதவன். கோபநீங்காதவன். தீப்போன்ற காமமுடையவன். ஆதலால் பெரியோரே! இவனை மாணவகனெனக்கொள்வதற்கு என்னவென்று உடன்பட்டீர் [illegible].

பத்திரன் பகர [illegible] பசுபதி பரமன் றொண்ட
ரெத்திறம் புரிந்த [illegible] மிலங்கொளி நீறு சாத்தி
யுத்தமத் தொழுந்துப் பூண்ட வுருத்திர மணியாற் றீமை
யத்தனை பரிதி நோக்கும் பனியெனத் தழியு மென்றான்.

(இ - ள்.) பத்திரன் இப்படிச் சொல்வதைப்பார்த்து, பசுபதி பாரதி சிவபெருமானுக்குத்தொண்டர்கள் எவ்வாறு செய்தார்களாகிலும் - இவர்

தியானஞ்செய்து ஒளிவீசுந் திருவெண்ணீறு தரித்து அணிந்துகொண்ட உருத்திராக்கமணியினால் அவ்வளவு தீமைகளும் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கிப் போமென்று திருவாய்மலர்ந்தருளினர். எ - று. (௪௪௯)

கண்டிகை நீறு தாங்கிக் கண்ணுதற் பரமற் போற்றுந்
தொண்டரை யிகழ்வார் மீளாத் தொடுகுழி நிரையஞ் சார்வார்
பண்டருஞ் சுருதி யின்ன பகர்வது பழியா நின்றாய்
கொண்டனை மறலி தென்பா னிரையவெங் கொடுமை யென்றான்.

(இ - ள்.) உருத்திராக்கமணி மாலையும் திருவெண்ணீறும் அணிந்துகொண்டு நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைத் துதிக்குந்தொண்டர்களை நிந்திப்பவர்கள், மீளாமல் தோண்டிய ஆழமுடைய நரகடைவார்கள். பண்ணோசையமைந்த வேதங்கள் இப்படிச்சொல்லுகின்றன. நீ சிவனடியாரை நிந்தித்துக்கொண்டிருக்கின்றாய். அதனால் காலனுடைய இயமபுரியிலுள்ள நரகிற்சேருங் கொடிய தண்டனையைப்பெற்றுக்கொண்டாய். எ - று. (௪௫௦)

ஒருகுடை யரசற் பாரா வேந்தநி யொலிநீர வேணிக்
கருமணி மிடற்றி னானைத் தொண்டரைக் கடவுட் டன்மை
தருமணி யதனை நீற்றைப் பழித்தவித் தறுகணோரைக்
குருவென வுணரா விட்டு நீத்தவக் கொடியோன் றன்னை.

(இ - ள்.) ஒப்பற்ற வெண்கொற்றக்குடையையுடைய அம்மன்னனைப் பாரதி நோக்கி, மன்னவனே! நீ சத்திக்கின்ற கங்கையணிந்த சடைமுடியையும் நீலமணிபோன்ற கண்டத்தையுமுடைய சிவபெருமானையும் சிவனடியார்களையும் தெய்வீகந்தங்கிய உருத்திராக்கமணியையும் திருவெண்ணீற்றையும் நிந்தித்த இக்கொரேமுடையவர்களும், (அன்னியர் என்னைப்பகைத்துப் பழிக்கையில்) ஆசாரியனென்று கருதாமல் விட்டுவிட்டு விலகிய அக்கொடியவனும். எ - று.

ஆயவிந் நால்வர் தம்மை யாருயி ரழித்தி லாயேற்
றீயவெந் நரகத் தாழ்வா யடைந்தனை சிவத்து ரோகம்
போயது கழிவ தன்றே யென்றனன் புலமை மிக்கான்
மீயுயர் கவிகை வேந்த னவர்க்கெதிர் விளம்ப லுற்றான்.

(இ - ள்.) ஆகிய இவர்கள் நால்வரையும் அரிய உயிரை யகற்றாதிருப்பாயாயின் நீ கொடிய நரகத்தில் வீழ்வாய். அச்சிவத்துரோகம் உன்னைவிட்டொழிவதன்று என்று அறிவின்மிகுந்த அப்பசுபதி பாரதி திருவாய்மலர்ந்தனர். அப்பொழுது அதியுயர்வாக வோங்கிய வெண்கொற்றக்குடையையுடைய மன்னவன் அப்பாரதிக்கு உத்தரஞ்சொல்வானாயினான். எ - று. (௪௫௨)

கறைபடி களத்தற் கன்பு பூணநீ யொன்றுங் காணாய்
மறைபடு விழிபெற் றிந்த வயிணவக் குலத்தை யெல்லாந்
துறையற முடித்தி யென்றான் சொலத்தகா தென்று விட்டா
னிறைகுணத் தலைவ னெந்தை சேவடி நினைந்து நின்றான்.

(இ - ள்.) விடந்தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமானுக்கு நீ அன்புசெய்தற்காக ஒரு வழியையுங் காணவில்லை. ஆதலால் ஏனையோர்க்குத் தெரியாத ஞானநோக்கத்தைப்பெற்றுக்கொண்டு வைணவக்கூட்டங்களையெல்லாம் அம்மார்க்கம் நீங்கும்படி ஒழித்துவிடுகவென்றான். அதுகேட்ட நற்குணத்

லின் சிறைந்த பசுபதி பாரதி இனி இவனுக்கு ஒன்றுஞ் சொல்லப்படாதென்று அவனை விடுத்து எமது சிவபெருமான் திருவடிகளைத் தியானஞ்செய்துகொண்டிருந்தனர். எ - று. (சுகூ)

அகக்கணா லரனை நோக்கி யாங்கவ னருளி னோக்கி
முகக்கணால் விளங்கா நின்றான் சைவநூன் முதன்மை சான்றோன்
புகப்படு வெகுளி மிகரு வயிணவர்ப் பொருது நோக்கி
யுகப்படு மிடிவீழ்ந் தாவி யுடம்பொடு மொழிதி ரென்றான்.

(இ - ள்.) சைவாகமங்களிற்றேர்ந்த மேம்பட்ட தலைவராகிய அப்பாரதி, சிவபெருமானை ஞானக்கண்ணாற்றரிசித்து அப்பெருமானுடைய திருவருளைப் பூரணமாகப்பெற்று ஊனக்கண்களாற் பார்த்துக்கொண்டிருப்பவராய், உதிக்கின்ற கோபம் அதிகரித்துச் சகிக்கமுடியாதவராய், வைணவர்களை நோக்கி, ஆகாயத்தினின்றும் விழத்தக்க இடியானது இப்பொழுது விழுந்து அதனால் உயிரும் உடலும் ஒழியக்கடவீர்களென்று சபித்தார். எ - று. (சுகூ)

அடிகளி தியம்ப வானத் தார்குர லசனி வைய
மிடிபட முழங்கி வீழ விறந்தன ரிவற்றை நோக்கி
முடிநெடு மோலி வேந்தன் வெருவற முதியோ னோக்கி
கடிகம ழலங்க லோய்நீ கர்த்தவ மாதி யென்றான்.

(இ - ள்.) அப்பாரதி இப்படிச்சபித்தவுடன் ஆகாயத்திலே ஆர்ப்பரிக்கும் ஓசையையுடைய இடியானது உலகமும் இடியும்படி கோஷித்துப் பூமிமேல் விழ, அவ்வைணவரிருவரும் ஏனைய இருவரும் இறந்தார்கள். இப்படி யிறந்தமையை நீண்ட கிரீடந்தரித்துள்ள மன்னவன் கண்டு மனநெங்கியிருக்க, அப்பாரதி அவனை நோக்கி மணங்கமழும் மலர்மாலைதரித்த மன்னவனே! நீ கழுதையாகுகவென்று சபித்தனர். எ - று. (சுகூ)

ஆண்டவ னுரைத்த லோடு மரசனு மவனைப் பொற்றாள்
பூண்டனன் கிடந்த வடியேன் புன்மைநீ பொறுத்தி யென்ன
வேண்டின னியாயக் கண்டும வெகுண்டனன் சிவத்து ரோகர்
மீண்டுறு நிரையஞ் சாரார் மீள்கலா நிரையஞ் சார்வார்.

(இ - ள்.) தனதாசிரியர் இப்படிச் சபித்தவுடன், அம்மன்னவனும் அவருடைய பொன்போலும் பாதங்களைப்பற்றிக்கொண்டு நிலமிசைவீழ்ந்து வணங்கி அடியேன்செய்த குற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து வேண்டிக்கொள்ளப்பார்த்தும், பாரதியார் கோபமுற்றவராய், சிவத்துரோகிகள் யாவரும் கடைத்தேறத்தக்க நரகத்தில் வீழார்கள். எக்காலமும் கடைத்தேறாத நரகத்திலே வீழ்வார்கள். எ - று. (சுகூ)

வேதசித் தாந்த மற்றை யாகம விதிகள் யாவுந்
தீதுறு சிவத்து ரோகர் தீர்வன செப்பு றாவா
னீதுய ரொழிவா யல்லை யென்றன னிமலன் மற்றைப்
பூதல வேந்தர் கோமான் கழுதையாய்க் கதறிப போனான்.

(இ - ள்.) வேதாந்தம் சித்தாந்தம் மற்றைச் சிவாகமவிதிகளாகிய இவை யாவும் கொடியனவாகிய சிவத்துரோகங்களுக்குப்பிராயச்சித்தங்கள் சொல்லமாட்டா, ஆதலால், நீ துன்பம் நீங்குபவனல்லவென்று புனிதராகிய பாரதி

கூறினர். அப்பொழுதே நிலவுலகிலுள்ள அரசர்கள் தலைவனுன அவ்வரசன் கழுவாய்க் கத்திக்கொண்டுபோனுன். எ - று. (௪௩௭)

பரந்தெரிந் துணர்ந்த ஞானப் பசுபதி சாந்த னோடும்
புரந்தர னளித்த தன்மை நினைந்தருள் பொருமப் போனுன
கரந்தரு மிடித்து வீழ விறந்தவர் தம்மைக் கால [ன்
னுரம்படப் புடைத்து வீக்கித் தென்றிசை யுடன்கொண் டேய்த்தா

(இ - ள்.) சிவபெருமான் நிலைமையைத்தெரிந்துணர்ந்த மெய்ஞ்ஞானம் பொருந்திய பசுபதி பாரதியார் சாந்தனென்னும் சீடனோடு, சிவபெருமான் தமக்கு அநுக்கிரகித்த திருவருட்டன்மையைச்சிந்தித்துக்களிப்பு அதிகரிக்கச் சென்றனர். இடி யிடித்து வீழ்ந்ததால் உடலழிந்திறந்த அந்த நால்வரையும் இயமன் கொரேமாகத்தண்டித்துக் கட்டிக்கொண்டு உடனே இயமபுரத்திற் சேர்ந்தனன். எ - று. (௪௩௮)

நீடிய தென்பாற் றிக்கி னிரைத்திடு மிருபத் தெட்டுக்
கோடிவெந் நிரையத் திட்டுக் கொடிதுறுஞ் சிவத்து ரோகர்
பாடுறு நரகிற் கோர்பாற் பதகரிந் நால்வர் தம்மை
யோடுறு தலைகீ ழாக நிறுத்தின ருடற்று நின்றார்.

(இ - ள்.) பரந்த தென்றிசையிலுள்ள இயமபுரத்தில் வரிசைப்படவிருக்கும் இருபத்தெட்டுக்கோடி நரகங்களிலும் முறையே செலுத்தி, இறுதியாகக் கொடுமைதங்கிய சிவத்துரோகிகள் துன்பமநுபவிக்கும் நரகத்தின் ஒருபக்கலில் பாவிகளாகிய இவர்கள்நால்வரையும் தலைகீழாகத்தொங்கும்படி நிறுத்தினார்கள். அதனுல் வருந்திக்கொண்டிருக்கின்றார்கள். எ - று. (௪௩௯)

புலப்படு துவார மென்ப தொன்பதும் பொங்கிப் பொங்கி
யுலப்பறு கிருமி கிண்ட வுயிர்த்தில ராகி யோய்வா
ரலைத்தெழு கழுகு காகம் பருந்துவீழ்ந் தவர தாக்கை
யலைத்துறப் பிடுங்கி யுண்ண வருந்துய ருழப்ப ரின்னும்.

(இ - ள்.) கண்ணுக்குப்புலப்படும் துவாரங்களாகிய ஒன்பதினும் எண் ணிறந்த கிருமிகள் தொளைக்கும்படி சுவாசம்விட முடியாதவர்களாய்ச் சோர் வடைவார்கள். பறந்தோடுகின்ற கழுகுகளும் பருந்துகளும் காக்கைகளும், அவர் களுடலைச்சூழ்ந்துவரும்படி உடற்றசைகளைப்பிடுங்கித் தின்னுவதால் இன்னும் அதிகரித்த பெருந்துயரநுபவிக்கின்றார்கள். எ - று. (௪௪௦)

கழிந்திடு கற்பங் கோடி கோடிமேற் கழிந்த வின்னு
மொழிந்தில ரென்ன நந்தி யெடுத்தெடுத் துவகை கூர
மொழிந்தன னினைத்துங் கேட்ட முனிவரன் முழுதா னந்தம்
பொழிந்தபே ருவகை பொங்கக் கட்புனல் பொருமா நின்றான்.

(இ - ள்.) செல்லுகின்ற கற்பகாலங்கள் கோடி கோடி மேம்பட்டுச் சென்றன. இதுகாறும் அப்பாதகர் நால்வரும் நரகத்தினின்றும் நீங்கவில்லை யென்று திருநந்திதேவர் விளக்கி மனக்களிப்பு மிகும்படி திருவாய்மலர்ந்தருளி னர். இவற்றையெல்லாங் கேட்டருளிய சிவயோகியார் மிகுந்த [illegible] ஆநந்தத்தோடு கூடிய சந்தோஷமதிகரிக்க ஆநந்தபாஷ்பந் ததும்பியிருந்தனர்.

சொற்றனை காதை முற்று முணர்ந்தனி ரினமுஞ் சொல்வா
னுற்றதோர் காதை யுண்டு கேட்டியா லொலிநீ ருந்தி
முற்றிய கொடிக்கோட் டிஞ்சிக் கலிங்கநாட் டகத்து முந்நீர்
பெற்றவெண் கலைவெண் டிங்கட் பெருங்குடைத் தனிக்கோல் வேந்தன்.

(இ - ள்.) நாம் சொல்லிய சரிதமுழுவதையும் உணர்ந்தீர். இன்னுஞ் சொல்லவேண்டியதாயுள்ள சரிதையொன்றுளது அதனையுங் கேட்பீராக ஒலிக்கின்ற ஆகாயகங்கையைத்தொடுகின்ற கொடிகள் நாட்டிய கொங்கைகளையுடைய மதில்சூழ்ந்த கலிங்க நாட்டிலே, பாற்கடலிலுதித்த வெள்ளிய கலைகளோடு கூடிய சந்திரனையொத்த வெண்கொற்றகுடையையும் ஒப்பற்ற செங்கோலையுமுடைய மன்னவனிருந்தான். எ - று. (௩௰)

இருதடம் புயத்து வைய மேந்துகா லிங்க னென்போ
னருமையி னறங்க ளாற்றி யருந்தவ முயன்று பெற்ற
வொருதனிக் குமரன் றன்போ லிராதனென் றுரைக்கப் பெற்றா
னொருகழ லரசர்க் கோம்பு முயிரெனப் பொலியா நின்றான்.

(இ - ள்.) பூரித்த தனது இரு தோள்களிலும் உலகத்தைத்தாங்குகின்ற காலிங்கனென்னும் அம்மன்னவன், அரிய தருமங்களைச்செய்து பெற்ற ஒப்பற்ற ஒரே பேறான புத்திரன் விராதனென்னும் பெயர்பெற்றிருந்தான். அப்புத்திரன் ஒன்றோடொன்று மோதுகின்ற வீரகண்டாமணிதரித்த அம்மன்னவனுக்குக் காப்பாற்றத்தக்க உயிர்போல விளங்கியிருந்தான். எ - று. (௩௰௧)

அந்தணீ ருலகங் காக்கு மரசர்கோ னமைச்சி னின்ற
மந்திரி யரிதிற் பெற்ற மதலையாங் கவன்ற னுமரு
சந்திர னவன்றன் வாயிற் புரகிதன் றவத்தி னீன்ற
சுந்தரத் தடந்தோட் பால னருமறைச் சுனந்த னென்போன்.

(இ - ள்.) வேதியர்களே! உலகினைப்பாதுகாக்கும் அம்மன்னவனுக்கு அமைச்சுரிமைபூண்ட மந்திரி அரிதாகப்பெற்ற புதல்வனொருவனுண்டு; அப்புதல்வன் பெயர் சந்திரன். அம்மன்னவனுடைய அரண்மனைப்புரோகிதன் தவத்தினாலீன்ற அழகிய விசாலம்பொருந்திய தோள்களையுடைய குமாரனொருவனுளன். அவன்பெயர் அரிய வேதங்களுணர்ந்த சுனந்தனெனப்படுவான். எ - று. (௩௰௨)

மாமுடி யரசர் கோமான் வாயில்காப் புரியோ னுள்ள
மேமுறப் பயந்து பெற்ற சுகந்தனுங் கிளையர் நால்வர்
காமரு சிறப்பின் மிக்கார் கருப்புவிற் காம னொப்பார்
பூமரு நதிக ளாடிப் புகுந்துறக் கருத்தி னோர்ந்தார்.

(இ - ள்.) சிறந்த கிரீடமணிந்த மன்னர் மன்னவனுடைய [illegible] அரண்மனைக்காவல்பூண்டுள்ளவன் தன் மனக்களிப்பின் [illegible] பெற்ற புதல்வன் சுகந்தனென்பவன் [illegible] இக்கால்வரும் அழகின் [illegible] சிறந்தவர்களாய்க் கருப்புவில்லேந்திய மன்மதனையொத்தவர்கள். [illegible] தெய்வீக நதிகளில் ஸ்நானஞ்செய்து வரவேண்டுமென்று மனதிலெண்ணினார்கள் (௩௰௩)

[illegible] கருத்தி னெண்ணி யருந்தவத் தீறு பெற்ற
[illegible] குறுகி யன்னோர் தனித்தனி வினவிக் கேட்ப

மாதுங் ருழப்ப தாஞர் மத்லேயர்க் குறித்து நோக்கிப்
போதிரென் றுரைப்ப மாழ்கி யொருவழி பொருந்தி ருபால.

(இ - ள்.) இப்படி யவர்கள் மனதிற்கருதி, அருந்தவத்தின் முடிவாற் பெற்ற தங்கள் பிதாக்களேயடைந்து, அந்நால்வரும் தனித்தனி விடைகேட்க, அவர்கள் பெருந்துயரெய்தினவர்களாய் அப்புதல்வர்களின் கருத்தை யோசித்துப்பார்த்து மனம்வருந்தி, போய்வருகவென்று ஒருவாறு சம்மதித்தனர்.

பொதிகிழி நிதிய மன்ஞே ரவரவர் போதற் கீந்தார்
மதியுரைத் தரிதிற் புல்லி மைந்தரை வாழ்த்தி விட்டா
ரதிர்கழ லரசர் கோமான் மாநக ரகன்ருர் முன்னே
விதியிருந் துடற்றச் சென்ருர் தமக்கென விளேவ தோரார்.

(இ - ள்.) திரவிய நிறைந்த நிதிப்பொதியைத் தங்கள் புதல்வர்களுக் தீர்த்த யாத்திரை செல்லக்கொடுத்துப் புத்திகூறி யரிதாகத்தழுவிக்கொண் டாசீர்வதித்து விடைதநதனுப்பிஞர்கள். சத்திக்கின்ற வீரக்கழலணிந்த அம் மன்னர் மன்னவனது நகரத்தைவிலகித் தங்களுக்கு நிகழ்தற்குரியனவற்றை யுணராதவர்களா யூழ்விணையானது தங்கி வருத்தும்படி போஞர்கள். எ - று. ()

இனையவர் நால்வ ரேகிச் சுரேச்சுரத் திறுத்தா ரந்தப்
புனைசடை மகுட கோடிப் புனிதனைத் தொழுது பின்ன
ரனையமா நகரத் தோர்பா லயின்றன ரதுகா லத்துத்
துனைபரி யிரவி சென்ருன் ருெடுகடற் குடபாற் றிக்கின்.

(இ - ள்.) இவர்களுல்வரும் நடந்து சுரேச்சுவரம் என்னும் தலத்தை யடைந்தார்கள். அங்கெழுந்தருளிய அழகிய சடைமுடியையுடைய கோடீஸ் வரரை வணங்கி யதன்பின் அந்தச்சிறந்த நகரத்திலோரிடத்திலுணவு கொண் டார்கள். அப்போது வேகத்தோடுகூடிய எழுபுரவிபூண்ட [தேரையுடைய] சூரியன் ஆழமாகிய மேற்றிசைக் கடலில் அமிழ்ந்தனன். எ - று. (௬௯௮)

கள்வராற் பயமுண் டென்னுங் கருத்தினர் குமர னந்த
வெள்விடை யவன்பொற் கோயிற் றுயின்றனன் விசால வெற்பு
வள்ளியோர் மரபிற் சைவ தேசிகன் மடததி ஞேர்பா
லுள்புகுந் துறக்க முற்ரு னமைச்சர்கோ னுவந்த பாலன்.

(இ - ள்.) இங்கே திருடர் பயமுண்டாமென்னுங் கருத்திஞல் அரசிளங் குமரஞன விராதன் வெள்ளிய இடபவாகனமுடைய சிவபெருமானுடைய ஆலயத்திலே நித்திரைசெய்தான். மந்திரித்தலைவனீன்ற புதல்வஞகிய சந்திரன் வெள்ளிமலேயென்னுந் திருக்கைலாயத்தில் வீற்றிருக்கும் வள்ளலாகிய சிவபெருமான் மரபில் சிவாச்சாரியருடைய மடத்திற்புகுந்து ஓர்புறந் துயின் ருன். எ - று. (௬௯௯)

புரகிதன் புதல்வ னந்த வனம்படு புரையுட் புக்கா
னிரவுகண் டுயிலப் பெற்ருன் மற்றையோ னெந்தை முன்னர்
விரைபுனற் கரையி ஞேர்பாற் படிவிழி புகிழ்த்தான் வெய்யோ
னிரைதிரைக் கடற்க ணூற்ருன் விடிநதது திமிர்ந்த கங்குல்.

(இ - ள்.) புரோகிதன் புதல்வஞன சுனந்தன் நந்தவனமிருக்குமிடஞ் சேர்ந்தன்றிரவு நித்திரை செய்தான், மற்றொருவஞகிய வாயிற் காவலன் மகன்

சுகந்தன் சிவபெருமான் திருமுன்னுள்ள மணங்கமழும் நீர் நிரம்பிய குளக்க ரையினொருபுறத்தின் படியின்மேனித்திரை செய்தான். சூரியன் சத்திக்கின்ற அலைகளையுடைய கீழ்க்கடலினுதித்தான். மிகுந்த இரவு நீங்கிற்று. எ - று.

விடியலி னெழுந்து நால்வ ரொருநெறி விரவி யந்தக்
கடிநக ரொழியச் சென்றார் காவதங் கடந்த பின்னர்
வடிமறை பயின்ற தெய்வக் கவுதமர் வரவு நோக்கிப்
படிமுடி தடவ வீழ்ந்து பணிந்தனர் பாலர் நால்வர்.

(இ - ள்.) விடியற்காலத்திலந்நால்வருமெழுந்தோரிடத்திற்சேர்ந்து மேன் மைதங்கிய அந்நகரத்திற்குச்சென்றார்கள். அப்படியவர்கள் ஒரு காததூரம் போன பிறகு தெளிந்த வேதங்களையுணர்ந்த தெய்வீகந்தங்கிய கௌதமமுனிவ ருடைய வருகையைக்கண்டு அப்புதல்வர் நால்வரும் தமகள் சிரங்கள் நிலமிசைப் படிய சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார்கள். எ - று. (௪௭௧)

மாதவத் தலைவ னந்த மைந்தரை வரவு நோக்கிப்
போதுவ தியாங்க ணென்று ஞங்கவர் தொழுது போற்றிக்
கோதறு குணத்தோய் தெய்வக குளிர்புன னதிக ளாடித்
தீதவித் திடுத லோர்ந்தே மென்றனர் சிறுவர் யாரும்.

(இ - ள்.) பெருந்தபோதனராகிய கௌதமமுனிவர் அப்புதல்வர்களின் வருகையைக்கண்டு நீங்களெங்குப்போகின்றீர்களென்று வினவினார். அப்புதல் வர்களெல்லாரும் அம்முனிவரை மறுபடியும் வணங்கித் துதிசெய்து குற்றமற்ற குணசீலரே! தெய்வீகந்தங்கிய குளிர்ந்த நீர் நிரம்பிய நதிகளில் ஸ்நானஞ் செய்து எங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளுதல் கருதினோமென்றார்கள்.

அருந்தவத் தலைவ னுள்ளத் தணிமணி முறுவல் பூத்தான்
வருந்தினி ரிவரை நோககி மைந்தர்காள் வருதி ரென்று
விருங்கதி ரின்று போமு னும்முயி ரிழப்பீ ரெங்ஙன்
பொருந்திரை நதிக ளாடிப் புகுவது புகறு மென்றான்.

(இ - ள்.) அரிய தவசிரேஷ்டராகிய கௌதமமுனிவர் மனத்திற் பொரு ந்திய அழகிய புன்னகை பூத்துவருந்தியவராய் இவர்களைநோக்கிப் பிள்ளைகளே! வாருங்களென்று, இன்று சூரியாஸ்தமத்திற்கு முன்னரே உங்களுயிரையிழப் பீர்களாதலின் நீங்கள் எப்படி அலைகள் மோதுகின்ற தீர்த்த ஸ்நானஞ்செய்து திரும்புவது; சொல்வீர்களாகவென்றனர். எ - று. (௪௭௩)

எளியமின் றிறக்க வெய்துங் காரண மென்னை யென்ன
விளிபடு நென்னற் கங்குல் விழிமுகிழ்த் துறங்குங் காலை
யொளியரா வணிந்த வேணி யமலனுக் காகா செய்தீர்
வெளிபட வுரைக்கு மன்ன கேட்கென விளம்ப லுற்றான்.

(இ - ள்.) எளியேங்களாகிய அடியேங்கள் இன்று இறக்கும்படிசம்பவிக் கும் நிமித்தம் யாது? என்று வினவ, இன்று விடிந்த நேற்றைய இரவில் நித் திரை செய்யுங்காலத்தில் ஒளிதலையுடைய சர்ப்பாபரணமணிந்த சடையையு டைய புனிதராகிய சிவபெருமானுக்கு ஏலாதனவாகிய அபசாரங்களைப் புரிந்தீ ர்கள். அவற்றைவெளிப்படையாகச் சொல்லுவோம் கேட்பீர்களாகவென்றுமு னிவர்சொல்லுகின்றார். எ - று. (௪௭௪)

ஒருவனு லயத்துட் டுந்த மயிர்கழிந் தருந்த லானு
மொருவனக் குரவ னில்லிற் றம்பலிட் டுமிழ்ந்த லானு
மொருவனுண் மலர்ப்பூங் காவி னுமிழ்தலுந் திருநீர்க் குட்டத்
தொருவன்மூக் கொழுக்குச் சிந்தி யிடுதலு முடையீர் பாவம்,

(இ - ள்.) உங்களிலொருவனாகிய அரசகுமாரன் சிவாலயத்தின் றூயில்புரிய றலைமயிர் அக்கேவிழுந்து சிந்துதலாலும், மற்றொருவனாகிய மந்திரிகுமாரன் அச்சைவதேசிகன் வீட்டிற்றுயின்று தாம்பூலந்தரித்து அங்குமிழ்ந்ததாலும், மற்றப் புரோகித புத்திரன் புதியமலர்களையுடைய பூஞ்சோலையிற்றுயின்று வச்சிறுமிழ்ந்ததாலும், மற்றொருவன் வாயிற் காவலன் மகன்பழகிய தீர்த்தக்கரையிற்றுயின்று மூக்குச்சிந்தியதாலும் சிவத்துரோகமாகிய பாவஞ்செய்தவர்களானீர்கள். எ - று. (௪௭௦)

என்றவ னுரைப்பக் கேளா நால்வரு மிகந்த வுள்ளத்
தொன்றுமுற் றுணரா ராகிப் போயினா ரொருங்கு சென்றார்
பொன்றிணி கழற்கான் மைந்தன் றலையிடி பொருந்திப் பட்டா
னன்றுமற் றொருவன் கண்ட மடைத்துயி ரிறந்தா னன்றே.

(இ - ள்) என்று அக்கௌதமமுனிவர் சொல்லக்கேட்டு, அந்நால்வர்களும் தமது வலியமனத்திலொருசிறிதுமுற்றக் கருதாதவர்களாகி நடந்து ஒருசேரப்போனார்கள். பொன்மயமான வீரக்கழலணிந்தகாலையுடைய அரசகுமாரன்றலையில் இடி விழுந்திறந்தான். அப்பொழுதே மற்றொருவன் தொண்டையடைத்துயிர் நீங்கினான். எ - று. (௪௭௧)

மற்றையோன் றனது நாசி வழித்தொளை குருதி கால
விற்றன னொருவன் றன்னுப் புறப்பட விறந்தா னின்னோ
ரற்றைநா ளிறப்பு நோக்கி யடுதிறன் மறலி தூதர்
பற்றினர் பிடித்துக் கொண்டா ரிறுக்கினர் பாசம் வீக்கி.

(இ - ள்) மற்றொருவன் தன் நாசிகாந்தரத்தின் வழியே யுதிரமொழுக இறந்தான். மற்றொருவன தனது நாவானது வெளிப்பட்டுத்தொங்கமரித்தான். இவர்கள் அன்றையதினம் இறந்ததலைக்கண்டு கொல்லும்வல்லபமுடைய இயமதூதர்கள் அவர்களைப்பற்றிப் பிடித்துக்கொண்டு தங்கள் பாசக்கயிற்றினால் கட்டியிறுக்கினார்கள். எ - று. (௪௭௨)

அரசிளங் குமரற் கீய முருக்கி மோரந் தாசி யப்பா
லிரவுசெப் புருக்க மைச்சன் பாலகன் வாயில் விட்டுப்
புரகிதன் மகனை நாக்கு வாங்கிகின் றரிந்து போக்கி
மரபின்மற் றவற்கு நாசி காச்சிய சலாகை மாட்டி.

(இ - ள்) [illegible]யே அரசிளங்குமாரனுக்கு ஈயத்தையுருக்கி அவனை மூக்கரச்செய்து அவனுக்கிவிலப்பியும், செம்பினையுருக்கி மந்திரிகுமாரன் வாயிலொழுக்கியும், புரோகிதன் மகனை நாக்கைப்பிடித்திழுத்து அறுத்தெரிந்தும், மற்றவனை காச்சிய இருப்புச் சலாகையை அவன் நாசியில் மாட்டியும். எ

விழுத்துரு விரையத் தூந்தி வீழ்த்தினர் வெங்கட் டேத்
ரொழுக்கமி லவனை நால்வர்க் குய்யுநா ளொருநா [illegible]
விழுந்தவத் தலைவ வென்று னாதியவ் விரத நோன்[illegible]
பழுத்தமெய்த் தலைவன் முத்தன் செய்கையைப் பரி[illegible]

(இ - ள்.) அஞ்சாமையையுடைய இயமதூதர்கள், வீழ்ந்து நசிய நரகத்தினிடையே வீழச்செய்தார்கள். நல்லொழுக்கமில்லாத அந்நால்வரும் உய்வதற்கு ஏற்ற காலம் ஒருகாலம் உளதாகுமோ? சிறப்புற்ற தவயோகியரே. என்றனர். நந்திதேவர் அவ்விரதத்தின் மேம்பாடிருந்த உண்மையிலிருக்கும் சிவன் முத்தருமானருடைய செயலை அன்போடு உணர்ந்தார். எ - று. (௬௧)

நந்தியீ துரைப்பக் கேட்ட யோகியு நளின பீடத்
தந்தண னவனுங் குல்லை யலங்கலந் தோளி னானும்
வெந்தசிந் தையரா யங்கம் விதிர்விதிர்த் தச்சஞ் சார்ந்தார்
சிந்தைமுற் றுணர்ந்தே மற்ற செப்பலை செல்வ வென்றார்.

(இ - ள்.) திருநந்திதேவர் இவற்றைத் திருவாய்மலர்ந்தருளக்கேட்ட சிவயோகியாரும், தாமரைமலர்ப்பீடத்திலெழுந்தருளிய பிரமதேவனும், துளசிமலர்மாலைதரித்த தோளையுடைய விஷ்ணுமூர்த்தியும், கொதித்தமனமுடையவர்களாய், உடல் நடுநடுங்கிப் பயமடைந்தவர்களாய், நந்திபகவானே! தாங்கள் திருவாய் மலர்ந்தருளியவற்றை மனத்தின் கண்முற்றத் தெளிந்தோம். மற்றையவிருத்தாந்தங்களைச் சாற்றவேண்டாமென்று விண்ணப்பித்தார்கள். எ - று.

எழுந்தன ரனைய நால்வ ரீங்கிவ ரியற்று பாவம்
மொழிந்துறக் கேட்ட னம்பான் முற்றுறு முற்று ணமை
கொழுந்திளந் திங்க ளேந்து கொடிச்சடைப் பரனை யெய்தித்
தொழுந்திற னுணர்ந்தார் செல்லு முன்னரே தொடர்ந்த துள்ளம்.

(இ - ள்.) அவர்கள் நால்வரும் உடனே யெழுந்தார்கள். இவர்களெல்லாம் செய்த பாவங்களைச்சொல்லவும் கேட்கவுமிருந்த நம்மிடத்தில் அப்பாவங்கள் முற்றுமெய்தும். அது எய்தாதவகையாக, இளமைதங்கிய பிறைச் சந்திரனைத் தாங்கிய படர்ந்த சடையையுடைய சிவபெருமான்பாற் சேர்ந்து பணியுந் திறத்தையுணர்ந்தார்கள். அவர்கள் அங்ஙனம் செல்லுமுன்னரே அவர்கள்மனமானது முற்படப் படர்ந்துசென்றது. எ - று. (௬௨)

எம்பிரா னியற்கை முற்று மெடுத்தெடுத் திசைத்த தேவர்
தம்பிராற் குரிய னோடும் புகுந்தனர் தளைப்பூங் கொன்றை
வம்புலாஞ் சடிலி பொற்றாள் வணங்கியோர் மருங்கு நின்றார் [யாள்
கொம்பொரு புடையோன் பார்க்குந் தொறுந்தொறுங் கூயபுன் கை

(இ - ள்.) எமது சிவபெருமானுடைய தன்மை முழுவதையுமெடுத்தெடுத்துக் கூறிய, தேவர்தலைவனாகிய சிவபெருமானுக்குரிய திருநந்திதேவரோடும், சந்நிதானத்தினுட்பிரவேசித்து முறுக்கவிழ்ந்த அழகிய கொன்றைமலரின்வாசனை வீசுகின்றசடையையுடைய சிவபெருமானது பொன்போலும் பாதங்களிற் பணிந்து உமாதேவியை ஒருபக்கத்திலுடைய சிவபெருமான் திருக்கடைக்கண் சாத்தும்போது தெய்வாங்குலித்தன்மையையுடையராய் ஒருபக்கத்தில் நின்றார்கள்.

தாழ்சடைப் பரம னாதன் சதானந்தன் வதன நோக்கி
யூழ்முறைக் கரைத முற்று முளக்குரைத் தனனோ வென்ன
வாழிநீ யுரைப்பக் கேட்குந் தன்மையின் வருத்தா னன்றோ
வூழினைத் தொன்மை யெல்லா மென்றடி தொழுது நின்றான்

(இ - ள்.) தொங்குகின்ற சடையையுடைய சிவபெருமான் சுதானந்தருடைய முகத்தைப்பார்த்து முற்காலத்தினடந்த விருத்தாந்தமுழுவதையும் நமது நந்தியுனக்கு நன்குகூறினனோ? எனவினவவுந் தேவரீர் சொல்லும்படிகட்டளையிட்டபடியே அவர்கள் தேடியவண்டைய பாவமுழுவதையும் விளக்கிக் கூறினர் என்று கூறிப்பாதங்களைப் பணிந்து நின்றார். எ - று. (௩௮௧)

அத்தலை யவனை நோக்கி யானுவப் பருளா நின்றான்
முத்தனை முறையிற் றாழ்ந்து மூவரும் புறத்துப் போனார்
கைத்தலைப் பிரம்பு தாங்கி நந்திவெங் கணத்தர் சூழ
சித்திரச் சிகர வாயி லிருந்தனன் சிறப்பு மிக்கான்.

(இ - ள்.) அக்காலத்தில் சிவபெருமான் அச்சுதானந்த யோகியைப்பார்த்துச் சந்தோஷித்தருள் புரிந்தனர். முத்தனாகிய பரமேசுவரனை யம்மூவருமுறைப்படி பணிந்து வெளியேவந்தார்கள். சிறப்பின் மிகுந்தவராகிய திருநந்திதேவர் தமது திருக்கரத்தில் பிரம்பினைத்தாங்கியவராகி வலிதங்கிய கணங்கள் தம்மைப்புடைசூழச் சித்திரிக்கப்பட்டுள்ள முதற்கோபுரவாயிலில் வீற்றிருந்தனர்.

இன்னவை நந்தி யஃதோர்ச் சிசைத்தவை யெடுத்துக் காட்டிச்
சொன்னவச் சூதற் போற்றி யருந்தவர் துளக்கங் கொண்டா
ரென்னையா ளுடையோற் காகா வியற்றுரு தியங்கு காலம்
பின்னுறக் கழிப்ப தம்மா வரிதெனப் பேதுற் றாரால்.

(இ - ள்.) திருநந்திதேவர் அவர்களுக்குச் சொல்லியனவாகிய இச்சரிதைகளையெடுத்துக் காட்டிச்சொல்லிய சூதமுனிவரை யருந்தவம்புரிந்த நைமிசாரணிய முனிவர்கள் துதித்துச் சந்தோஷித்தார்கள். என்னையடிமையாகவுடைய சிவபெருமானுக்கு அபராதனவற்றைச் செய்யப்பெறுமல் பின்னேயுண்டாகுங்காலத்தைக் கடத்தல் ஆ! ஆ! அருமையென்று ஆச்சரியமடைந்தார்கள். எ - று.

ஐயநீ யுரைத்த முற்று முணர்ந்தன மறியா தின்னோர்க்
கெய்திய பாவந் தன்னு லிப்பெரு நிரைய முற்று
ருய்திற மொழிந்து நெஞ்ச முணர்ந்துணை ரமைய யானுஞ்
செய்துறு சிவத்து ரோகத் தியன்றவா செப்பு கென்றார்.

(இ - ள்.) ஐயனே! தேவரீர் கூறியவற்றை முற்றுமுணர்ந்தோம் அறிவின்மையால் இவர்களுக்கு உண்டாகிய பாவகாரணத்தால் இவர்கள் இப்பெரிய நரகங்களையடைந்தார்கள். உச்சிவிக்கும் நிலைமை தவறிமனத்தாலுணர்ந்து முனைரமறுசெய்துள்ள சிவத்துரோகத்தாணிகழ்ந்தனவற்றைத் திருவாய்மலர்ந்தருள்கவென்றுபிரார்த்தித்தார்கள். எ - று. (௩௮௪)

நல்லவர் கேட்டி ரென்று நகைபுரி முகத்த னாகி
யெல்லவாங் குடில வேணிச் சூதனுற் றிசைபப தானுன்
றொல்லைநாட் சைவ நீதிச் சோமசன் மாவென் றுள்ளோ
னெல்லையா கமங்க டோய்ந்த சிவசன்மா வென்று ளோனும்.

(இ - ள்.) நைமிசாரணிய முனிவர்களே! நல்லவகையாகக் கேட்டீர்களென்று புன்னகை புரியுமுகத்தினராகி, சூரியாஸ்தமத்தில் உதயம் செய்வானும் போன்ற சடையையுடைய சூதமுனிவர் சொல்லுவாராயினர். பண்டைக்காலத்

[illegible]ல் சைவாசார்த்தையிகக் கொண்டசோமசன்மா வென்பவனும் சிவாகமங்களின் எல்லையைக்கடந்த சிவசன்மா என்பவனும் (ஆகிய இருவரும்). எ - று.

வாகநதி புனைந்த வேணி வானவற் கடிமை பூண்டோர்ப்
பரவிய வுளத்தா னீறு கண்டிகை பரமென் றோர்ந்து
தாவருஞ் செய்கை பெற்றோ ரருச்சனை தவறார் தெய்வக்
குரவரிற் பிழையார் சைவக் கொழுந்தெழ வளர்த்து நின்றார்.

(இ - ள்.) சிறந்த கங்காநதியைத் தரித்தசடையை யுடைய சிவபெருமானுக்கு அடிமை பூண்டவர்களாய் அடிமைத்திறஞ் செய்யும் மனத்தோடு திருவெண்ணீற்றையு முருத்திராக்க மாலிகையையுமே பரமென் றுணர்ந்து மேம்பட்ட கிருத்தியங்களைச் செய்பவர்கள் சிவார்ச்சனையில் நியதிதவறாதவர்கள் தெய்வீகத்தன்மைய ஆசாரியருக்குக் குற்றஞ்செய்யாதவர்கள் சைவசமயக்கொழுந்தைவிட்டோங்கும்படி விருத்திசெய்துகொண்டுள்ளவர்கள். (௪௮)

இயங்குநா ளொருநா ளெந்தை யாலய மிறைஞ்ச வெய்தி
முயங்குபே ரன்பி னோடும் வலன்றிரி முறைமை முற்றிப்
புயங்கவே ணியனை முன்னர்ப் பணிந்தெழுந் தகத்துப் புக்கார்
வியந்தெழு விம்ம லோடு மெய்ப்புள கெழுந்து நின்றார்.

(இ - ள்.) இப்படிநடக்குநாளில் ஒருநாள் எமது தந்தையாகிய சிவபெருமான் திருக்கோயிலை வணங்கச்சென்று பேரன்போடும் பிரதக்ஷணமுதலியவற்றை முறைப்படி முடித்துச் சர்ப்பாபரணராகிய சிவபெருமானைத் திருச்சந்நிதானத்திற்சாஷ்டாங்கமாகப்பணிந்து எழுந்து தமது வீட்டிற்குச் சென்றார்கள். சந்தோஷத்தினாற்றோன்றிய விம்மிதத்தாலுடன் முழுவது மயிர்க்கூச்செறிந்து நின்றார்கள். எ - று. (௪௯)

ஏற்றுடை யவனைப் போற்று மிருவரி லொருவன் மெய்யிற்
காற்றுறத் தீப மொன்று சிதைந்தது கண்டு நின்று
மாற்றமொன் றுரையா துற்றான் மற்றவ னினையா மீண்டான்
கூற்றிவை யுணர்ந்து சீற்றக் கொடுமையின் மகுடஞ் சாய்த்தான்.

(இ - ள்.) இடபவாகனனைப்பணியு மிவ்விருவரில் ஒருவனுடைய தேகவசைவால் உண்டாய காற்றால் ஒருவிளக்கவிந்தது கண்டும் நின்றுவாளா சென்றான். மற்றவன் ஒன்றுஞ்சொல்லாதும் நினையாதும் திரும்பினான். இவற்றையுணர்ந்த இயமன் தனக்குண்டாய கோபத்தின் மிகுதியால் தலைசாய்த்தான். எ - று.

நாள்பல கழிந்த பின்வ ரிறந்தன ணமன்பா லாதர்
மூளிருஞ் சினத்த ராகிப் பிடித்தனர் முழுங்கை முட்ட
நீளிருங் கயிற்றிற் பற்றி யிறுக்கினர் நிறுத்த லில்லா
வாநெறி யெயிற்றுப் பேழ்வாய் மறலிபாற் கொணர்ந்து விட்டார்.

(இ - ள்.) பலநாள் கழிந்த பின்னர் இவர்களிறக்க இயமனுடைய தூதவர்கள் அதிகமாகின்ற கோபத்தையுடையவர்களாய் இவர்களைப்பற்றி இரண்டுமுழங்கைகளும் நெருக்கும்படியாகப் பெரிதும் நீண்டுள்ள கயிற்றாற்கட்டி இடையில் நிறுத்தாமல், ஒளிவீசும்பல்லும் பிளந்தவாயுமுடைய இயமனிடத்திற்கொண்டுவந்து விட்டார்கள். எ - று. (௫௰)

வெய்யவர் நிரயமெல்லாம் வீழ்ந்துறக் குளித்தார் பின்னர்
நெய்யுறு விளக்க மெய்யிற் காற்றினு னிறுத்திச் சென்றோன்
செயபதி பத்தைக் காணு தேகனு மனையன் செங்கண்
கையறு காத நான்கு வளர்ந்ததோர் கணத்தி னுள்ளே.

(இ - ள்.) இக்கொடியவரிருவரும் நரகமெல்லாம் வீழ்ந்து அநுபவித்தபிறகு (இவருள்) நெய்விளக்கைத் தேகவசையின் காற்றால் நிறுத்திப்போனவன் அந்த நல்ல தீபத்தைக்காணமற் சென்றபடியால் அவனுடைய சிவந்தகண்கள் ஒரு க்ஷணத்தில் குறைவில்லாமல் நான்குகாதம் வளர்ந்தன. எ - று. (௬௬௨)

நோக்கினின் றதனைச் சொல்லா மற்றையோ னெடியப் பட்ட
நாக்குமவ் வளவை யாக வளர்ந்தது நரியும் நாயு
மேக்குயர் பருந்துங் காக படலமுங் கழுகும் வீழ்ந்து
தேக்கெழு குருதி மாந்திப் பிடுங்கின தின்ன நின்றா.

(இ - ள்.) தீபமவிந்ததைப்பார்த்தும் ஒன்றுஞ் சொல்லாத மற்றவனுடைய நாக்கும், சீக்கிரமாய் அவ்விதமாய் நான்கு காதம் வளர்ந்தது. நரியும், நாயும் மேலேபறக்கிற பருந்தும், காககூட்டமும் கழுகும் கீழேயிறங்கி திருப்தியுண்டாக, இரத்தத்தைக்குடித்துப் பிடுங்கித்தின்னும் படியாகவும் நின்றார்கள். எ - று.

இற்றைநா ளளவுந் துன்ப முழக்குவ ரிவர்க ளீண்டு
கற்பமோர் கோடி மேலுங் கழிநதன கருப்புக் கோல
விற்படை யவனைச் செற்றோன் றன்னிலை விரும்பிப் போற்றும்
பொற்பினு னொருவ னெந்தை யாலயம் போற்றப் புக்கான்.

(இ - ள்.) இப்போது கோடிகற்பங்களுக்கு மேலுங்கழிந்தும் இவர்கள் துன்பத்தையநுபவித்துக்கொணடிருக்கின்றார்கள். இது நிற்க. கரும்பைவில்லாக்குவில்லாகிய ஆயுதமாக்கொண்ட மன்மதனை நீறாக்கிய வனாகிய சிவபெருமானுடைய தன்மையை விரும்பித்துதிக்கின்ற அழகிய ஒருவன் எமது சிவபெருமானது ஆலயத்துள் வணங்கும்படியாகச் சென்றான். எ - று. (௬௬௪)

நெய்யிடு தீப மிற்ற திரியொடும் பொலிய நேர்ந்து
கையினுற் றாண்ட வன்னோன் கரத்துகி ரகத்துட் டோய்ந்த
பெய்துளி நறுநெய் துஞ்சி யுறைந்தது பின்ன ரெய்தி
யொய்யெனப் பொலித்த வெஞ்சோ றளவறு முருகித் தோய

(இ - ள்.) நெய்யினாலெரிக்கப்பெற்ற தீபமொன்று துண்டுபட்டதிரியோடும் பிரகாசிப்பதைப்பார்த்துக் கையினாற்றூண்ட, விரலின்நகத்தினுள்சென்ற சிறிதுநெய்யானது தங்கிப்போய்,பிறகு அவன்சென்று சீக்கிரமாகப்பொலிவோடு கூடிய சாதத்தைக் கலந்தழும் உருகிச் சாதத்திற்றோய. எ - று. (௬௬௫)

றுகர்ந்தன னடிசி லந்த நெய்யொடு துகரா னின்று
னிகந்தன னுவி தென்பாற் றூதர்வந் திடித்துப் பொங்கித்
தகர்ந்திடச் சென்னி யோச்சிப் புடைத்தனர் தட்டைக் தாம்பாற்
னெகிழ்ந்தற திறுக்கிக் கொண்டு சென்றடு நிரையத் திட்டா

(இ - ள்.) சாப்பாட்டைச்சாப்பிட்டான். அந்த நெய்யுடன்சாப்பிட்ட குற்றத்தினால் அவன் உயிர்விட்டவுடன் இயமதூதர்வந்து இடித்துக்கோபங்கொண்டு,

தலைவிரதற ஓங்கியடித்து, பெரிய தமது கையிலுள்ள கயிற்றால் தளர்ச்சியுண்டாகாமல் இறுகக்கட்டிக்கொண்டு போய் நரகத்திலிட்டார்கள், எ - று. (௬௬)

பாதல நிரையத் தாழ்ந்து பற்பக லிறந்த பின்னர்ப்
பூதலப் பிறப்பி னுயிற் பிறந்தன னீது போக
வாதியம் பரமற் காளா யடித்தொழி லுண்டு பூண்டோ
ளோதரு மதிமா னென்னும் பெருங்குணச் சைவ யோகி.

(இ - ள்.) தாழ்ந்த நரகத்திற் கிடந்து பலநாள் கழிந்தபின் பூமியில் நாயாய்ப்பிறந்தனன். இதுநிற்க, முதல்வனாகிய சிவபெருமானுக்கு ஆளாய் அடிமைத்தொழில்கொண்டு சொல்லுதற்கரிய மதிமானென்னும் பெயரையுடையவனாய் நல்லகுணம்வாய்ந்தசைவயோகி (ஒருவன்). எ - று. (௬௭)

வைகலு மீசற் கான மஞ்சனம் பொலிய வேண்டு
நெய்யிலை யடைக்காய் மஞ்சட் காப்பிவை யிளநீ ரின்ன
பைப்பய விரப்பி னீட்டிப் பணிவிடைக் குரித்தாய் நிற்பான்
சைவநூ லுணர்ந்து நீதி சாதனத் தலைமை சார்வான்.

(இ - ள்.) ஒவ்வொருநாளும் பரமேசுவரனுடைய அபிஷேகம் பிரகாசிக்க வேண்டியதயிலம், பத்திரம், தாம்பூலம், மஞ்சட்காப்பு, இளநீர் முதலியன சிறிதுசிறிதாக யாசகஞ்செய்து சேர்த்து, சிவத்தொண்டுக்குரியவனாய் நின்று, சிவாகமங்களையுணர்ந்து சைவமார்க்கத்திற் சிறந்து நின்றான். எ - று. (௬௮)

இப்பரி சியற்று நாளி லெம்பிரா னபிடே கத்தி
னப்பொழி யிளநீர் பன்னா ளகவைதொட் டெடுத்துத் தின்பா
னொப்புறு காலம் போகநி யொழிந்தன னுவி தென்பாற்
செப்புருக் கனைய கண்ணார் வளைத்தன ரெழிக்குஞ் சொல்லார்.

(இ - ள்.) இவ்விதமாக நடத்திவருநாளில் எமது தலைவனுக்கு அபிஷேகமான ஜலங்கழிந்த இளநீரை அகப்பையால் போத்துப்பலநாள் தின்று வந்து அவனுடைய வாணாள் ஒழிய உயிர்விட்டான். இயமபுரத்திலுள்ள உருக்கிய செம்புபோன்ற கண்களும் போரொலியோடு கூடிய சொல்லையுமுடைய தூதர் சூழ்ந்துகொண்டார்கள். எ - று. (௬௯)

பற்றினர் பற்றி வீசு பாசத்தா லிருகை மாட்டிச்
சுற்றினர் தூரத்தித் தென்பாற் சுடுதழ னிரையத் திட்ட
ரிற்றிது கிடக்க மற்றோர் வணிகனீ ராறு பொற்றோட்
கொற்றவேள் குமரற் காட்பட் டுருகுறுங் கொள்கை பெற்றான்;

(இ - ள்.) பிடித்துக்கொண்டு வீசுகின்றகயிற்றால் இரண்டுகைகளையுங்கட்டிச் சுற்றித்தூரத்தி இயமபுரத்திலசுடுகின்ற அக்கினி நரகத்திட்டார்கள். இதுநிற்க, மற்றொருவர்த்தகன் பன்னிரண்டு அழகிய புஜங்களையுடைய வீரகுமாரனான முருகப்பெருமானுக்காட்பட்டு (மனம்) உருகுகின்ற பக்திமார்க்கத்தில் நின்றான்.

காலையி னெழுந்து செய்யுஞ் செய்வினை கழிந்த காலை
யாலயங் குறுகிச் சூழ்வந் தறமுகற் பணியா நிற்பான்
கோலவே லெந்தை கோயிற் பசிரிகைக் கொண்டு செல்லுரன்
[illegible] மடிசி லோடு நுகர்ந்தகை வளவில் பன்னாள்.

(இ - ள்.) உதயகாலத்தில் எழுந்து செய்கின்ற நித்தியகருமங்களை முடித்துபோது, திருக்கோயிலையடைந்து பிரதக்கணஞ்செய்து அறுமுகக்கடவுளைவணங்கிக்கொண்டிருப்பான். அவன் அழகிய வேற்படையேந்திய எமது தந்தையாகிய குமாரக்கடவுளின் ஆலயத்தில் முளைத்திருந்த பசுரைக்கீரையைப்பறித்துக்கொண்டுபோய், பாகுபாடமைந்த சாதத்தோடேபலகாலம் புசித்திருந்தான். எ-று

தன்னுயிர்க் களவை யெய்தி யிறந்துழித் தறுகட் டூதர்
பின்னுறு மணித்தாம் பிட்டுப் பின்னுறப் பிணித்துச் சென்றார்
தென்னிலை நிரையத் திட்டா ராதலாற் சிவத்து ரோக
மெங்ஙிலை யெய்து மோமற் றறிந்திலம் யாமு மின்னும்.

(இ - ள்.) தன்னுயிர்க்கு இறுதிக்காலமடைந்து அவனிறந்தபோது, கொரேர்களாகிய இயமதூதர்கள், பின்னலிட்டுள்ள மணிக்கயிற்றை வீசிப்பின் புறமாகக்கைகளைச்சேர்த்துக்கட்டிச்சென்று இயமபுரத்திலுள்ள நரகத்திலிட்டார்களானபடியால், சிவத்துரோகங்கள் எங்ஙனம் வந்தடையுமோ அவ்வகைகளை நாமும் இன்னுமறியோம். எ - று, (௩௦௨)

சினவிடை யவனாற் பெற்ற பாதகத் தீமை மற்றீ
தெனவெடுத் துரைப்பச சூதன் கேட்டரு ணிருடிச் செல்வர்
மனனடுக் குற்றா ரெங்ஙன் மாதவம் பயில்வ தென்றார்
புனையிழை பாகற் காகா புரிந்திடா திருந்து போற்றி.

(இ - ள்.) கோபந்தங்கிய இடபாரூடராகிய சிவபெருமானுக்காகாத பாதகங்களின் கொடுமைகள் இவையென்று சூதமுனிவர்கூறியருள, அவற்றைக்கேட்டுக்கொண்டிருந்த நைமிசாரணிய முனிவர்கள் அலங்காரமுள்ள ஆபரணமணிந்த உமாதேவி பாகராகிய சிவபெருமானுக்காகாத தீமைகளைச் செய்யாமலிருந்து அப்பெருமானைத் துதிசெய்து எப்படிப்பெருந்தவ முடிப்போமென்று மனநடுங்கினார்கள். எ - று. (௩௦௩)

அரிதரி தம்ம வென்ன வதிசய மடைந்தார் யாரும்
பரிவினஞ் செழுத்தை யோர்ந்திப் பாதகந் தொலையா நின்றார்
புரிசடைச் சூத னின்னோர் படுவன புகன்ற பாவ
மிரியவஞ்செழுத்தை நெஞ்சத் திருத்தியென் புருக நின்றான்.

(இ - ள்.) அரிது அரிது! அம்மா! என்று முனிவர்கள் யாவரும் அதிசயமுற்றார்கள், அன்போடு ஸ்ரீபஞ்சாக்கரத்தைத் தியானித்து இப்பாதகங்களுக்கேட்ட தோஷத்தைத்தீர்த்துக்கொண்டார்கள். முறுக்கியசடையையுடைய சூதமுனிவரும் இப்பாவிகள் நரகிலனுபவிக்கின்ற வேதனைகளையுரைத்த பாவம்விலகும்படி ஸ்ரீபஞ்சாக்கரத்தை மனதிற்றியானித்து எலும்பும் நெக்குவிட்டுருக வீற்றிருந்தனர். எ - று. (௩௦௪)

சிவத்துரோகிகளெய்தும் நரகவேதனைச் சருக்க

முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௧௨ - க்குத் திருவிருத்தம் ௩௦௪.

பதின்மூன்றாவது

சிவபூசை மான்மியச்சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தொன்மை யாவையு முணர்ந்தறி நிறைகுணத் துரிசறு பெருந்தவ முடையீர், வன்மை மாநர குழந்திடு பாதகர் மரபெடுத் துணர்த்தின மின்னுஞ், சின்மை யத்திரு வுருவென நின்றவச் சிவனடி யருச்சனை புரியுந், தன்மை யோதுது மொருவழி நிறுத்துதும் வரன்முறை கேட்டுறத் தகுமால்.

(இ - ள்.) பண்டைய சரிதங்களெல்லாவற்றையும் தெளிந்துணர்ந்துள்ள சற்குணநிறைவாற் குற்றமற்றபெருந்தவமுடைய முனிவர்களே! மிக்கொடுமைகள் தங்கியபாதகர்களின் முறைமையை விளக்கிச் சொன்னோம். இனி ஞானமயமாகிய திருவுருவமாக வீற்றிருந்தருளும் சிவபெருமான் திருவடிகளைப்பூசிக்கின்ற இயல்பினைச் சொல்லுவோம். ஆதலால், மனதை ஒருவழியில் நிறுத்திவரன்முறையாகக் கேட்கத்தக்கது. எ - று. (க)

அரன ருச்சனை புரிதிறங் கேட்டிறி னுடரா நெடுமுடி கிடந்த
வரவு நீணிலம் பஞ்சமா பாதக ராயினு முருத்திர வக்கம்
பரவு பூதியஞ் செழுத்திவை நினைந்துறு பாதக ராயினும் படிமேல்
விரவு றுஞ்சரா சரங்களாங் கவரடி வேண்டுறு மிருங்கதி வேண்டி.

(இ - ள்.) சிவார்ச்சனை செய்யுந்திறத்தைக் கேட்பீர்களாயின், அப்படிப் பூசிப்போர் வெற்றிதங்கிய ஆதிசேடனது நெடியபணாமுடியிற் சுமக்கப்பெற்ற வலிய நிலவுலகிலுள்ள பஞ்சமகாபாதகர்களானாலும், உருத்திராக்கமணி யாவருந் துதிக்குந்திருவெண்ணீறு ஸ்ரீபஞ்சாக்கரமென்னும் இவற்றை ஒருகாலத்திலேனுங் கருதாத பாதகர்களானாலும், இந்நிலவுலகிற் கலந்த [சராசரங்கள்] நிலையியற்பொருளும் இயங்கியற்பொருளும் பெரியமுத்தியெய்தக்கருதி அத்தகையினர் திருவடிகளையே பிரார்த்திக்கும். எ - று. (உ)

முற்றொ டுங்கிய காலமா பிரளய முற்றுற வெந்தையெம் பெருமா, னிற்று றுவுயிர்த் தொகையெலாந் தன்னுழைக் கரந்தன னற்றைநாளிரவிற், கற்றை வார்குழற் சத்தியொ டருநடத் தாண்டவங் கருணையிற் புரியு, முற்ற கங்குலி றெம்பிரா னிறபபுறு ஞானசத் திவ்யப்புரிந்துதவும்.

(இ - ள்.) முடிவடைந்த கற்பகாலத்தின் மகாப்பிரளயம் முடிய, எமது தந்தையாகிய சிவபெருமான் அளவிறந்த ஆன்மகோடிகளை யெல்லாம் தம்பாலொடுக்கிக்கொண்டு அவ்விரவில் தெரிந்தியாவுங்கெடிய கூந்தலையுடைய தமதயின் ஞானசத்தியாரோடு திருவருளாலுரிய ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுவர். அவ்விரவு கழிந்தவுடனே எமது பெருமான் அழிவற்ற ஞானசத்தியை விருப்பத்தோடு தந்தருளுவர். எ - று. (ங)

வாம மேமுதற் சைவமீ றட்படு சமயங்க ளாறையும் வகுத்துக், காம ரண்டமெண் ணிறந்தன புரிந்துமும் முதன்மையா யாரையுங் காட்டித், தோமின் முத்தொழி லவர்க்களித் துருத்திர கணங்களைத் தெரீருத்துவா னவரை, மாமு னிப்பெருந் தலைவரை மக்களை மரங்களை மலைகளை வகுத்து.

(இ - ள்.) அப்போது வாமமுதலாகச் சைவமீறாகவுள்ள அறுசமயங்களையும் சிருட்டித்து அழகிய அண்டகோடிகளை யெண்ணிறந்தனவாகவுண்டுசெய்து திரிமூர்த்திகளையும் படைத்து அத்திரிமூர்த்திகளுக்கும் (சிருட்டி, திதி, சங்கார மென்னு) முத்தொழில்களையுந் தந்துருத்திரகணங்களையுஞ்சேர்த்து, தேவர்களையும் பெருந்தலைவர்களாகிய சிறந்த முனிவர்களையு மனிதர்களையும் விருக்ஷங்களையும் மலைகளையும் தோற்றுவித்து. எ - று. (ச)

ஆறெ டைந்தெனு முருத்திர ருருத்திர கணங்கள்பூ தங்கண்மற் றசுரர் மாறில் பல்லுயிரத் தொகுதிக ளாங்கவை வழங்குறு புவனங்கள் யாவு மூறு சிந்தையி னினைத்துள வாக்கிமற் றுள்ளவை யாவையு மொருங்கவ் வாறு சத்தியுண் டாக்குற வருத்தியாங் கவையெலாம் வந்துழி மகிழும்.

(இ - ள்.) ஏகாதசவுருத்திரர்களையும் உருத்திரகணங்களையும் பூதங்களையும் ஏனையவசுரர்களையும் மாறுபடுதலில்லாத பலஜீவராசிகளையும் அவைவசித்தற்குரிய எல்லாப்புவனகோடிகளையும், தமது கருணைமிகுந்த திருவுள்ளத்தினினைத்தமாத்திரையினாலுண்டாக்கி மற்றுமுள்ளவனவற்றை யெல்லாமொன்றாக அவ்வகையே தமது சத்தியுண்டாகும்படி வருவித்து அவையாவுந் தோன்றியவுடனே திருவுள்ளம் மகிழ்வார். எ - று. (ரு)

பின்ன ராளளிதழ்ப் பசுந்துழா யலங்கலந் தேவனைப் பிரமனைச் சுரரை, மன்னு மாமுனித் தலைவரை யாகம புராணசாத் திரமரு மறைநூல், பன்னி யோதுவித் தரிமுதற் றேவரைப் பார்த்தெமைப் பத்தியி னிரங்கி, நன்ன லந்தரு மருச்சனை புரிகுதி ரென்றனன் பரகதி நாதன்.

(இ - ள்.) அதன் பிறகு ஒளிதங்கிய விதழ்களையுடைய பசியதுளவமாலையையணிந்த அழகிய திருமாலையும் பிரமனையுமேனைத் தேவர்களையும் நிலைபெற்றசிறந்த முனிசிரேஷ்டர்களையும், சிவாகமங்கள் புராணங்கள் சாத்திரங்கள் அரியவேதநூல்கள் என்னுமிவற்றையுபதேசித்து ஓதும்படிசெய்வித்து, திருமாலாதிய தேவர்களை நோக்கி, முத்திதரும் தலைவனாகிய சிவபெருமான் நன்மையைவிளைவிக்குமிம்மைப் பத்தியோடுமனமுருகி நம்மைப் பூசிக்கக்கடவீர்களென்று திருவாய்மலர்ந்தருளினர். எ - று. (சு)

இரங்கு பத்தியி னெவ்வள வியற்றினீ ரவ்வள விருங்கதி தருது மரங்கு தீவினை யொழிந்திட வருச்சனை புரிபவர் யாமென்ப தறிவீர் கரங்கு வித்திய லருச்சனை யுவப்புளோ ராம்பு ரமென்க ளென்று தற் கடவுட பரன்ப குத்துற வாங்கவற் கரிமுதற் றேவர்க ளின்னமு பகர்வார்.

(இ - ள்.) உருகியபக்தியோடு எவ்வளவு பூசித்தீர்களோ அவ்வளவுக்கேற்ற பெரும்பதவிதருவோம். ஆன்மாக்களை வருத்தும் தீவினைகள் விலகும்படிக்குப் பூசிக்கத்தக்கவர் நாமே யென்பதறிவீர்களாக. சிரமேற் கைகுவித்துச்செய்யும் பூசையி

லேயே நாம் விருப்புடையோமென்றுநெற்றிக்கண்ணையுடையவரும் தேவர்தலைவருமாகிய சிவபெருமான் அத்திருமால் முதலானோருக்குத் திருவாய்மலர்ந்தருளவும் அது கேட்ட திருமாலாதி தேவர்கள் இப்படி விண்ணப்பஞ் செய்கின்றார்கள். எ - று. (எ)

உலகம் யாவையு மண்டமு மீங்கிவைக் குள்ளன சரிப்பன யாவு
நிலவு வேணியாய் நீயெனப் புகல்வது சுருதியு மாகம நெறியு
மலகி னின்குண மளந்துபூ சிப்பதற் கெங்ஙன மறிகுது மெளியேம்
புலவ நின்னரு ளெங்ஙனம் புகுதுமென் றிரத்தலு மெம்பிரான் புகலும்.

(இ - ள்.) சந்திரனையணிந்த சடையையுடைய சிவபெருமானே! எல்லாவுலகங்களுமண்டகோடிகளு மிவற்றிலுள்ள நிலையியற்பொருளு மியங்கியற்பொருளுமாகிய யாவும் தேவரீரே என்று வேதங்களுமாகமநூல்களும் புகலாநிற்குமாதலின், அடியேங்கடேவரீரது அனந்தகல்யாண குணங்களையெங்ஙனமுணர்ந்து பூசிக்க அறிவோம். கடவுளே! தேவரீர் திருவருளையெப்படிப் பெறுவோமென்று விண்ணப்பித்துக் குறைகூறிய மாத்திரத்திலெமது சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுகின்றார். எ - று. (அ)

எத்தி றத்துள மூர்த்தியி னாயினு மெமையுணர்ந் தருச்சனை யியற்றின்
முத்தி நல்குது மாங்கதிற் பவித்திர முழுமுத லிலிங்கவர்ச் சனையே
பத்தியிற்சிறு பசிலை யாயினும் பனிமலர்ச சிற்றித ழெனினுஞ்[குப்பார்
சுத்த மென்புனற் றுள்ளியா யினுமதிற் றொகுப்பவ ரெமக்கெனத் தொ

(இ - ள்.) எவ்வகைப்பட்டுள்ள மூர்த்திகளிலாவது எம்மைத் தியானஞ் செய்துபூசித்தால் முத்தியைத்தருவோம். அப்பூசையுள்மேலானதும் முழுமுதற்றன்மையானதுஞ் சிவலிங்கபூசையே. ஆதலால் உண்மைப்பத்தியோடு சிறியபச்சிலையாவது குளிர்ந்த மலர்களின் சிறிய இதழாவது புனிதமான மெல்லிய நீர்த்துளியாவது நமக்கென்று அச்சிவலிங்கத்திற் சேர்ப்பவர்கள் அதனைச் சேர்த்தவர்களாவார்கள். எ - று. (கூ)

உருவ மாகிய விலிங்கமுற் பவித்திறை யொருவல மென்றுமுற் றுளமாற்
கருதி யங்கதி னருச்சனை மந்திரக் கடன்முறை யியற்றினு மன்றேன்
மருவு பத்தியி னியற்றினு மாங்கவர் மரபுளோர் கோடிய ரோடும்
பெருகு நன்னலக் கதிபெற வருளுது மென்பது மறைகளும் பேசும்.

(இ - ள்.) உருவங்கொண்டுள்ளசிவலிங்கத்திலே சாந்நித்தியமாய் இமைப்பொழுதும் பிரியாமல் எப்பொழுதும் பொருந்தியுள்ளோம். ஆகமவிதிகளைச் சிந்தித்துப் பூசை ஜெபம் முதலிய கடன்களை விதிப்படிசெய்தாலுமல்லது மனதிலுதித்த பத்திமார்க்கத்தாற் செய்தாலும், அப்படிச் செய்தோருடைய வமிசத்திலிறுதியாயுள்ளவர்களும் நன்மைமிகுந்த முத்தியின்பத்தைப் பெறும்படியநுக்கிரகிப்போம். இதனையிப்படியே வேதங்களும் எடுத்துச்சொல்லும். எ-று.

என்ன வெம்பிரா னெடுத்துரைத் தருளிய கேட்டலு மரிமுதலெவரு, மன்ன தன்மைய விலிங்கத்தி னளவையு மாங்கதன் றோற்றமு மறிவரன், பொன்ன லங்கொளிப் புரிசடை வானவ புகறியென் றிசைத்தலும் புனித, பன்ன கப்பெரும் பள்ளியோன் முதலவர்க் காங்கதன் [illegible]நிலை பகர்வான்.

(இ - ள்.) என்று எமது சிவபெருமான் எடுத்துத் திருவாய் மலர்ந்தருளிய வற்றைக் கேட்டவுடனே விஷ்ணுமுதலிய தேவர்களெல்லோரும், அத்தகைய சிவலிங்கத்தினளவையையு மதன் உற்பத்தியையுமடியேங்களறியும்படி பொன் போன்று பிரகாசிக்கு மொளிதங்கிய புரிந்த சடையையுடைய கடவுளே! திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கவும், புனிதமாகிய பெரிய சேஷசயனத்தையுடைய திருமால் முதலிய தேவர்களுக்கு அச்சிவலிங்கத்தினைப் பற்ற நிலைமையைத் திருவாய் மலர்ந்தருளுகின்றார். எ - று. (கக)

உரைக்க வேண்டுவ தன்றது வாயினு மதனிலை யொருங்குறக் கேண்மி, னிரைத்த வார்கட னிலத்துளோர் நும்முதல் யாவர்க்கு மறிவதற் கெளிதோ, வரைத்து ருமறை முடியினு முடிவுறு வதனிலை வரன்முறை வகுப்பி, னிரைதத டுக்கிய முததொழில் யாவையுமதனு ழை யல்லது நீங்கா.

(இ - ள்.) அச்சிவலிங்கமகிமை சொல்லமுடியாதாராலு மதன்றகைமையைத் தொகுப்பாய்க் கேளுங்கள். ஒலிக்கின்ற நெடிய கடல் சூழ்ந்த நிலவுலகினுள்ளோர்க்கும் நீங்கள் முதலிய வெல்லோர்க்குந் தெளிந்து கொள்ளற்கெளிதானதோ? அளவுபடாத வேதமுடிவிலுஞ் சொல்லிமுடியாத அச்சிவலிங்கநிலைமையை வரன்முறையாகச் சொல்லுவோமானால் வரிசையாய்ச் சேர்ந்துள்ளமுத் தொழில் முழுவது மச்சிவலிங்கத்தினிடத்திலேயன்றிப் பிரிந்திரா. எ - று.

வாக்கி னுரைப் பரிதியா மென்றுநன் மாண்புடைச் சிவலிங்கமென்று நீக்க மன்றத னிலைமைசொற் றுதுமரு நெறிதரு பரவிந்து வென்றும் பாக்கி யப்பர நாதமென் றுஞ்சொலப் படுவன வபரவிந் தென்று [ன். நோக்கி லப்பெயர் நாதமென் றுஞ்சொலப் படுவன வாங்கவை நொடியி

(இ - ள்.) வாக்கினாற் கூறுதற்கரிதாயது நாமென்றும் நல்லமேன்மை தங்கிய சிவலிங்கமென்றும் வேறன்று. அதன் தன்மையைச் சொல்லுகின்றோம். மேலானமார்க்கத்தைப் பாலிக்கும் பரவிந்துவென்றும் செல்வத்தைப்பாலிக்கும் பரநாதமென்றும் சொல்லப்படுகின்றன அன்றியும் அபரவிந்துவென்றும் அபரநாதமென்றுஞ் சொல்லப்படுகின்றன. அவற்றைச் சொல்லத்தொடங்கினால்.

ஆய நான்கினி லபர விந்துவ பரப்பெயர் நாதமு முதலா
மேய வப்பர விந்துவு மப்பெயா நாதமு மிவைக்குமே லாகச்
சேய காலமும் பிரிந்துறு திப்பரி சிருச்சுமா லசசிவ லிங்கந்
தூய வாகிய பிரணவ வேதியி னுதமாய்த் தோன்றுவ துரைப்பின்.

(இ - ள்.) ஆகிய நான்கில் அபரவிந்துவும் அபரநாதமும் முதலாகவும்பொருந்திய பரவிந்துவும் பரநாதமும் இவ்விரண்டிற்கும் மேலாகவும் அநேககாலங்களாகப்பிரிவுபாடற்று இத்தன்மையாக அச்சிவலிங்கம் விளங்கும். இதனைவிளக்கிச்சொல்லவேண்டுமாயின் புனிதமாகிய பிரணவமென்னும் பீடத்திலே நாதரூபமாய் விளங்குவது. எ - று. (கஉ)

விந்து நாதமாய்ப் பொலிதரு லிங்கத்தின் விழுத்தக வுண்மையுமா யுறைவோ. மிந்த விட்பரி சுறைசிவ லிங்கத்தை யருச்சனை செய்வர்புரிந்

திடினு, மந்த நாளவர்க் கெம்முறைக் காட்சிதந் தளிக்குது மாங்கவர்
கேட்ட, சிந்தை யோர்ந்தன வீகுது மிங்கிது சத்திய மென்பது
தெரிவீர்.

(இ - ள்.) இங்ஙனம் விந்நாத சொரூபமாய் விளங்கும் சிவலிங்கமூர்த்தத்தில் மேன்மைபொருந்தச் சத்தியமாக வீற்றிருப்போம். நாம் கூறிய இவ்வகையாயுள்ள சிவலிங்கத்தையாவர் பூசித்தாலும், அன்றையதினமே அத்தகையினர்க்கு எமது சொரூபதரிசனத்தைத் தருவோம். அத்தகையினர் கேட்டவரங்களையும் எண்ணிய எண்ணங்களையும் பாலிப்போம். இவ்வார்த்தை சத்தியமென்பதையுணரக்கடவீர்கள். எ - று. (௧௨)

அருச்சனைக்குரித் தாயிலிங் கத்திடை யுறைந்தன மொருகண மகலேந், தெரிக்கி னென்றுமெண் ணெயுமெனச சிறந்தனங் காண்பன
யாவையுஞ் சிதைந்து, பரிக்கு மாங்கதன் றன்னிடை லயிக்கையா
லிலிங்கமென் றுரைத்திடப் படுமா, லரிப்பெ ரும்பெயர் முதலினே
ருயிர்த்தொகை யாவையு மதனுழை யடங்கும்.

(இ - ள்.) பூசிக்கத்தக்கதாய்ச் சிவலிங்கத்தில் வீற்றிருக்கின்றோம். ஒருக்ஷணகாலமானாலும் அம்மூர்த்தத்திற் பிரிந்திரோம். அக்கலப்பைத் தெளிவிக்கவேண்டுமாயின் எள்ளும் எண்ணெயும் போன்று சிறப்புற்றோம். தோற்றப்பட்டபிறவுருவங்களெல்லாவற்றிலும் நீங்கித்தாங்குகின்ற அச்சிவலிங்கத்தில் நாம்லயப்பட்டிருத்தலின் அவ்வுருவிற்கு இலிங்கமென்று பெயர்சொல்லப்படும். பெருமைதங்கிய பெயர்களையுடைய திருமால் முதலிய தேவர்களும் ஏனைய எல்லாவுயிர்த்தொகைகளும் அச்சிவலிங்கத்தில் அடங்கியிருக்கும். எ - று. (௧௩)

இன்ன ணந்தனி வேதியோ டிருந்துறை யிலிங்கத்தின் யாமிறை யுகனே
மன்ன ரூபியா யிருக்குது மாதலி னவிர்மணி யாடகம் வெள்ளி
பன்ன ருஞ்சிலை மண்மரஞ் சநதனம் பஃறுளி யிரதமென் றிவற்றான்[ன்.
மன்னு சூத்திர மைந்தொடு மிலிங்கமொன் றியற்றின ரருச்சனை வகுப்பி

(இ - ள்.) இப்படியொப்பற்ற பிரணவ பீடத்தோடிருக்கின்ற சிவலிங்கத்தினின்று நாமொரு க்ஷணப்போதேனும் நீங்கியிரோம். அச்சிவலிங்க சொரூபமாகவேயிருப்போமாதலின் ஒளிதங்கிய இரத்தினம், பொன், வெள்ளி, சொல்லுதற்கரிய கல்,மண்,மரம்,சந்தனம்,பலதுளிகளாகிய இரதம் என்னுமிவற்றால் பஞ்சப்பிரம மந்திரத்தைக கொண்டு சிவலிங்கமொன்று செய்து பூசித்தால்.

கோடிவெள்ளியு மளவொழி தானமும் விதிமுறை யியற்றியோர்
கொடுத்தோர், நாடியோர்ந்திலிங் கார்ச்சனை புரிபயனடைவரோ. நன்
குறத் தெரிப்பி, னேட விழ்ந்தபூ வொன்றிடப் பெறுபய னெய்துரு
ராங்கவ ரினையோர், விழை வேண்டியோர்க் களிப்பர்யா மிருந்துழி
வெம்பிறப் பொழிந்தினி திருப்பார்.

(இ - ள்.) கோடியாகங்களுங்கணக்கில்லாத தானங்களும் விதிமுறைசெய்தவர்களுங் கொடுத்தோர்களு முண்மையைத் தெளிந்துணர்ந்து சிவலிங்கார்ச்சனை செய்தபயனைப் பெறுவார்களோ? நன்றாய்த்தெளிவிக்க வேண்டின், இதழ் விரிந்தவொருமலரையருச்சித்தவர்கள் எய்தும்பேற்றைக்கூட அவர்களெய்

தமாட்டார்கள். சிவபூசைசெய்கின்ற இவர்கள் தம்மைப் பிரார்த்திப்பவர்களுக்கு முத்தியின்பந்தருவார்கள். கொடிய பிறவிநோய் நீங்கினவர்களாய் நாம்வீற்றிருக்குஞ் சிவலோகத்தி லினிமையாக வீற்றிருப்பார்கள். எ - று. (கஅ)

மொழிந்த தெய்வலிங் கத்திடைச் சதாசிவ மூர்த்தமா யினிதுவந் திருப்போம், பொழிந்த பத்தியிற் பூசனை புரிபவர் பொருபுனற்காசிகே தார, மிழிந்த தெள்ளரு வியவிருத் தாசலஞ் சிதம்பர மருணையெப்பவ மும், கழிந்த தென்கயி லாயமை யாறுவெண் காடுதென் மதுரையம் மருதூர்.

(இ - ள்.) சொல்லிய தெய்வீகந்தங்கிய சிவலிங்கமூர்த்தத்தில் சதாசிவமூர்த்தமாக இனிமையாய் விரும்பி வீற்றிருப்போம். சிறந்தபத்தியோடு பூசிப்பவர்கள் அலைகள்மோதுங்கங்காநதியையுடைய காசி, திருக்கேதாரம் தெளிந்த அருவியொழுகும் விருத்தாசலம், சிதம்பரம், அருணாசலம், எல்லாப்பாவங்களையும் நீக்கும் தென் திருக்காளத்தி, திருவையாறு, திருவெண்காடு, தென்றிசையிலுள்ள மதுரை, அழகிய திருவிடைமருதூர். எ-று. (கக)

குடந்தை சீகுலப் பருப்பதங் காஞ்சிரா மேச்சுர மண்டகூ டங்க, ளுடன்ப டுந்திருக் கயிலையோ ரிரண்டுபொன் மேருவி னுச்சிமற் றிவற் றின், மடந்தை யோடுநங் கணத்தொடு மைந்தொழில் வகுத்தினி தாண் மையா யுறைவோ. மிடம்ப டுந்தல மிதுவென வுளத்துணர்ந் தெண்ணி யெம் மருச்சனை புரிவீர்.

(இ - ள்.) திருக்குடந்தை, சீகுல பருவதம், காஞ்சி, இராமேச்சுவரம் அண்டகூடங்களையளாவிய [பிராகிருத, அப்பிராகிருத சம்பந்தமான] திருக்கைலாயங்களிரண்டு, மகமேருவினுச்சி ஆகிய வித்தலங்களில் உமாதேவியோடும் நமது கணங்களோடும் பஞ்சகிருத்தியங்களை நிறைவேற்றியினிதாக நித்தியமாய்வீற்றிருப்போம். நாமிடங் கொண்டிருக்குந்திருத்தலங்கள் இவை யென்றுணர்ந்தெம்மைமனதிற் சிந்தித்துப் பூசிக்கக்கடவீர்கள். எ-று. (உ௦)

ஆதி நாளையி னரிமுதற் றேவர்கண் முனிவரர் யாவரு மன்பால்
மேவதி யோடுமுற் றுறுசிவ லிங்கத்தி னருச்சனை வேண்டினர் விரும்பி
யோது மித்தலந் தொறுமலை தோறுநீ ரொழுகிய நதிக்கரை தோறு
நீதி யோடுகின் றினிதுபூ சித்தவர் நினைந்தன யாவையுஞ் சிறந்தார்.

(இ - ள்.) முற்காலத்திற்றிருமால் முதலிய தேவர் முனிவர் யாவரும் பிரணவபீடத்திலிருக்குஞ் சிவலிங்க பூசைசெற்தற்குண்மையன்போடு விருப்பெய்தி நாம் சொல்லிய இத்தகையதலங்களிலும், மலைகளிலும், நீரோட்டமுடைய ஆற்றங்கரைகளிலும் ஆகமவிதியோடிருந்து இனிதாகப் பூசித்து அவர்கள் கருதிய எல்லாவரங்களையும் பெற்றுக்கொள்வார்கள். எ - று. (உக)

அனையர் யாவரு மித்தலத் தருச்சனை யாற்றினர் பெற்றனர் யாவு, மினையு நீதியி னுரைத்துமென் றெம்பிரா னவர்க்கென நிகழ்த்திய வுண்மை, வனையும் வார்சடைப் புனிதர்கா னும்முறை யங்கிலே வரன்முறை வகுப்பாம், வினவி யன்புறக் கேண்மினென் றருந்தவச் சூதமா முனிவரன் விளப்பும்.

(இ - ள்.) அவர்கள் யாவரும் இத்தலங்களிற் பூசித்துப்பெற்ற வரங்களெல்லாவற்றையும் நீங்கள் சிந்திக்கத்தக்க முறைமைக்காகச் சொல்கின்றோமென்று எமது சிவபெருமான் திருமால்முதலானோருக்காகத் திருவாய்மலர்ந்தருளிய விசேசயத்தை, அலங்கரித்த நீண்டசடையையுடைய முனிவர்களே! உங்கள் பால் அப்படியே கிரமமாகச் சொல்லுகின்றேன். அன்போடு கேட்பீர்களாகவென்று அருந்தவமுடைய பெருமை தங்கிய சூதமுனிவர்சொல்லுகின்றார். எ - று.

கலிநிலைத்துறை.

மூசு சுரும்பூ டாடுது ழாயோர் முகில்வண்ணன்
காசிபு குந்தூழ் கோடி கடப்பக் கருதானின்
றேசி றவத்தா லுண்மை சிறந்தா னெம்மானைப்
பூசை புரிந்தா னன்பொடு மாகம் புளகுற்றான்.

(இ - ள்.) வண்டுகள் மொய்த்துத்திரியும் துளசிமாலை தரித்த ஒப்பற்ற மேகவண்ணராகிய திருமால், காசிகுப் போய்க்கோடி ஊழிகாலங்கள் கழியும்படி எமது சிவபெருமானைத் தியானஞ்செய்திருந்து குற்றமற்ற தவத்தோடு மெய்யன்பு மிக்கவராய்ப் பூசித்தனர். அவ்வன்பின் மேம்பாட்டினாற்றேக முழுவதும் மயிர்க்கூச்செறிந்தனர். எ - று. (௨௬)

எந்தை பிரானா லன்பு சிறந்தா னிதுகாலத்
தந்தமில் வைகுண் டப்பத முற்றா னதுமற்றோர்
நந்து கடும்போ ராழி நகைக்குஞ் சுடர்வைவா
டந்தொரு தண்டங் கார்முக நல்கத் தனிபெற்றான்.

(இ - ள்.) எமது சிவபெருமானால் அன்புபாலிக்கப்பெற்றவராய் இதுகாறும் அழிவற்ற வைகுந்தபதவியில் சேர்ந்திருக்கின்றனர். அதுவேயன்றி ஒப்பற்ற பாஞ்சசன்னிய மென்னும் சங்கும், சுதரிசனமென்னும் கடும்போர் செய்யத்தக்க சக்கராயுதமும், பிரகாசிக்கும் ஒளிதங்கிய கூரியவாளாயுதமுங்கொடுத்ததுநதவிர ஒப்பற்றதண்டாயுதமும் வில்லும் கொடுக்க, ஒப்பற்றுப்பெற்றனர்.

கோவை யிதழ்ச்செங் கோல்வளை மென்மைக் குளிர்போதிற்
பாவை தனக்குப் பாரியெனப்பெற் றனனம்பொற்
பூவி லிருக்கு நான்முகன் மற்றைப் புவனத்தோர்
தேவர் வணங்கப் பல்லுயிர் நல்குந் திதிபெற்றான்.

(இ - ள்.) கொவ்வைக்கனிபோன்ற இதழும், செவ்விய அழகியவளையலணிந்த மெல்லிய கைகளுமுடையவளாய், குளிர்ந்ததாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைத் தமக்குமனைவியாகவும் எய்தினர். அழகிற் சிறந்த பொன்போன்ற தாமரைமலர்ப்பீடத்திலுள்ள பிரமனும் ஏனைய புவனங்களிலுள்ளவர்களும் தம்மைவணங்கும்படி பலசீவராசிகளைக்காக்கின்ற காக்குந்தொழிலைப் பெற்றுக் கொண்டனர். எ - று. (௨௭)

எடுத்து விரிக்குந் திண்சிறை மேரு வெடுக்கும்போர்
மிடுக்கி னெடுங்கலு ழக்கொடி பெற்றான் வெய்யோரைக்
கடிக்கு மிருந்திறல் பெற்றன னூழிக் கதிரேய்க்கு
முடிக்கை சிறந்தா னென்னினி யன்னோற் குதவாத.

(இ - ள்.) தூக்கிவிரிக்கும் வலியசிறகுகளில் மேருமலையையும் எடுக்கத்தக்கதும் பெரும்போர்புரியும் வல்லபமுள்ளதுமான கருடக்கொடியையும் பெற்றுக்கொண்டனர். தீயோராகிய அசுரர்களைவெல்லத்தக்க பெருவல்லபமெய்தினார். செந்நிறமாகச் சூரியன்போலப் பிரகாசிக்கும் பீதாம்பரமுமணிந்துகொண்டார். அத்திருமாலுக்கு இனிகிடைக்கத் தகாதவையெவை? எ - று. (உசு)

நாள நெடுந்தாட் சேய நறும்பூ நளினத்தோன்
மூளுறு மன்பிற் கச்சி புகுந்தம் முதல்வோனைக்
கோளறு மென்பூ வர்ச்சனை செய்தக் குறைமுற்றித்
தாளிணை பற்றுந் தொண்ட ருவக்குந் தலைநின்றான்.

(இ - ள்.) நாளத்தோடு கூடிய நெடியதாளையுடைய நல்லசெந்தாமரைப் பீடத்தையுடைய பிரமன் மேம்பட்ட அன்போடு காஞ்சிநகரஞ்சென்று முதல்வனாகிய அச்சிவபெருமானைக் குற்றமற்ற மெல்லிய மலரானருச்சித்து அத்தவம் நிறைவேறப்பெற்று, சிவபெருமான் பாதங்களைச் சரணமடைந்த மெய்யடியார்கள் வியக்கத்தக்கதலைமை யெய்தினான். எ - று. (உஎ)

வையக முற்று மன்பதை யாவும் மரபோடுஞ்
செய்து முடிக்குந் திண்மை சிறந்தான் மறையெல்லாந்
கொய்து தெரிக்குங் கூறி வுற்றா னளவில்லா
மைதவழ் கண்டத் தெந்தை யளிக்கும் வரம்பெற்றான்.

(இ - ள்.) உலகமுழுவதையும் ஆன்மகோடிகளெல்லாவற்றையுமுறைப்படிபடைக்கின்ற வல்லமையின் மேம்பட்டான். வேதங்களெல்லாவற்றையும் பகுத்துணரும் நுட்பமான அறிவுமடைந்தனன், விஷந்தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமான் பாலிக்கின்ற வெண்ணிறந்தவரங்களையும் பெற்றுக்கொண்டான்.

வெள்ளை யிதழ்ப்பைந் தாமரை மங்கை விருப்புற்றான்
கள்ளவிழ் கற்பத் தேவர் வணங்குங் கதிபெற்றான
கொள்ளை நெடும்பா லாழியெ னுந்திண் குடைபெற்றான்
றுள்ளு திரைக்கற் றைக்கவ ரிப்பொற் றொகைபெற்றான்.

(இ - ள்.) வெள்ளிய இதழ்களையுடைய அழகியதாமரையில் வசிக்குங்கலைமகள்விருப்பமும் பெற்றான். தேன்சிந்துங்கற்பகமாலையையுடைய தேவர்கள் வணங்கும் பதவியும்பெற்றான். மிகநீண்ட திருப்பாற்கடலென்றுசொல்லத்தக்க வலிய சத்திரவட்டக்குடையும் பெற்றான். அப்பாற்கடலில் துள்ளும் அலைகள் போன்ற கூட்டமாகிய அழகிய வெண்சாமரைக் கூட்டங்களையும் பெற்றான்.

இன்னிறை யன்னத் தூர்தி சிறந்தா னழிவில்லாப்
பண்பொடு பிரம பதத்தலை நின்றான் முனிவோர்தந்
நன்பின் வணங்குந் தன்மை யுடைந்தா னவையற்றான்
வெண்பிறை வேணித் தேவனை யின்னும் விருப்புற்றான்.

(இ - ள்.) வலிய சிறகுகளையுடைய அன்னவாகனத்தால் மேம்பட்டான். அழிவில்லாத தன்மையோடுபிரமபதத்தில் விளங்கினான். முனிவர்கள் யாவரும் அன்புடன் பணியுந்தன்மைபெற்றான். குற்றமற்றான். வெள்ளியபிறைச்சந்திரனையணிந்த சடையையுடைய சிவபெருமானை இன்னும் ஆசைகொண்டுதுதி செய்கின்றான். எ - று. (௩௦)

சீருல வெற்பிற் சென்று தவத்தின் செயன்முற்றி
மாகபு ரக்கோ னிந்திர னந்நாள் வழிபட்டான்
பாகடு வெள்ளைப் பாய்பக டெய்திப் பயனுக்குஞ்
சாகைவி டுக்குங் கற்பக நாடுந் தனிபெற்றான்.

(இ - ள்.) தேவலோகத்தலைவனாகிய இந்திரன், சீருலபர்வதத்தையடைந்து தவச்செயல்களைமுடித்து அக்காலத்திற் பூசித்தான். அதனால் பாகனைக் கொல்லத்தக்க பாய்ந்து செல்லும் ஐராவதமென்னும் வெள்ளை யானையைப் பெற்று வேண்டியவற்றையெல்லாங் கொடுக்கத்தக்க சிறைகள் விரிந்த கற்பகவிருக்ஷம் பொருந்திய ஒப்பற்ற தேவலோகராச்சியத்தையும் பெற்றுக்கொண்டான்.

பொன்னொளி பொங்கு புலோமசை தந்த புதுக்காமத்
தின்னல மன்பி னுகர்ந்தனன் வானவ ரெவருந்தம்
மின்னொளி மாமுடி தாழ விழுந்தெழ விரிசெம்பொற்
றுன்னரி யாசன மீது பொலிந்து துலங்குற்றான்.

(இ - ள்) பொன்போலுங்காந்திவீசுகின்ற இந்திராணிகொடுத்த நூதனமான காமவின்பத்தை அன்போடு அநுபவித்தான். தேவர்களெல்லாரும் தங்கள் காந்திபொருந்திய கிரீடங்கள் நிலமிசைப்படியும்படி சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்திருக்கவிசேஷித்த பசும்பொன்பதித்த சிங்காதனத்தின் மேல்வீற்றிருந்து விளக்கமெய்தினான். எ - று. (௩௨)

வால்வளை செம்பொற் றாமரை சிந்தா மணிதேனுக்
கோலிய வச்சிர முதலிய வெம்படை கைக்கொண்டா
னாலு நெடுங்குடை சாமரை மற்றிவை யனையாவுஞ்
சால்புற மால்விடை யோனரு ளோடுந் தாரின்றான்.

(இ - ள்.) வெண்மை தங்கிய சங்கநிதி பசும்பொன்னிறந்தங்கிய பதுமநிதி சிந்தாமணி காமதேனு, வளைந்தவச்சிராயுத(முத)லிய பெரிய ஆயுதங்கள் இவற்றைக்கைக்கொண்டான். அசைகின்ற நீண்டகு(டை) வெள்ளிய சாமரை முதலிய விவற்றையும் மேன்மைபொருந்தும்படிபெரிய இடபாரூடராகிய சிவபெருமான் திருவருளால் தரப்பெற்றுக்கொண்டனன். எ - று. (௩௩)

பாடுறு கீதப் பண்மொழி யோரறு பத்தாறு
கோடி யரம்பையர் சூழ்வர வின்னுங் குணதிக்கி
னீடு தனிக்கோல் சென்றுற நின்று னிறைசெல்வத்
தோடமு தப்பே றுண்டி யுவந்தா னொழிவற்றான்.

(இ - ள்) இசைபாடுகின்ற வீணாநாதம் போன்ற வார்த்தைபொருந்தியவர்களாகிய அறுபத்தாறுகோடி தேவமாதர்கள் புடைசூழ்ந்திருக்கும்படி கீழ்த்திசையிலே இன்னும் ஒப்பற்றசெங்கோல் செலுத்துகின்றான். குறைவற்ற ஐசுவரியத்தோடு அமுதமென்னும் பெருமைதங்கிய உணவையுண்டு நீக்கமற்றிருக்கின்றான்.

சந்தமுமல் வானவ னெம்பெரு மானடி சிந்தித்து
வந்தரு ளசல வெற்பிடையன்பொடு வழிபட்டான்

வெந்தகர் வாகனம் வேற்படை பெற்றன னிருகொங்கை
மந்தர மன்னசு வாகா தேவிதன் மணமுற்றான்.

(இ - ள்.) செந்நிறந்தங்கிய அக்கினி பகவான் எமது சிவபெருமான் திருவடிகளைத் தியானஞ்செய்து அருணாசலமென்னும் மலையில்வந்து உண்மையன்போடு பூசித்தான். பெரிய ஆட்டுக் கடாவாகனமும் வேற்படையும் பெற்றது மன்றிமந்தரகிரிபோன்ற இருதனங்களை யுடைய சுவாகாதேவியையும் மணஞ்செய்து முடித்தான். எ - று. (௬௫)

தென்கீழ் மூலை புரந்து தனிக்கோல் செலநின்றான்
மின்கீழ் போக விளங்கு மெயிற்றுத் தென்பாலோன்
றன்கீ ழெவருந் தொழவரு டருகேதாரம் போய்ப்
பொன்கீ றியவன் சடிலத் தரனைப் பூசித்தான்.

(இ - ள்.) அன்றியும், தென்கீழ்த்திசையைப் பரிபாலித்து ஒப்பற்ற செங்கோல்செலுத்திக்கொண்டிருக்கின்றான். மின்னலுங் கீழ்ப்படத்தக்க பிரகாசிக்கின்ற பற்களையுடைய தென்றிசைக்கிறைவனாகிய இயமன் தன்னடியின் கீழ்ப்பலரும் வணங்கும்படி திருவருள் பாலிக்கும் திருக்கேதாரத்திற்குச்சென்று, செம்பொற்கம்பிகளைப் போன்ற வலியசடையையுடைய சிவபெருமானை வழிபட்டான். எ-று. (௬௬)

தன்னக முள்ளப் பட்டன யாவுந் தரநின்றான்
பின்னரு கைக்குஞ் செங்கட் பகடு பெறப்பெற்றான்
மின்னடு பாசந் தண்டு கிடைத்தான் விரிவேணித்
துன்னரு முனிவ ரேழ்வர்க் கன்றுச மஞ்சொற்றான்.

(இ - ள்.) தன்மனதிலெண்ணியவரங்களை யெல்லாந்தரப்பெற்றுக்கொண்டான். அதன்பின் ஏறிநடத்தும் சிவந்த கண்களையுடைய எருமைக்கடாவை வாகனமாகப்பெற்றுக்கொண்டான். மின்னலின் மிக்க காந்தியுடையபாசக்கயிற்றோடு தண்டாயுதத்தையும் பெற்றுக்கொண்டான். விரிந்தசடைமுடியையுடையவர்களாய் எல்லாராலும் அடைதற்கரியவர்களாய் சத்தமுனிவர்களுக்கும் ஒப்பானவனென்னும் பெயரும் பெற்றான். எ - று. (௬௭)

புண்ணிய பாவங் கண்டற முற்றும் புரிவோரை
விண்ணுல காள விடுப்பது மற்றுள வெம்பாவங்
கண்ணிய பாவரை வெந்நிரை யச்செங் கனலூடே
நண்ண விடுப்பது மன்னவ னுனவையற்றான்.

(இ - ள்.) புண்ணிய பாவங்களைத்தெரிந்து முழுவதும் புண்ணியமே செய்கின்றவர்களைச் சொர்க்கலோகத்தை யரசாளச்செய்வதும், கொடிய பாவங்களையேசெய்த பாவிகளைக் கொடிய நரகமாகிய கடுந்தீயிற் சேரவைப்பதும் அவனேயாயினான். குற்றங்களெல்லாந் தீரப்பெற்றான். எ - று. (௬௮)

வன்றொளை வெண்பற் சேடன் முடிப்பூ வலயத்துத்
தென்றிசை முற்றுந் தன்னொரு செங்கோல் செலநின்
னின்றள வுஞ்செம் பொற்கிரி வில்லோ னிருபாதந்
தன்றனி யுச்சிக் கொண்டு சுமக்குந் தலைநின்றான்.

(இ - ள்.) வலிய தோள்கள்பொருந்திய வெள்ளியபற்களையுடைய ஆதிசேடனது பணாமுடியிலுள்ள நிலவுலகத்திலே தென்றிசை முழுவதும் தன் ஒப்பற்றசெங்கோல் செல்லும்படியிருந்தான். இன்றுவரையில் மேருமலையைவில்லாகவேந்திய சிவபெருமானுடைய உபயபாதங்களைத் தனதுநிகரில்லாத உச்சியில் தாங்கிக்கொண்டு சுமக்கும் மேன்மையடைந்தான். எ - று. (௩௯)

நிருதிப் பேரோ னெந்தை பிரானடி நெடுநீழல்
கருதித் தென்கோ கன்ன மடைந்தா னொருகாலஞ்
சுருதிச் சொல்லான் மென்மல ரிட்டுத் தொழுதற்று
னொருதுற றெம்மா னன்னவ னுக்கன் றெதிருற்றான்.

(இ - ள்.) நிருதியென்னும் பெயருடையோன் எமது தந்தையாகிய சிவபெருமான் திருவடியின் சிறந்த நிழலைவிரும்பித் தென்றிசையிலுள்ள கோகர்ணமென்னு தலத்தை ஒருகாலத்திலெய்தி, வேதவாக்கியங்களால் மெல்லிய மலர்களைக்கொண்டர்ச்சித்து வணங்கியிருந்தான. அப்போது எமது சிவபெருமான் இடபாரூடராய் அந்நிருதிக்குக் காட்சிதந்தருளினர். எ - று. (௪௦)

ஈயப் பட்ட வரங்க ளனைத்தையு மெதிரேற்றான்
மாயப் பட்டுத் தெவவர் விழுந்தெறு வான்பெற்று
னாயப் பட்டறி யாநிதி பெற்று னசுரர்க்கோர்
தாயொத் துப்பே ரரசு செலுத்துந் தகையானான்.

(இ - ள்.) கொடுக்கப்பட்ட வரங்களையும் பெற்றுக்கொண்டான். பகைவர் இறந்துவிழும்படி கொல்லத்தக்க வாட்படையும் பெற்றுக்கொண்டான். ஆராய்ந்து அளவிடற்கு முடியாத ஐசுவரியங்களையும் பெற்றுக்கொண்டான். அசுரர்களெல்லாருக்கும் ஒருதாய்போலிருந்து பேரரசு செய்கின்ற தன்மையுடையவனானான். எ - று. (௪௧)

வருணன் சம்பு வனத்தர னைப்போய் வழிபட்டுச்
சுருளுந் தெண்டிரை வேலை புரக்குந் தொழில்பெற்றான்
மருளுந் திண்சுற வூர்திய னாக வரம்பெற்றான்
பொருவும் பாசங் கொண்டு குடக்குப் புரவுற்றான்.

(இ - ள்.) வருணன் சம்புகேசுவரத்தில் சிவபெருமானையடைந்துபூசித்து, சுருண்டுவருகின்ற தெளிந்த அலைகளையுடைய சமுத்திரத்தைக் காக்குந்தொழில்பெற்றுக்கொண்டான். மயங்குகின்றவலிதங்கிய சுறவாகனனும்படி வரம்பெற்றனன். போர்செய்கின்ற பாசத்தைத் தாங்கியவனாய் மேற்றிசையைப் பரிபாலிக்கின்றான். எ - று. (௪௨)

வேளைத் தீப்படு நெற்றி விழித்தருள் விடையோனைக்
காளத் தியில்வழி பட்டன னனிலக் கடவுட்கோ
வாளப் புவியும் மன்பதை மனநினை விரைவிற்போய்
மீளப் படுவது தன்னல திலையெனும் விறல்பெற்றான்.

(இ - ள்.) மன்மதனைத்தகனமாம்படி நெற்றிக்கண்ணாற்பார்த்தருளிய இடபவாகனனுடைய சிவபெருமானை வாயுதேவன் காளத்தியிற் பூசைசெய்து ஒளி

மருந்து சிறந்த நிலவுலகிலுள்ள மனிதர்களின் மனநினைவினும் வேகமாய்ச்சென்று திரும்புவது தன்னைக்காட்டினும் இல்லையென்று சொல்லத்தக்கவல்லபமுமெய்தினன். எ - று. (௪௩)

ஏழு வகைத்தாம் வாயுவி னுக்கோ ரிறையானுன்
யாழி னெடுங்கொடி யாயுத முற்றான் வடமேல்பா
லூழ்முறை யின்னும் பேரர சுற்று ளொழிவற்றான்
பாழி வயக்கலை யூர்தி கிடைத்தான் பகையற்றான்.

(இ - ள்.) அன்றியும் (ஆவகன் பிரவகன் அநுவகன் சங்கவகன் நிவகன் பராவகன் பரிவகனென்னும்) சத்தவாயுக்களுக்கும் ஒப்பற்ற தலைவனானான். யாழ்த்துவசமும் பல ஆயுதங்களும்பெற்றான். வடமேற்றிசையில் நீக்கமின்றியிருந்து நீதிமுறையாக இன்னும் பெரிய அரசாட்சிசெய்து கொண்டுவருகின்றான். மிக்க வெற்றி தங்கிய மான்வாகனம் பெற்றான். பகைதவிர்ந்தான். எ - று. (௪௪)

சித்த வடச்சித் தேசுரர் பொற்சே வடியெண்ணிப்
பத்தி பழுக்கச் சென்றுகு பேரன் பணிதநதா
னத்தனை யொக்குந் தோழமை கொண்டா னருள்பெற்றா
னத்த முதற்கோ மாநிதி யெல்லா நனிபெற்றான்.

(இ - ள்.) குபேரன் சித்தவடமென்னுந் தலத்தையடைந்து அங்குள்ள சித்தேசுவரருடைய பொன்போன்ற பாதங்களைத் தியானித்து, பத்தி யதிகரிக்கப் பணிந்தான். சிவபெருமானுக்குச் சமானனாக நட்புகொண்டு திருவருள்பெற்று, சங்கநிதி முதலிய சிறந்த நிதிகளையெல்லாம் மிகுதியாகப்பெற்றுக்கொண்டான். எ - று. (௪௫)

எண்ணி நினைந்த வரம்பல யாவையு மெய்துற்றான்
மண்ணிய புட்பகம் வாகன மாக வழங்குற்றான்
றிண்ணிய வெங்கதை யாயுத மெய்து சிறப்புற்றா
னண்ண னெடுங்குடை யுத்தர தேய மளிக்கின்றான்.

(இ - ள்.) எண்ணங்கொண்டு கருதிய பலவகை வரங்களையும்பெற்றுக்கொண்டான். அலங்கரித்துள்ள புட்பக விமானத்தைத் தனக்கு வாகனமாக வழங்கப்பெற்றான். வலிதங்கிய கொடிய கதாயுதம்பெறுகின்ற மேன்மையடைந்தான். சிறப்புற்று நீண்ட சந்திரவட்டக் குடையின்கீழ் வடதிசையைப் பரிபாலனஞ்செய்கின்றான். எ - று. (௪௬)

வடகீழ் மூலைப் பதியீ சானன் வன்மீகப்
படவா ரூர்வா ழெந்தை பிரானைப் பணிவுற்று
மடலார் மென்பூ வர்ச்சனை செய்தான் மகிழ்பெற்றான்
விடமார் கண்டன் வேண்டிய வென்னை வரம்பென்றான்.

(இ - ள்.) வடகீழ்த்திசைக்காவலனாகிய ஈசானன் திருவாரூரில் புற்றிடங்கொண்டெழுந்தருளியிருக்கும் எமது பிதாவாகிய சிவபெருமானைப்பணிந்து இதழ்களுடைய மெல்லிய மலர்களால் அருச்சனை செய்தான். அப்பொழுது நீலகண்டராகிய சிவபெருமான் திருவுளமகிழ்வெய்தியவராய் உனக்கு வேண்டிய வரம் யாதுரை கூறுகவெனத் திருவாய்மலர்ந்தருளினர். எ - று. (௪௭)

ஈசா னத்தோ னெந்தை பிரானரு ளருளெய்திப்
பேசா நின்றா னின்னுரு வின்னே பெறவேண்டு
மூசா நிற்கும் பன்னகம் வெண்பிறை முகிழ்கொன்றை
கூசா நிற்குங் கங்கை பொறுக்குங் குளிர்வேணி.

(இ - ள்.) ஈசானன் எமது தந்தையாகிய சிவபெருமானால் திருவருள்பெற்றுச் சொல்லுகின்றான். தேவரீர் திருவுருவை இப்பொழுதே பெற்றுக்கொள்ள வேண்டும். மொய்த்துக்கொண்டுள்ள சர்ப்பம் இளம்பிறை மலர்கின்றகொன்றை மாலிகை குளிர்ச்சிதங்கிய சடைமுடியும். எ - று. (௪௮)

மழுமா னங்கை முச்சிகை நெடுவேன் மழுவேறு
தொழுவார் தின்னைத் தொழுமுறை யென்னைத் தொழுதன்மை
வழுவா தீகுதி யென்றனன் வடகீழ்த் திசைபோயிப்
பொழுதே யாளுதி யென்றரு ளோடும் புரிகென்றான்.

(இ - ள்.) மழுவும் மானுமேந்திய அழகியகைகளும், முத்தலைகளையுடைய நெடிய சூலாயுதமும் இளமைதங்கிய இடபமும், வணங்குகின்றவர்கள் தேவரீரைப்போலவே யடியேனைப்பணிகின்றஇயல்புமாகிய இவற்றையெல்லாந் தவறாது கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அன்றி வடகீழ்த் திசையிற்சென்று இப்பொழுதே யரசுபுரிகவென்று திருவருளோடு கட்டளையிடுவீராகவென்றும் விண்ணப்பித்தான். எ - று. (௪௯)

அன்னது கேளா வெந்தை பிரான்மற் றவனுக்குச்
சொன்னவை யாவுந் தந்து கடைப்பாற் றுரிசற்றோ
யென்னுழை வாவென் றின்னருள் செய்தா னினிதுற்றா
னின்னு நெடும்பே ராழிபு ரந்தா னிகலற்றான்.

(இ - ள்.) அதனை யெமது தந்தையாகிய சிவபெருமான் திருச்செவியிலேற்று, அவ்வீசானனுக்கு அவன் கூறியவற்றையெல்லாம் அநுக்கிரகித்து, குற்றமற்றவனே! கடைசியாக எம்பால்வருவாயாகவென்று திருவருள் செய்தனர். அவ்வீசானன் இனிமையெய்தியவனாய்ப் பகைமை தவிர்ந்து இன்னும் மிகப்பெருமையுடைய ஆக்கினைசக்கரஞ் செலுத்துகின்றான். எ - று.

மேற்படி வேறு.

உலகெ லாந்தனித் திகிரியி னலங்குதே ருருட்டிச்
சுலவு காரிருட் பிழம்பறுத் துயிர்கருள் சுரக்கு
மலரி வானவன் கச்சியின் மூவரிகொண் டாரனை
மலர்சி லம்படி யருச்சனை வரன்முறை வகுத்தான்.

(இ - ள்.) உலகங்களெல்லாவற்றிலும் ஒற்றைச்சக்கரத்தாலசைகின்ற தேரைச்செலுத்தி, அவ்வவ்விடங்களிற் சூழ்ந்துள்ள கருநிறந்தங்கிய இருளின் தொகுதியையகற்றி, சீவராசிகளுக்குக் கருணைசெய்கின்ற சூரியபகவான் காஞ்சிநகரில் தாமரைமலர்களால் சிவபெருமான் திருவடிகளை அர்ச்சனைசெய்து முறைப்படி பூசித்தான். எ - று. (௫௦)

ஏழ்ப சும்பரி நூகம்பிணித் தெழுதரு மிரவி
யூழி ருக்குநாண் மண்டல மெனப்பொலிந் தாற்றான்
பாழி மாநிலங் கைதொழப் பசுங்கதிர் பரப்பிக்
கேழ்கி ளர்ந்தெழு வடவரை வலம்வரக் கிடைத்தான்.

(இ - ள்.) ஏழென்னும் பச்சைக் குதிரையைத் தேரின் நுகத்திற்பூட்டி யாரோகணிக்கின்ற சூரியன், உலகமுடிவிற்குள்ள நாள்வரையில் மண்டலமென்று சொல்லும்படி விளங்கி யிருந்தான். வலிதங்கிய நிலவுலக முழுவதும் கைகுவித்து வணங்கும்படி இளங்கிரணங்களை வீசி நிறமிகுந்து உயர்ந்த மேருமலையைப் பிரதக்கணம் வரும்படிக்கும் வரம்பெற்றனன். எ - று. (௧௨)

திருந்து மாத்திரை யிருத்தைநாட் டிங்களாண் டிருது
பொருந்து காலமற் றியாவையும் புலப்படப் புரிந்தான்
கருந்த டங்கணா ளிடத்தரன் கண்ணெனச் சிறந்தா
னிருந்த கோட்கிறை தானெனப் பொலிந்தன னின்னும்.

(இ - ள்.) அன்றியும் திருத்தமாகிய மாத்திரை நாழிகை நாள் மாதம் வருடம் இருது பொருந்திய மற்றைக்காலபேதங்களும் அறிந்துகொள்ளும்படி செய்தனன், அல்லாமலும் கருநிறமெய்திப் பரந்த கண்களையுடைய உமாதேவியாரை வாமபாகத்திலுடைய சிவபெருமானுக்கு வலக்கண்ணென்று சொல்லும்படி சிறப்பெய்தினன். நவக்கிரகங்களுக்கும் தானே தலைவனென்று இன்னும் விளங்குகின்றான். எ - று. (௧௩)

கும்ப கோணத்து மழவிடை யிறைவனைக் குறுகிச்
செம்பொ னூடகப் பரிபுர சேவடி பூசித்
தும்பர் வெண்ணிலாக் கடவுண்மற றுடுக்களுங் கிறையாய்ப்
பம்பு வெண்கதி ரினியதெள் ளமுதெனப் பயந்தான்.

(இ - ள்.) கும்பகோணத்தி லெழுந்தருளிய இளமைதங்கிய இடபாரூடராகிய சிவபெருமானையடைந்து, மேன்மைதங்கிய வெள்ளிய சந்திரிகையையுடைய சந்திரன், ஆநந்தத்தாண்டவஞ்செய்யும் அவ்வெம்பெருமானது பசும்பொன்னாலாகிய பாதசரமணிந்த திருவடிகளை வழிப்பட்டு, நட்சத்திரங்கட்கிறைவனாய், விசேஷித்த வெண்ணிறந் தங்கிய கிரணங்களை இனிமை பெய்தித்தெளிந்த அமுதமென்று சொல்லும்படி பெற்றுக்கொண்டனன். எ - று.

மேருமால்வரை வலம்வரைக் கிடைத்தனன் விமல
னார்செழு முஞ்சடை யணிதரச் சிறந்தன னுலகத்
தோரெ லாந்தொழுந் தன்மைபெற் றுயர்ந்தன னெருங்கே
தேரி னின்னுயிர் குளிர்ப்புறச் சீதளஞ் சிறந்தான்.

இ - ள்.) பெரியமேருமலையைப் பிரதக்கணம் வரும்படியாகவும் பெற்றுக்கொண்டான். சிவபெருமானுடைய சடையில் தரித்துக்கொள்ளுஞ் சிறப்புமடைந்தான். உலகிலுள்ளவர்களால் ஒரேமாதிரியாய் வணங்குமியல்பும் பெற்று உயர்வடைந்தான். இன்னும் ஆலோசித்தால் இனிய ஜீவர்கள் குளிர்ச்சியெய்தும்படி குளிர்ச்சித்தன்மையில் மேம்பட்டான். எ - று. ([illegible])

பூம னன்னென்றிப் புந்திகன் வியாழமென் புனிதன்
வாம சுக்கிரன் கதிர்மக னிங்கிவர் மருதூர்
தோமில் கூடல்வே தாரணி பழமரச் சோலைக்
காமர் நன்னகர் திருவையா றடைந்தனர் கருதி.

(இ - ள்.) செவ்வாய், நன்மார்க்கமுடையபுதன், நன்மைதங்கிய வியாழன் என்னும் புனிதமானவன், அழகிய சுக்கிரன், சூரியகுமாரனாகிய சனி இவர்கள் முறையே திருவிடைமருதூர் குற்றமற்ற மதுரை திருமறைக்காடு ஆலமரச்சோலைகள் சூழ்ந்த அழகிய திருவாலங்காடு திருவையாறென்னும் ஐந்துக்ஷேத்திரங்களைச் சிந்தித்துச் சேர்ந்தார்கள். எ - று. (இக)

அரனை யேத்தினர் வான்முறை யருச்சனை யயர்ந்தா
ரிரவி மண்டலஞ் சந்திர மண்டல மிவற்றிற்
குரவு மேற்பதஞ் சிறந்தன ருலகெலா முவந்து
பரவி யேத்துறப் பொலிந்தன ரொழிந்தனர் பாவம்.

(இ - ள்.) ஆங்காங்கெழுந்தருளிய சிவபெருமானைத் துதிசெய்து பூசித்தார்கள். சூரியமண்டலம் சந்திரமண்டலமென்னும் இவ்விரண்டிற்கும் மேலாகிய உயர்பதவியிற் சிறந்தார்கள். பாவங்களெல்லாம் நீங்கப்பெற்றவர்களாய் உலகினர் யாவரும் சந்தோஷித்து வணங்கித் துதிசெய்யும்படி விளங்கினார்கள்.

நன்மை யாவன நளிகட லெடுநிலத் தெவர்க்கும்
புன்மை யாவன யாவையுங் கொடுப்பவப் புவியோ
ரின்மை சொற்றுநின் றேத்துற வெய்தின ரிவர்க
டொன்மை யோனடித் தாமரை வரன்முறை தொகுவார்.

(இ - ள்.) குளிர்ந்த கடல் சூழ்ந்த நெடிய நிலவுலகிலுள்ளார் யாவர்க்கும் நன்மையானவைகளும் தீமையானவைகளும் ஆகிய எல்லாவற்றையுங்கொடுத்துக்கொண்டிருத்தலால், உலகினர் தங்களுக்குவாய்த்த தரித்திரத்தைச் சொல்லித் தங்கள் திருமுன்னே நின்று துதிசெய்ய விருந்தார்கள். இவர்களெல்லாரும் புராதனராகிய சிவபெருமான் பாததாமரைகளை விதிப்படி பூசிப்பவர்கள். எ-று.

சொற்ற வேழ்வரி லிருவருஞ் சுராசுரர்க் குணர்த்தப்
பெற்ற டைந்தனர் மறைமையோர் பெருமையிற் சிறந்தார்
கொற்ற முத்தலை யயிற்படைக் குழகனுக் கினிதி
னுற்ற பூசனை பவித்திர பெருமையா ருரைப்பார்.

(இ - ள்.) ஈண்டுச் சொல்லிய சத்தகிரகங்களுக்குள்ளே வியாழன் சுக்கிரனென்னுமிருவரும் முறையே தேவர்க்கும் அசுரர்க்கும் உபதேசிக்குந்தன்மையெய்தி ஆசாரியர்களானார்கள். மற்றைய ஐவரும் மிகமேம்பட்டார்கள். ஆதலால் வெற்றிபொருந்திய முத்தலையுள்ள சூலாயுதந்தாங்கிய சிவபெருமானுக்கு இனிமையாகப்பூசிக்கின்ற வழிபாட்டின் புனிதமான மேன்மையை எவர்தாஞ் சொல்லுவார்? எ - று. (இக)

அத்திரி மாதவக் கோசிக னத்திரி சிவன்றாட்
போத னார்ந்தறி கவுதமன் பரத்துவன் புலமை

மூறு முஞ்சம தக்கினி வசிட்டன்முற் றுணர்ந்து
வேத மோர்ந்தறி காசிப னெனப்படு மேலோர்.

(இ - ள்.) குற்றமற்ற பெருந்தவமுடைய விசுவாமித்திரர்-அத்திரி-சிவபெருமான் பாததாமரைகளைத் தெளிந்துணர்ந்த கௌதமர்-பரத்துவாசர்-அறிவின் மேன்மை தங்கிய சமதக்கினி- வசிட்டர்-வேதமுழுவதுமோதித் தெளிந்துணர்ந்த காசிபர்-என்று சொல்லப்பட்டமேலோர்கள். எ - று. (௬௦)

இன்ன மாதவ முனிவர ரேழ்வரு மெதிர்ந்து
பொன்ன லங்குசிற் றம்பலத் தரனடி பூசித்
துன்ன ருங்கலை யாகம முதலமுற் றுணர்ந்தார்
துன்ன ருங்கிர கங்கட்கு மேற்பதந் தொக்கார்.

(இ - ள்.) இத்தகைப் பெருந்தவமுடைய சத்தமுனிவரும் பொன்மயமாய் விளங்கும் திருச்சிற்றம்பலமெய்தி, ஆங்கெழுந்தருளிய நடராசப்பெருமான் பாதங்களை யர்ச்சித்து, எண்ணுதற்கும் அரிய நூல்கள் ஆகமங்கள் முதலியவற்றைமுற்றுந்தேர்ந்தார்கள் அடைதற்கரிய மேற்கூறிய கிரகங்களுக்கும் மேம்பட்ட பதவியை யடைந்தார்கள். எ - று. (௬௧)

காலம் யாவையு மளவைகண் டொழித்திறு கடைபோய்ப்
பால லோசனன் பதம்பெறு தன்மையும் பயந்தா
ரால கண்டன திணையடி யருச்சனை யயர்ந்து
மூல நாயக னளித்தன வின்னமு மொழிவாம்.

(இ - ள்.) காலங்களையெல்லாம் அளவிட்டுக்கழித்த இறுதியிற்போய், நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் திருவடியை யடைகின்றதன்மையையுமெய்தினார்கள், விஷம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான் உபயபாதங்களைப் பூசிப்போருக்கு முதற்கடவுளாகிய அப்பெருமான் திருவருள் பாலித்தனவாகிய சரிதங்களை யின்னுஞ்சொல்லுகின்றோம். எ - று. (௬௨)

நிரந்த வார்கட னெடுநிலப் பரப்பெலா நிழற்றிப்
பரந்த வெண்குடை வேந்தனுத் தரன்பர தனுக்குப்
புரந்த வில்லற மாட்சியிற் புகுந்தன ரிருவ
ரரங்க டிந்தம்வற் றடங்கணா மடப்பிடி யனையார்.

(இ - ள்.) வரிசையாய் நீண்ட கடல்சூழ்ந்த பெரிய நிலவுலகமுழுவதையும் நிழல்செய்து பரவிய வெண்கொற்றக்குடையுடைய மன்னனாகிய உத்தானபாதனுக்கு அரத்தைக்கோபிக்கும் வேல்போன்று பரந்த கண்களுடையவர்களும் இளமைதங்கிய பெண் யானைபோலும் நடையையுடையவர்களுமாகிய இரு மாதர்கள் பரிபாலிக்கின்ற மனைக்கிழத்தியராகச்சேர்ந்தார்கள். எ - று. (௬௩)

இருவ ரீங்கிவ ரிருந்தவ மரிதிழைத் தீன்ற
கருணை மைந்தரோ ரிருவரக் காண்முளை யவரின்
மருவு மின்னவண் மதலையம் மணிமுடி வேந்தன்
றிரும டித்தலை யிருத்தலுஞ் சீறினண் மூத்தாள்.

(இ - ள்.) இவ்விருமனைவியரும் பெருந்தவத்தை அரிதாகச்செய்து பெற்ற இருமையுள்ள புதல்வரிருவரிருந்தனர். அப்புதல்வரிருவருள்ளே கலந்திருக்கும் இளைய பாரியையாகிய சுநீதியென்பாள் புதல்வன், இரத்தினகிரீடமணிந்த அம்மன்னனுடைய அழகிய மடியின்மேலுட்கார்ந்த மாத்திரத்தில், மூத்தவளாகிய சுருதியென்பாள் கோபமெய்தினள். எ - று. (௬௪)

சில்ல ரிச்சிலம் பரற்றுற வோடினள் சென்றாள்
மல்ல லம்புயத் தவன்றிரு மடித்தலை யிருக்குஞ்
செல்வ னைக்கரந் தொட்டிழுத் தகற்றினள் சினத்தால்
வல்லை கொண்டுதன் சிறுவனை யிருத்தினள் மடியில்.

(இ - ள்.) சிறு பருக்கைகள் பொருந்திய பாதசரம் ஒலிக்கும்படி யோடிச் சென்று, அழகு மிக்க தோளையுடைய அம்மன்னவன் சிறந்த மடியிலிருந்த புதல்வனைக் கோபத்தோடு கையைப்பற்றி யீர்த்து நீக்கிவிட்டாள். உடனே அதிவிரைவில் தன் மகனை யெடுத்துக்கொண்டு சென்று அம்மன்னவன் மடியின் மேல் உட்காரவைத்தாள். எ - று. (௬௫)

அழுது கண்பிசைந் தடிக்கடி பொருமின னவனை
யெழுத ருங்குடை வேந்தவை நோக்கில னிரங்கி
விழுமெ ழுந்தனை யின்றவட் குரைத்தனன் வீழ்ந்து
புழுதி மெய்படப் புரண்டனன் பொறுக்கலன் புதல்வன்.

(இ - ள்.) (அப்படி இழுத்துவிடப்பட்ட துருவன்) கண்ணைப்பிசைந்து கொண்டழுது அடிக்கடி வெம்பினான். ஓங்கிய வெண்கொற்றக் குடையையுடைய மன்னவன் அவற்றையெல்லாம் பார்க்கவேயில்லை. அதன்பின்னர், அப்புதல்வன் விழுவான் எழுவான் இப்படித் துக்கப்பட்டு, தன் தாய்க்கு இச்செய்தியைச் சொல்லி, அப்புத்திரன் துருவன் சகிக்கமுடியாதவனாய் நிலமிசைவிழுந்து புழுதி யெல்லாம் உடலிற் படும்படி புரண்டான். எ - று. (௬௬)

எடுத்தெ டுத்தணைத் தாற்றினள் மடித்தலை யிருத்தித்
தொடுத்த ளிர்க்கையாற் கட்புனல் [illegible] துடைத்துப்
பொடிப்பு ரண்டன நீவின ளகம்பொ[illegible] பொருமி
வடித்த டங்கணாள் மைந்தனுக் கி[illegible] வகுப்பாள்.

(இ - ள்.) மாவடுவைப்போன்று விசாலித்த விழிகளையுடைய சுநீதி யென்பாள். (அப்படிப் புரண்ட புத்திரனை) எடுத்தெடுத்தணைத்துக்கொண்டு அழுது தன் மடியில் வைத்துக்கொண்டு வளையலணிந்த தளிர்போலுங் கைகளால் புதல்வன் கண்ணீரை அடிக்கடி துடைத்து, நிலமிசைப்புரண்டதாற்படிந்த புழுதி நீங்கத்தடவிக்கொடுத்து, மனஞ்சகியாது துக்கித்து இவ்வண்ணமாகச் சொல்லுவான். எ - று. (௬௭)

என்னை செய்துமற் றுந்தைதன் னிலையறிந் திவட்குத்
தன்னை யீந்தனன் மன்மய றன்னுறத் தளர்ந்தா
னுன்னை நோக்கல னுளநெகிழ்ந் தானல னுனக்குப்
பின்னல் வேணியோன் றிருவரு ளிரங்குமேற் பிழைத்தி.

(இ - ள்.) யாது செய்வோம்? உன் தந்தை தன் நிலைமை கெட்டு மூத்தவ ளாகிய சுருதிக்குத் தன்னைக்கொடுத்துவிட்டார். மனத்திற்றோற்றும் அவன் மயக்கம் ஆட்டுவிக்க வருந்தினர். ஆதலால் உன்னைப்பார்க்கவில்லை. மன்று மிரங்கவில்லை இனி உனக்குப்பின்னிய சடையையுடைய சிவபெருமான் திருவருளிரங்குமாயின் கடைத்தேறுவாய். எ - று. (௬௮)

அந்தி வண்ண னுக் கருச்சனை புரிந்தன ளாகி
மைந்த னோடுயர்ந் திழைத்தன ளீது காண் மகனே
முந்தை வானவர் யாரினு முதன்மையோ ராதற்
கெந்தை நல்லரு ளல்லவேன் முடிவதொன் றில்லை.

(இ - ள்.) அந்திவண்ணராகிய சிவபெருமானுக்குப் பூசை செய்பவளாய்த் தன் புதல்வனோடு சிறந்து செய்தாள். மகனே! இதுவே முதன்மையாகிய தேவர்களெல்லாரினும் முதன்மையராதற்குரிய எமது சிவபெருமானுடைய திருவருளையெய்தும் வழி இப்பூசை இல்லையாயின் முடியத்தக்க காரியம் ஒன்று மில்லையாம். எ - று. (௬௯)

ஆயி னெம்பிரான் மலரடி யருச்சனைக் குரித்தாய்
நீயும் வேண்டுவ யாவையும் பெறுகென நிகழ்த்தப்
போயி னன்சிறு புதல்வனுங் காசியுங் கடைந்தான்
பாய வெள்விடை யவனடி யருச்சனை பயின்றான்

(இ - ள்.) ஆனால் நீயும் எம்பெருமானுடைய செந்தாமரை மலர்போலும் பாதங்களின் பூசைக்குரியவனாய் வேண்டியவற்றையெல்லாம் பெறக்கடவா யெனச்சொல்ல, இளங்குமரனாகிய துருவனும் அப்படியே காசிக்ஷேத்திரஞ் சென்று சேர்ந்து பாய்ந்துசெல்லும் வெள்ளிய இடபாரூடராகிய சிவபெருமான் திருவடிகளைப் பூசைசெய்துவந்தான். எ - று. (௭௦)

சிறுவ னின்னண மருச்சனை புரிதலுஞ் செழுநீர்
மறுவ றும்பிறை வேணியோன் மழவிடை யுகைத்துக்
குறுகி னானவட் குறுகலு மென்புறக் குழைந்தான
பெறல ரும்பதத் தாமரை வீழ்ந்தனன் பிள்ளை.

(இ - ள்.) துருவன் இப்படி அர்ச்சனைசெய்யவும், செழியகங்காசலத்தையும் குற்றமற்ற இளம்பிறையையு மணிந்த சடையையுடைய சிவபெருமான், இளமைதங்கிய இடபவாகனமூர்ந்து அங்கெழுந்தருளினர். எழுந்தருளவும் அப் புதல்வன் எலும்பும் நெக்குவிடும்படி மனமுருகி, அடைதற்கரிய அவருடைய பாதகமலங்களில் வணங்கினான். எ - று. (௭௧)

ஆடி னானழு தான்சிரித் தானழு தாடிப்
பாடி னானின்று பற்பல கூறினன் பகர்ந்தா
னோடி னான்குதித் தான்மயிர்ப் புளகெறிந் துயிர்த்தான்
வீடி னான்பிழைத் தானெனுந் தன்மையின் வியந்தான்.

(இ - ள்.) ஆனந்தக் கூத்தாடினான், சிரித்தான், புலம்பிக்கூத்தாடித் துதித்தான், நேரில் நின்றுபற்பலவார்த்தைகளாகக் கூறிக்கூறினான், ஓடினான், குதித்தான், மயிர்க்கூச்செறிந்து பெருமூச்சுவிட்டான். இறந்தான் உயிர்பெற்றானென் றுசொல்லத்தக்க தன்மையுடையவனாய் ஆச்சரியமெய்தினான். எ - று.

றுக்க ணோக்கினன் முகிணகை பூத்தன னிவனை
யொக்க நோக்கினன் வேண்டிய வுணர்த்தென வுணர்த்த
நெக்க சிந்தைய னுச்சிகை கூப்புற நின்றான்
மிக்கெ ழுந்தபே ருவகையா னினையன விளம்பும்.

(இ-ள்.) திரிநேத்திரங்களின் பார்வையுடைய சிவபெருமான் புன்னகை கொண்டவராய் இச்சிறுவனை ஒருமையாகப் பார்த்து உனக்கு வேண்டியவரத்தைத்தெரிவிக்கவெனக் கேட்க, உருகிய மனமுடையவனாய், உச்சிமேற்கை கூப்பிக்கொண்டுநின்று, அதிகரித்தெழுந்தபேரானந்தத்தால் இப்படி விண்ணப்பிக்கின்றான். எ-று. (௭௩)

துவர்க்கொ ழுங்கொடி வேணியோய் நின்னடி தொழுதே
னெவர்க்கு மேற்படு பதவியின் றருளுதற கெனலும்
கவர்த்த முத்தலைச் சூலிமற் றுங்கது கருதி
நிவப்பு றுங்கன காசலப் பீடிகை நிறுவி.

(இ-ள்.) பவளத்தின் கொழுவிய கொடிபோலுஞ் சடையையுடைய சிவபெருமானே! எல்லோருக்கும் மேம்பட்டபதவி யின்று பெறுதற்காகத் தேவரீர் பாதங்களைப் பணிந்தேனென்று விண்ணப்பிக்கவும், கிளைத்த முத்தலைகளையுடைய சூலப்படையேந்திய சிவபெருமான அதனைத் திருவுள்ளங்கொண்டு, அதியுன்னதமான மேருமலைபோன்ற ஆசனமமைத்து. எ-று. (௭௪)

நின்ற கோட்களு முனிவரெழுவரு நிற்க
வொன்றி மேற்படு பதவிபெற் றுயர்ந்துற வுதவி
யென்றும் வெண்மதிக் கடவுளுங் கிரகங்கள் யாவு
மின்று மன்னவன் பணிப்படி திரிதர விசைத்தான்.

(இ-ள்.) நிலைத்துள்ள கிரகங்களும், சத்தமுனிவர்களும் நிற்கும்படிபொருந்தி, அவற்றிற்கு மேம்பட்ட பதவியைப்பெற்று மேன்மையெய்தும்படி பாலித்து, சந்திரனும் ஏனைக்கிரகங்கள் யாவும் எப்பொழுதும் அத்துருவன் கட்டளைப்படி சஞ்சரிக்கும் வகையாக இன்றைய வரையில் கட்டளையிட்டனர். எ-று.

கால சக்கர முதலிய வரங்களுங் கருதிப்
பால லோசன னளித்தருங் கயிலையிற் படர்ந்தான்
சால்பு றுந்தனித் துருவனென் றொருபெயர் தரித்தான்
மேனு றும்பதத் தின்னமு மிருந்தனன் வியப்பால்.

(இ-ள்.) காலசக்கரமுதலிய வரங்களையுங் கொடுப்பதற்கு நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் திருவுளங்கொண்டருளிப் பாலித்து, சிறந்த கைலாயகிரிக்கெழுந்தருளினர். அதன்பின் அவன் ஒப்பற்றமேன்மைதங்கிய துருவனென்னும் ஒரு பெயரையும்படைத்தான். மேம்பட்ட அப்பதவியில் இன்னும் சந்தோஷத்தோடிருக்கின்றனன். எ-று. (௭௬)

திருக்கு டந்தையி னெம்பிரான் சேவடி பூசித்
துருக்கு சிந்தையி னுரகர்கோ னெடுநிலை மனைத்து
மிருக்க வெம்பண மாயிர மெடுத்தன னிருந்தான்
அருந்தி ஞேர்ந்தறி கலையெலா மொருங்குறக் களித்தான்.

(இ - ள்.) நாகராசனாகிய ஆதிசேடன் கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் எமது சிவபெருமான் பாதங்களை நெக்குவிட்ட மனதோடுவழிபட்டு, நெடிய நிலவுலகமுழுவதையும் தாங்குதற்குப் பெரிய ஆயிரம் பணாமுடிகளைப் பெற்றான். அன்றியும் நூல்களெல்லாவற்றையும் மனதினால் முழுவதும் சிந்தித்துத் தெளிந்து சந்தோஷித்தான். எ - று. (௭௭)

புரித்த வேணியெம் பரமனை யருச்சனை புரிந்து
தெரிப்ப ரும்பத மடைந்தன ரெண்ணிலர் சிறந்தார்
தரித்த மாதவத் தலைவிர்கா ளாங்கவர் தன்மை
விரிக்கி னெம்முறை யடங்குமோ யார்கொலோ விரிப்பார்.

(இ - ள்.) முறுக்கிய சடையையுடைய எமது சிவபெருமானை வழிபட்டு, தெரிதற்கரிய பதவிகளடைந்து எண்ணிறந்தவர்கள் சிறப்பெய்தினார்கள். பெருந்தவப்பயன் பெற்றுள்ள நைமிசாரணிய முனிவர்களே! அத்தகையினரியல்பை விரித்துச் சொல்லவேண்டுமாயின் எமது தரத்தில் அடங்குமோ? அல்லதுவேறெவர்தாஞ் சொல்லுவார்கள். எ-று. (௭௮)

படப்பெ ரும்புவி யிலிங்கமும் பால்வளை கோலி
நடத்து வெண்டிரைப் பொன்னியே முதலிய நதிப்பா
லிடத்தி லிங்கமும் வடவரை முதலவெற் பெல்லா
மடுத்த லிங்கமும் பவித்திர மெனத்தொழு தடைந்தார்.

(இ - ள்.) ஆதிசேடன் தன் பெரிய படத்தாற் சுமக்கும் நிலவுலகில் திவ்விய க்ஷேத்திரங்களிலுள்ள சிவலிங்கங்களும், வெள்ளிய சங்குகளைக்கரையிலொதுக்கிப்பாயும் வெள்ளிய அலைகளையுடைய காவிரி முதலிய திவ்வியநதி தீரத்தில் வீற்றிருக்குஞ் சிவலிங்கங்களுந் தூய்மையுடையனவென்று வணங்கிப்பேறெய்தினார்கள். எ - று. (௭௯)

தேவர் கின்னர ரியக்கர்கிம் புருடர்காந் தருவர்
மேவ ருந்தவ முனிவரர் சித்தர்வெள் ளெயிற்றுப்
பாவ காரிய நிருதர்வித் தியாதரர் படப்பாம்
பாவ தாகிய வெண்மரு மருச்சனை யயர்ந்தார்.

(இ - ள்.) தேவர்கள் கின்னரர்கள் இயக்கர்கள் கிம்புருடர்கள்கந்தர்வர்கள் அடைதற்கரிய தரத்தையுடைய முனிவர்கள் சித்தர்கள் வெள்ளியபற்களையுடையவர்களாகிய பாவச்செயல்களையுடைய நிருதர்கள் வித்தியாதரர்கள் படம்பொருந்திய அஷ்டமாநாகங்களாகிய இவர்களெல்லாரும் சிவலிங்கார்ச்சனை செய்தார்கள். (௮௰)

கருடர் மானிட ரரக்கர்மண் புரந்தருள் கமஞ்சூல்
வருட மெண்டிசை மதவரை மால்வரைக் குலங்கள்
பொருவ ரும்பதம் புகுந்தது மருவலர் புரந்தீத்
தொருவு மெம்பிரா னருச்சனை யன்றிவே றுளதோ.

(இ - ள்.) கருடர் மானுடர் அரக்கர் உலகினைக்காக்குஞ் சூல்நிறைந்த மேகங்கள் வருடம் அஷ்டதிக்குகள் அஷ்டகஜங்கள் அஷ்டகுலபர்வதங்களாகிய இவை நிகரற்றபதவியிற் சேர்ந்ததும், பகைஞராகிய முப்புரங்களை யெரித்தொழித்தருளிய எமது சிவபெருமான் அர்ச்சனையினாலன்றி வேறொன்றனாலுண்டோ?

முத்தி நான்கினைத் தருமமே முதலிய நான்கி
னெத்தை வேண்டின ராங்கவ ரெய்துதற் கரிதோ
வத்த னுடகப் பரிபுரச் சேவடிக் கமைந்த
சுத்தி கொண்டிருந் தருண்முறை யருச்சனை தொகுப்பின்.

(இ - ள்.) புனிதராகிய சிவபெருமானுடைய பொன்னாலாகிய பாதசரமணிந்த பாதங்களுக்குரிய புனிதம்பொருந்தியிருந்து அவ்விறைவனருளிய ஆகமமுறைப்படி சிவலிங்கார்ச்சனை செய்வார்களாயின், (சாலோகமுதலிய) நால்வகை முத்திகளினும் தருமமுதலிய சிறந்த நால்வகைப்புருஷார்த்தங்களிலும் எவரெவர் எவ்வெவற்றை அபேக்ஷித்தாலும் அவரவர் அவ்வவற்றையடைதற்கு மரிதோ? எ - று. (௮௨)

மன்னர் மன்னராய் நெடுநில மன்பதை புரப்பா
ருன்ன ருங்கதி புகுந்திருந் தின்னல முவப்பார்
பின்னர் மைந்தராய் மாநிதிப் பெருக்கினாற் சிறந்தா
ரென்னை யாளுடை நாயகன் பூசனை யிழைத்து.

(இ - ள்.) என்னையாளாகவுடைய சிவபெருமான் பூசையைச்செய்து பின்னர் வலியுடையவர்களாய், பெருஞ்செல்வப்பெருக்காற் சிறப்பெய்தி, மன்னர் மன்னராகி நெடிய நிலவுலகிலுள்ள பிரஜைகளைப் பாதுகாத்து எண்ணுதற்கரிய பதவிகளிற் சேர்ந்திருந்து இனிதாக இன்பத்தை யநுபவிப்பார்கள். எ - று.

அலங்கு பேரழ கருநிதி யசத்திய மின்மை
நலந்த ருங்கொடை சீர்த்திசெய்ந் நன்றியோர்ந் தறித
லுலம்பொ ருங்களி றுடலம் புரவிதே ரொலிநீர்
வலங்கொண் மாநகர் மாளிகை யளவொழி வளங்கள்.

(இ - ள்.) விளங்குகின்ற மிக்க அழகும், பெருஞ்செல்வமும், அசத்தியமின்மையும், நன்மையைத்தரும் கொடையும், சிறப்பும், செய்ந்நன்றியறிந்துதெளிதலும், திரண்டகல்லை யொத்தயானையும், வெற்றிதங்கிய அழகிய குதிரையும், தேரும், ஒலிக்கின்ற நீர்வளந்தங்கிய பெரிய நகரமும், மாளிகையுங் கணக்கற்ற வளங்களும். எ - று. (௮௪)

உரைத்த வீங்கிவை யாவையும் மெம்பிராற் குவகை
யிரைத்தெழும்படி வரன்முறை யருச்சனை யிழைத்தார்
கரைத்த வன்பொடும் பெற்றனர் கணக்கில ரன்னோர்
விரைத்த மென்மலர் பூசையிற பெற்றன விரிப்பாம்.

(இ - ள்.) ஆகிய மேற்சொல்லிய இவற்றையெல்லாம், எமது சிவபெருமானுக்குச் சந்தோஷமுண்டாகும்படி விதிப்படி அர்ச்சனை புரிந்தவர்களாய் அன்போடும் அடைந்தவர்கள் கணக்கில்லாதவர்களாவார்கள். அத்தன்மையர் மணந்தங்கியமெல்லிய மலர்களானர்ச்சித்தமையாற் பெற்றபேறுகளை விளக்கிச்சொல்லுவோம். எ - று. (௮௫)

ஆதி நாளையிற் பாற்கடற் பாப்பணை யமலன்
மாது பாகனை மலரடி யருச்சனை வருத்தா

ரேஞ்த வேலைநீ ருலகெலா மொருகுடை நிழற்றிப்
பேதை மாரொடுஞ் சிறந்தனன் பெருநிதிப் பெருக்கான்.

(இ - ள்.) பண்டைக்காலத்தில், பாற்கடலிற் சேஷசயனத்திலெழுந்தருளிய திருமால் உமாசமேதனுகிய சிவபெருமானை அவரது தாமரைமலர்போன்ற பாதங்களில் அர்ச்சித்தார். குளிர்ச்சிவாய்ந்த கடல் நீர் சூழ்ந்த உலகமுழுவதையும் ஒப்பற்றவெண்குடை நிழல்தரச்செய்து, பத்தினிமாருடன் பெருஞ்செல்வப்பெருக்கினுற் சிறப்பெய்தினர். (௮௬)

செருக்கி ருந்தவா வுணர்ந்தவோ ரருந்தவச் செல்வ
னுருத்த லாலர சொழிந்துமா நிதிப்பெருக் கொழிந்தா
னெருக்கு வார்சடை யெம்பிரா னருச்சனை யியற்றித்
திருந்து மாநிலத் தரசொடு முன்னலிற் சிறந்தான்.

(இ - ள்.) (அப்படியரசுபுரிகையில்), அரசச்செல்வத்தாற் கர்வித்திருந்ததை யுணர்ந்த அருந்தவமுடைய ஒருமுனிவர் கோபித்தலால் அரசாட்சியையும் பெருஞ்செல்வப் பெருக்கையும் ஒழிந்தார். எருக்கமாலையணிந்த நெடியசடையையுடைய எமது சிவபெருமானைப்பூசித்து, திருத்தமாகிய பெரிய நிலவுலகத்தின் அரசாட்சியோடு (செல்வத்திலும்) முன்னிருந்ததைக் காட்டிலும் மேம்பட்டனர். எ - று. (௮௭)

மடலொ ராயிரத் தாமரைப் பொகுட்டுறை மறையோன்
கடவுண் மாப்பதி காழியிற் கண்ணுதற் பரனைப்
புடவி போற்றுறப் பூசனை நாள்பல புரிந்தான்
படவ ரவணி சென்னியோ னெதிர்நது றப் பணிந்தான்.

(இ - ள்.) ஆயிரவிதழ்களையுடைய செந்தாமரைமலரி லெழுந்தருளியிருக்கும் பிரமன் சிறந்த தெய்வீகந்தங்கிய க்ஷேத்திரமாகிய சீகாழியில் எழுந்தருளியிருக்கும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை உலகினர் துதிக்கும்படி பலதினங்கள் பூசைசெய்தான். படந்தங்கிய சர்ப்பத்தையணிந்த சடையையுடைய சிவபெருமான் தரிசனந்தந்தருள வணங்கினன். எ - று. (௮௮)

அருத்தி கூர்தர வெம்முழை யருச்சனை யயர்ந்தாய்
கருத்தி னோர்ந்தன வெதுவெனக் கண்ணுதல் வினவ
மருத்த வார்சடைப் புங்கவ வாணவ மயக்காற்
செருக்கெ ழுந்தன னதுகொடு வயிரவச் செல்வன்.

(இ - ள்.) ஆசையதிகரிக்கும்படி நம்மைப்பூசித்தாய். உன்மனதில் இச்சித்தவை எவையென்று நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் வினவியருள, மணம் வீசும் நெடிய சடையையுடைய கடவுளே! ஆணவமயக்கத்தினுல்மயங்கிக் கர்வித்திருக்தேன். அதனுலே வயிரவக்கடவுள், எ - று. (௮௯)

சிந்தை சீறியென் சிரத்தினோர் சிரங்குறைத் தெழுந்த
னந்த காண்முத லின்றுகா றவலமுற் றடைந்தே
னெந்தை யாருயிர் படைப்பன மயங்கினே னெனக்கு
முந்து செய்வினை முயற்சிதந் தருளென மொழிந்தான்.

(இ - ள்.) மனங்கொதித்து அடியேன் சிரங்களில் ஒருசிரத்தைக் கிள்ளிச் சென்றனர். அன்று தொடங்கி யின்றுவரையில் அயர்முழுவது மறுபவித்தேன், எந்தையே! ஆன்மவர்க்கங்களைச் சிருஷ்டிசெய்யுந்தொழில் புரிதலின்றி மயங்கினேன். அடியேனுக்கு முன்னைய சிருஷ்டித்தொழிலின் முயற்சியை இப்போது தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். எ - று. (௯௦)

அயனு ரைத்தசொற் கேட்டலு மெம்பிரா னவற்கு
மயர்வொ ழிந்துற வரம்புரிந் தகன்றனன் மறையோன்
கயனெ டுங்கட லுலகமும் பல்லுயிர்க் கணமும்
பயமொ ழித்துவீற் றிருந்தனன் முன்னரிற் படைத்தான்.

(இ - ள்.) பிரமன்கூறிய வார்த்தையைக் கேட்டவுடனே, எமது சிவபெருமான் அவனுக்குமயக்கமகலும்படி வரந்தந்துமறைந்தருளினர். பிரமன் அதன் பின்னர், ஆழமான நெடிய கடல்சூழ்ந்த உலகங்களையும் அவற்றில் வாழும் பலசீவராசிகளையும் பண்டுபோற்படைத்துக்கொண்டு பயமற்றவனாயிருந்தான். எ - று.

அரிக்கு மாயிரந் தோட்டுடை யம்புயத் தவற்குங்
கரித்த சிங்கையி னாணவ மீக்கொளக் கனன்றூர்
தெரித்த நான்மறை பிரணவ மீங்கிவை தெரியா
விரித்து ணர்த்திமற் றவரடு போரமர் விலக்கி.

(இ - ள்.) ஒருகாலத்தில் திருமாலுக்கும் ஆயிரம் இதழ்களையுடைய கமலாசனத்திலுள்ள பிரமனுக்கும் ஆணவமலம் அதிகரித்தபடியால், கடுங்கோபமித்த மெய்யினவர்களாய்ப் போர்செய்தார்கள். அப்போது நான்குவேதங்களும் அவற்றிற்குக் காரணமாகிய பிரணவமும் இப்படிப்போர்செய்வதுணர்ந்து தெளிவாகக்கூறி அவர்கள் செய்யும் பெரும்போரைத்தடுத்து. எ - று. (௯௧)

பாரை யாருயிர்ப் பரப்பினைப் பகிரண்டப் பரப்பை
மேரு மால்வரை முதலிய வெற்பினை விரிந்த
நீரை வானவ ரெவரையு மீன்றய னின்றா
னோரி னன்னவன் யாவனென் றுணர்ந்திலீர் போலும்.

(இ - ள்.) உலகத்தையும் அரிய ஆன்மகோடிகளையும் அண்டகோடிகளையும் பெரிய மேருமலைமுதலிய மலைகளையும், பெருகியகடலையும், தேவர்களெல்லாரையும் படைத்து இவற்றிற்கு அயலாயிருக்கின்றான். உணருமிடத்தில் அத்தகையினன் யாவனென்றுணர்ந்தீர்களில்லை போலும். எ - று

என்று ரைத்தன யாவையு மாணவச் செருக்கா
லொன்று மோர்ந்திலா ரன்னவை யெம்பிரா னுணரக்
கன்று வெஞ்சின வயிரவக் கடவுளைக் காட்டிச்
சென்று நீயவர் செருக்கொழித் தருளெனச் சென்றான்.

(இ - ள்.) என்று பலவுங்கூறின. ஆணவமலத்தால் ஒன்று முணர்ந்தார்களில்லை. அதனை யமது சிவபெருமானறிந்து, கடுங்கோபமுடைய வைரவக்கடவுளைத் தோற்றுவித்து, நீபோய் அவர்கள் இறுமாப்பைவிலக்கிவிடு வென்கட்டளையிடவும் அவர் அங்ஙனமே சென்றனர். எ - று. (௯௨)

விரவு நான்மறை யந்தணன் றன்னுழை வெகுண்டோர்
சிரம ரிந்தெழு செங்நிறக் குருதியந் திரைநீர்க்
கரக பாலத்தி னேற்றலுங் கரந்ததக் கபாலத்
திரள்கு றுந்துளி யொன்றெனு மில்லையச் சிரத்தில்.

(இ - ள்.) கலந்த நான்குவேதங்களையுமுணர்ந்த பிரமன்பாற் சினமெய்தி, அவனுடைய ஒருதலையை யறுத்து, அப்போதே பெருக்கெடுத்த செந்நிறமுடையதாய் அலைகள்மோதும் உதிரநீரை, தமதுகையிற்றாங்கியிருந்த கபாலத்திலேற்றுக்கொண்டவளவில் அவ்வுதிரமுழுவதுங்கபாலத்திற்சுவறியது. அதன்பின், உதிரத்தின் திரட்சியான சிறுதுளி ஒன்றும் அக்கபாலத்திலில்லை.

வேத நான்முகன் மயக்கமுற் றந்நிலை வீழ்ந்தான்
காது சூற்படை வயிரவ னங்கது காணுப்
போத மன்னவற் களித்தரி நாட்டகம் புகுந்தான்
றூது லாந்துழாய் நெடுமுடி யவற்கெதிர் சார்ந்தான்.

(இ - ள்.) வேதமுணர்ந்த பிரமன் அப்பொழுதேமயக்கமெய்தி விழுந்தான். கொலைசெய்யுஞ் சூலாயுதந்தாங்கிய வைரவக்கடவுள் அதனைக்கண்டு அப்பிரமனுக்கு மயக்கமகல அறிவுதந்து வைகுந்தமடைந்து, மகரந்தப்பொடிகள் நெருங்கிய துளவமாலையணிந்த நீண்டதிருமுடியை யுடைய திருமாலுக்கெதிரே சென்றனர். எ - று. (கசு)

முத்த லைக்கழு வாங்கவ னெற்றியின் முற்றக்
குத்தி யேற்றினன் மடமடத் தொழுகிய குருதி
பத்த வாயிர மாண்டது கபாலத்துப பாய்ந்த
மத்த மாமத மொழிந்துற மயங்கினன்மாயன்.

(இ - ள்.) முத்தலைபொருந்திய சூலத்தினால் அத்திருமாலின் நெற்றியிலழுந்தும்படி குத்தியழுத்தினார். மடமடவென்று பெருகிய உதிரமானது தேவவருஷத்திற் பதினாயிரவருஷ மொழுகியது. அவ்வுதிரமுழுவதும் அக்காலத்திற் பாய்ந்து உன்மத்தம் போன்றிருந்த பெருங்கர்வம் நீங்கிய மாத்திரத்தில் திருமாலும் மயக்கமெய்தினர். எ-று. (கஎ)

பாய்ந்த சோரியைக் கபாலமும் பசையறப் பருகக்
காய்ந்த வெவ்விரும் பொழுக்கிய புனலெனக் காணு
ஞேய்ந்த மாயவற் குணர்ச்சிதந் தகன்றன னுரவோ
னேய்ந்த வெஞ்செருச் செருக்கொழிந் திருந்தன ரிவர்கள்.

(இ - ள்.) அப்படிப் பாய்ந்த வுதிரத்தை அக்கபாலமே பசையறக்குடித்துவிட, கொல்லனுலையிற் காய்ச்சிய இரும்பில் வார்த்த நீரைப்போலக் காணுதலுய், உணர்வற்றிருந்த திருமாலுக்கு வைரவக்கடவுள் மறுபடியும் உணர்வுகொடுத்து எழுந்தருளினார். கடும்போர்க்குக் காரணமாயிருந்தகர்வத்தை இவர்களிருவரும் நீங்கியிருந்தார்கள். எ - று. (கஅ)

என்னெ னப்படு மாணவப் பாதகமிறப்ப
மன்னு தண்பணை மாயீரு தாரிடை மாயோன்
முன்ன வற்பணிந் தருச்சனை புரிந்தனன் முறையாற்
பொன்னின் வார்சடை யெம்பிரா னவற்கருள் புரிந்தான்,

(இ - ள்.) ஏன்னென்று சொல்லப்படும் ஆணவத்தாற் சம்பவித்த பாதகம் நிவாரணமாம்படி, நிலைபெற்றிருக்கும் குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த சிறப்புற்ற திருவிடைமருதூரென்னுந் தலத்தில், தலைவராகிய சிவபெருமானைத் திருமால் வணங்கி முறைப்படி அர்ச்சித்தனர். பொன்போல நீண்ட சடையையுடைய எமது சிவபெருமான் அவ்விண்டுவுக்குத் திருவருள்செய்தனர். எ - று. (௯௯)

தானலா திலையெனவுணர் பாதகந் தவிர்ந்து
மேனிலத்தவை குண்டமுற் றடைந்தனன் விமலன்
கானநாண்மலர்ப் பழமறைப் பீடிகைக் கடவு
ளேனை மாமுக நான்கொடு மிருந்தன னின்னும்.

(இ - ள்.) திருமால் தன்னை நீங்க வேறுதலைவரில்லையென்று கூறியபாதகம் நிவாரணமாகி, தேவலோகத்திலுள்ள வைகுந்தபதவி சென்றெய்தினர். மணம் வீசும் புதியதாமரை மலர்ப்பீடத்தை யுடைய பண்டைய வேதங்களுணர்ந்த பிரமன், மற்றுள்ள சிறந்த நான்குமுகங்களோடு இன்னும் விளங்குகின்றான்.

முன்னொர் காலத்தி னரிபிர மர்க்கமர் மூளா
வன்னவர்க்குள வத்திர மெதிருடன் றமர
வென்னை யாளுடை நாயக னிடையழ றபிழம்பா
யுன்னி நின்றவ ரத்திரந் திருவுரு வொளித்தான்.

(இ - ள்) முன்னொருகாலத்தில் திருமாலுக்கும் பிரமனுக்கும் போருண்டாக, அவ்விருவர்க்குரிய அஸ்திரங்களை ஒருவருக்கொருவர் எதிரேவிட்டுப்போர் செய்ய, என்னையாளாகவுடைய சிவபெருமான் அவ்விருவர்க்குமிடையே அக்கினித்திரட்சியாகத் திருவுளங்கொண்டு தோன்றி அத்தன்மையாகவே மறைந்தருளினர். எ - று. (௱௧)

என்ற காரண முன்பெடுத் தமக்கென விசைத்தே
மொன்ற வோர்ந்தனி ரருச்சனை முறையினிங் குரைத்தே
மன்றி யின்னுமோ ரருந்துழா யலங்கலோற் கடுத்த
புன்றொழிற்படி றெம்பிரா னொழித்தமை புகல்வாம்.

(இ - ள்.) என்ற சரித்திரத்தை முன்னர் உமக்குக் கூறியுள்ளோம். அவற்றையெல்லாம் நன்றாக உணர்ந்திருக்கின்றீர்கள். அவர்கள்பூசித்தமுறைமையை இங்கே சொன்னோம். அன்றியும் அரிய துளசிமாலைதரித்த திருமாலுக்கு இன்னுமோர் அற்பத்தொழிலால் உண்டான துயரத்தை எமது சிவபெருமான் நிவாரணஞ் செய்தவகையைக் கூறுவோம். எ - று. (௱௨)

வளைத்த வாளெயிற் றசுரரு மதுமல ருழ்த்துக்
கிளைத்த கற்பக நாடரு மடுகளங் கெழுமி
விளைப்ப ருஞ்சமர் விளைத்தலும் விண்ணவர் வெருவித்
தளைத்த பூந்துழாய்க் கண்ணியோற் சரணென சார்ந்தார்.

(இ - ள்) வளைவுற்றகூரிய பற்களையுடைய அசுரர்களும், தேனொழுகும் மலர்களைச் சிந்திக் கிளைகளையுடைய கற்பகவிருக்ஷந்தங்கிய தேவலோகவாசிகளாகிய சுரர்களும் போர்க்களத்திற்கூடி, செய்தற்கரிய போர்செய்தகாலத்தில், தேவர்கள்பயந்து அழகிய துளவமாலைதரித்த திருமாலை யடைக்கலமாக அடைந்தார்கள். எ - று. (௱௩)

பொருத ராலுடைந் திருந்திசை நெடுந்தொலை சென்றே
மொருவ ரஞ்சலி ரென்றுநின் றுரைப்பவ ரில்லெங்
கருதி மற்றிது காத்தியே லெம்முயிர் காத்தி
மருவ ருந்துழா யலங்கலா யென்றவர் வணங்க.

(இ - ள்.) மணம் வீசுந் துளசிமாலை தரித்தவரே! அசுரர்களால் தோல்வியெய்தி வெகுதூரத்திலுள்ள பலதிசைகளிலும் ஓடினோம். எவ்விடத்திலும் அஞ்சாதீர்களென்று ஒருவராவது நேரில்வந்து சொல்லுவது கண்டோமில்லை. இதனைமனதிற் கொண்டு நீர் காப்பது உண்மையானால் எங்களுயிரைக் காப்பீராக வென்று அவர்கள்வேண்டிவணங்க. எ - று. (௧௦௫)

இரங்கு சிந்தைய னெறுழ்வலிக் கலுழன்மீ தெழுந்தா
னரங்கு வெஞ்சம ரடுகளத் தசுரரை முரிக்கிப்
பரந்து போகிய திசையெலாம் படர்ந்தனன் சிலர்போ
யுரந்து ணுக்குறப் பிருகுவாச் சிரமமுற் றொளித்தார்.

(இ - ள்.) திருமால் இரங்கிய திருவுள்ளமுடையவராகி மிகுவல்லமையுடைய கருடன் மீதிலே ஆரோகணித்து, போர்க்களத்திலே அழுந்திய கடும்போர் செய்யும் அசுரர்களை யழித்து அவர்கள் பரவியோடிய திசைகளிலெல்லாம் துரத்திச்சென்றார். அப்போது சில அசுரர் ஓடித்தைரியமானது அழிவடைய, பிருகுமுனிவருடைய ஆசிரமஞ்சேர்ந்து ஒளித்துக்கொண்டார்கள். எ - று.

தொடர்ந்து சென்றனன் றிகிரிகொண் டோச்சிய துழாயோன்
படர்ந்த புன்சடைப் பிருகுவோர் மாதவப் பன்னி
யடைந்து புக்கன ரடைக்கலங் காத்தன ளவரை
மிடைந்த குல்லையோய் கோறலை யென்றெதிர் விலக்க.

(இ - ள்.) சக்கராயுதத்தை யெடுத்து வீசிய துளசிமாலைதரித்த திருமால் அவர்களைவிடாது பின்றொடர்ந்து போயினர். பரவிய சிறுசடையையுடைய பிருகுமுனிவருடைய ஒப்பற்ற மனைவியிடத்தில் அவர்கள் போய்ச்சேர்ந்தார்கள். அப்பத்தினியார் அவர்களுக்கு அபயாஸ்தமளித்து அடைக்கலமாய்க்காத்தவராய், துளவமாலையணிந்ததிருமாலே! அவர்களைக் கொல்லவேண்டாமென்று நேரேவந்து தடுக்க. எ - று. (௧௦௬)

எழுந்து சீற்றமிக் காங்கவ ளுரைத்தன விகந்து
கொழுங்க திர்ப்படைத் திகிரிகொண் டவளுயிர் குறைத்தான்
செழும்ப சும்புனற் குருதியஞ் சேற்றிடைக் கலாபத்
தொழுங்கு மாமயில் கிடந்தெனச் சோர்ந்தன ளுறங்கி.

(இ - ள்.) அம்மங்கையுரைத்த சொல்லைக்கடந்து கோபமதிகரித்துக் குதித்து, மிகுகாந்தியுடைய சக்கராயுதத்தை யெடுத்து அப்பத்தினியின் உயிரைப் போக்கினர். அப்பொழுது பச்சையிரத்தமாகிய உதிரவெள்ளத்தினாலாகிய சேற்றில், கலாபத்தின் ஒழுங்கையுடைய சிறந்த மயிலானது படுத்திருப்பதுபோலச் சோர்ந்திறந்தனள். எ - று. (௧௦௭)

போர்க்க டுந்திற லசுரரை யுள்ளுறப் புகுதா
வீர்த்த சோரியின் றலைப்புறத் தொலைத்தன னெழுந்தான்
கார்த்த டங்கடற் படிந்தெழு கார்மழை வண்ண
னார்த்த வெஞ்சிறைப் புள்ளர சுகைத்தன னகன்றான்.

(இ - ள்.) போர்செய்துதோற்ற கொடுவெல்லபமுள்ள அவ்வசுரர்களை உள்ளேபுகுந்து பற்றி அடக்கவுதிரம் பிரவகிக்கும்படிகொன்று புறப்பட்டு, கருநிறங்கொண்டு பரந்திருக்கும் கடலில் முழுகியெழுந்த சூல்கொண்டமேகம்போலும் நிறந்தங்கிய அத்திருமால், சத்திக்கின்ற பெருஞ்சிறகுகளையுடைய கருடனென்னும் பக்ஷியைச்செலுத்திக்கொண்டு போயினர். எ - று. (௪௦௮)

முதிரு மாதவப் பிருகுநான் மறைக்கொரு முதல்வன்
கதிரொ ளிப்பசுந் தருப்பையுஞ் சமிதையுங் கைக்கொண்
டெதிரு மாச்சிர மப்புறத் தின்னுயிர்ப் பன்னி
யுதிர வாரியுட் கிடப்பது கண்டுநின் றுயிர்த்தான்.

(இ - ள்.) முதிர்ந்த பெருந்தவமுடையவரும் நான்குவேதங்கட்கும் ஒரு தலைவருமாகிய பிருகுமுனிவர், பசியபிரகாசம் பொருந்திய தருப்பையையும் சமிதையையும் திருக்கரத்திலேற்றுக்கொண்டு எதிரே வருகையில், தமதாச்சிரமத்தின் வெளியே இனிய உயிர்போன்ற மனைவியார் உதிரப்பெருக்கில்மிதந்துகொண்டிருப்பதை நோக்கி அங்கிருந்தே பெருமூச்செறிந்தார். எ - று. (௪௦௯)

ஆர்கொ லீதிழைத் தாரென வகக்கணு லளந்தான்
போர்கொ ணேமியான் புரிந்தன னென்பது தெரிந்தான்
வார்கொள் வெம்முலைப் பன்னியை நோக்குறு மருளும்
வேர்கொ ழுந்துறத் தெருமரு மொருதனி வெதும்பும்.

(இ - ள்.) இதனையாவர் செய்தனரெனத் தமது ஞானக்கண்ணால் நோக்கினர். போர்செய்யத்தக்க சக்கராயுத மேந்திய திருமால் இதனைச்செய்தனரென்பது ஞானத்தாலுணர்ந்தனர். கச்சணிந்தவலிய தனங்களையுடைய தன்மனைவியைப் பார்ப்பார் மயங்குவார் உடலில் வியர்வரும்பும்படி மனஞ் சுழல்வார். தனித்து வருந்துவார். எ - று. (௪௧௦)

இனைய புன்றொழி லியற்றியோ னிருந்துயர்க் கெல்லை
யனைய னாகியிந் நிலத்திடை யளவறு பிறப்பின்
வினையு ழந்துதன் னுருயிர்க் குயிரென மேவும்
மனையி ழந்துற வருநதவென் றுரைததனன் மறையோன்.

(இ - ள்.) அப்பிருகுமுனிவர், இத்தகைய இழிதொழில் செய்த திருமால், பெருந்துயரங்கட்கெல்லாம் ஓர் எல்லை போன்றவனாகி, இந்நிலவுலகத்தில் எண்ணிறந்த பிறவிகளெடுத்து அநேக தீமைகளால் வருந்தி, தனது உயிர்க்குயிராகிய மனையாட்டியை யிழநது வருந்தக்கடவனெனச் சாபமிட்டனர். எ - று.

உரைத்த சாபமுற் றுடற்றலும் புணரியோட் டெழுப்பி
யிரைத்த பாற்கடற் பள்ளியோன் காஞ்சிபுக் கிருந்து
திரைக்கொ ழும்புனற் சென்னிதா ளருச்சனை செய்தா
னரைதத வெவளிடை யெம்பிரா னவற்கெதிர் நடந்தான்.

(இ - ள்.) பிருகுமுனிவரிட்ட சாபம் திருமாலையடுத்துவருத்தவும், கடன்முழக்கையும் பிற்படச்செய்து சத்திக்கின்ற பாற்கடலிற் சயனிப்பவராகிய திருமால், காஞ்சிநகரையெய்தியிருந்து, அலைகளையுடைய விசேடமான கங்காசலத்தையணிந்த சடையையுடைய சிவபெருமான் திருவடிகளைப் பூசித்தனர்,

நரையையொத்த வெள்ளிய இடபவாகனத்தையுடைய எமது சிவபெருமான் அவ்விஷ்ணுவுக்கு எதிரே தரிசனந்தந்தனர். எ - று. (௧௧௨)

வணங்கு சென்னிய னழுதிழி கண்ணினன் வருந்தி
யுணங்கு சிந்தையன் றொழுதன னிற்றலு மொருபா
லணங்கி ருத்தியோன் வேண்டிய வென்கொலென் றருள
மணந்த மாதவன் சாபமுற றிடுதுயர் வகுத்தான்.

(இ - ள்) வணங்குகின்ற சிரசினையுடையவராயும், வருந்துவதால் கசிந்து கொண்டிருக்கும் நீரையுடைய கண்ணினராயும், துக்கித்துவாடும் மனமுடையவராயும் பணிந்து நிற்கும்போது, உமாதேவியாரை ஒருபாகத்திலுடைய சிவபெருமான் உனக்கு வேண்டியது யாதெனத் திருவாய்மலர்ந்தருளவும், பெருந தவமுடைய பிருகு முனிவரிட்ட சாபத்தால் விளைந்த துயரத்தை விண்ணப்பித்தனர். எ - று. (௧௧௩)

பின்னும் வேண்டிய யாவையு முறைமுறை பேசக்
கன்னல் விலவிசெற் றோங்கிய தழலுகுற் கண்ணன்
மின்ன லங்கொளிர திகிரியா னருச்சனை விரும்பிச
சொன்ன யாவையு மளிததனன் றிருவருள் சுரந்து.

(இ - ள்.) மேலும் தனக்கு வேண்டுவனவற்றையெல்லாம் வரிசையாகச் சொல்ல, கரும்புவில்லையுடைய மன்மதனைத்தகித்துச் சிறந்த தீமயமான நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான், மின்னலை வீசுவதுபோலப் பிரகாசிக்கும் சக்கராயுதமேந்திய திருமாலின் வழிபாட்டை மகிழ்ந்து திருவருள் சுரந்தவராய், அத்திருமால் வேண்டிய வரங்களையெல்லாம் தந்தருளினர். எ - று. (௧௧௪)

அன்று மாயவற் கருள்வர மளித்தபின் பிருகு
கன்று வெஞ்சினச சாபத்தாற் கடனெடும புவியி
னின்று பததவ தாரமு நிகழுமா னினக்கே
யென்று ரைத்தனன் பின்னரு மெம்பிரா னிசைக்கும்.

(இ - ள்.) அப்போது திருமாலுக்குத் திருவருளால் வரங்களையெல்லாங் கொடுத்த பிறகு, பிருகு முனிவர் கொல்லத்தக்க கடுங்கோபத்தோடு சொல்லிய சாபமொழியால், உனக்குக் கடல்சூழ்ந்த நெடிய வுலகிலே நிலைத்திருக்கத்தக்க பத்துப் பிறவிகளுண்டாகும் எனத் திருவாய்மலர்ந்து மேலும் எமது சிவபெருமான் கட்டளையிடுகின்றார். எ - று. (௧௧௫)

சுதி றொரவ தாரததி னின்னுயிர்க் குயிரா
மாது நீத்தற வருந்துதி வருநதிய பின்னர்த்
தீது தீர்ந்தவட் சேர்குதி யென்றன னெம்மான்
போதி னன்முகற் பயந்தவன் பணிந்தெதிர் புகலும்.

(இ - ள்.) இப்பத்துப் பிறப்புகளில் ஒன்றில், உனது இனிய உயிர்க்குயிராயிருக்கும் மனைவியை யிழக்தனுைய் வருநதக்கடவை. அப்படி வருந்தியபின்னர், வருத்தநீங்கி அம்மனைவியைச் சேரக்கடவாயென்று கட்டளையிட்டார். அப்போது தாமரை மலர்ப்பீடத்தையுடைய பிரமனைப்பெற்ற திருமால் எமது பெருமானை நேரில் வணங்கி விண்ணப்பிக்கின்றார். எ - று. (௧௧௬)

எடுத்த பத்தவ தாரத்தி னெழுமதச் செருக்கா
லடுத்த பாவநீத் தருடர வேண்டுமென் றிரப்பக்
கடுக்க ரந்துறை மணிமிடற் றெம்பிரான் கருதிக்
கொடுத்த கன்றெழுந் தருளினன் கயிலையங் குவட்டில.

(இ - ள்.) அப்படி யானெடுக்கும் பத்துப் பிறப்புக்களிலும் உண்டாகின்ற ஆணவமலத்தாலாகிய கர்வத்தால் உண்டாகும் பாவங்களை யகற்றித் திருவருள் புரியவேண்டுமெனப்பிரார்த்திக்க, ஆலகாலவிடம்மறைந்துள்ள நீலகண்டராகிய எமது சிவபெருமான் அதனைத் திருவுளங்கொண்டருளி அப்படியே வரமளித்து அத் திருக்கைலாயகிரிக்கு எழுந்தருளினர். எ - று. (௧௪௭)

சிவபூசை மான்மியச்சருக்க முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௧௯ - க்குத் திருவிருத்தம் ௨௪௧௧.

பதினொன்காவது

மச்சாவதாரச் சருக்கம்.

கால மீண்டிடை கழிந்தன சிலவது காலத்
தால மோருரு வெடுத்தென வசுரரிற் றோன்றிக்
கோல வாளெயிற் றடுசினக் கோமகன் கொழுந்தீப்
பால லோசனற் குறித்துநின் றருந்தவம் பயின்றான்.

(இ - ள்.) இப்படிச்சிலகாலம் இடையே கழிந்தன. அப்பொழுது, ஆலகாலம் ஒருவடி வெடுத்தாற்போல, அழகுற்று ஒளிவீசும் பற்களையும் கொல்லத் தக்க கோபத்தையு முடையவனாகிய சோமுகனென்னும் ஒருதலைவன் அசுரகுலத்தி லுதித்து, கொழுந்து விட்டெரியும் அக்கினியாகிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைத் தியானஞ்செய்து கொண்டிருந்து அருந்தவஞ்செய்தனன். (௧)

தேவர் யாரையு நோக்கிநின் றருந்தவந் திருத்தி
யாவ வேண்டுவ வெறுழ்வலித் திறனொடு மெதிர்ந்தான்
பாவ மோருருத் திரண்டென வுறுப்பினன் பகரின்
மேவு தென்றிசை நமற்குமோர் நமனெனும் வெய்யோன்

(இ - ள்.) தேவர்களெல்லாரையு நோக்கி அருந்தவஞ்செய்து, மிக்கபராக்கிரமத்தன்மைக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் பெற்றுக்கொண்டு புறப்பட்டான். பாவமேயோருருவெடுத்துத்திரண்டாற்போன்ற அவயவங்களுடையவன் சொல்லுவோமானால் தென்றிசைத்தலைவனாகிய இயமனுக்கும் இயமனென்று சொல்லத்தகுங்கொடியோன். எ - று. (௨

செருவி னெற்றுவா ரின்மையாற் றினவுறுந் திரடோ
ளொருவன் மேருவை யிடுக்குறு மிடுக்கின னுவரி
யிருநி லத்தினும் வானவ ருலகினு மிவைக்கீழ்
வருநி லத்தினு மெதிர்க்குந ரில்லென மதித்தான்.

(இ - ள்.) போரில் தன்னை யெதிர்ப்போரில்லாமையால் தினவெடுக்குந் திரண்டதோளையுடைய ஒப்பற்ற சோமுகன் மேருமலையையும் கக்கத்திலிடுக்கிக் கொள்ளும் மிடுக்குடையவன். கடல்சூழ்ந்த பெரியபூமியிலும் தேவருலகத்திலும் இவ்விரண்டிற்குங் கீழுள்ளபாதலலோகத்திலும் தன்னையெதிர்ப்போரில்லையென்று தீர்மானித்தான். எ - று. (௫)

ஒற்றை நாளநாட் டாமரை யவற்கெதி ருற்றான்
மற்றை யாங்கவன் வெருவர மயங்கின னதுகண்
டிற்றி தோவிவன் றிறமென விரங்கின னகந்தான்
பற்றி நான்முக னான்மறைக் குலமெலாம் பறித்தான்.

(இ - ள்.) ஒற்றை நாளத்தையுடைய புதியதாமரை மலர்ப்பீடத்திலுள்ள பிரமனுக்குநேரேபோனான். அப்பொழுது பிரமன்பயமெய்தி மயங்கினான். அப்படிமயங்குதல் கண்டு இவன் வல்லபம் இவ்வளவு தானோவென்றிகழ்ந்து பகைத்தவனாய், அப்பிரமனைப்பற்றிக்கொண்டு நான்குவேதங்களின்தொகுதிகளையெல்லாம் பறித்துக்கொண்டான். எ - று. (௬)

பறித்த நான்மறை கொண்டெழுந் திருங்கடல் பாய்ந்தான்
வெறித்தி ருந்தனன் சதுமுகத் தந்தணன் வெருவி
நறைப்ப சுந்துழாய்த் திருமக னாயகற் குறுகிக்
குறித்து ரைத்தன னாங்கவ னடுசினங் கொண்டான்.

(இ - ள்.) பறித்துக்கொண்ட நான்குவேதங்களையு மெடுத்துக்கொண்டு பெரிய கடலிற்பாய்ந்தான். சதுர்முகனாகிய பிரமன் பயமெய்தி மயங்கியிருந்தான். அதன்பின் மணம்வீசும் பசிய துளசிமாலை தரித்ததிருமகள்கொழுநராகிய விஷ்ணுமூர்த்தியை யடைந்து நடந்தவிஷயத்தைக் குறித்துச் சொன்னான். அத்திருமால் கோபித்தனர். எ - று. (௭)

மான யோசனை யளவொழி மெய்யுரு வாய்ந்த
மீன மாயின னெடுங்கடற் பரவையின் வீழ்ந்து
கான வெண்டிரைக் கடங்கட லளறெழக் கலக்கிப்
போன வாளெயிற் றசுரனைத் தடவுறும் புகுந்து.

(இ - ள்.) மதிக்கத்தக்கயோசனையென்னும் அளவுகடந்த உடலோடுகூடிய மச்சவடிவெய்தினர். நெடிய கடலிற்றிடீரென்று பாய்ந்து, சத்திக்கின்றவெள்ளிய அலைகளையுடைய கருங்கடலைச் சேறுபடும்படி கலக்கி, அக்கடலிற்பாய்ந்துபோன அவ்வசுரனைக்கண்டுபிடிக்கும்படி உள்ளே மூழ்கி. எ - று. (௮)

கவர்த்த வாலெடுத் தடித்துறக் கருங்கடல் சிதறி
யுவர்த்த துள்ளிவிண் ணுலகுற விவந்தன வொளிகான்
றிவர்தெ ழுங்கதிர்க் கடவுள்கண் கரித்தன வண்டச்
சுவர்த்த லந்தொறு மீனொடுந் தெறித்தன துள்ளி.

(இ - ள்.) பிளவுபட்டவாலைத் தூக்கியடித்தவுடன், கருநிறமெய்திய கடனீரானதுசிதறி, உவர்ப்புள்ள அந்நீர்த்துளிகள் தெய்வலோகவரையிலும்மேலோங்கியெழுந்தன. ஒளியைப்பரப்பிக்கொண்டு ஒற்றைச் சக்கரமுடைய தேரில் ஆரோகணித்து வருகின்ற சூரியனுடைய விழிகளுங்கரித்தன. அண்டச்சுவர்களிலெல்லாம் அத்துளிகள் மீன்களோடுந்தெறித்தன. எ - று. (௭)

செருத்த வெஞ்சினத் திமிங்கிலந் திமிங்கில கிலங்கள்
வருத்த வெண்மருப் பெறும்வலித தடுஞ்சின மகரம்
பருத்த வாய்மடுத் திடுந்திரைப் பரவைநீர் பாய்ந்து
தொகுத்த மாநிலந் தவழ்தரத் திசைதொறுந் துருவும்.

(இ - ள்.) பலவுயிர்களைக்கொன்ற கடுங்கோபமுடைய திமிங்கிலங்களும் திமிங்கிலகிலங்களும், பிரிவுபட்டுள்ள வெண்ணிறந்தங்கிய பற்களோடு மிகுவல்லபமெய்திக்கொல்லத்தக்க கோபந்தங்கியசுறுமீன்களும், வேறுசெய்யப்பட்டுக் குடிக்கின்ற அக்கடலின் அலைகளாகிய சலத்திற் பாய்ந்து அலைவீழ்கின்றகரையாகிய நிலத்தில் தவழ்ந்துசெல்லும்படி திசைகளெங்குந்தேடும். எ - று. (அ)

சுருதி கொண்டொளித் தோங்கிய நிருதனைத் தொடர்ந்து
குருதி வாய்மடுத் துயிர்செகுத் தருமறைக் குலங்கொண்
டொருவி நீங்கலு நான்முகன் பணிந்தெதி ருற்றான்
வெருவி யேந்தினன் கொடுத்ததா ரணங்களை மீனம்.

(இ - ள்.) வேதத்தைக்கைக்கொண்டு கடலிலொளிந்துள்ள அவ்வசுரனைப் பின்றொடர்ந்து அவனுதிரத்தைப்பருகியுயிரொழித்து, அரியவேதங்களைப்பற்றி நீங்கிச்சென்றவுடனே, பிரமன்பணிந்து எதிரே வந்தனன். அப்போது மச்சாவதாரங்கொண்ட திருமால் வேதங்களைத்தந்தனர். பிரமன் பயத்தோடு பெற்றுக்கொண்டான். எ - று. (௯)

வெள்ளை வாளெயிற் றரக்கன தாக்கையின் வீங்கு
கொள்ளை வெம்புனற் குருதியிற் சிவந்தது கொழித்துத்
துள்ளி ருங்கயன் மாந்தின செருக்கின தொடுநீர்ப்
பள்ள வெம்புன லுருக்கிய செம்பெனப் பட்ட.

(இ - ள்.) வெண்ணிறமுங் கூர்மையும்வாய்ந்த பற்களையுடைய அவ்வசுரனது உடலிற்பெருகிய மிக்க உதிரமாகிய நீரினால்மிகவுந்துள்ளிக்கொண்டிருந்த பெரிய கயல்மீன்கள் செந்நிறமெய்தின. அவ்வுதிரத்தைப் பானஞ்செய்ததனாற் கர்வமெய்தின. ஆழமாகத் தோண்டப்பட்டுள்ள அக்கடல் நீர் முழுவதும் உருக்கிய செம்புபோலாயின. எ - று. (௧௦)

கடவுண் மேருவொத் திருங்கடல் கலக்கிய மீனை
மிடைப மெங்கணு மிடிபடுத் தேழ்கடற் பரப்பு
முடைப டத்திரிந் தோர்கட லாக்கிய துவரி
புடைப டப்பரந் துலகெலாந் தவழ்ந்ததப் பொருநீர்.

(இ - ள்.) தெய்வீகந்தங்கிய மேருமலையைப்போலப் பெருங்கடலைக் கலக்கிய அம்மச்சமானது, இடையிலுள்ள கரைகளை யெல்லாமிடித்து சத்தசமுத்

திரங்களின் பரப்பும் உடைபடும்படி சஞ்சரித்து ஒரே சமுத்திரமாகிவிட்டது. அவ்வுதிர்வெள்ளமானது சத்தசமுத்திரங்களின் சலத்தோடு கலந்து உலக முழுவதும் பரவிற்று. எ - து. (௧௧)

குடக்கு மாமுக நோக்குறக் குணதிசைக் கொடுவால்
கிடக்க நிற்புழி யிருகரை யணவுறக் கிடக்கும்
வடக்கு நோக்குறிற் றென்றிசை வாரொடக் கிடக்கு
மிடப்ப டுங்கடற் பெரும்புனன் முதுகுதோய்ந் திலவால்.

(இ - ள்.) மேற்கரையில் தன்முகம்பார்த்துக் கொண்டிருக்க, கீழ்க்கரையில் நெடிய வாலானது பொருந்தும்படி அம்மச்சவடிவங்கிடக்கும்போது, இருகரைகளுக்குஞ் சரியாயிருக்கும். வடகரையாயிருந்து பார்த்தால் அதன்வால் தென்கரையிலிருக்கும். விசாலித்துள்ள அக்கடலில் நிரம்பியமிக்க நீரினால் அம்மச்சத்தின் முதுகும் நனைந்ததில்லை. எ - று. (௧௨)

மகர மேமுத லாகிய யாவையும் வாய்ப்பெய்
தகனெ டுங்கடற் றிரிதரு மமலையி னஞ்சிப்
புகலி டந்தெரிந் தடைந்தனர் வானவர் புனிதச்
சிகர மால்வரைக் கயிலையிற் குழுவொடுஞ் சென்றார்.

(இ - ள்.) சுறாமுதலிய பெருமச்சங்களையெல்லாம் வாயிற்பெய்துகொண்டு, அகலமாய் நெடுகிய கடலிற்றிரிந்து கொண்டிருக்கும் கோஷத்தாற் பயந்து, தேவர்கள் தாங்கள் சரணமடைதற்குரிய இடத்தைத் தெரிந்து சேர்ந்தவர்களாய், புனிதமான உச்சியையுடைய சிறந்த கைலாயகிரிக்குத் தங்கள் தொகுதியோடு போனார்கள். எ - று. (௧௩)

செழுந்து ழாயணி யலங்கலோன் மீனமாய்த் திரையோட்
டெழுங்க ருங்கட லேழையு முடைபடுத் தியங்கி
யொழுங்கு வாளெயிற றிடங்கரே முதலின வொருங்கே
விழுங்க மன்பதைய பரப்பெலாஞ் சுழல்வன வெருவி.

(இ - ள்.) செழுமை தங்கிய துளசிமாலை தரித்த திருமால் மச்சவடிவெடுத்து அலைகளோடுகூடிய பெரிய சத்தசமுத்திரங்களையும் உடைத்துத் திரிந்து, வரிசையாயுள்ள கூர்மைவாய்ந்த பற்களைபொருந்திய முதலைமுதலியவற்றையும் ஒன்றாய்க்கூட்டி விழுங்க, மக்கட்டொகுதி யெல்லாம் பயமெய்திச் சுழல்வனவாயின. எ - று. (௧௪)

ஆரு மைப்புறு மிணியென வுணர்கிலே மைய
பாரு மண்டமு மதிர்ந்தன வருண்முறை பார்த்துச்
சாரு மிச்செருக் கொழித்திலை யாமெனிற் றமியே
மூரும் வையமும் விளிந்தன வெனப்பணிந் துரைத்தார்.

(இ - ள்.) ஐயனே! இனிஅவையெல்லாம் யாவர்பால் அடைக்கலம் புகுமென்பதாக நாங்களுணரோம். பூலோகமும் தேவலோகமும் அதிர்ச்சியுற்றன. அதுக்கிரகிக்க வேண்டியமுறைமையைப் பார்த்து, அவ்வாறு வந்த அம்மச்சத்

தின் கர்வத்தை விலக்காதிருப்பீராகில், அடியேங்களுடைய பதவிகளும் பூவோர களும் அழிந்தனவாகுமென்று பணிந்து சொன்னார்கள். எ - று. (௧௦)

அரவு லாத்திருக் குழைப்புறத் தவருரை யடைந்துச்
சிரமொ ரைந்துடை யெம்பிரான் றிருவரு ளிரங்கி
யுரவு சாத்தனை வருதியென் றுங்கவற் குரைத்தான்
பரவ ருந்திறன் மீனவெஞ் செருக்கறப் படுப்ப.

(இ - ள்.) ஐந்து திருமுகங்களையுடைய எமது சிவபெருமான், சர்ப்பகுண் டலமணிந்த தமது திருச்செவியில் அத்தேவர்கள் முறையிட்டவார்த்தையை யேற்றருளித் திருவருண்மிகுநது, வல்லமைதங்கிய வைரவக்கடவுளைவருகவென விளித்து, யாவராலும் புகழ்தற்கரிய வலிய பெரிய அம்மச்சத்தின் கர்வமுதலை அழிக்கக்கடவாயென்று அவருக்குக் கட்டளைசெய்தனர். எ - று. (௧௧)

அலைத்த வார்புனற் சென்னியோ னுங்கவை யருளக்
கொலைத்த லைகொடுஞ் சூற்படைச சாத்தனுங் குறுகி
வலைக்கு லத்தவ ருருவுகொண் டலைக்கரை வந்தா
னிலைத்த சிந்தையி னேகின னதற்கெதிர் நிமிர்ந்தான்.

(இ - ள்.) அலைகளையுடைய பெருக்கெடுக்குங் கங்கையாற்றை யணிந்த சடையையுடைய சிவபெருமான் அங்ஙனங் கட்டளைதரவும், கொலைத்தொழி லில் முதன்மைபெற்றகொடிய சூலப்படைதாங்கிய வைரவக்கடவுளும் அடை ந்து, [பரதவர்] மீன்பிடிப்போர் குலத்தினர்போலவடிவேற்று அக்கடற்கரை யையெய்தி, ஒருகருத்தாய் நோக்கி அம்மச்சத்தின் நேரேயோடினர். எ - று.

எடுத்து வீசிய வலைகட லேழையு நிரப்பிப்
படுத்தி ழுத்தலும் வலையகப் பட்டது பாரார்
நடுக்க டறபுகுந் திருவிழி பறித்தன னடந்தான்
கடுத்த வெஞ்செருக் கிழந்தது மீனமாக் கடவுள்.

(இ - ள்.) உடனே அவரெடுத்துவீசிய வலையைச் சமுத்திரங்களேழிலும் பாயும்படி விரித்து மீண்டுஞ் சுருக்கியிழுத்தவுடனே, அம்மச்சம் வலையில் அகப் பட்டுக்கொண்டது. நிலவுலகிலுள்ள நடுச்சமுத்திரத்திற் சேர்த்து அம்மச்சத் தின் இருவிழிகளையும் பறித்துக்கொண்டு சென்றார். தெய்வீகமுற்றுச் சிறந்த அம்மச்சமானது கொடுமை தங்கிய விசேஷித்த கர்வத்தை நீக்கியது. எ - று.

வாங்கு கண்மணி யெம்பிரான் றிருவடி வனசந்
தாங்க வுய்த்தனன் முகிணகை புரிந்தனன் றலைவ
னோங்கு வானவ ருவந்தனர் தொழுதன ருயர்ந்தார்
பாங்கு வீழ்ந்தன ரிறைவனை யடிக்கடி பணிந்தார்.

(இ - ள்.) பறித்த அம்மீனின் கண்மணிகளை எமதுசிவபெருமான் பாததாம ரைகள் தாங்கும்படி சேர்த்தனர். அப்போது சிவபெருமான் புன்னகைசெய் தனர். மேன்மை தங்கிய தேவர்கள் யாவரும் சந்தோஷித்துப் பெருமானைத் துதிசெய்து சிறந்தவர்களாய், அவர்பக்கலிற் சூழ்ச்சாஷ்டாங்கமாகப் பலமுறை பணிந்தார்கள். எ - று. (௧௨)

பொன்னி ருட்டவர் முனிவரர் பூமிசைப் பொலிந்த
வன்ன வூர்திமற் றியாவரு மரனடி வழுத்தி
யின்ன மாமணி நின்னுருத் தரித்திடி னெந்தாய்
மன்னு மாயவன் காண்டொறுஞ் செருக்குற மயங்கும்.

(இ - ள்.) தேவலோகத்தார் முனிவர் தாமரை மலர்ப்பீடத்திலிருக்கும் அன்னவாகனனுகிய பிரமன் முதலானோரும் சிவபெருமான் பாதங்களைத் துதிசெய்து, எமது தந்தையே! இச்சிறந்த மணியைத் தேவரீர் திருமேனியிலணிந்திருப்பதால், நிலைபேறுயுள்ள திருமால் அதனைக்காணும் போதெல்லாம் கர்வபங்கராய் மயங்கிக் கிடப்பார் - எ - று. (௨௰)

எனவு ரைத்தன கேட்டலு மெம்பிரா னுவந்து
தனது மேனியிற் றரித்தனன் விண்ணவர் தணந்தார்
கனைக ருங்கடற் கட்புலம் போக்கிய மீன
நினைம னச்செருக் கிழந்தது கிடந்தது நெடுநாள்.

(இ - ள்) என்று விண்ணப்பித்ததை எமது சிவபெருமான் கேட்டவுடனே, களிப்பெய்தி அவர்விரும்பியபடியே தமது திருமேனியிலணிந்து கொண்டனர். தேவர்கள் சென்றார்கள் சத்தியமயமாற காரிய கடலைய ண்மணிகளை யிழந்த அம்மச்சமானது தான் கருதிய மனோகர்வமகன்று பலகாலம் அப்படியே கண்ணிழந்து கிடந்தது. எ - று. (௨௧)

தன்னை யோர்ந்திடு செருக்கினாற் றழுவிய பாவம்
பின்ன மாவதற் கேதுசெய் குதுமெனப் பிடித்து
முன்ன வற்கெனக் காஞ்சிபுக் கருச்சனை முயலா
மின்னி ருஞ்சடை வேணியோற் பணிந்ததம் மீனம்.

(இ - ள்.) அம்மீனானது தன்னிலைமையையுணர்ந்து கர்வத்தாலுண்டாகிய பாவங்கள் நிவாரணமாவதற்காக என்ன செய்வோமென்று கருதி, காஞ்சிமாநகரமெய்தி, பிரகாசிக்கின்ற நீண்ட சடையையுடைய முதற்கடவுளாகிய சிவபெருமானுக்கென்று பூசிக்க முயற்சிசெய்து வணங்கியது. எ - று. (௨௨)

ஏறு யர்த்தரு ளெம்பிரான் றிருவரு ளிரங்கிச்
சீறு மால்விடைக் காட்சிதந் தருளினன் றிருமான்
மாறி லன்பொடும் பணிந்தடி வரன்முறை வழுத்தி
யீறி லெந்தைநீ யென்பிழை பொறுத்தியென் றிரப்ப.

(இ - ள்.) இடபக்கொடியையுயர்த்தி யருளிய எமது சிவபெருமான் திருவருண்மிகுந்து, கோபிக்கின்ற பெரிய இடபவாகனத்திலாரோகணித்துத் தரிசனந்தந்தருளினர். அப்போது மச்சவடிவாயிருந்த திருமால் மாறுபடுதலில்லாத உண்மை யன்புடன் பணிந்து அவர் பாதங்களை முறைப்படி துதிசெய்து, அழிவற்ற எமது தந்தையாகிய தேவரீர் அடியேன் அறியாமையாற் புரிந்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க. எ - று. (௨௩)

நினக்கு வேண் டிய வென்னென முக்கணு னிகழ்த்த
மனக்கொ டுந்திறன் டியக்கநீத் தக்கயல் வடிவந்
தனைக்கு றித்தெனை வண ங்கினோ ரிருங்கதி தழுவப்
புனற்கொடுஞ் சடை யெம்பிரா னருளெனப் புகன்றான்.

(இ - ள்.) உனக்கு வேண்டிய வரங்கள் யாவையென்று திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் வினவவும், அடியேன் மனநிலுதித்த கொரே வல்லமை தங்கிய மயக்கமகன்று, இம்மச்சாவதாரத்தைக்குறித்து அடியேனை வணங்குகின்றவர்களும் பெரிய பதவியை யெய்திம் வகையாக, கங்கையையணிந்து வளர்ந்த சடையையுடைய எமது பெருமானே! திருவருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். எ - று. (உச)

கேட்ட நல்வர மங்கிலே கிடைத்துற வழங்கி
வாட்ட டங்கணுண் மருங்கினேன் கயிலைபோய் மறைந்தா
னேட்டி ருந்துழா யலங்கலோ னவ்வுரு விகந்து
நீட்டி ருஞ்சிறைக் கலுழன்மீப் பொலிந்தன னின்றான்.

(இ - ள்.) கேட்டுக்கொண்ட நல்லவரங்களை அவர்பெறும்படி யப்பொழுதே யநுக்கிரகித்து, வாள்போன்று பரந்த விழிகளையுடைய உமாதேவிபாகராகிய சிவபெருமான் அந்தர்த்தானமாய்த் திருக்கைலாயத்திற் கெழுந்தருளினர். பெரிய இதழ்களையுடைய துளசிமாலைதரித்த திருமால் அம்மச்சவடிவகன்று நீண்டுபருத்திருக்கும் சிறகுகளையுடைய கருடவாகன மீது விளங்கியிருந்தனர்.

தடங்கொ டுஞ்சினைக் கற்பக நாடருந் தணந்தார்
திடங்கொ டாமரை நான்முகச் செல்வனு மெதிர
மடந்தை தாமரை மாளிகை மாதுலா மார்பன்
படங்கொள் பாப்பணைப் பள்ளியோன் றன்னுழைப் படர்ந்தான்.

(இ - ள்.) விசாலித்துவளர்ந்த கிளைகளையுடைய கற்பகத்தருவையுடைய தேவலோகத்திலுள்ள தேவர்களும் சென்றார்கள். திடம் பெற்றதாமரைமலர்ப் பீடத்தையுடைய பிரமனும் எதிர்கொள்ளும்படி தமது மனைவியாகிய தாமரைக் கோயிலையுடைய திருமகள் பொருந்திய திருமார்பையுடையவரும், படம் பொருந்திய சேஷசயனத்தில் அறிதுயில் கொள்பவருமாகிய திருமால் தமதுவைகுந்த பதவிக்கெழுந்தருளினர். எ - று. (உரு)

மச்சாவதாரச் சருக்க முற்றிற்று.

ஆ சருக்கம் சஅ-க்குத் திருவிருத்தம் உகூகள.

கூர்மாவதாரச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

கற்ப கத்தரு நாட்டவர் யாவருங் கவர்த்த
மற்ப குத்ததோள் வாளெயிற் றசுரரு மருவி
நற்ப டப்பல மொழிந்தனர் நட்டன ராகி
முற்ப டச்சதக் கிருதுவுக் கினையன மொழிவார்.

(இ - ள்.) கற்பகவிருக்ஷமுள்ள தேவலோகத்தினராகிய தேவர்களெல்லாரும், பிரிவுபட்டு வலிமை தங்கியதோள்களும் கூர்மையாகிய பற்களுமுடைய அசுரர்களும் ஒன்றுசேர்ந்து, நன்மையான வார்த்தைகள் பலவாகச்சொல்லிச் சிநேகித்தவர்களாய், முன்னொருகாலத்தில் இந்திரனுடன் இப்படிச் சொன்னார்கள், எ - று. (க)

நாவ ளந்துற நாட்பட நரைதிரை மூப்புச
சாவ டைந்துறுந் தன்மையி னிற்பன தழுவாப்
பாவ வெண்டிரைப் பாற்படு படுகடல் கடைந்து
மேவு தெள்ளமு தெடுத்தியா மயின்றுற வேண்டும்.

(இ - ள்.) நாவினலளவிட்டுச் சொல்லமுடியாத அநேக நாட்களாக, நரை திரை மூப்புமரணமென்னும் இவ்வகைகளெய்தாதிருக்க, தழுவமுடியாததாய்ப் பரவியுள்ள வெண்ணிறந்தங்கிய அலைகளோடுகூடிப் பால்நிரம்பி ஆழமாகிய திருப்பாற்கடலைக் கடைந்து அதிலுண்டாகும் தெளிந்த அமுதையெடுத்து நாமெல்லோரும் புசிக்கவேண்டும். எ - று. (உ)

என்றொ ருப்பட வொருமொழி கொண்டியைந் தெழுந்தார்
சென்று மந்தரந் திருப்பினர் பிடுங்கினர் திருப்பி
யன்று பாற்கட லதனைநட் டாளிடை பிணித்தது
நின்று வாங்கலுஞ் சாய்ந்தது நெடும்புடைச் சிகரம்.

(இ - ள்.) என்று ஒற்றுமைப்பட்டு ஒரேவார்த்தையாகப் பேசிக்கொண்டு சம்மதித்துச் சென்று மந்தரமலையைத் திருப்பிப் பிடுங்கி யெடுத்துத் திரும்பி அப்பொழுதே பாற்கடலினிடையில் நட்டு வாசுகியென்னும் சர்ப்பத்தை மத்திலிற்சுற்றி நின்றுகொண்டு கடைந்தபொழுது, நீண்ட சிகரங்களையுடைய அம்மலை சாய்ந்தது. எ - று. (ங)

அடித்த லம்பொரு தக்கிரி யகனிலப் பரப்பை
யிடித்த தேடரும் பாதலத் திருந்தது நோக்கி
யெடுத்த தங்களா லாவதொன் றில்லென வியந்தார்
தொடுத்த வைத்துழாய் [illegible]

(இ - ள்.) அம்மலையைப் பூமியுள்ளு [illegible] பூமியையு[illegible] கொண்டு, தேடுதற்கரிய பாதலத்திலிருந்து [illegible] தெரி[illegible]தண்டு, அதனை யெடுத்துக்கொண்டுவந்த தங்களால் இனிச்செய்[illegible]தொன்று மில்லையென்று தம்மைத்தாமே நிந்தித்துக்கொண்டு பரிய[illegible] நீண்ட விட மூடைய திருமாலினிடஞ்சென்று கூடினர். எ - று. (௪)

உலகெ லாம்பதத் தளவையிட் டுண்டுமிழ்ந் தளித்துள
யலகில் பல்லுயிர்த தொகைதொறு மமாந்தனை யையா.
பலவு யிரக்குமவ் வினைபபடி நுகர்வன பகிர்ந்தாய் . .
திலமு நெய்யுமொத் திருந்தனை நின்னையார் தெரிப்பார்.

(இ - ள்.) ஐயனே! உலக முழுவதையும் திருவடிகளாலளந்து உண்டு உமிழ்ந்து காத்தீர்! எண்ணிறந்த பல சீவராசிகடோறும் வீற்றிருக்கின்றீர். பல சீவர்களுக்கும் அதனதன் வினைப்படி யநுபவிக்கவேண்டிய போகங்களை வகுத்தளித்தீர் எள்ளும் எண்ணெயும்போன்றிருந்தீர். ஆதலால் தேவரீரை யாவருணர்வாாகள். எ - று. (௫)

கண்ணிற் காண்பன யாவையுங் கட்புலன் கதுவா
தெண்ணிற காண்பன யாவுநீ யாயினை யெந்தாய்
மண்ணிற காண்பன வானிடைக் காண்பன மயங்க
வுண்ணிற பாயுனை யாவரே யளவையிட் டுரைப்பார்.

(இ - ள்.) கண்களாற் பார்க்கப்படுவனவெல்லாம் கட்புலனுக்கு விளக்க மின்றி, மனத்தாற்கணிக்கற் பாலனவாகிய யாவும், எமது தந்தையே! தேவரீராகவே யிருக்கின்றீர். உலகிற்காணப்படுவனவும் ஆகாயத்திற்காணப்படுவனவும் மயக்கெய்தும்படி அவற்றுள் விரவியிருப்பீர். தேவரீரை யெவர்தாம் அளவிட்டுச்சொல்வாாகள்? எ - று. (௬)

ஆடகப்பொருப் பெடுத்துள வளவொழி யண்டத்
தொடகப்படு முந்தியந் தாமரை தோனறப்
பாடிருக்குணர் நான்முகச் செல்வனைப பயந்தா
யூடி வைககெலா முட்படு கருவியொாத துயாந்தாய்.

(இ - ள்.) பொன்மலையாகிய மேருவை நடுவாகவுடைய அண்டகோடிகளையும், இதழ்களையுடைய நாபிககமலத்தில் தோன்றும்படி பெருமைதங்கிய வேதங்களையுணர்ந்த பிரமதேவனையும் தந்தருளினர். இவையெல்லாவற்றிற்கும் உள்வீடாயிருந்து நடத்துகின்ற சூத்திரம்போன்றும் மேன்மைபொருந்தினீர்.

இடுக்க ணென்பதொன் றெம்முழை யெய்து[illegible] வி
படுத்தொ ழிதது நின் னூரு [illegible]
தொடுத்த வரன்[illegible] லை இலையெனத் தொழு[illegible]
[illegible] பரம்பொருள் யெம்பிரான் கழறும்.

(இ - [illegible] எமது தந்தையே! துன்பமென்பதொன்று எங்களிடத்து [illegible] [illegible] எழுந்தருளி அதனைத்தொலைத்துக் காட்டுதற்கு [illegible] [illegible] ஆதலால் எங்கள் சம்பந்தமான [illegible] [illegible] வணங்கினர்கள். அப்பொழுது [illegible] [illegible] திருவுளம் [illegible] [illegible].

விரும்பி வேண்டுவ தென்னைகொல் விண்ணகங் கலக்கி
வருந்த வைத்தவ ருளர்கொலோ துழங்குதி ரென்றான்
முருந்த வாணகை முகிண்முலைத் திருமகட் கிறைவா
பரிந்து ரைப்பதோர் காரண முளதெனப் பணிந்தார்.

(இ - ள்.) நீங்கள் விரும்பிக் கேட்பது யாதோ? தேவலோகத்தையழித்து உங்களையெல்லாம் வருந்தச் செய்தவர்களுளரோ? சொல்லுகவெனக் கட்டளை யிட்டார். [முருந்து] மயிலிறகி னடியைப்போலும் ஒளியிருந்த பற்களையும் தாமரைமொட்டைப்போலுந் தனங்களையுமுடைய திருமகள் தலைவரே! வருந்திச் சொல்லத்தக்க ஒருகாரணமுளதென்று திரும்பவும் பணிந்தார்கள். எ - று. (கூ)

மொழிதி ரென்றலுந் தொழுதனர் நரைதிரை மூப்பிற்
கழியு மாக்கைபெற் றிருந்தன மத்துயர் கடப்பச்
சுழித டந்திரைப் பாற்கட லமுதெழச் சுழல
வெழுத டங்கிரி நிறுத்திவா சுகிபிணித் திழுத்தேம்.

(இ - ள்) சொல்லுகவெனத் திருமால் கூறவும், தேவர்கள் வணங்கி நரை திரை மூப்பினாற்றுயரமெய்திக் கழிந்துபோகுந் தேகமுடையவர்களாக விருக்கின்றோம். அத்துன்பங்களை யகற்ற, சுழித்தெழுகின்ற விசாலித்த அலைகளையுடைய திருப்பாற்கடலில் அமுதமுண்டாகும்படி கடைய, உயர்ந்த பருத்த மந்தரகிரியைத் தூணாக நட்டு வாசுகியைத்தாம்பாகப்பூட்டிக் கடைந்தோம்.

அந்த மந்தர நெடுநில மிடிந்துவீழ்ந் தாழ்ந்த
தெந்தை நின்னல தெமக்கென விசைவதொன் றுண்டோ
வந்து நோக்கியம் மாக்கடல் கடைந்தமு தெடுத்துத்
தநதெ மக்குயிர் தருதியென் றிரந்தடி தாழ்ந்தார்.

(இ - ள்.) அந்த மந்தரமலை நெடிய பூமியைப்பிளந்துகொண்டு கீழே விழுந்து பாதலத்தி லழுந்தியது. எமது தந்தையே! தேவரீரையன்றி எங்களுக் கென்று இசைந்த செயலொன்றுள்ளதோ? தேவரீர் எழுந்தருளி வந்து பார்த்து, அப்பெரிய திருப்பாற்கடலைக்கடைந்து அமுதமெடுத்து எங்கட்குக் கொடுத்து எங்களுயிர் தருகவென்று வேண்டிப் பாதங்களில் வணங்கினார்கள்.

ஈரப் பைந்துழா யெம்பிரான் றிருவரு ளிரங்கிப்
பாரத் திண்சிறைப் புட்பிடர் சேவடி பதித்தான்
வேரிக் கற்பக நாடரு மசுரரும் வியந்தார்
சூரித் தெண்டிரைப் பாற்கடல் குறுகினர் முன்னி.

(இ - ள்.) குளிர்ந்த பசிய துளசிமாலை தரித்த திருமால் திருவருள் சுரந்து பருத்து வல்லபம்பெற்ற சிறகுகள்வாய்ந்த கருடனுடைய பிடரியின்மீது தமது திருவடிகளைப்பதித்தனர். மணந்தங்கிய கற்பக விருக்ஷமுள்ள தேவலோகத்தாரும் அசுரர்களும் ஆச்சரியப்பட்டார்கள். அமுதம்புசிக்கக்கருதி, பெருமை தங்கிய தெள்ளிய அலைகளையுடைய திருப்பாற்கடலை யடைந்தார்கள். எ - று.

கண்டு வெஞ்சிறைக் கலுழனீத் திழிந்தனன் கண்ணன்
றிண்டி றற்பெருங் கமடமாய்த் திருவுருச் சிறந்தான்
கொண்ட மேற்புற மிலக்கயோ சனையிடங் கொண்டு
மண்டு பாற்கடல் படிந்துவீழ் மந்தர மெடுப்ப.

(இ - ள்.) திருமால், மந்தரமலையிடப்பதைக்கண்டு, பெரிய சிறகுகளை யுடைய கருடனைவிட்டுக் கீழேயிறங்கி மிகுவல்லமை தங்கிய பெரிய ஆமையாக த்திருவுருவெடுத்தனர். அவ்வுருக்கொண்ட மேற்பாகமானது இலக்ஷயோசனை தூரம் உயர்வுடையதாகத் தாங்கிக் கொண்டு, நிரம்பிய பாற்கடலில் முழ்கி, பாதலத்திலமிழ்ந்த மந்தரமலையைக் கிளப்பி. எ - று. (கங)

முதுகு மந்தர நிறுவுற வாசுகி முறுக்கித்
கதுமெ னக்கடைந் திழுத்தனர் கலங்குபாற் கடற்பான்
மதுகை மந்தரஞ் சாய்ந்தது வண்டுழாய்க் கமட
மதுவு ணர்ந்தது பிறந்தது திருக்கர மநந்தம்.

(இ - ள்.) தமது முதுகிலே மந்தரகிரியை நிறுத்தவும் வாசுகியாகிய நாகனை யிறுக்கிப்பற்றிக்கொண்டு அதிவிரைவோடு கடைந்திழுத்தார்கள். கலங்கிய அப் பாற்கடலினிடையே வலியமந்தரமலை மீண்டுஞ்சாய்ந்துவிட்டது. வளர்ந்தங்கிய துளசிமாலைதரித்த திருமாலாகிய ஆமை அப்படிச் சாய்வதைத் தெரிந்தவுடனே, அவ்வாமைக்கு அநேகந் திருக்கரங்களுண்டாயின. எ - று. (கச)

வெற்பி னுச்சிதொட் டமுக்கின சிலகரம் விண்ணோ
ரற்பி னீர்த்தன ரொருபுற மசுரரீர்த் தயர்ந்தார்
கற்பி னுங்கவர்க் கொருபுற முதவியக் கமட
முற்பு றந்தொடுத் திழுத்தன திருக்கர முளரி.

(இ - ள்.) (அப்படித்தோன்றிய வற்றுட்) சிலகைகள் அம்மலையின் உச்சி யைப்பற்றிக்கொண்டமுத்தின. அப்போது தேவர்கள் ஒருபுறமும் அசுரர்கள் மற்றோர் புறமுமாக அன்போடிழுத்துந்சோர்வெய்தினார்கள். அவர்களுக்கு இவ் வாமையின் கைகளாகிய தாமரைகள் உதவியாயிருந்ததோடு, சிலகைகள் முற்பக் கலிலும் பற்றியீர்த்தன. எ - று. (கரு)

கடைந்த காலைநுண் டிவலைவெங் ககனமீத் தெறிப்ப
வுடைந்து பாற்கடல் சுழ்ன்றது மழுப்படை யொருவற்
கடைந்து சொற்றிது புரிந்தில ராதலி னதன்பாற்
குடைந்தெ ழுந்தது கருநிறக் கொடுவிடங் கொதித்து.

(இ - ள்.) இப்படிக் கடைந்த காலத்தில் நுண்ணிய நீர்த்துளிகள் பெரிய ஆகாயத்திற் சிதறும்படி பாற்கடல் உடைபட்டுச் சுழன்றது. மழுவாயுதமேந் திய ஒப்பற்ற சிவபெருமானுக்கு அதனைச்சென்று விண்ணப்பஞ்செய்து இத் தொழில் செய்யவில்லையானபடியால், அப்பாற்கடலில்கருநிறந்தங்கியகொடிய ஆலகாலமானது ஜ்வாலித்துக் கொப்புளித்துக்கொண்டு உண்டாயிற்று.

வடவை காளிமம் பொதிந்தென மணிநிறக் கடலுஞ்
படர்கொ ழும்புயல் பரந்தெனப் பருதியிற் றொலைந்து
மிடைய டுங்கருங் கங்குலுந் திறுத்தென விரிநீர்
புடைய டுத்தவுழ்ந் தெழுந்தது கொடுவிடம் பொங்கி.

(இ - ள்.) வடவாக்கினி கருநிறமெய்தியதுபோன்றும், சூழ்ந்து [illegible] இனை நிறமுடைத்தாய்ப்படரும் பெரிய மேக சாலங்கள் பரவியதுபோன்றும், சூரியனுக்கெட்டப்படாது மறைந்து நெருங்கிய கருநிறந்தங்கிய இரவுவந்து சேர்ந்தாற்போன்றும், அக்கடலின் மிகுந்த நீரும் அயலிலிருக்கும்படி அக்கொடிய விடமானது பெருகிப்பிரவாகித்து ஓங்கியது. எ - று (கசு)

வெருவி யோடினர் விண்ணவ ரசுரர்விண் புரந்த
கருவி மாமழை வண்ணனும் புகலிடங் காணு
தொருவி நீங்கிய விண்ணவ ரொருவழி குழுமித்
திருவி னாயக தடுத்தியென் றனுமவன் செப்பும்.

(இ - ள்.) தேவர்களும் அசுரர்களும் பயந்தோடினார்கள். தேவலோகத்தைக் காத்த உலககாரணமாகிய மேகநிறமுடைய சிறந்த இந்திரனும், புகுந்தவிடமறியாதவனானான். இப்படி அங்கிருந்து நீங்கியோடிய தேவர்கள் ஒருவாறு ஒன்றுகூடி, லக்ஷ்மீநாயகா! இவ்விஷத்தைத் தடுத்தருளுகவெனப் பிரார்த்திக்கவும், அத்திருமால் கூறுகின்றனர். எ-று. (கஅ)

என்னை யொப்பவ ராயிர கோடிய ரெனினு
முன்ன ருங்கொடு விடத்தினை யெதிர்ப்பவ ருளரோ
பின்னல் வேணியோன் றிருவரு ளுளதெனிற் பிழைப்பே
மன்ன தில்லையே லெங்ஙனம் பிழைத்துமென் றறைந்தான்.

(இ - ள்.) என்னை நிகரானவர்கள் ஆயிரகோடியர்கள் என்றாலும், எண்ணுதற்கும் அரிய இக்கொடிய விஷத்தை எதிர்ப்பவர்கள் உண்டோ? பின்னல் பொருந்திய சடையை யுடைய சிவபெருமான் திருவருளிருக்குமாயின் உயிர் பிழைப்போம் அஃதில்லாவிடின் எப்படிக் கடைத் தேறுவோமெனக் கூறினன்.

அந்த ரத்துள வானவ ரடுதிற லசுர
ரிந்தி ரப்பெரும் பெயரினோ னயனையீன் றளித்தோ
னுந்து வெம்பயத் தோடினர் கயிலையென் றுற்று
ரெந்தை யெம்பிரா னடைக்கல மபயமென் றிரந்தார்.

(இ - ள்.) ஆகாயத்திலுள்ள தேவர்கள், கொல்லத்தக்க வல்லபமுடைய அசுரர்கள், இந்திரனென்னும் பெருமை தங்கிய பெயருடையவன், பிரமனைப் பெற்றதந்தையாகிய திருமால், ஆகிய இவர்களெல்லாரும் தங்கள் மனதிலுதித்த கொடிய பயத்தினால் ஓடிச்சென்று, கைலாயமெய்தினார்கள். எமது தந்தையாகிய சிவபெருமானுக்குச் சரணமெய்தி அபயமருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். எ-று. (உ0)

வேத நாயக விளங்கொளி வெவ்வழற் பிழம்பாஞ்
சோதி நாயக சுடர்க்கொடி மரகதம படர்ந்த
பாதி நாயக பராபர பழமறைக் கெட்டா
வாதி நாயக வஞ்சினே மபயநின் னபயம்.

(இ - ள்.) வேதநாயகரே! விளங்குகின்ற காந்தி தங்கிய கொடிய தீத்திரட்சியான சோதித்தலைவரே! பிரகாசிக்கின்ற மரகதக்கொடிபோன்ற பார்வதிதேவியார் பொருந்திய அர்த்த சரீரியாகிய இறைவரே! பரமும் அபரமுமாகவுள்ளவரே! பழமையாகிய வேதங்களுக்கும் எட்டப்படாத முழுமுதற்கடவுளே! அடியேங்கள் அச்சமெய்தினோம். தேவரீருக்கு அடைக்கலம் அடைக்கலம். எ-று.

வித்து மாயினை யங்குரம் விடுத்தவெஞ் சினையின்
கொத்து மாயினை யவ்வழி யுயிர்க்குல மனைத்திற்
கொத்து நின்றனை யாதலி னுனக்கிது பரமா
லத்த னேயிறப் பஞ்சினே மபயநின் னபயம்.

(இ - ள்.) வித்தையாகவும் விளங்கினீர். மூலையினின்றுயர்ந்த பெரியகிளைக ளின் தொகுதியாகவும் விளங்கினீர். அவ்வகையே இவ்விரண்டிற்கும் ஒரே தன்மையாக விளங்கியிருக்கின்றீர். ஆதலால் தேவரீருக்கு இது கடமையாகும். புனிதமானவரே! நாங்கள் மரணத்திற்குப் பயந்தோம். தேவரீருக்கு அடைக் கலம் அடைக்கலம். எ - று. (உஉ)

இரந்தி ரந்துநின் றிவைபகர்ந் தேத்தலு மெமையாள்
கரந்தை வார்சடை யெம்பிரான் கருத்தறி யான்போ
லரந்தை யென்கொலென் றருளினு னங்கவர் தொழுது
பரந்த பாற்கடல் கடைந்துள பரிசெலாம் பகர்ந்தார்.

(இ - ள்.) இப்படித் திருமுன்னின்று பலவாறு பிரார்த்தித்துக் கூறித் துதித்தவுடன், எம்மையாட்கொண்ட பொற்கரந்தையணிந்த நீண்ட சடையை யுடைய நமது சிவபெருமான், அவர்கள் விருப்பையுணராதவர்போல உங்கட் குற்ற துயரம் யாதெனவினவியருளினர். அதற்கு அத்தேவர்கள் வணங்கி, பர வியிருக்கும் திருப்பாற்கடலைக் கடைந்ததனாலுண்டாகிய தன்மைகளையெல்லாஞ் சொல்லினர். எ - று. (உ௩)

கடவு ளர்க்கெலா முதன்மைநீ யாதலிற் கடைந்த
தடநெ டுங்கடன் முந்துறந் தந்ததுன் றனக்கால்
விடம டக்குதி யென்னலு மென்றலும் விமலன்
புடைம டக்கொடி நோக்கினன் முகிணகை புரிந்தான்.

(இ - ள்.) தெய்வங்களுக்கெல்லாம் தலைமையானவர் தேவரீராதலின், நாங் கள் கடைந்த விசாலித்த நீண்ட திருப்பாற்கடல் முதலிலே கொடுத்தது தேவரீ ருக்கு உரியது. ஆதலால், அவ்விஷத்தை யடக்கியருளவேண்டும். கடவுளே! என விண்ணப்பஞ்செய்யவும், மலரகிதராகிய சிவபெருமான் தமது வாமபாகத்தி லுள்ள இளங்கொடிபோலும் உமாபிராட்டியாரை நோக்கிப் புன்னகை செய்த ருளினர். எ - று. (உ௪)

மாடு நோக்கினன் சுந்தர வருதியென் றருளி
நீடு வெவ்விடங் கொணர்கென நிகழ்த்தின னிமலன்
பாட கன்றெழு விடங்கொடு நாயகன் பணிக்கை
யூட மைத்தன னிருந்தருந் திருக்கரத் தொடுங்கி.

(இ - ள்.) தமது பக்கலில் திருக்கண்சாத்தி (அணுக்கத்தொண்டராகிய சுந்தரமூர்த்திகளை) சுந்தரா! வருகவெனத் திருவாய்மலர்ந்து, பெருகிய அக்கொ டியவிஷத்தைக்கொண்டுவருகவெனக் கட்டளையிட்டனர். பெருமை விளங்கித் தோங்கிய அவ்வால காலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, சிவபெருமான் குவிர் ந்த திருக்கரத்தில் இருத்தினர். அவ்விடமானது (உலகெங்கும் பரவிய தன்மை நீங்கி) திருக்கரத்திலொடுங்கி யிருந்தது. எ - று. (உ௫)

விரிந்த தாமரைச் சுரும்பென விளங்கிய விடத்தை
வரிந்த வார்சடை யெம்பிரான் றிருவுள மகிழ்ந்து
பரிந்து நோக்கின னுகர்ந்தனன் களத்திடைப் படுத்தான்
தெரிந்த வானவ ரதிசயங் கொண்டனர் திகைக்கள்.

(இ - ள்.) மலர்ந்த தாமரை மலரிலுள்ள வண்டுபோல விளங்கிய ஆலகாலத்தை, கட்டியுள்ள நீண்டசடையையுடைய எமது சிவபெருமான் திருவுள்ளங் களித்தவராய் விருப்போடு நோக்கிப் புசித்துத் திருக்கண்டத்திலடக்கினர். இதனையறிந்த தேவர்கள் ஆச்சரியமெய்தித் திகைப்புற்றார்கள். எ-று. (உஎ)

அற்றை நாண்முதற் காளகண் டப்பெய ரமைந்தான்
மற்றை நாரணன் முதலியோர்க் கின்னருள் வழங்கித்
தெற்று வெண்டிரை கடைந்துறப் பணித்தனன் செம்பொற்
பொற்றை வில்லினோன் விடைதரத் தொழுதனர் போனார்.

(இ - ள்.) சிவபெருமான் அன்று தொடங்கி, காளகண்டனென்னுந் திருநாமமெய்தினர். மற்ற திருமால் முதலிய தேவர்களுக்கு இனிய திருவருள்பாலித்து, மாறிமாறி வருகின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலை மேலுங்கடையும்படி கட்டளையிட்டனர். செம்பொனாகிய மேருவில்லையுடைய சிவபெருமான் விடைகொடுத்ததால் அவர்கள் யாவரும் வணங்கிச்சென்றார்கள். எ - று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சங்குசக் கரங்கை தாங்குந் தாமரைத் தடங்கட் புத்தேள்
வெங்கண்வா ளசுர ரோடும் விண்ணவா குழுவி னோடும்
பொங்குபே ருவகை யோடும் பாற்கடன் மருங்கு புக்கா
ஙங்கணுற் றடைந்த வாறே யக்கடல் கடைவ தானன்.

(இ - ள்) பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கையும் சுதரிசனமென்னுஞ் சக்கரத்தையுந் திருக்கரத்திருத்திய, செந்தாமரை மலர்போன்ற பரந்தவிழிகளையுடைய திருமால், கொடுங்கண்ணையுடைய வாளேந்திய அசுரர்களோடும் தேவர் கூட்டத்தோடும், அதிகரிக்கின்ற பேரானந்தத்துடன் திருப்பாற்கடலையடைந்து, அங்குச்சென்றவகையே அப்பாற்கடலைக் கடைவதானார். எ - று. (உஅ)

அண்டமொன் றெடுத்துக் கொண்டு கவிழ்த்திய தனைய தாக
வொண்டிறற் கமட மாகிக் கிடந்தன னுலக முண்டோன்
றெண்டிரைப் பரவை நாப்பண் மந்தரந் திருப்பா நின்று
ரெண்டருங் கடவு ளோரு மடுதிற லசுரர் யாரும்.

(இ - ள்.) ஓரண்டத்தை யெடுத்துக்கொண்டு கவிழ்த்துவைத்ததையொத்ததாக, மிக்கவலிதங்கிய [கமடம்] ஆமையாகி, உலகமுண்ட திருமால் விளங்கினர். எண்ணத்தக்க தேவர்களும் கொல்லத்தக்க வலிதங்கிய அசுரர்களுமாகிய யாவரும், தெளிந்த அலைகளையுடைய சமுத்திரத்தினிடையே மந்தரகிரியைச் சுழற்றுவாராயினர், எ - று. (உகூ)

உகடிரை மறுகி யேங்கி யுளைப்புற வொலிநீர் வேலை
யகடுறக் கலக்கா நின்றே வேலையி னதன்பா னின்று
முகடிவந் துறிப்ப நோக்கி மயங்கினர் புலவர் முன்னீர்த்
தலைபெறு வருணற் சேர்ந்தா ருதித்தெழுந் தவ்வை தன்னை.

(இ - ள்.) புரளுகின்ற அலைகள் வருந்தியெக்கழுந்து திக்கிக்கும்படி சுத்திக்கின்ற நீர் நிறைந்த அக்கடலின் இடையே கலக்கிக் கடைகின்ற காலத்தில், அந்தப் பாற்கடலிலிருந்து மூதேவி வந்து பிறக்க, தேவர்கள் மயங்கினவர்களாகி, அப்படி யுதித்த அம்மூதேவியைக் கடலின்றலைமை யெய்திய வருணனுக்குக் கொடுத்தார்கள். எ - று. (௯௦)

தீயவட் பின்னர்த் தன்வந் திரியெனு மருத்து நூலோன்
றூயகைக் கரகத் தோடுந் தண்டொடுந் தோன்றி வந்தான்
பாய்திரை யுலக மெல்லாம் வாகடப் பனுவ னூலா
னோயறுத தொழிப்ப விட்டார் விண்ணவ ரவனை நோக்கி.

(இ - ள்.) மூதேவியின் பின்னர், தன்வந்திரியென்னும் ஆயுர்வேத சாஸ்திரி, புனிதமான கைக்கமண்டலத்தோடும் தண்டத்தோடும் உதித்து வந்தனன். தேவர்கள் தன்வந்திரியைப்பார்த்து, பாய்கின்ற அலைகளையுடைய கடல்சூழ்ந்த உலகெங்கும் ஆயுர்வேதமென்னுஞ் சாஸ்திரத்தால் நோய் நீக்கிக்கொண்டு வாழும்படி விடுத்தார்கள். எ - று. (௯௧)

ஆடரிந் தடங்க ணல்லா ரரம்பைய ரறுபத் தாறு
கோடியர் சிலதி யார்க ளளவறக் கொண்டு போந்து
பாடகல் பாவை தோன்ற மகபதி பரிவி னோக்கி
நீடுவா னுலக மெய்தப் போதிரென் றுரைதது நீத்தான்.

(இ - ள்.) அரிபடர்ந்து பரந்த கண்களையுடைய அறுபத்தாறுகோடி அரம்பாஸ்திரீகள், தங்கட்குத் தோழிமார்கள் கணக்கிறந்தவர்களாகவும் அழைத்துக்கொண்டு வந்து, பெருமை பரந்த அந்த க்ஷீராப்தியிற் பிறக்க அவர்களை இந்திரன் பிரியத்தோடு பார்த்து, தேவலோகமடையப் போவீர்களாகவென்று சொல்லி விடுத்தான். எ - று. (௯௨)

வெண்ணிறச் சுரைவந் தெய்த நீத்ததா லசுர வெள்ளம்
பண்ணவ ரெடுத்துக் கொண்டா ராதலாற் பரவு வானோர்
விண்ணுமண் ணுலக மெல்லாஞ் சுரரென விளங்கா நின்றா
ரண்ணல்வே னிருதா நீந்தா ராதலா லசுர ரானார்.

(இ - ள்.) வெண்ணிறந்தங்கிய [சுரை]கள் அதன் பின்னே பிறந்தது. அப்போது அசுரக்கூட்டம அங்கு நின்றகன்றது. தேவர்களே அதனை யெடுத்துக்கொண்டார்கள். ஆதலால் துதிக்கத்தக்க தேவர்கள் தேவலோகம் பூலோகமென்னும் இடங்களிலெல்லாம் சுரரென்று சொல்ல விளங்குகின்றார்கள். பெருமைதங்கிய வேலேந்திய அசுரர்கள் அதனை விலக்கினாரானபடியால் அசுரர்களானார்கள். எ - று. (௯௩)

கச்சவப் புறங்கா லூன்றிக் கனவரை முகடு தாவி
யுச்சியிச் சிரவ மென்னு மோங்குளைப புரவி தோன்ற
பச்சிமத் தடங்கு வெய்யோன் பரியினு முரிய தாக
வச்சிரத் தாற்கென் றீந்தான் மதுத்துழா யலங்கன் மாயோன்.

(இ - ள்.) பின்னர், அவ்வாமையின் முதுகிற் காலூன்றிக்கொண்டு பெரிய மந்தரமலையின் உச்சியளவு முயர்ந்து, உச்சைச்சிரவமென்னும் நீண்ட புரவி

குன்ற குதிரையொன்றுபிறக்க, அக்குதிரைமேற்றிசையில் அந்தமின்றுழுளின் றுடைய பச்சைக்குதிரையைக்காட்டிலும் மேம்பட்டதாயிருக்கக்கண்டு, தேன் சிந்தும் துளசிமாலைதரித்த திருமால் அதனை வச்சிரபாணியாகிய இந்திரனுக் கென்று கொடுத்தனர். எ - று. (௧௫)

அதிர்கடல் பிறந்த வெய்யோ னன்றளவி ன்று கான்ற
கதிர்திரண் டெழுந்த வென்னக் கவுத்துவ முதிப்ப நோக்கி
மதுமழை துளிக்குங் குல்லை யாலைசேர் மருமநாப்பண்
பிதிரொளி பரப்ப வைத்தான் பாறகடல் கிடந்த பெம்மான்.

(இ - ள்.) ஒலிக்கின்ற கீழ்க்கடலினுதித்த சூரியன், அன்றுமுதல் இன்று வரையில் பரவிய கிரணங்களெல்லாம் ஒன்று சேர்ந்து தோன்றியதென்று சொல்லும்படி கௌஸ்துபமணி பிறக்கப்பார்த்து, திருப்பாற்கடலில் அறிதுயில் கொள்ளுந் திருமால், தேன்மாரியைத் துளித்துக்கொண்டிருக்கும் துளசிமாலை யணிந்த தமது மார்பில் மிகக்காந்தி வீசும்படி யணிந்துகொண்டார். எ - று. ()

தருதரு வைந்துங் காம தேனுவுந் தயங்கு வெய்யோன்
வருகதிர் மழுக்கு சிந்தா மணியும்வந் தெழுந்த நோக்கிப்
பொருதிறற் குலிசக் கோமாற் கிவையெனப் புலவர் யாருங்
கருமழை வண்ணத் தோனு மளித்தனர் கருணை கூர்ந்தார்.

(இ - ள்.) எண்ணியவற்றைத் தரத்தக்க பஞ்சதருக்களும், காமதேனுவும், ஒளி மிக்க சூரியன் வீசுங்கிரணங்களையும் மழுக்கத்தக்க சிந்தாமணியும் வந்து தோன்றியதைத் தேவர்களெல்லாரும், சூல்கொண்ட மேகம்போலுங் கருநிறந் தங்கிய திருமாலும் நோக்கிக் கருணை மிக்கவர்களாய், இப்பொருள்கள் போர் செய்யும் வல்லமைதங்கிய வச்சிராயுததாங்கிய இந்திரனுக்குரித்தென்று கொடுத்தார்கள். எ - று. (௧௬)

அங்கிவை பிறந்த பின்ன ரெழுதிரைப் பரவை நாப்பண்
டெங்கம ழலங்கற் குல்லைத் திருநெடு மாயன் காணப்
பாங்கெதி ருதித்து விண்ணோர் யாவரும பரவ வெள்ளைப்
பூங்கலை விரித்துத் திங்கட் கடவுள்வின் ணெழுந்து போனான்.

(இ - ள்.) இவையெல்லாம் பிறந்த பிறகு, உயர்ந்த அலைகளையுடைய திருப்பாற்கடலினிடையே, மணம் வீசும் துளவமாலைதரித்த திருமால் காணும் படி, எதிரிலே மேன்மையோடு பிறந்து தேவர்களெல்லாருந் துதிக்கும்படி வெண்ணிறந்தங்கிய அழகிய கிரணங்களைப்பரப்பிக்கொண்டு, சந்திரன் ஆகா யத்திற் கெழுந்துபோயினான். எ - று. (௧௭)

ஒள்ளொளிப் பசும்பொ னின்று வொளிதனை துருவ மாகப்
பிள்ளைமென் குதலைச செவ்வாய்க் கோவையிற் பிறந்து காட்டத்
தெள்ளரி சிதறி நீண்ட சேலெனடுந் தடங்க ணேடி
வள்ளைவார் குழையூ டாடி செடுங்குமிழ் மறுகி வீழ.

(இ - ள்.) மிக்க ஒளிதங்கிய பசும்பொன்வீசுங் காந்தியே [illegible] நிறமாகவும், இளமைதங்கிய மெல்லிய மழலைச்சொல்கூறும் செவ்விய அதரங்கள் கொவ்வைக்கனிபோல விளங்கித்தோன்றவும், தெளிந்த செவ்வரி [illegible]

தங்கிய செவ்வோதும் விசாலித்த விழிகள் ஒடிப்புரய்க்கு நீண்ட குமிழென்று சொல்லத்தக்க நாசிகளும் வருந்தித் தக்கிக்க வள்ளைக்கொடிபோலும் நீண்ட செவிகளோடு சேரவும். எ - று. (௧௫)

வால்வளைத் தளிர்க்கை நான்கி னொருகரம் வனச மேந்த
நூலிடை மறுக்கங் கண்டும் வெம்முலை நுடங்கா திற்பக்
கோல்வளை யுருவக் காந்தி பரத்தலிற் கொழித்து வீங்கும்
பாலிரும் பரவை பொன்னீ ராமெனும் பசுமை காட்ட.

(இ - ள்.) ஒளிதங்கிய வளையலணிந்த நான்கு திருக்கரங்களில் ஒரு கை தாமரை மலரைத்தாங்கவும், நூல்போலும் இடையானது வருந்தக்கண்டும் பூரித்த தனங்கள் துவளாதிருக்கவும், அழகிய வளையணிந்த அவ்வடிவத்தின் காந்தி பரவுதலால், அதிகரித்துப் பெருக்கெடுக்கும் பெரிய கடலின் பால் முழுவதும் பொன்னீரெனச் சொல்லத்தக்க நிறத்தைக்காட்டவும். எ - று. (௧௬)

வாரிரு ளோதி தாங்கு மணிமுடி வயங்க வெண்மைப்
பூரண மதியி னள்ளி யெடுத்தவை புனைந்த போலு
மீரவெண் ணிலவு காலு முத்தணி யிமையா நிற்ப
வேரியங் கமல மேந்தப் பிறந்தனள் விமலை யன்றே.

(இ - ள்.) கருநிறமெய்தி நீண்டிருக்கும் கூந்தலானது தாங்கிய அழகிய கிரீடம் விளங்கவும், வெண்ணிறமமைந்த பூரண சந்திரனிடத்தில் அள்ளி யெடுத்தவற்றை யணிந்தாற்போன்ற குளிர்ந்த வெண் சந்திரிகை பரப்புமுத்து மாலைகள் பிரகாசிக்கவுந் தேன்பொருந்திய அழகிய தாமரைமலரேந்தவும் திருமகளுதித்தாள். எ - று. (௧௭)

நோக்கினன் கரிய மேனி வானவ னொடியிற் றன்பா
லாக்கின னவளை வேலை யமுதெழக் கடைந்து பெற்ற
பாக்கிய மிதுவென் றெண்ணி மகிழ்ந்தனன் பதுமக் கண்ணன்
மேக்குய ருவகை யோடுந் தொழுதனர் விண்ணு ளோர்கள்.

(இ - ள்.) கருநிறத்திருமேனியுடைய திருமால் அதிவிரைவில் திருமகளைத் தன்வசமாக்கிக்கொண்டனர். செந்தாமரைமலர் போலும் விழிகளையுடைய அத்திருமால் பாற்கடலிலமுதமெழும்படி கடைந்ததினுலுண்டாகிய பாக்கிய மிதுதானென்று நினைத்துச் சந்தோஷித்தார். தேவர்கள் யாவருமதிகரித்த சந்தோஷத்தோடு பணிந்தார்கள். எ - று. (௧௮)

இவையெலாம் பிறந்த பின்னர் விண்ணவ ரிழைத்த [illegible]
குவையெலாந் திரண்டு தீம்பாற் கடல்வழிக் கொண்ட [illegible]
லவையெலாம் புகழ்ந்து போற்ற மாயவ னயர்வு தீரச்
சுவையெலா [illegible] தெய்வ வமுதமுந் தோன்றிற் றன்றே.

(இ - ள்.) இவை யாவுந்தோன்றிய பிறகு, தேவர்கள் செய்த புண்ணியத் தொகுதியெல்லாமொன்று சேர்ந்து மதுரமாகிய பாற்கடலின் வழியில் வந்தாற் போன்று, அச்சபையிலுள்ளார் யாவரும் புகழ்ந்து தோத்திரஞ்செய்யவுந் திருமா லின் தளர்ச்சி நீங்கவும் மதுரங்களெல்லாவற்றையுங்கொடுக்கத்தக்க தெய்வீக மகிய அமுதமும் உதித்தது. எ - று. (௧௯)

ஆர்ழ் தெழுந்த பின்ன ரமரரு மசுரர் யாரும்
பேரம ருடற்றி நின்று ரெமக்கெமக் கென்னும் பேற்றுற
போரடு களத்துட் பட்டார் வானவ ரநேகர் பொங்கி
வீரற முடிந்து பட்டு மடிந்தது நிருத வெள்ளம்.

(இ - ள்.) சிறந்த அமுதம் பிறந்த பின்னர், தேவர்களு மசுரர்களுமாகிய விருதிறத்தோரும், எங்களுக்கெங்களுக் கென்றுந் தன்மையால் பெரும்போர் செய்திருந்தார்கள். அப்போது அப்போர்க்களத்திற்றேவர்களநேகரிறந்தார்கள், அசுரத்தொகுதி யதிகரித்து உறவினரோடு அழிவுபட்டிறந்தது. எ - று. ()

கரையழி குருதி யாறு கடன்மடுத் தெடுப்பத் தம்மில்
வரையறு திமிலத் திண்போர் விளைத்தனர் மறல நோக்கி
விரைகம ழலங்கன் மாயோன் வெண்ணிறப் பரவைத் தீம்பா
லிரைகட லமுத கும்ப மிடைபுகுந் தெடுத்துக் கொண்டான்.

(இ - ள்.) கரையற்ற உதிரநதி பாற்கடலிற்போய் நிரம்பும்படி தங்களி லளவிறந்த பெருங்கோஷமுடைய வலிய யுத்தஞ்செய்தார்கள். மணங்கமழுந் துளசிமாலையணிந்த திருமால் கொடுமையாக நோக்கி, வெண்ணிறந்தங்கிய மதுரமுள்ள பாற்கடலென்னுஞ் சத்திக்கின்ற சமுத்திரத்திலுதித்த அமுத கும்பத்தை, அவர்களுக்கிடையே புகுந்து தாமெடுத்துக்கொண்டனர். எ - று.

அமரரு மசுரர் யாரு மடுபறந் தலையிற் புக்குச்
சமரெடுத் துடற்று கின்ற தன்மையை நோக்கி யாவி
கமரிடைக் கவிழ்ப்ப தானு ரென்பதுங் கருதி யுள்ளங்
குமைவுற மருட்டு மாறோர் மோகினி வடிவங் கொண்டான்.

(இ - ள்.) எல்லாத்தேவருமசுரருங் கொல்லத்தக்க போர்க்களத்திற்போய், போர்செய்துகொண்டிருக்குந் தன்மையை நோக்கி, ஐயோ! இவர்கள தங்க ளுயிரை வெடிப்பில் வீழ்த்தியதுபோல வீணேயிறக்கின்றார்களென்பது கருதி அவர் மனம்வருந்துமாறு அவர்களை மயக்கும்படி யொப்பற்ற மோகினியவதார மெடுத்தனர். எ - று. (௬௫)

கருநிறக் கமஞ்சூன் மேக வண்ணமக் கனகக் காந்தி
பொருவுறப் பழைய மேனிப் புயனிற மொருங்கு மீப்போய்
மருமல ரளக மாகத் தழைந்ததோ வனைபூங் கற்றைச
சுருணிரு ளளக மின்ன தென்றது சொல்லற் பாற்றோ.

(இ - ள்.) சூல் நிறைந்த மேகத்தினிறந்தங்கிய கருநிறமானது சிறந்த பசும்பொன்னின் காந்திபோலாய்விட முன்பிருந்த மேகவண்ணம்யாவும், மேலே போய் வாசனை வீசும் மலர்களணிந்த கூந்தலாய் விளங்கினதோ? அலங்கார முடைத்தாய் அழகுற்றுத் தொகுப்பாய்ச் சுருண்டுள்ள கூந்தலை யின்னதென்று சொல்லத்தக்கதோ? எ - று. (௬௬)

வானிளம் பிறையைப் பற்றித் திருக்கற வுடித்து நீவிக்
கூனுத லாக்கிக் காம னாண்டமோ ரிரண்டுங் கொண்டு
நீனிறப் புருவ மாக்கி யமைத்தவோ நிகழ்த்தி னம்மா
மேனிலைப் புருவ நெற்றிக் குவளையார் விரிக்கற் பாலர்

(இ - ள்.) ஆகாயத்திலுள்ள இளம்பிறைச்சந்திரனைக் கையாற்பிடித்து முருக்கறத்தெளித்தெடுத்துச் சாணைசெய்து வளைந்த நெற்றியாகி மன்மதனுக்குரிய கருப்புவில் புட்பவில் இரண்டையுமெடுத்து நீல நிறமிட்டு, புருவமாயச் செய்தமைத்துள்ளனவோ? சொல்லுமிடத்தில் மேம்பட்ட நிலைமையுடைய புருவத்திற்கும் நெற்றிக்கும் எவர்தாமுவமை எடுத்துச்சொல்ல வல்லவர்கள்?

ஆருயிர்க் கொள்ளை யெல்லாம் வானவ ரளிப்ப மாந்தும்
வார்குழை வள்ளை வாட்டி மடித்துவைத் தனவே யேனும்
பேரொளிப் பசும்பொ னோலை யழகுதன் பெருமை யெல்லாங்
காரிகைக் கெழுதிச சாற்று சாதனங் கடுப்ப தம்மா.

(இ - ள்.) தேவர்கள் தங்களுயிரையெல்லாங் கொள்ளை கொடுக்கப் புசிக்கும் நெடிய காதணியானது வள்ளைக்கொடிபோலுஞ் செவியை யறுத்துமடித்து வைத்திருப்பனவேயானாலும் மிகக்காந்தியுடைய பசும்பொன்னாலான அவ்வோலை அப்பெண்ணி னழகு பெருமை முதலியவற்றையெல்லாமெழுதியவளுக்கேயணிந்த வொரு [சாசனம்] பத்திரத்தை யொத்திருந்தது. எ - று.

கயல்பொரு தறவு நீண்டு கடைசிவந் துலகோர்க் காரு
மயல்புரிந திருபாற் றுள்ளி மதர்மதர்த் தரிக டோய்நது
பெயர்தொறும் வெளிய வாகிப் பிறழ்ந்திடு கருங்க ணன்னே
யுயிர்செகுத் துண்ணு மீற்றிற் கூற்றமோ வுரைக்கி னம்மா.

(இ - ள்.) கயல்மீனை யெதிர்த்து மிக நீண்டு கடைசியிற் சிவந்து, உலகினருக்கு மயக்கஞ்செய்து இருபுறங்களிலுங் குதித்து, களிப்பாற்செழித்துச்செவ்வரி படர்ந்துசெல்லும்போதெல்லாம் வெண்ணிறமுற்றதாய்ப் பிறழ்கின்ற கரிய விழிகள் சொல்லுமிடத்தில் யாதென்று சொல்லலாம்? தேகாந்தியத்திலுயிரை யழித்துண்ணும் இயமன்றானே! எ - று. (சக)

அமிழ்துயிர்த் தொழுங்கி னீடு பேரழ கமைய வாய்ந்து
குமிழபொரு தெள்ளி ஞெண்பூத் தொழுத்தகுங் குணத்த வாகி
யுமிழ்திரை யுலக மென்பூ நறைமுறை யுயிர்க்கு மூக்கிற்
கிமிழ்திரைப் பரவை ஞாலத் துவமையா ரிசைக்கற் பாலார்.

(இ - ள்.) பால்போன்று இனிதாய்ச் சுவாசித்து ஒழுங்கின் மிக்க பேரழகடையப்பெற்றுக குமிழமலரையெதிர்த்து, எள்ளின் ஒளி தங்கிய பூவானது வணங்கத்தக்க தகுதியுடையதாய், அலைகள் மோதுங் கடல்சூழ்ந்த உலகில் மெல்லிய மலர்மணத்தை முறைப்படி முகருகின்ற நாசிக்குச் சத்திக்கின்ற அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூமியிலே யாவர் ஒப்புசொல்லவல்லவர்?

மருப்பயின் றெழுகி நீண்ட வாரிண ரோதி மாத
ருருக்கினர் கபோல மெல்லா மாடியொப் புரைப்பர் மேலோர்
கருக்கினர் மாய ரூபத் தொளிபிறழ் கபோலந் தானே
தருப்பணத் துவமை யென்ப தல்லது சாற்றற் பாற்றோ.

(இ - ள்.) மணம்வீசிக்கொண்டிருந்து நீண்ட படிந்த மலர்க்கொத்தையணிந்த கூந்தலையுடைய மாதர்களினழகமைந்துள்ள கன்னங்களையெல்லாம் மேலோர் கண்ணாடிகளொப்பாகச் சொல்லுவார்கள். இவளைப்பாலதாகிய [illegible]

வடிவேல் நுனி யிலும் இவள் கபோலமோ கண்ணுடிக்கொப்பாகுமன்றி மற்றை வோர் உபோலம் அப்படிச்சொல்லத்தக்க தன்மையுடையதோ? எ - று. (இ௧)

விளரியு மதுரத் தேனு மென்குயிற் குரலுஞ் செவ்வாய்
வளைமுகக் குதலைக் கிள்ளை மழலையு மயங்கத் தோய்ந்த
கிளவியு மமிழ்து முத்தக் கிளைபடு நிரையு மெல்லா
மளவுசெவ் வாம்ப லுண்டே லதரவாய் நிகர்க்கு மன்றே.

(இ - ள்.) விளரிப்பண்ணொலியும் இனிய தேனின் சுவையுங் குயிலின் மெல்லிய குரலொலியும் வளைவாயுள்ள செவ்விய வாயையுடைய கிளியின் இளமைவாய்ந்த மழலைச்சொற்களும் மயங்கும்படி பொருந்தியுள்ள சொற்களும் அமுதமும் முத்துக்களின் தொகுதியமைந்த வரிசையுமாகிய இவையெல்லாம் ஒன்று சேர்ந்துள்ள செவ்வல்லிமலருளதானலது இம்மங்கையின் இதழையும் வாயையு மொப்பு நிற்கும். எ - று. (இ௨)

கடைந்தெழு மமிழ்தின் றுள்ளி பற்பல வொழுங்கு காட்டி
யடைந்தவோ காம வித்தி னங்குர நிரைந்த வாறோ
மிடைந்திடை யோரைக் காட்டி முளையென விளங்கு மூரற்
கிடைந்துகொ லருப்பு முல்லை யலர்பட விழிந்த வாறே.

(இ - ள்.) கடைதலாலுண்டான அமிர்தத்தின் பல துளிகள் வரிசைப் ச் சேர்ந்தனவோ? காமவித்தையின் [அங்குரம்] முளைகள் வரிசையாய்நின்ற தன்மையோ? நெருங்கிச்சேர்ந்திடையில் சமயங்களையுணர்த்தி முளைகள்போல் விளங்கும் இம்மங்கையின் பற்களுக்குத் தோற்றுத்தானே முல்லையரும்புகள் முலையலரென்று தூற்றும்படி விழிவெய்தின. எ - று. (இ௩)

குவளையுங் குமிழு நீலக் கொடிகளுங் குவளை பூப்பத்
துவடரு வள்ளைத் தண்டு முல்லைவெண் டொகையுஞ் செய்ய
பவளமு மளவித் தோன்றும் பானிலவுளதே லம்பொ
னிவரொளி வதன மொப்ப தலதெனி லுவமை யென்னும்.

(இ - ள்.) குவளைமலர் இரண்டுங் குமிழமலரொன்றும் நீலவர்ணக் கொடிகளும் அக்குவளை மலர்கள் மலர்தலால் துவளுதலுடைய வள்ளைத்தண்டு களும் வெள்ளிய முல்லையரும்பின் தொகுதியுஞ் சிவந்த பவளத்துண்டுகளும் கலந்துள்ள பால்போலும் வெண்ணிறந்தங்கிய சந்திரனிருப்பானுனல் அழகிய பொன்போலுங் காந்தியைப் பரப்பும் இம்மாதின் முகத்துக்குச் சமானமாகும். அப்படி இல்லையாயின் உவமையாதாகும். எ - று. (இ௪)

மங்கலக் களத்தி னொப்பு மேலவர் வகுப்ப தொன்றே
சங்கமும் வெளிறிப் போன துவமிக்குந் தகைமை சான்ற
பொங்குபூங் கமுகோ நீண்டு காட்டின புலமை யோர்மற்
றெங்குள வெடுத்துக் காட்டி யிசைப்பதற் கேது மம்மா.

(இ - ள்.) மங்கலகரமான கழுத்திற்குப் பெரியோர் ஒப்பிடுவதொன்று கருதியே சங்கும் வெளுத்துப்போயிற்று. உவமிக்கத்தக்க தன்மை மிகுந்த மேன்மைபொருந்திய பாக்குமரமோ நீண்டு காட்டியது. அறிவின் மிக்கோர் இம்மாதின் கழுத்திற்கு ஒப்பாக வெடுத்துக்காட்டிச்சொல்லத்தக்க வேறு பொருளெங்குள்ளது? எ - று. (இ௫)

தண்படு துணைத்தோண் மென்மை தனதனம் பெதிர்ந்த வேயுங்
கண்படக் கவினுங் காம ரண்டமா னிறப்பக் காட்டும்
பண்படு குதலைச் செவ்வாய்ப் பனிமொழிப் பாவை யல்குற்
பெண்கொடி பசுந்தோட் கென்னை யுவமிக்கும் பெற்றி மற்றே.

(இ - ள்.) குளிர்ச்சிதங்கிய இருதோள்களின் சிறப்பைத் தனதனப்பட லெதிர்த்த மூங்கில்களுங் கண்டோர்க்கு அழகு செய்யுங் கரும்பும் வெட்க மதிகப்படத் தங்கள் குற்றத்தைக்காட்டிக்கொண்டிருக்கும் பண்ணொலிபோன்ற மழலைச்சொல்லையுடைய சிவந்த வாயும், குளிர்ந்த வார்த்தைகளும், கடல் போன்ற நிதம்பமும் வாய்ந்த கொடிபோன்ற இப்பெண்ணின் பசிய தோட்களுக்கு வேறே யுவமிக்குந் தன்மையுடையது யாது? எ - று. ([illegible])

அரிமயிர் முன்கை யாவி யாருழைக் கவரு மென்னத்
தெரிகில மகர யாழின் றிறமெலா மொருங்கு சார்ந்த
விரிமலர்க் காந்த ளேயோ விரைநறுங் கமல மேயோ
வெரிநிறத் தளிரோ வங்கை யாதெனத் தெரிக்கி லேமால்.

(இ - ள்.) அதிநுண்ணிய உரோமங்களையுடைய முன்கையானது யவரிடத் திலுயிரைக்கவருமோ தெரியோம். அழகிய கரங்கள் மகரயாழின் றன்மைக ளெல்லா மொன்றாய்ச்சேர்ந்த மலர்ந்த காந்தண் மலர்தானோ? மணங்கமழும் தாமரைமலர்தானோ? மணமும் நிறமுந்தங்கிய தளிரோ? இவற்றுள் யாதென்று சொல்லவுந் தெரிகிலோம். எ - று. ([illegible])

வள்ளவாய்க் கமலத் துள்வாய்ச் சிற்றிதழ் வகுப்போ பிள்ளைக்
கிள்ளைமூக் கொருங்கே வந்து கிளைத்தன முளைத்த வாறோ
வெள்ளொளி வயிரக் காந்தி யுருப்பட விரிந்த வேயோ
வொள்ளுகிர்க் குவமை யென்னென் றுரைக்குதும் புலமை யோரே.

(இ - ள்.) கிண்ணம் போன்மலர்ந்த தாமரைமலரிலிருக்கின்ற சிறிய விதழ் களின் பிரிவோ? கிளிக்குஞ்சுகளின் மூக்குகள் யாவுமொன்று கூடிவந்தோன்றி முளைத்தனவோ? வெள்ளிய காந்தியுடைய வயிரக்கற்களின் பிரகாசமானது உருவமாம்படி மிருந்தனவோ? ஆதலால் விவேகிகளே! இம்மாதின் ஒளிதங்கிய நகங்களுக்கு யாது ஒப்பென்று சொல்லுவோம். எ - று. ([illegible])

ஒதுங்குதோ றொசிந்து சாயு நுசுப்பினுக் குளநத ராது
ததும்பிமூத் திவர்ந்த பொன்னம் பட்டிகை யகவை தள்ளிப்
பிதுங்கிமீப் பொடித்த தேம லழகொடும் பெருத்துச் சந்தஞ்
செதும்பணி முலைக ளேய்ந்த விருமையுஞ் சிறந்த வன்றே.

(இ - ள்.) ஒதுங்கும்போதெல்லாம் துவண்டு அசையுமிடைக்கு மனம் வருந்தாமல் நிறைந்தின்ன முத்துமாலைகள் அணியப்பெற்ற பொற்கச்சினுள்ளே இடங்கொள்ளாமல் வெளிப்பட்டு மேலே சுணங்குபூத்து அழகோடு பூசிந்தச் சந்தனச்சேறுபூசிய தனங்களிரண்டுஞ் சிறப்புற்றன. எ - று. ([illegible])

உள்ளியங் கழிக்கு னின்று கருநிறத் தொழுகு காகஞ்
சிந்துரப் பவளச் செவ்வாய்த் திங்களைத் திங்க ளென்ன
வந்துபார்த் தன்மை யுண்மை மயக்குற நிற்றன் மானும்
செந்தளிர் குதாம் பற்றி யொழுங்குறுஞ் சிற்று ரோமம்.

(இ - ள்.) சிவந்த தளிர்போலும் வயிற்றினின்று நேரேவளர்ந்த சிறிய மயிரொழுங்கு நாபியென்னுமழகிய சுழியிலிருந்து கருநிறத்தோங்கிய சர்ப்ப மாணது சிந்தூரப் பொட்டணிந்த நெற்றியும் பவளம்போற்சிவந்த விதழ்களு மமைந்த சந்திரன்போன்ற முகத்தைச் சந்திரனென்று நெருங்கிப்பார்த்துச் சந்திரனுமென்று மன்றென்றும் மயக்கெய்த அங்கு நின்றுகொண்டிருப்பதைப் போலும். எ - று. (௬௦)

குதலைவாய்க் கருப்பின் மற்றைக் கோழிலைக் கொழுந்தா லன்ன
வுதரமீக் கிடந்த மூன்று மடிபபினுக் குவமை பேசின்
முதனிலை மூவ ருள்ள முகின்முலைப் பொருப்பி னேறப்
புதியபே ரழகு மெல்லென் படியெனக் கிடந்த போலும்.

(இ - ள்.) வாழைக்கொழுந்தின் சுருள்போன்று கரும்பையொத்து இனிக்கும் மழலைச்சொற்கள் கூறுமிம்மாதின் வயிற்றின்பேரிலிருக்கிற மூன்று மடிப்புகளுக்கு மொப்புச்சொல்ல வேண்டுமாயின், தலைமைத்தன்மை வகித்தோராகிய திரிமூர்த்திகளின் மனங்கள் தாமரையரும்புபோன்ற இம்மாதின் தனங்களென்னும் மலைகளில் ஏறுதற்காகப் புதியபேரழகுவாய்ந்த மெல்லியபடிகளாயிருந்தன போலும். எ - று. (௬௧)

குலவரை யெடுத்த மெல்லென் கொம்பரோ குரும்பை தாங்கி
யலமருங் கொடியோ மற்றை யருக்கொலோ வறித றேற்றார்
நிலவணி மகுட வேணி நிமலனை முதலோர் மற்றைப்
புலமையோர் தெரிப்ப தெங்கே நுசுப்பெனப் புகலு மொன்றை.

(இ - ள்.) இடையென்று சொல்லும் ஒருறுப்பானது குலபர்வதங்களை யெடுத்த மெல்லிய பூங்கொம்போ? குரும்பைகளிரண்டைச் சுமந்து சுழன்று கொண்டிருக்குங் கொடியோ? இவற்றில் இன்னதென்று சந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் முதலானோரும் அறிந்து தெளிந்திலர். ஏனைய விவேகிகள் அதனைத்தெரிந்து கூறுவதெங்ஙனம்? எ - று. (௬௨)

கொய்தழைக் கருப்பு வில்லோ னருச்சனை கோட்டி மென்பூ
பெய்யுமா லடியின் றெய்வப் பீடமொத் தமுத ளாவி
யையநுண் ணுசுப்பைக் கவவிக் கோடகன் றெழுந்த வல்குல்
மொய்திரைப் பரவை யெய்ப்ப தன்றெனி னுவமை முற்று.

(இ - ள்.) கொய்யத்தக்க தழைகளையுடைய கருப்பு வில்லைத்தாங்கிய மன்மதன் பூசைசெய்து மெல்லிய மலர்களை யாச்சனை புரிவதாய், ஆலடியின் கீழே பொருந்திய தெய்வீகத்தங்கிய பீடம்போன்றதாய், அமுதங்கலந்து அழகுற்று நுட்பமாயிருக்கும் இடையைக்கவ்விக்கொண்டு கரைகள் பரந்தோங்கிய அல்குலானது, சேர்ந்திருக்கும் அலைகளைப்பெற்ற கடலை நிகர்ப்பது. அல்லவெனில் மற்றொன்றும் அதற்கிணையாகாது. எ - று. (௬௩)

வளரொளிப் பசும்பொற் றாண நிகரென வகுப்பின் மேன்மை
யிளகிய மிருது வாயர் தாதலா விழிவு தோன்றுஞ்
சுளகெழு செவிய வேழப் பூட்கையுஞ் சரித்துக் காட்டும்
புளகெழு குறங்கை யீனுக் கதலியோ போல்வ தன்றே.

(இ - ள்.) தேர்ஸ்டகளை ஒளிவளர்கின்ற பசிய பொற்றூணிற்குச் சமான மென்று சொன்னால், இத்தொடைகளுக்குள்ள பெருமையும் மென்மையும் அத்தூணிற்கு அமையாது. ஆதலால் அவற்றிற்குக் குறைவு சித்திக்கும். முறம் போன்ற காதுகளையுடைய யானைத்துதிக்கையைச்சொன்னால் அதுவும் சுரித்தலை யுடைத்தாயிருக்கும். இவைஇப்படியாயின், புளகம்போர்ப்பதாகிய அத்தொடைகளைக் குலைதள்ளாத இளவாழை மரங்களோ ஒப்பாகும்? எ - று. (௬௪)

ஒழுங்குபெற் றுரோமங் கான்று சேயொளி யுமிழ்ந்தி யாருந்
தொழுந்தகைக் கணைக்கா லொக்கு முவமையோர் சிறிது தோன்ற
கொழுங்குல மலரிட் டேத்தி யருச்சனை கொடுத்தெஞ் ஞான்று [க்
மெழுந்திற லனங்க னுவ மிடைவிடான் சுமப்பா னின்னும்.

(இ - ள்) ஒழுங்குபெற்று, உரோமங்களற்று, செவ்வொளி வீசி, பார்த்தோர் பலரும் வணங்குந் தன்மைபொருந்திய இம்மங்கையின் கணைக்காலுக்குச் சமானமாயிருக்கும் சமானம் உவமை விளங்கலால், சிறந்த தொகுதியாயுள்ள மலர்களாலர்ச்சித்துத் துதிசெய்து எககாலதநிறும் மேம்பட்ட வல்லபமெய்திய மன்மதன் தன் அம்பறுத்தூணியை இடைவிடாது இன்னுஞ் சுமந்து கொண்டிருக்கின்றான். எ - று. (௬௫)

ஒத்தொளி பரப்பி யம்பொற் சிலம்பினை யொருங்கு தாங்கிப்
புத்தக நிகர்ப்ப தென்னிற் போதுமோ புலைமைத் தன்றே
சித்திரப் புறந்தா ளென்னும் பெயரொடு சிறந்து நின்ற
வித்துணை வெள்கி யாமை பயபபடக் கிடந்த தென்றால்.

(இ - ள்.) அலங்காரமுடைய புறந்தாளென்னும் பெயரோடு பெருமை வாய்ந்துள்ளதை இதுகாறுங்கேட்டு நாணமெய்தி ஆமைசலத்தில் மூழ்கிக்கிடக்கின்றதென்று சொல்வோமானால், ஒன்றைப்போலவே ஒளிவிளக்கி அழகிய பொன்னாற்செய்த பாதசாலங்களை ஒன்றாய்த் தாங்கிக்கொண்டிருந்தும், அப்புறந்தாள்களைப்புத்தகமெனச்சொன்னாற் பொருந்துமோ? அது [புலமைத்தன்மை] அறிவும் ஆகமாட்டாது. எ - று. (௬௬)

எறித்தெழு வயிரப் பாள மிடையறுத் தீர்ந்து பாங்கி
னறுக்கியம் பவளஞ் சேர்த்தி வைத்தன நகத்த பொற்றூண்
முறித்தளிர்க் கிளக்க மீந்து முளரியி னழகு வாய்ந்து
செறித்தபஞ் சிறுக்குஞ் சேப்புக கொடுத்தறச சிவந்த வன்றே.

(இ - ள்.) ஒளிவிட்டுயர்ந்த வயிரப்பாளத்தை இடையீடின்றி நீப்பறுத்து தக்கபடி துண்டுகள்செய்து அதனோடு அழகிய பவளத்தைச் சேர்த்துவைத்தாற்போன்ற நகங்களையுடைய பொன்னிறநதங்கிய இம்மங்கையின் பாதங்கள், இளந்தளிர்களுக்கும் இளகுந்தன்மை யளித்து, தாமரைமலரையொத்த அழகெய்தி, செறிந்த செம்பஞ்சிற்கும் செந்நிறங்கொடுத்து மிகச்சிவந்துள்ளன.

அவிழ்ந்துலீ முருவிக் குன்றங் கான்றிடுக் கமழ்பூந் தோட்டத்
தவழ்ந்திழைழந் தொழுகு தென்ற றளர்நடைக் குவமை சாற்றி
அவிழ்ந்தெழு நிலவுத் துனி யன்னமோ நிகர்க்க லாகா
துவண்டசைந் தியங்குங் கன்னிச குற்பிடி யுவலை யா—

(இ - ள்.) மலைகள்சொரிய விழுகின்ற அருவிநீரிற்றோய்ந்து, வாசனைவீசும் நந்தவனத்திலே தவழ்ந்து அசைந்து மெல்லெனவீசும் தென்றற்காற்றில் உலாவுகின்ற இம்மாதின் தளர்நடைக்கு ஒப்புச்சொல்லவேண்டுமானால், ஓங்கிவளர்ந்த சந்திரிகையொத்த நிறந்தங்கிய சிறகுகளையுடைய அன்னத்தின் நடையோ ஒப்பாகாது. துவளுதலோடு அசைந்துலாவுகின்ற முதற்கருவெய்திய பெண்யானையின் நடை ஒப்பாகும். எ - று. (௬௮)

உயிர்ப்பொறை யாக்கை முற்று முடனுறைந் துணரொ ணாது
மயக்கிய மாயன் றானே மயிலின மருளுஞ் சாயற்
புயற்குழ லுருவ வாட்கட் பூமக ளுருவம் போற்றின்
வியப்புறா ரெவரே யாரே மருண்டிடை வீழ்ந்து றாதார்.

(இ - ள்.) ஜீவபாரமான தேகங்களெல்லாவற்றிலும் வேறுபாடற்று ஒன்றிருந்து ஒருவரும் உணர்ந்துகொள்ளாத வகையாய் மயக்கிக்கொண்டிருக்கும் திருமாலே, மயிற்கூட்டங்கள் மயங்கத்தக்கசாயலும் மேகம்போலுங்கூந்தலும் வாள்போல்வடிவெய்திய விழிகளும் வாய்ந்த திருமகளுடைய அவயவங்களைத் துதிசெய்வாரானால், எவையர்களில் யார்தான் ஆச்சரியப்படாதவர்கள்? யார்தான் அவ்வுருவத்தில் மயங்கி வீழாதிருப்பவர்கள்? (ஒருவருமிலர்.) எ - று. (௬௯)

கலிவிருத்தம்.

இனைய ரூபமெ டுத்தருண் மாயவ
னனைய பாற்கட லாரமு தங்கொடு
புனைக லாமயில் போனடந் தானரோ
சினவு தானவர் வானவர் பின்செல.

(இ - ள்.) இத்தகைய மோகினிவடிவேற்றதிருமால், அப்பாற்கடலினுதித்த அமுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, கோபத்தோடு போரசெய்தவர்களாகிய தேவர்களும் அசுரர்களும் தம்பின்னே தொடர்ந்துவர, அலங்காரமுடைய கலாபம் பொருந்திய மயில்போல நடந்தனர். எ - று. (௭௦)

கண்டு மாயன்மு கிணகை காட்டினன்
மண்டு போரின்ம லைந்தசு ரரசுரர்
கொண்ட வேட்கையு ளங்குழைந் தாரரோ
தண்டு ழாயவ னின்னணஞ் சாற்றுவான்.

(இ - ள்.) திருமால் நோக்கிப் புன்னகைகாட்டினார். பெரிய போரினால் மயங்கினவர்களாகிய தேவர்களும் அசுரர்களும் தாம்கொண்ட விருப்பத்தோடு மனமுருகினார்கள். அப்போது குளிர்ச்சிதங்கிய துளசிமாலை தரித்த திருமால் இப்படித் திருவாய்மலர்ந்தருளுகின்றார். எ - று. (௭௧)

நீவி ரின்னமு தத்தினெ டுங்களத்
தாவி போக்குதி ரன்னதொ ழிதிரேற்
றேவு தெண்கடற் றெள்ளமு தம்முனை
யீவ துண்டிங்கி ருத்திரென் றேயினன்.

(இ - ள்.) நீங்கள் இவ்வமிர்தத்திற்காகப் போர்க்களத்தில் உயிரிழக்கின்றீர்கள். இனி, அப்போரை யொழிப்பீர்களானால், தெய்வீகமெய்தும்படி மிகத்

தெளிவாகிய திருப்பாற்கடலிற்றோன்றிய அமிர்தத்தை உங்களுக்குக்கொடுப்பதுண்டு. ஆதலால், இங்கிருக்கக்கடவீர்களெனக்கட்டளைதந்தனர். எ - று. (௭௨)

கேட்ப நின்றசு ராசுரர் கேழ்கிளர்
கோட்ப டுந்தம துள்ளங் குழைந்தனர்
ஞாட்பொ ழிந்து நடுவுநின் றார்மயல்
வேட்கை தானவர் மிக்கயர ந் தாரரோ.

(இ - ள்.) அவ்வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த தேவர்களும் அசுரர்களும் தங்கள் மனமுருகப்பெற்றார்கள். போர்க்களத்தினின்றும் பொதுவாயிருந்தார்கள். அசுரர்கள் மட்டுமே காமவிருப்பத்தில் மேம்பட்டவர்களாய்ச் சோர்வெய்தினார்கள். எ - று. (௭௩)

வெள்ள வேலை யமுதவி ருப்பினும்
வள்ளை வார்குழை வாண்முகப் பெண்ணமு
துள்ள மைந்துமயங்கின ரோரிரு
கள்ள வாளொடுங் கட்கடை பாயவே.

(இ - ள்.) வஞ்சகமுற்ற வாள்போலும் நீண்ட ஒப்பற்ற இருகடைவிழிகள் பாய்ந்தபோது, பெருகவெடுத்த க்ஷீராப்தியிலுதித்த அமுதத்தில் வைத்தவிருப்பத்தைக்காட்டிலும். வள்ளைக்கொடிபோலும் விழுகளிற் செதுக்கிய குண்டலமணிந்து ஒளிவிளங்கும் முகத்தைப்படைத்த அப்பெண்ணமுதின் மீது விருப்பத்தை விசேடமாக மனதிற்பொருந்தி மயங்கினார்கள். எ - று. (௭௪)

காம னம்புக ழிந்தரு விசசெல
வேம னம்புண் படவெதுப் புற்றனா
வாம மேகலை மாயம யக்கினாற்
றாமம வெந்தழ லிட்டன தன்மையார்.

(இ - ள்.) அழகிய மேகலாபரணமணிந்த மோகினிவடிவிற் கொண்ட காமமயக்கத்தால், நெருப்பிற்போட்ட மாலைபோலக் கருகிய தன்மையுடைய அவ்வசுரர்கள் மன்மதபாணங்கள் அதிவிரைவாய் ஊடுருவிப்பாய்வதால் மனம்வெந்து புண்ணாகும்படி வருத்தமெய்தினார்கள். எ - று. (௭௫)

அயிற்கொ டுங்கண டர்த்தலு மாங்கவ
ருயிர்க்கு ணர்ச்சிபெ றாமயக் குற்றனர்
குயிற்கொ ழுங்குத லைகுரல கேட்டொறு
மயிர்ப்பு றந்தொறும் வார்ந்தன காமமே.

(இ - ள்) வேற்படைபோலுங் கொடியவிழிகள் எதிர்த்த மாத்திரமே, அசுரர்கள் தங்களுயிர்களுக்குத் தெளிவற்றவர்களாய் மயங்கினார்கள். இனிமைபொருந்தி இளமைதங்கிய குயிலினொலியைக் கேட்டமாத்திரமே, மயிர்க்கால்கடோறுங் காமநீர்பெருகின. எ - று. (௭௬)

சூர மூரலி னின்னுயிர் போக்கிறு
ராா வெம்முலை யாலறி வற்றனர்
வார்கு ழைக்கு மணிநிலை தோற்றனர்
வேரி வார்குழற் கங்கம் வெதும்பினார்.

(இ - ள்.) அம்மோகினியின் குளிர்ந்த புன்னகையால் தங்கள் பிராணனை யிழந்தார்கள். முத்துமாலை பூண்ட பூரித்த தனங்களால் தங்கணிலைப்போக்கிக் கொண்டார்கள். செதுக்கிய காதணியால் மனநிலைமை நீத்தார்கள். வாசம் வீசி னின்ற கூந்தலால் உடல்வெம்மை யெய்தினார்கள். எ - று. (எஎ)

தனித்த சிந்தையி னெண்ணித் தனித்தனிக்
கனிக்க ரும்பி னுருவெளி காண்டொறுங்
குனித்த வார்சிலைக் காமன் கொழுவுநாண்
டொனிப்பு வார்செவி பாயத் துளங்கினார்.

(இ - ள்.) அசுரர்கள் ஒருப்பட்டமனதிலே தனிமையாகக் கருதி, கனி யோடுகூடிய கரும்புபோலும் அம்மோகினியின் உருவெளித்தோற்றத்தைக்கா ணும் பொழுதெல்லாம், மன்மதன் தன்னுடைய வில்லைவளைத்து அதிற் பூட்டிய நாணொலியானது ஒழுகியிருக்கும் தங்கள் செவிகளிற் பாய்வதால் நடுக் குற்றார்கள். எ - று. (எஅ)

வேர்த்த ரும்பிய வெண்பிறை நெற்றியுங்
கார்த்த டங்கட் கடையெறி காந்தியும்
வார்த்த தும்பு வனமுலை வெற்பையும்
பார்த்தி ருந்து பதைத்தனர் தானவர்.

(இ - ள்.) வெயர்த்துத் துளித்துள்ள வெண்ணிறந்தங்கிய அர்த்த சந்தி ரன்போன்ற நெற்றியையும், கருநிற மெய்திப் பரந்த கட்கடைகள் வீசும் பிர காசத்தையும், கச்சினின்றும் ததும்பிய அழகிய குசங்களென்னும் மலைகளையும் அவ்வசுரர்கள் பார்த்துக்கொண்டிருந்து பதைப்பெய்தினார்கள். எ - று.

அன்ன காலை யமரரி யாவரு
மன்னி யாங்கு வகையி னிருந்துழி
யென்னை யாளு மிறையவ னன்மொழி
பன்னி யாரமு தம்பகிர்ந் தானரோ.

(இ - ள்.) அப்படிப்பட்டகாலத்தில் தேவர்களெல்லாரும் நிலைபெற்று அங்கே சந்தோஷமாக விருக்கையில், என்னையாட்கொள்ளும தலைவனாகிய திரு மால் அவர்களுக்கு நல்லவார்த்தைகளைச்சொல்லி அவ்வமிர்தத்தைப் பாகிப்பா ராயினர். எ - று. (அ0)

வாரி துங்கி யிருந்துழி வார்கதிர்ச
சூரி யற்கு நிறைகதிர்ச சோமற்கு
மிரி வர்க்கிடை ராகுவி ருத்தலு
மோரி யற்கையன் மாயனு ணர்ந்தனன்.

(இ - ள்.) அவ்வவர் பாகத்தை யெடுத்துப் புசித்துக்கொண்டிருக்கையில் நெடிய கிரணங்களையுடைய சூரியனுக்கும் சோடச கலைகள் நிறைந்த சந்திர னுக்கும் ஆகிய விருவருக்கிடையே இராகுவென்னுங்கோளிருந்த [illegible], ஒரே யியல்புடைய திருமால் அதனைத்தெரிந்தனர். எ - று. (அக)

கையெ டுத்த திரண்டிற் கந்தரம்
வெய்தெ றிந்து விழுதலும் பாற்கடற்

றெய்வ வார முதுள்ளுறச் சேறலாற
கொய்த துண்ட மிரண்டுநக் கொண்டவே.

(இ - ள்.) உடனே அவர்கையிலேந்தியுள்ள சட்டுவத்தினால் அதன் கழு அதிவிரைவில் அறுத்துத்தள்ளவும், அக்கோளின் உடலினுள்ளே பொருந் தும்படி பாற்கடலினுதித்த தெய்வீகந்தங்கிய அமுதம்சேர்ந்திருந்தமையால் அறுத்த இருதுண்டுகளும் இருவடிவங்களெய்தின. எ - று. (அ௫)

ஆய காலை யருக்கனைத் திங்களை
மாய னோக்கி வலிந்துரைப் பானிவ
னேய கேதுவி ராகுமற் றுங்களைப்
பாய நீவிர் பரிவுழப் பீரென்றான்.

(இ - ள்.) அப்பொழுது திருமால் சூரியனையுஞ் சந்திரனையும் நோக்கிவலி யுக்கூறுகின்றார். இங்கேவந்த இவ்விருவரும் இராகு கேதுக்களாகும். (வஞ்சக மாக வந்தோருக் குதவிசெய்தமையின்) உங்களை இவர்களிருவரும் பிடிக்க நீங் களிருவரும் துயரெய்துவீர்களெனக்கூறினர். எ - று. (அ௬)

உம்ப ரின்னமிழ் துண்டுயி ரோம்பினார்
வெம்பு தானவ வெந்திறல் வீரரைச்
செம்பு னற்பட வாவி செகுத்தனர்
பைம்பொ னாடு புகுந்தனர் பண்டுபோல்.

(இ - ள்.) அப்பொழுது தேவர்கள் அவ்வமுதத்தைப் புசித்துத் தங்களுயி ரைக் காத்துக்கொண்டார்கள். மனம் வெதும்பியுள்ள கோரவல்லப மெய்திய அசுரவீரர்களை உதிரப்பெருக்குண்டாம்படி உயிர்போக்கினார்கள். அதன்பின்பமு யபடியே பசும்பொன் மயமான தேவலோகம்போய்ச் சேர்ந்தார்கள். எ - று.

ஈங்கு நின்று நிகழ்ந்தன விப்பரி
சாங்கவ் வார்கட லாமைய ருந்திரை
யோங்கு மேழ்கட லொன்றுபட் டோதநீர்
வீங்கு மாநில மீச்செல நின்றதால்

(இ - ள்) இங்கே திருமாலாயிருந்து நடந்த செயல்கள் இத்தன்மையவாம். அங்கே நீண்ட அத்திருப்பாற்கடலிலிருந்த ஆமையானது அரிய அலைகணிரம் பிய சத்தசாகரங்களு மொன்றுகூடி அக்கடல் வெள்ளமானது மிக்கநிலவுலகின் மீது பெருகும்படியிருந்தது. எ - று.

இலக்க யோசனை யென்முது கங்கதன
மலர்க்க ரங்கா ளளவை குப்பரோ
இலைத்த வார்கட லேழுயுஞ் சேறெழக்
கலக்கி நிற்பது கட்புலங் காறவே.

(இ - ள்.) இங்குள்ள ஆமையின் முதுகு இலட்சயோசனை விஸ்தீரண முள்ளது. அதன்மலர்போலுங்கைகள், கால்கள் இவற்றினளவு இவ்வளவென்று சொல்லுவார்களோ? வில்போல் வளைந்து நீண்ட சத்த சாகரங்களையும் க டோர் கண்கள் பிரமிக்கச் சேறுபடத்தக்கதாய்க் கலக்கிக்கொண்டிருந்தது.

தேங்கு வேலைத் திமிங்கில மேழுத
லோங்கு மீன மனைத்தையு முண்பது
வீங்கு வெம்பசி வீந்தில தாதலாற்
றூங்கு சேறுந் தரையற நக்குமால்.

(இ - ள்.) தேங்கிய நீரையுடைய ஏழுகடலிலுள்ள திமிங்கில முதலாகிய பெரிய மச்சங்களையெல்லாம் தின்பது, அப்படித் தின்றும் அவ்வாமைக் கதிகரித்த பெரும்பசி நீங்கவில்லை, ஆகையால் அக்கடலிலுள்ள சேற்றையுந் தரைதெரிய நக்கிவிடும். எ - று. (அஎ)

ஒழுகி ருங்கட லேழுமா றடைந்தநீர்
முழுது மொன்றுபட் டோங்கியு மங்குசே
றழுதி யங்குவ தன்றியு லாய்மிதந்
தொழுக ரப்புன லில்லையவ் வெல்லைநீர்.

(இ - ள்.) பாய்கின்ற பெரிய சத்தசாகரங்களையு முடைத்து விட்ட நீர் முழுவது மொன்றுசேர்ந்து பெருகியும், அங்கே சேற்றிலமிழ்ந்துலாவுவதன்றி அவ்வளவு ஜலமும் அவ்வாமை யுலாவி மிதந்துகொண்டு இருப்பதற்குத் தக்க ஆழமான ஜலமாயில்லை. எ - று. (அஅ)

மண்டு வெண்டிரை வார்கட லேழுமப்
பண்டை வெள்ளப் பரபைசி கர்த்தலு
முண்ட ரும்புனல் பெய்யுலை மூடியுட்
கொண்ட வண்ட நிகர்த்ததக் கூர்மமே.

(இ - ள்.) நெருங்கிய வெண்ணிற முற்ற அலைகள் பொருந்திய நீண்ட சத்தசாகரங்களும் பழைய சிறந்த மகாப்பிரளயத்தை யொத்தமாத்திரத்தி லவ்வளவு நீர்ப்பெருக்கையு முட்கொண்ட உலைமூடியையும் முட்டையையு மொத்திருந்தது, எ - று. (அகூ)

விண்க லக்க மொழிதர வேலையுட்
கண்க ரப்ப வுறங்குங் கமடமோர்
வெண்க லக்கலத் துள்ளுற வேறுமோ
ருண்க லங்கவிழ்த் தன்னதை யொக்குமால்.

(இ - ள்.) தேவர் துயரமொழியும்படி திருப்பாற்கடலினிடையே விழிகளை மூடி, அறிதுயில் கொள்ளும் திருமாலாகிய ஆமையானது, வெண்கலத்தாலாகிய ஓர் உண்கலத்தினுள்ளே மற்றோர் உண்கலத்தைக் கவிழ்த்து வைத்ததை யொக்கும். எ - று. (௬௦)

வாய்ந்த வார்கட லேழையும் வவ்விமே
னீந்து தோறுங் கிழிபடு நேமிநீர்
சாய்ந்து நேமிப் பொருப்புந் தரையும்போய்ப்
பாய்ந்தி ரைந்து தவழ்ந்து பரக்குமால்.

(இ - ள்.) அங்கேபொருந்திய சத்தசாகரங்களையுங் கடந்து மேற்பட்டுச் செல்லும் போதெல்லாம் உடைபடுகின்ற பெரும்புறக்கடனீர் பெருக்கெடுத்துப் போய், சக்கரவாளகிரியிலும் பூமியிலும்போய்ப்பாய்ந்து ஒலித்தோடிப்பரவும்,

இதுவு ணர்ந்த வெரிகதிர் வானவன்
புதுநி லாப்பொழி திங்களம் புங்கவ
னதிர்க டற்பிறந் தேகுத லஞ்சினார்
பொதிபி ருட்பிழம் பண்டம் பொதிந்ததே.

(இ - ள்) இதனை யறிந்த சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியதேவனும், புதிய சந்திரிகையை வீசும் அழகிய சந்திரபகவானும், சத்திக்கின்ற கடலிற் றோன்றிச் செல்லுதற்குப் பயந்தார்கள். நெருங்கிய இருட்டொகுதியானது அண்ட முழுவதும் மூடிக்கொண்டது. எ - று. (௧௫)

கவர்நெ டுஞ்சினைக் கற்பக நாடருந்
துவர்மு கக்கம லாலயத் தோன்றலு
மிவையு ணர்ந்து கயிலைபுக் கெய்தினார்
சிவனை நூபுரச் சேவடி போற்றினா.

(இ - ள்.) பிளவுபட்ட நீண்ட கிளைகளையுடைய கற்பகவிருட்சமுள்ள தேவலோகத்தாராகிய தேவர்களும், பவளம்போலுஞ் செந்நிறந்தங்கிய கமலாசனனாகிய பிரமனும், இப்படி யிருப்பதை யுணர்ந்து, திருக்கைலைக்குப் போய்ச்சேர்ந்து அங்குவீற்றிருக்கும் சிவபெருமானுடைய நூபுரமணிந்த பாதங்களைத் துதித்தார்கள். எ - று. (௧௬)

இடுக்க ணென்ப தெமையடைந் தாலது
தடுக்க நின்னல தியாவர் தருக்குளார்
கடுக்கை யஞ்சடைக் கண்ணுத லேநினக்
கடுத்த நாங்க ளடைக்கல மையனே.

(இ - ள்.) துன்பமென்பது எங்களையணுகினால் அதனைநீக்கத் தேவரீரையன்றிவல்லபமுடையவர்கள் யாவர்? கொன்றைமலர்மாலை யணிந்துள்ள அழகிய சடைமுடியை யுடைய நெற்றிக்கண்வாய்ந்த சிவபெருமானே! எமதுதலைவனே! இங்கே வந்துள்ளயாங்களெல்லாம் தேவரீருக்கடைக்கலம். எ - று. (௧௭)

மாய னாமை வடிவுகொண் டானவ
னுய வேலை யகடுகி டந்தனன்
றீய செய்வன செப்பவற் றோவினி
நீய வன்செய னீத்துற வேண்டுமால்

(இ - ள்.) இப்போது திருமால் கூர்மாவதாரங்கொண்டனர். அவர் பாற்கடல் நடுவிலிருக்கின்றார். அவர் புரிவனவாகிய தீமைகளைச்சொல்லமுடியுமோ? இனி, அக்கூர்மாவதாரத்தின் செயல்களைத் (தேவரீர் கருணைகூர்ந்து) விளக்கியருள வேண்டும். எ - று. (௧௮)

காக்கு நாரணன் காத்தழிக் காத்தவை
போகக வீது புரிகுவ னீயது
நீக்க கின்றவ னீணிலப் பல்லுயி
ரக்கி யோய்நின் னடைக்கல மையனே.

(இ - ள்.) நிதித்தொழில்புரியும் திருமால் இரட்சிக்கையில், தன்னால் இரட்சிக்கப்பட்டவர்றை அழிக்க இப்படிச் செய்கின்றனர். தேவரீர் அவ்வழிவைத்தவிர்ப்பவராயிருந்து பெரிய நிலவுலகிலுள்ள பலசீவராசிகளையும் காத்தருள்வீராக. ஐயனே! யாங்கள் தேவரீருக்கு அடைக்கலம். எ - று. (௧௯)

ஈதெ டுத்திரந் தேத்தினர் வானவர்
மாத டுத்த மருங்குடை வானவன்
போத டுத்த புகர்முகப் பிள்ளையை
நீத டுத்திகொ லென்று நிகழ்த்தினன்.

(இ - ள்.) தேவர்கள் இப்படியெல்லாம் விரித்துக்கூறிப் பிரார்த்தித்துத் துதிசெய்தார்கள். உமாதேவியாரை ஓர்பாகத்திலுடைய சிவபெருமான், அப்போது சமீபித்த யானைமுகமுள்ள மூத்தபிள்ளையாகிய விநாயகக் கடவுளை, நீ போய் அதனைத்தடுத்து வருவையோ வெனத்திருவாய் மலர்ந்தனர். எ - று.

எந்தை நின்னரு ளீதெனில் யானுடை
யைந்து கைக்கும தாற்றும தோவென
மைந்த னுக்கருள் வாணகை நல்கினன்
றந்தி மாமுகப பிள்ளையுஞ் சாற்றுமால்.

(இ - ள்.) எந்தையே! தேவரீர் திருவருள் இப்படியானால் அடியேனுடைத்தாயிருக்கும் ஐந்துகைகட்கும் அவ்வாமைசாலுமோ வென்று திருவாய்மலர. அப்போது சிவபெருமான், மூத்தபிள்ளையாருக்குத் திருவருளோடு கூடிய ஒளிமிக்க நகைசெய்தருளினர். உடனே, யானைமுகமுள்ள சிறந்த விநாயகக்கடவுள் திருவாய்மலர்ந்தருளுகின்றார். எ - று. (௬௮)

ஊறு கேணிநீ ருள்ளகழ்ந் தேயிது
காறு நின்ற கமடத் துருவினைக்
கீறி நின்னுழைக் கிட்டுவன் யானென
வேறு யர்த்தவற் கைதொழு தேகினன்.

(இ - ள்.) ஊறுகின்ற நீரையுடைய கேணியைப்போல எழுகடல்களின் நீரையும் உள்ளே கலக்கிக்கொண்டு இதுகாறுமுள்ள அவ்வாமையின் உருவத்தைப்பிளந்து தேவரீர்பால் அடியேன் அடைகின்றேனென்று, இடபக்கொடியையுடைய சிவபெருமானைக் கைகூப்பி வணங்கிச்சென்றருளினர். எ - று.

சென்று நோக்கித் திரைபொரு வேலைநீ
ரொன்று பூட்கை நெடுங்கரத் துட்புக
நின்று றிஞ்சவ நீரொடு மாமைவெங்
குன்று மந்தக் கொடுங்கரம் புக்கதால்.

(இ - ள்.) அப்படிச்சென்று பாற்கடலைப்பார்த்தருளி, அலைகள்மோதும் எழுகடலின் நீரும் ஒன்றுசேர்ந்து, தமது துதிக்கையென்னும் நீண்டதிருக்கரத்தினுட்செல்லும்படி அங்கிருந்து உறிஞ்சவும், அச்சத்தசாகரங்களின் நீரோடு ஆமையென்னும் பெரிய மலையும் வளைந்த அத்துதிக்கையிற்புகுந்தது. எ - று.

இருந்து மாநிலத் தாதின னீர்ம்புனல்
சரிந்து மீண்டு கடல்புகத் தாரணி
விரிந்த கூர்மங் கிடந்தது விண்ணவர்
புரிந்த துன்ப முதலறப் போக்கினர்.

(இ - ள்.) அங்கிருந்தே தாம் உறிஞ்சிய சலத்தை மீண்டும் நிலத்தில் விடுதலும் அப்பொழுது குளிர்ந்த அக்கடல் நீர் முழுவதும் ஒழுகி மீண்டும் கடலிற்போய்ச்சேர, பெரிய ஆமையானது பூமியில்விழுந்து கிடந்தது. தேவர்களெய்திய துயரங்கள் அடியோடே யழியும்படி போக்கியருளினர். எ - று.

கோடு குத்திக் கமடங் குடைந்தத
னோடு தந்தைக் கடியுறை யுய்த்தனன்
மாடு நின்ற மலரய னேமுத
னீடு தேவர் தொழுதனர் நித்தனை.

(இ - ள்.) அப்போது தமது தநதத்தால் அவ்வாமையைக்குத்தித்தோண்டி அவ்வோட்டைப் பிடுங்கிக்கொண்டு தமது தந்தையாகிய சிவபெருமான் பாதங்களில் திரையாகச்செலுத்தினர். அப்போது அருகே நின்றுகொண்டிருந்த கமலாதனனாகிய பிரமன் முதலிய சிறந்த தேவர்கள் சிவபெருமானை வணங்கினார்கள். எ - று. (கOஉ)

தண்டு ணர்த்தடந் தாமரை நாயக
னண்டர் நாத னடிதொழு தையநீ
முண்ட மாலபி னாமை முதுகினைக்
கொண்ட ணிந்தரு ளென்றிடை கூறினன்.

(இ - ள்.) குளிர்நத கொத்துகளையுடைய பரந்த கமலாதனனாகிய பிரமன் தேவர்பெருமானான சிவபெருமான் பாததாமரைகளை வணங்கி, ஐயனே! தேவரீர் அணிந்துள்ள சிரமாலையோடு இவ்வாமையோட்டையும் அணிந்தருள்வீரென்று இப்படிப்பிரார்த்தித்தான். எ - று. (கOங)

ஈச னாங்க தெடுத்தணிந் தான்விரி
வாச நாண்மல ரோனொடும் வானவர்
தூசு வீசித் தொடர்ந்து புகுந்தனர்
வீசு தண்பனைக் கற்பக வீடரோ.

(இ - ள்.) சிவபெருமான் அப்படியே அதனையெடுத்து அணிந்துகொண்டனர். அப்போது மணநதங்கிய அன்றலர்நதகமலாதனனாகிய பிரமனோடு ஏனைத் தேவர்களும், குற்றமில்லாத குளிர்நத கிளைகளையுடைய கற்பக விருக்ஷந்தங்கிய தேவலோகத்தில் தங்கள பதவிகளுக்கு, துகிலிகை வீசிகொண்டே பின்றொடர்நதுபோய்ச்சேர்நதார்கள். எ - று. (கOச)

அச்சு தப்பெய ரண்ண லருந்தவங்
கச்சி புக்கிருந் தாற்றிரங் கண்ணுத
லர்ச்ச னைக்குரித் தாகிய கந்தைபோய்ப்
பச்சை யேனி பவித்திர மெய்தினன்.

(இ - ள்.) அச்சுதனென்னும் பெயருடைய திருமால், காஞ்சிநகரிற்சென்று வசித்து அருந்தவஞ்செய்து, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் பூசைக்குரியவராகி, தாம்முன்புகொண்ட அகங்காரம்நீங்கப்பெற்றவராய், பண்டுபோலப் புனிதமாகிய மேகநிறப்பச்சைத் திருமேனியெய்தினர். எ - று. (கOரு)

கூர்மாவதாரச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் கஙி - க்குத் திருவிருத்தம் உஎசஉ.

பதினோருவது

வராகாவதாரச் சருக்கம்.

(*)

பின்னோர் காலம் பெருமுடிப் பொற்கிரி
தன்னை யொத்த தமனியக் கண்ணனோர்
மின்னெ யிற்று நிசாசரன் வெந்தொழிற்
புன்னி லைக்குப் பொதுமைய னாயினான்.

(இ - ள்.) வேறொருகாலத்திற் பெரிய சிகரத்தையுடைய மேரு மலையை யொத்த இரணியாக்கன் என்னும் பெயர்பெற்ற வொளிமிகுந்த பற்கள்பொருந்திய வோரிராக்கதன் கொடுந்தொழில்களாகிய இழிதகைய நிலைமைகளுக்குத்தானே யுரியவனானான். எ - று. (க)

முள்ள ரைக்கம லாலய மூர்த்தியை
யுள்ளி ருத்தி யருந்தவ முன்னினான்
கொள்ளை நல்வர மியாவையுங் கொண்டனன்
வெள்ள வூழிப் பரவை மிடுக்கினான்.

(இ - ள்.) அவன் முட்கள்பொருந்திய அரையையுடைய கமலாசனனாகிய பிரமனைத் தன் மனத்திலிருக்கச்செய்து அருமையாகிய தவத்தைச் செய்தனன். சிறந்த வரங்களனைத்தையும் அப்பிரமனாற் கொள்ளைகொண்டான். பிரளய காலத்தில் பெருகவெடுக்குஞ் சமுத்திரங்களின் வெள்ளம்போன்ற வலிமை யுடையவன். எ - று. (உ)

பரக்கும் வைய மியாவையும் பாயலிற்
றிரைத்தி டுக்கிப் பெருங்கடற் சென்றன
னிரைத்து வானவர் யாவரு மெய்தினா
விரைப சுந்துழாய் விண்ணவற் போற்றினார்.

(இ - ள்.) விரிந்த வுலகங்களையெல்லாம் பாய்போலச் சுருட்டிக் கக்கத்தி லிடுக்கிக்கொண்டு பெரிய கடலிற்சென் றொளித்துக்கொண்டான். அதனால் தேவர்களெல்லோரு மோலமிட்டுக்கொண்டு ஒன்றுசேர்ந்து வந்து வாசனை வீசும் பசிய துளசிமாலைதரித்த விஷ்ணுவைத் துதித்தார்கள். எ - று. (௩)

இரணி யாக்க னெனுமொரு தானவன்
றரணி பாயிற் சுருட்டித் தடங்கடன்
முரணி ழைத்துப் புகுந்தனன் மொய்ம்பினோ
யரணி லேமிறப் பஞ்சி யடைந்தனம்.

(இ - ள்.) இரணியாக்கனென்னுமோர் இராக்கதன் நிலவுலகத்தைப் பாய் போலச் சுருட்டித் துன்புசெய்து விசாலமான சமுத்திரத்திற் புகுந்துகொண் டான். வலிதங்கிய திருமாலே! காப்பவரின்றி மரணத்திற்குப்பயந்து தேவரீரை யடைக்கலம்புகுந்தோம். எ - று. (௪)

என்ப யாவு மெடுத்தெடுத் தோதினா
ரன்பி னன்னவர்க் காரரு ளல்கினான்
பொன்பி றழ்ந்த புனையுடற் புங்கவன்
வன்சி றைப்புள் ளுகைத் துடன் வந்தனன்.

(இ - ள்.) இன்னு மிவைபோல்பவைகளை யெல்லாம் விரித்து விரித்துச் சொன்னார்கள். திருமகள் விளங்கும் அலங்கரிக்கின்ற திருமேனியையுடைய திருமால் அன்போடு தமது நிறைந்த திருவருளைப் பாலிப்பவராய் உடனே வலிய சிறகுகளையுடைய கருடனைச் செலுத்தி யெழுந்தருளினர். எ - று. (௫)

ஆன காலை யயன்முதற் றேவரும்
கான நாண்மலர்ச் சேவடி கைதொழ
மானி லந்தர வேண்டியம் மாயவ
னேன மாய வுருவொன் றெடுத்தனன்.

(இ - ள்.) அத்தருணத்திலே பிரமாதிதேவர்களும் வாசம்வீசு மன்றலர்ந்த தாமரைமலரைநிகர்த்த சிவந்ததிருவடிகளைக்கையால் வணங்கவும், அவ்வசுரனாற் சுருட்டப்பட்டநிலவுலகத்தைத் திரும்பவும் வெளியிற்கொண்டுவரும்பொருட்டு அத்திருமால் வராகாவதாரமொன் றெடுத்தனர். எ - று. (௬)

நீல வெற்பி னிரட்டி நிமிர்ந்தது
காலி டைக்கிடை யாயிரங் காவதம்
வால சைத்துறின் மாதிரந் தைவரும்
கோல மூச்சிற் குலுங்குவ தண்டமே.

(இ - ள்.) நீல பர்வதத்தைக்காட்டிலுமிருமடங் குயர்வுள்ளது. அதன் கால்கள் ஒன்றுக்கொன்று இடையிலுள்ள தூரமாயிரங்காதங்களாம். அதன் வாலை யசைத்தாற் றிசைகளெட்டுந் துழாவும். அதன் சுவாசத்தா லண்டகோடிக ளெல்லாங் குலுங்கும், எ - று. (௭)

அண்டப் பித்திகை தேய்ப்பின திர்ப்புறுந்
திண்டி றற்புறக் கற்றைச் செறிமயிர்
வண்டி லொற்றையந் தேர்ப்பரி வார்வயின்
கொண்டு தத்தங் குடர்கிழித் தோடுவ.

(இ - ள்.) அப்பன்றிபக்கலில் உராய்ந்துகொள்ளுமாயின், அண்டச்சுவ ரெல்லா மதிரும். மிகு வல்லபந்தங்கிய அதன் முதுகிலே கூட்டமாய் நெருங்கிய மயிர்கள் ஒருருளையோடு கூடிய அழகிய சூரிய விரதத்திற் பூட்டிய குதிரைகளின் வார்களி லகப்பட்டு அவ்வேழு குதிரைகளுந் தங்கள் தங்கள் குடர் கிழிந்தோடும். எ - று. (௮)

ஓங்கி ளூழி வடவையி னேக்குறு
ஆக்க கழ்ந்துறிற் பாதல முற்றுழால்
யூக்கி ளுலுரைத் தென்னை தன் வாய்க்கிடில்
கோக்கு மண்டங் குலைந்துந டுங்குமே.

(இ - ள்.) அது வொன்றைப் பார்ப்பதானல் ஊழிக்காலத்திலுண்டாகும் வடவாக்கினிபோற் பார்க்கும். மூக்கினுற் றேண்டுமாயின் பாதலலோகமட்டுஞ் செல்லும். அதன் வலிமையை நம் வாயினுற் சொல்லி யாது பயன்? அது தன் வாயினல் கொட்டாவிவிடில், கோத்துள்ள அண்ட வரிசைகளெல்லாம் நிலை குலைந்து நடுநடுங்கும். எ - று. (கூ)

ஆழி யேழு மளறு படுத்திடும்
பூழி யாக்கிப் புவிகொடு போயவப்
பாழி நீள்புயப் பாதகற் பற்றியே
கேழ்கி ளர்ந்த மருப்பிற் கிழித்ததால்.

(இ - ள்.) சத்த சமுத்திரங்களையுஞ் சேறுபடுத்திப் பின்னர் பெருந் தூசுகளாகச் செய்து பூமியைச் சுருட்டிக்கொண்டுபோன வல்லமையுடைத்தாகி நீண்டுள்ள தோள்களைப்படைத்த அசுரனாகிய அப்பாதகனைப்பற்றி வைரமிகுந்த தன் கொம்புகளாற் கிழித்தெறிந்தது, எ - று. (௪0)

வளைம ருப்பொடு வாளெயிற் றேனைவெங்
கிளைத டம்புயங் கீறிக் கிளைத்துருந
தொளைப டுந்தனி மூக்கிற் றுவைத்ததால்
விளைக டுஞ்சின வெந்திற லேனமே.

(இ - ள்.) மிக்க கோபமதிகரித்ததாய்ப் பெரு வல்லபமுற்ற அவ்வராகமானது, வளைந்த தனது கொம்புகளாற் பிரகாசமுள்ள பற்களைப்பெற்ற அவ்வசுரனை, மிக வுயர்ந்திருக்கும் விசாலித்த தோள்களைத்துணித்துத் தூக்கிப்போட்டு, பெருந் தொளைகள்பொருந்திய ஒப்பற்ற தன் மூக்கினுற் றுவைத்தது. எ - று.

செய்ய தாமரை நான்முகன் செய்தருள்
வையம் யாவு மருப்பின் றுகளென,
வெய்து கொண்டு விரிக்குமொ ராயிரம்
பைய ராமுடி யுச்சி பதித்ததால்.

(இ - ள்.) செவ்விய தாமரைமலரில் வசிக்கும் பிரமனுற் படைக்கப்பட்டுள்ள உலகங்களெல்லாவற்றையும் தன் கொம்புகளாற் புழுதிகளாக்கிவிட்டு விரிந்திருக்கும் ஒப்பற்ற ஆயிரம் பணமுடிகளையுடைய ஆதிசேடன் உச்சியின் மேலே தன் கால்களைப் படியும்படி வைத்தது. எ - று. (௪௨)

தெறுசி னக்கடுஞ் சீற்றந் தலைக்கொள
வெறுழின் மாதிர வெற்படுத் தெற்றியே
முறிப டத்தொளை மூக்கொடு தாக்கியே
மறுகு பல்லுயிர் வாய்ப்பெய்த துக்குமால்.

(இ - ள்.) கொல்லத்தக்க உக்கிரமாகிய கடுங் கோபமானது அதிகரிக்க வல்லபமிக்க அஷ்டகுல பர்வதங்களையும் உடைபடும்படி அவாரந்தங்கிய தனது மூக்கினுன் முட்டி யிடித்து அவ்வஷ்டதிக்குகளிலுமுள்ள பல சீவராசிகளையும் வாயிலிட்டுக்கொண்டு குதட்டும். எ - று. (௪௩)

சத்த மேக மதிரத் தடம்பொருப்
பொத்து நின்றுதன் னுள்வாய்க் கொளுந்தொறும்

வைத்த நாகர் பதிகளும் பாதல
மத்த மாகரி யெட்டு மயங்குவ.

(இ - ள்.) சத்த மேகங்களும் அதிரும்படி விசாலித்த மலைபோலிருந்து அவற்றைத் தன் வாயினுள்ளே கொள்ளும்பொழுதெல்லாம் படத்தோடு கூடிய நாகர்களின் லோகங்களும் பாதல லோகமும் மயக்கமுற்ற திக்கஜங்களெட்டும் மயங்குவன. எ - று. (௧௫)

மூரலெ டுத்த முகரை மூகந்துமு
தாரவ வேலை யகனிலம் போழ்தொறும்
பாரவை யெண்டிசை தாங்கும் பணாடவி
யுரகர் வெண்பொறி யுச்சி விளங்குமால்.

(இ - ள்.) வல்லபமுள்ள தன் மூக்கினடியால் முகர்ந்து தோண்டி சத்திக்கின்ற கடல் சூழ்ந்த பரந்த நிலவுலகத்தைப் பிளக்குந்தோறும், சத்த சமுத்திரங்களாற் சூழப்பெற்ற எண்டிசைகளையுந் தாங்கிக்கொண்டிருக்கும் பணமுடிகளையுடைய நாகர்களின் வெண் புள்ளிகளையுடைய உச்சிகள் வெளியே தோன்றும். எ - று. (௧௬)

விலகி நின்று வடவை விழிப்பபோற்
சுலவு வெம்பொறி கட்கடை தூக்குற
நிலவு வெண்ணுரை பாற்பட நீண்டவா
யலக டிப்புறி னண்டமு டைக்குமால்.

(இ - ள்.) வடவாக்கினி கடலைவிட்டு விலகித் தனியேயிருந்து பார்ப்பது போல, சூழ்ந்துள்ள நெருப்புப்பொறிகள் கட்கடையிற் சிந்திக்கொண்டிருக்கும் படிக்கும் சந்திரிகையைப்போன்ற வெள்ளிய நுரைகள் பக்கலில் ஒழுகும்படிக்கும் தன் நீண்ட வாயால் அசைத்தால் அண்டகோடிகள் உடைபடும். எ - று.

கண்டு தேவர் கலங்கினர் கண்பொறார்
திண்டி றற்புரந் தீத்தருள் செல்வனைக்
கொண்ட வுச்சிக் கயிலைக் குழீஇனார்
முண்ட கப்பதம் போற்றி மொழிகுவார்.

(இ - ள்.) தேவர்கள் பார்த்துக் கலக்கமெய்தி மேலும் பார்க்கச் சகியாதவர்களாய், மிக்க வல்லபமுடைய முப்புரங்களை யெரித்தருளிய சிவபெருமானைத் தாங்கிக்கொண்டிருக்குஞ் சிகரத்தையுடைய திருக்கைலாயகிரியிற் சேர்ந்து சிவபெருமானுடைய தாமரை மலர்போலும் பாதங்களைத் துதித்து விண்ணப்பிக்கின்றார்கள். எ - று. (௧௭)

பரந்த பாற்கடற் பாப்பணைப் பள்ளியான்
மூரண்ட ருந்திறற் பன்றியின் மூதுருக்
கரந்து வையகம் யாவுங் கலக்கலா
லரந்தை பெற்றுவெ ருக்கொண்ட தாருயிர்.

(இ - ள்.) பரந்த திருப்பாற்கடலில் ஆதிசேஷனாகிய படுக்கையில் யோகநித்திரை செய்யுந் திருமால் மாறுபாட்டை யுண்டுசெய்யும் வல்லபமுள்ள

யாகத்தின் பெரிய உருவத்தில் மறைந்திருந்து, உலகங்களையும் [illegible] நிலைகுலையச் செய்வதாற் சிவராகிசனெல்வாந் துயரெய்திப் [illegible]தன. எ - று.

இன்று மாத்திரை தாழ்த்துறி னெம்முடைப்
பொன்னி னாடும் புகுந்துக லக்குமா
லின்னை யன்றி நெடுந்துய ரெய்தினு
மின்ன றீர்த்தெமைக் காப்பவர் யாவரே.

(இ - ள்.) இன்றும் ஒரிமைப்பொழுதுதாமதிப்பீராயின் (இம்மட்டுமீராது) எங்கள் பொன்னுலகத்திற்கும் வந்து நிலைகுலையைச்செய்யும். நாங்கள் பெருந் துக்கமெய்தினுல் எங்கள் துயரத்தை விலக்கிப் பரிபாலனஞ் செய்பவர்கள் தேவரீரையன்றி வேறே எவர்களிருக்கின்றார்கள்? எ - று. (௧௯)

ஆட கக்கண ரக்கனை யஞ்சியெங்
கேடு தீர்த்திடெ னப்புகல் சேண்மையாற்
கோடு வெண்கதிர்க் கூன்பிறைக் கண்ணியோய்
பாடெ மக்குப் பலித்ததெம் பாவமே.

(இ - ள்.) தாவள்யமான கிரணங்களை யுடையதாய்க் கொம்புபோல வளைந் துள்ள இளம்பிறையாகிய மாலையை யணிந்தவரே! இரணியாக்கனென்னும் அரக்கனை யஞ்சி, அடியேங்கள் துயரத்தை நிவாரணஞ் செய்தருள்வீரென்று கூறியதாட் சணியத்தால் இத்தகைத் துன்பம் எங்கட்கு நிகழ்ந்தது. இதுவும் எங்கள் பாவமே. எ - று. (உ௦)

என்னப் பன்முறை சொற்றிரந் தேத்தினார்
வன்னிச செங்கை மழுப்படை வானவ
னன்னர்க் காருளு ணேக்கிய வித்தனன்
பின்னர்ச சண்முகப் பிள்ளையை நோக்கினான்.

(இ - ள்.) என்றிப்படிப் பலவகையாகப் பேசிப் பிரார்த்தித்துத் துதிசெய் தார்கள். தமது சிவந்த திருக்கரத்திலே அக்கினிமயமான மழுப்படையைத் தாங்கிய சிவபெருமான் அவர்களை நோக்கித் தமது திருவருளைப் பூரணமாகப் பாலித்தனர். அதன்பின், ஆறு திருமுகங்களைப்படைத்த தமது இளையபிள்ளை யாகை நோக்கியருளினர். எ - று. (உ௧)

தந்தை நோக்குறச் சண்முகச் சேவக
னெந்தை யிப்பணி யென்னுழை யாக்கெனப்
பைந்தொ டிக்கரங் கூப்பிய பணிந்தன
னந்தி செய்திடென் றுனரு ளாழியான்.

(இ - ள்.) தந்தையாகிய சிவபெருமான் தம்மை நோக்கவும், வெற்றிதங்கிய ஆறுமுகக் கடவுள், எந்தையே! இக்கட்டளையை அடியேனிடத்திற் செய்க வெனக்கூறி, பசிய பொன்னணி யணிந்த திருக்கரங்களைக் குவித்து வணங்கினர். கிருபா சமுத்திரமாகிய சிவபெருமான் அப்படியே முடிவு செய்கவெனக் கட் டளை தந்தனர். எ - று. (உஉ)

தேவர் யாவருங் கைதொழத் திண்டிறற்
பரவு தோகை யுகைத்துப் படரொளி

வராகாவதாரச் சருக்கம்.

வெய்யவேற்படை கைக்கொடு மேயினை
றுவாகுந்திறற் சண்முகப் பிள்ளையே.

(இ - ள்.) அழிவற்ற வல்லமைதங்கிய சண்முகக்கடவுள், தேவர்களெல்லாருங் கைகுவித்து வணங்கிவரும்படி, தாண்டி யுலாவும் மயில் வாகனத்தைச் செலுத்திக்கொண்டு பரப்பிய காந்தியையுடைய வேற்படையைத் திருக்கரத்திற் றாங்கிக்கொண் டெழுந்தருளினர். எ - று. (உ௬)

ஊர்தி ரைக்கட லேழுமு ழக்கியே
பேர்தி ரைத்தண் பெரும்புறப் பள்ளவாய்
நீரு ழக்கி நிமிர்ந்தெழு மேல்வையிக்
கார்ம யிற்பரிச் சேவகன் கண்டனன்.

(இ - ள்.) ஊர்கின்ற அலைகளையுடைய சமுத்திரங்க ளேழையுங் கலக்கிப் பெரிய அலைகளுடையதாய்க் குளிர்ந்திருக்கும் பெரும்புறக் கடலிலுள்ள சலத்தையுங் கலக்கி அவ்வராகம் ஓங்கிப் புறப்படுஞ் சமயத்தில், பசுநிறந்தங்கிய மயில் வாகனத்தையுடைய குமாரக்கடவுள் நோக்கியருளினர். எ - று. (உ௭)

கண்ட சேவகற் கண்டது காய்சினங்
கொண்டு வெண்ப லலகடிக் கொண்டதாற்
றிண்டி றற்பிடர்க் கூந்தல் சிலிர்த்தழன்
மண்டு மாமுகங் கீழ்ப்பட வந்ததால்.

(இ - ள்.) அங்ஙனம் நோக்கிய ஷண்முகக்கடவுளை அவ்வராகங் கண்டு கடுஞ்சினமெய்தி, தன் வெள்ளியபற்களாகிய ஆயுதங்களை அடித்துக்கொண்டது. மிக்க வல்லபமுடைய தன் பிடரிமயிரைச் சிலிர்த்துக்கொண்டு அக்கினிச்சுவாலை யதிகரித்த முகமானது நிலத்தில் உராயும்படி ஓடிவந்தது எ - று.

வந்த மெய்விசைக் காற்றெழு வாரிசூழ்
தந்த நேமிச் சயிலமு ருண்டதாற்
செந்த ணிக்கதிர் நெஞ்சந் திடுக்குறப்
பிந்தி னனிருள் போர்த்த பெருநிலம்;

(இ - ள்.) விரைந்துவந்த வேகத்தினால் அதனுடலிற் றோன்றிய காற்றுப் புறப்பட்டவுடன், பெரும்புறக் கடல் சூழ்ந்த சக்கரவாளகிரியும் உருண்டது. சிவந்த கிரணங்களையுடைய ஒப்பற்ற சூரியனும் மனந்துணுக்கெய்திப் பிற்பட்டுப் போயினன். ஆதலால் உலகமுழுவதும் இருண்மூடியது எ - று. (உ௮)

வெற்றி வேற்படை விண்ணவ னீங்கிவை
முற்று நோக்கி முகிணகை பூத்தனன்
கொற்ற வேற்படை கொண்டதன் றிண்டிற
னெற்றி குத்தி நிலத்தொட முக்கினன்.

(இ - ள்.) வலிமைதங்கிய வேற்படைதாங்கிய குமாரக்கடவுளும் இவற்றையெல்லாம் நோக்கியருளிப் புன்னகை செய்தருளினர். அதன்பின்னர், தமது வெற்றிதங்கிய வேலாயுதத்தைக்கொண்டு மிக்க வலிவுள்ள அவ்வராகத்தின் நெற்றியிற் குத்தி நிலமிசை யழுத்தினர், எ - று. (உ௯)

ஆடல் வேல்கொண் டமுக்கலுஞ் சோரிநீர்
பாட கன்றது பாதலஞ் சென்றதா
லூடு புக்கிழிந் தன்னத னொண்பிறைக்
கோடு பற்றிப் பிடுங்கினன் கோதிலான்.

(இ - ள்.) வெற்றிவேலினால் முருகப்பெருமான் குத்தி யழுத்தினமாத்திரமே, அப்பன்றி உதிரப்பெருக்கோடு அங்கிருந்தகன்றுபாதலலோகத்திற்போய் விழுந்தது. குற்றமற்ற குமாரக்கடவுள் அவ்வராகத்தோடு ஊடுருவி யிறங்கி, அதன் ஒளிமிகுந்த பிறைச் சந்திரன்போன்ற கொம்பைத் தமது திருக்கரத்தாற் பற்றிப் பறித்தனர். எ - று. (உஅ)

வெய்து போந்தனன் வெண்பிறைக் கோடுகொண்
டெய்தி யீச னிணையடி வைத்தனன்
றையல் பாகனுஞ் சண்முகப் பிள்ளையை
மொய்கொ ளுச்சியை மோந்து தழீஇனான்.

(இ - ள்.) குமாரக்கடவுள் அதிசீக்கிரத்தில் அங்கிருந்தும் புறப்பட்டு, வெண்ணிறந்தங்கிய பிறைச் சந்திரன்போல் வளைந்திருக்குங் கொம்பையெடுத்துக்கொண்டு, சிவபெருமான் சந்நிதியெய்தி, அதனை அப்பெருமான் உபய பாதங்களில் வைத்தனர். பார்ப்பதிபாகராகிய சிவபெருமானும் சிறப்புற்ற சண்முகப்பெருமான் உச்சியைமோந்து அவரைத் தழுவிக்கொண்டனர். எ - று.

காரி யன்ற களத்திறை வானவன்
வாரி யன்பின் மடியிலி ருத்தியப்
பாரி யோடு மினிதுப கர்ந்தனன்
சூரி வேற்கை முருகனி யற்கையே.

(இ - ள்.) கருநிறமெய்திய கண்டத்தையுடைய இறைவராகிய சிவபெருமான், குமாரசுவாமியை வாரியெடுத்து மடிமிசை வைத்துக்கொண்டு வல்லமை தங்கிய வேற்படை தாங்கிய அம்முருகப்பெருமான் தன்மைகளையெல்லாம் சிறந்த தமது தேவியாராகிய உமாபிராட்டியாருடன் திருவாய்மலர்ந்தருளினர்.

கற்றை வார்சடைக் கண்ணுத லோனருள்
கொற்ற வேற்கைக் குமரனைக் காண்டொறுந்
தெற்று வெண்டிரைத் தெள்ளமு தம்பெறப்
பெற்ற தன்மை பிறந்தனர் வானவர்.

(இ - ள்.) தொகுதியாய் நீண்ட சடையையுடைய சிவபெருமான் தந்தருளிய வெற்றிவேலாயுதந்தாங்கிய திருக்கரமுடைய குமாரசுவாமியைத் தரிசிக்கும்பொழுதெல்லாம், தேவர்கள் தாவுகின்ற வெள்ளிய அலைகள்பொருந்திய திருப்பாற்கடலினுதித்த அமுதத்தைப் பெற்றுக்கொண்டகாலத்தில் எய்திய சந்தோஷத்தோடு விளங்கினார்கள். எ - று. (௩௧)

இந்தி ராதிப ரீரிதழ்த் தாமரை
யந்த ணாள னரனை யடிதொழா
வெந்தை யீயிக லேன மருப்பினைக்
கொந்த ளச்சடைக் கோடியென் றேத்தினார்.

(இ - ள்.) இந்திரன் முதலிய இமையவர்களும், குளிர்ச்சிவாய்ந்த இதழ்களையுடைய கமலாசனனாகிய பிரமனும், சிவபெருமான் பாதங்களைவணங்கி, எமது தந்தையாகிய தேவரீர் வலிதங்கிய அவ்வராகத்தின் கொம்பைக் குழற்சியுடைய சடையிலே யணிந்துகொள்வீராகவென்று துதிசெய்தார்கள். எ - று.

அரன ணிந்தன னப்பிறை வாளெயி
றரவு மேதவ ருவகைகொண் டாடினார்
பரவு சேவடி பன்முறை வாழ்த்தியப்
புரமெ ரித்தவற் போற்றினர் போயினார்.

(இ - ள்.) சிவபெருமான் (அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி) அப்பிறைச் சந்திரன்போன்ற பல்லை அங்ஙனமே யணிந்துகொண்டனர். அறிவுபொருந்திய அமரர்களனைவரும் அகங்களிதுளும்பினர். எல்லோருந் துதிக்கத்தக்க சிவந்த திருவடிகளைப் பன்முறை தோத்திரஞ்செய்து முப்புரம்பொடித்த அம்முதல்வனை வணங்கித் தத்தமிடஞ் சார்ந்தார்கள். எ - று. (௩௩)

மாய மாய வராக வுருக்கழிந்
தாய மாய னரனைய ருச்சியாத்
தீய வாணவர் செய்கைச் செருக்கறப்
போபொ ழிந்து தனதுழைப் போயினான்.

(இ - ள்.) மாயமாகிய வராகவடிவகன்று, நிசரூபமுற்றிருந்த நெடுமால், சிவபெருமானை யருச்சித்து, கொடிய ஆணவமலத்தின் செயலான அகங்காரத்தை அடியோடு நீங்கப்பெற்றவராய், தமக்குரிய வைகுந்த பதவிக்கு எழுந்தருளினர். எ - று. (௩௪)

வராகாவதாரச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௧௬ - க்குத் திருவிருத்தம் - ௨௭௭௪.

பதினேழாவது

நரசிங்காவதாரச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஈதலாதுசென் றிறந்தபுறக் காலத் திருந்திற லெறாழ்வலித் திரடோட், காதுவெஞ்சின முறுக்கெயிற் றசுரரிற் றோன்றினன் கனகனென் றொருவன், றுதலாந்தடந் தாமரை நான்மறைக் கிழவனைத் தனதகத் திருத்தித், தீதின் மாதவம் புரிந்தன னத்தவத் தொழுகிய நாட்சில சென்றான்.

(இ - ள்.) இதுவல்லாமல், கழிந்துபட்ட பழங்காலத்திலே, பெருவீரமும் மிகுவல்லபமும் குவிந்ததோள்களும் கொல்லுந்தக்க கடுங்கோபமும் வக்கிரதந்தங்களுமுடைய அசுரர்குலத்திலே இரணியனென்னும் பெயர்பெற்ற ஒருவனுமிருந்தான். அவன் மகரந்தங்கள் நிரம்பிப்பரந்த கமலாதனனாகிய பிரமனைத் தன் மனதிற் பதித்து, குற்றமில்லாத பெருந்தவஞ் செய்தான். அத்தவத்திலேயே யொழுகிச் சிறிதுகாலங் கழித்தான். எ - று. (க)

அனைய மாதவ மாற்றிய செயற்கருந் தன்மையை யகத்தடைத் தவனாய், நனைகொ டாமரை நான்முகத் தந்தண னங்கவற் கெதிருற நடப்பப், புனைபொ லன்கழ லிரணிய னவனிரு மலரியம் பூங்கழல் போற்றி, நினையு நெஞ்சொடு மென்புறக் குழைந்தன னதுவறிந் திரங்கின னிமலன்.

(இ - ள்.) அத்தகைய பெருந்தவஞ்செய்த செயற்கருந் தன்மையைத் தனதுள்ளத்திலெண்ணியவனாய், குளிர்ந்த தாமரைமலர்ப் பீடமுடைய பிரமன் அவ்விரணியனுக்கு எதிரே வந்தபோது, பொற்கழலணிந்த பாதத்தையுடைய இரணியாசுரன், அப்பிரமனுடைய அழகிய தாமரைமலரை யொத்த உபயபாதங்களை வணங்கி, எக்காலும் அவனைத் தியானித்த சித்தத்தோடு என்புநெக்குவிடமனமுருகினான். பிரமதேவன் அதைநோக்கித் திருவுளமிரங்கியருளினான்.

விருப்பி னோங்கிய தென்னெனப் பழமறை வேதியன் வினவலும் வெய்யோ, னெருப்பி னீரினி னிலத்தினில் வளியினி னெடுவெளிப் பரப்பினி னின்ற, விருப்பி லாயுதக் கருவியி னகத்தினிற் புறத்தினி லிமையவர் மக்கள், வெருக்கொ ளஞ்சிறைப் பறவையின் விலங்கினி னிறப்புறு வரம்பெற வேண்டும்.

(இ - ள்.) உன் [illegible]பத்தினால் மேம்பட்டது யாதென்று பழமையாகிய வேதங்களையுணர்ந்த [illegible]மன் வினவவும், கொடியோனாகிய இரணியன், நெருப்பாலும் நீராலும் மண்ணாலும் காற்றாலும் நெடிய ஆகாயப் பரப்பாலும், இன்னும் முள்ள இரும்பாலாக்கிய ஆயுதக் கருவிகளாலும் இரகசியத்தாலும் வெளிப்படையாலும், தேவர் மனிதர் அச்சமெய்தத்தக்க அழகிய சிறகுள்ள பட்சிகளாலும் மிருகங்களாலும் யான் இறவாதிருக்க வரம்பெறவேண்டுமென்றான். எ - று.

மடுத்த கங்குலிற் பகலினி னிறப்புறு மாதவம் பெறினுமென்
னாக்கை, விடுத்திடு சோரியோர் துளிபுறத் துறினுமத் துளிவெகு வொன்
னாரு வெடுத்துக், கடுத்த வெம்பகை முதலறப் போக்குவான் பெரு
வரங் கருதினே னைய, கொடுத்தி யாமெனிற் பெறுகுவ னலவெனி
லென்னுயி ருன்னுழைக் கொடுப்பேன்.

(இ - ள்) மிகுந்த இரவிலும் பகலிலும் இறவாதிருக்கும் வழியும், அப்படி யிறந்தால் என்னுடலினின்று ஒழுகிய உதிரத்தில் ஒருதுளி வெளியே விழினும் உடனே அவ்வுதிரத்துளி எல்லாரும் பயப்படத்தக்க என்வடிவேற்று என்னோ டெதிர்ந்த கொடிய பகைஞர்களை வேருடனழிக்கத் தக்க பெருவரமும் பெற விரும்பினேன். ஐயனே! தேவரீர் இவ்வரங்களைத் தருவீராகில் பெற்றுக்கொள் ளுவேன். அல்லவெனில் என்னுயிரை உம்மிடத்திலே விடுவேன். எ - று. (௪)

வயிர்த்த சிந்தையி னினையன வாமொழிற் றசுரர்கோ னியம்பலு
மலரோ, னயிர்த்த சிந்தையி னடைந்தன னுங்கவன் கேட்டன யாவையு
மளித்தா, னுயிர்த்த தெய்வவான் படைக்கல முதலின னவன்புரி யிடுக்
கணொன் றுளாரான், பெயர்த்து நான்முகன் றன்னுழைப் படர்ந்தனன்
மீண்டனன் பெருந்திற லசுரன்.

(இ - ள்) திடமுற்ற மனத்தோடு இத்தகைய சொற்களைக் கூர்மைதங்கிய பற்களையுடைய அசுரர்தலைவனான இரணியன் சொன்னமாத்திரத்தில், கமலா சனனாகிய பிரமன், இரக்கமுற்ற திருவுளத்தனாகி அவனாற்செய்யப்படும் கொடுமைகளைச் சிந்தியாது, அவன் கேட்டுக்கொண்டவரங்களெல்லாவற்றையும் கொடுத்து, தெய்வீகமாகிய சிறந்த ஆயுதவகைகளையு மளித்து, மீண்டு அப் பிரமன் தன்பதவிக்குச் சென்றனன். பெருவல்லமையுள்ள அவ்வரக்கனும் அங்கு நின்று திரும்பினான். எ - று. (௫)

அளப்பரு திறலுடை நால்வகைச் சேனையி னடைந்தன னளவொழி
யண்டத், தளப்படப் படுமனைவருந் தன்னடி நீழ்விழப் பணித்தன
னுரவோர், வளப்பெருந்திற லிந்திரன் முதலியோ ரேயின கேட்டுற
வருந்தார், கிளர்ந்த மின்றபே ருலகெலாந் தனதுவெண் கவிகையின்
கீழ்ப்பட நிறுத்தான்.

(இ - ள்) அளவிடற்கரிய வலிமைபொருந்த நால்வகைச் சேனைகளையும் பெற்றுக்கொண்டான். எண்ணிறந்த அண்டகோடிகளுக்குட்பட்டிருக்கும் யாவரும் தன் பாதங்களின் கீழ்வணங்கும்படி கட்டளையிட்டு, பெருவளங்களும் வல்லமையுமுடைய இந்திரன் முதலானோர் பணிவிடைகளைக் கேட்டுச் செய்துகொண்டிருக்கும்படி ஏற்பாடுசெய்தான். பொலிவுற்றுவிளங்கிய பெரிய உலகமுழுவதும் தனது வெண்கொற்றக் குடையின் கீழ் விழும்படி நிலைபெறுத்தினான். எ - று. (௬)

மாக நாட்டினர் வரம்பையர் முதலியக் கந்நாட் டிரிவையர் மழலையங்
கிளிபோ, னாக நாட்டுள கன்னியர் சித்தர்நாட் டெழுதரு நவவியன்
கண்ணார், சேகரு வக்கொழுங் குதலையர் யாதுநாட் டுளமலர்க் கோ
தைய ரெவரும், பாகமிப்பனி மொழியினர் சாமரை முதலின வேந்
துறப் பணித்தான்.

(இ - ள்.) தேவலோகத்திலுள்ள அரம்பா ஸ்திரீகளும், யக்ஷலோகத்திலுள்ள மாதர்களும், மழலைச் சொற்களமைந்த கிளிபோலவசனிக்கும் நாகலோகத்திலுள்ள நங்கையர்களும், சிறந்த பூலோகத்திற் றோன்றும் மான்போலும் அழகிய விழியையுடைய மங்கையர்களும், யாதவ குலத்திலுதித்த கொழுவிய குதலைச்சொற்களையுடைய மாதர்களும் இன்னும் பிறவுலகத்திலுள்ள மலர்மாலை சூடிய கூந்தலுடையவர்களும், வெல்லப்பாகையும் வெல்லும் இனிமையும் குளிர்ச்சியுமுள்ள வார்த்தையுடையவர்களுமாகிய மாதர்களும் சாமரை முதலியன தாங்கிக்கொண்டிருக்கக் கட்டளை யிட்டான். எ - று. (எ)

இந்தி ரப்பெரும் பெயரினோன் முதலிய வெண்டிசைக் காவலர் யாரும், வந்தி ரந்தவன் பணிப்பன வரன்முறை கேட்பரா லிவ்வரப் பெருக்கந், தந்த நான்முக னிவன்பெயர் கேட்டொறுந் துணுக்குறுஞ் சமயநின் றளிக்கும், முந்தை வாழ்வுடைத் தேவரு மவன்புகு நெறியமைத் திருப்பரான் முகங்கள்.

(இ - ள்.) இந்திரனென்னும் பெரும்பேருடையவன் முதலாகிய அஷ்டதிக்குப்பாலர்களையெல்லாம் நாடோறும் தன்பால்வந்து பிரார்த்தித்து அவன் கட்டளை யிடுவனவற்றை முறைப்படி கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்வாறுகளாகிய பெருமையைப் பாலித்த பிரமனும், இவன் பெயரைக்கேட்கும் பொழுதெல்லாம் திடுக்குறுவான். சமயம்பார்த்துக்கொண்டு பாதுகாப்பான், பண்டைய வாழ்வுள்ள பிறதேவர்களும் தங்கள் முகங்களை அவன் போகும் வழியில் திருப்பிக்கொண்டிருப்பார்கள். எ - று. (அ)

கருடர் வானவர் சித்தர்வித் தியாதரர் கின்னர ரரியக்கர்கந் திருகிம், புருட ரின்னவர் யாவரு மசுரரிற் புண்படு தழும்பின ரல்லா, துருவ முன்னையொத் துள்ளவ ரில்லர்தாழ்ந் துயர்ந்தன ரசுரரூழ் முறையிற், பொருத டந்திரைப் பிரளய மொத்தனர் படுகரொத் திழிந்தனர் புலவர்.

(இ - ள்-) கருடர்-தேவர்-சித்தர்-வித்தியாதரர்-கின்னரர்-யக்ஷர்-கந்தருவர்-கிம்புருடர் ஆகிய இவர்கள் யாவரும் அசுரர்களாற் காயப்பட்ட தழும்புடையவர்களே யல்லாமல், பண்டைய உடலைப்போல் உடையவர்களலர். அசுரர்கள் ஊழிக்காலத்தில் முறைப்படி மோதுகின்ற விசாலித்த அலைகளையுடைய பிரளயத்தைப் போன்றுயர்ந்தார்கள். தேவர்கள் அப்பிரளய நீர் தங்குகின்ற பள்ளங்களைப்போன்று தாழ்ந்து இழிதகைமை யெய்தினார்கள். எ - று. (கூ)

மேரு மால்வரை முதலிய நெடுநில வெற்பின முதலிய வுருட்டும், பாரு மண்டமுந் திகிரிமால் வரைமுதல் யாவையு மங்கையிற் படுக்கு, மோர்வ ருப்பிற பதவியி னின்றுள விண்ணவர் மணிமுடி யுரிஞ்சி, வார்பொ லன்கழல் பரிதியொத் திமைப்புற வாளரித் தவிசுவீற் றிருக்கும்.

(இ - ள்.) நெடிய வுலகிலுள்ள பெரிய மேருமலை முதலிய மலைகளின் தொகுதிகளெல்லாவற்றையும் உருட்டுவான். நிலவுலகையும் அதன் மீதுள்ள அண்டகோடிகளையும் சக்கரவாள கிரிமுதலிய வெல்லாவற்றையும் உள்ளங்கையிலடக்குவான். அறிதற்கரிய பிறபதவிகளில் நிலைபெற்ற தேவர்களுடைய

இரத்தின மிழைத்த கிரீடங்களுராய்ந்து, பொன்னுலாகிய கெடிய வீரகண்டா மணிகள் சூரியனைப்போலப் பிரகாசிக்கும்படி ஒளிதங்கிய சிங்காசனத்தில் வீற்றிருப்பான். எ - று. (௧௦)

அடுக்கி நிற்பன வண்டமு முலகமு மவற்றுள யாவரு மந்நா,
ளெடுத்து ரைப்பன விரணியனேநம வென்பர்மற் றியாவையு மியம்
பார், மடுத்த பேரறந் துறந்தனன் பாதகப் பேரர சளித்தனன் மருண்
டான், விடுத்த நான்மறை யுருவுகொண் டவற்கொரு மதலையிற் றோன்
றுற வியந்தான்,

(இ - ள்.) அடுக்கி யிருப்பனவாகிய அண்டகோடிகளும் நிலவுலகமுமாகிய இவற்றில்வாழும் யாவரும் அக்காலத்தில் சிறப்போடு சொல்லுவன வெல்லாம் இரணியாய நம: என்பார்கள். இதற்கு வேறுயுள்ள மற்றொன்றையுஞ் சொல்லார்கள். உலகில் நிரம்பியிருந்த பெருந்தருமங்களை யொழித்தான். பெரும்பாதகங்கள் நிறையும்படி அரசுசெய்தான் புத்திமயங்கி யிருநதான். இவனால் நீக்கப்பட்ட நான்கு வேதங்களுமே ஓர்வடிவமெய்தி அவனுக்கு ஒருபுத்திரனாகப் பிறக்க ஆச்சரியமடைந்தான். எ - று. (௧௧)

அனைய பாலகற் காண்டொறுந் தாயின வுணர்ந்தனன் வாளெ
யிற் றசுர, னினைசு தன்றரு பாலக ரிருவர்பா லிருங்கலை நிகழ்த்துற
விடுததா, னினையமைந்தனுக் காதியி னுணர்த்தின ரிரணிய னேநம
வென்ன, வினையொ ருங்கறப் பிறந்துள பாலக னருமறை யாதியை
விரித்தான்.

(இ - ள்.) அத்தகைய புத்திரனுக்கு ஐந்துவயதுகளானதை யுணர்ந்த கூர்மைவாய்ந்த பற்களையுடைய இரணியனென்னு மசுரன், தான் எப்பொழுதும் எண்ணத்தக்க சுக்கிராசாரியர் பெற்ற புதல்வர்கள் இருவரிடத்தில் பெரிய நூல்களைக் கற்றுக்கொள்ளும்படி செலுத்தினான். இப்புதல்வனுக்கு ஆரம்பத்தில் இரணியாய நம: என்று சொல்லிக்கொடுத்தார்கள். வினைகளெல்லாம் அடியோடு நீங்கும்படி பிறநத அப்புதல்வன் அரிய வேதத்தின் முதலை எடுத்துச் சொன்னான். எ - று. (௧௨)

ஆகெடுத்தனை யெனவெரீஇ யந்தண ரிருகரத் திருசெவி யடைத்தார்
நீகெடற்கரும் பெயரினை யோதிலை நினக்கிஃ துணர்த்தினர் யாரே
யாகமுற்றிருந் தணைத்தணைத் தன்னது பகரினும் பகர்ந்திலன் சிறுவன்
வேக வெஞ்சினத் தசுரனிற் புகுந்தன ரந்தண ரவனிலை விரித்தார்.

(இ - ள்.) இதனைக்கேட்ட அந்தணர்களாகிய சுக்கிராசாரி புதல்வர்கள், ஆ ஆ! முறைமையைக்கெடுத்து விட்டாயே 'யென்று பயமெய்தி, இருகரங்களாலும் இருசெவிகளையும் மூடிக்கொண்டார்கள். நீ அழியாதிருக்கத்தக்க பெயரைச் சொல்லவில்லை. உனக்கிதனை யுபதேசித்தவர்கள் யாவர்? எனக்கூறி, அவனுக்கிணக்க மார்கவிருந்து தழுவித்தழுவி இரணியாய நம: என்றும் அவ்வாக்கியத்தைச் சொன்னாலும் அப்புதல்வன் அதனைச் சொல்லவில்லை. அதிகண்ட வேதியச் சிறுவர்களாகிய அவ்விருவரும் மிக்க கடுங்கோபமுடையவர்களாய் இரணியன்பாற் போய் அவன் றன்மையை விரித்துச் சொன்னார்கள். எ - று.

என்று ரைத்தன னென்றன னிரணிய னன்னவ னிசைத்தன
வெழுதா, அன்னி யோரினும் படுகுழி நிறைவும்வந் தாறுமதி யாயினைக்
கலமென், றின்ன லந்தண ரிரணிய னோநம வெனச்செவி புதைத்தன
ரிருந்தார், மன்று மைந்தனைக் கொணர்கெனச் சென்றனர் கொணர்ந்த
னர் வாளெயிற் றசுரர்.

(இ - ள்) அப்போதிரணியன் என் மகன் யாதுசொன்னானென்று வினவி
னான். அவன் சொன்னவற்றை யெழுதாமனினைத்துணர்ந்தாலும் மிக ஆழமா
கிய பள்ளம்வாய்ந்த நரகம்வந்து சம்பவிக்கும். ஆனதால் அதை நாங்கள்சொல்ல
மாட்டோமென்று அவ்வேதியச் சிறுவர் கூறி இரணியாய நம என்று தங்கள்
காதைப் பொத்திக்கொண்டிருந்தார்கள். உடனே இரணியன் தன்னிலேபெருன
புதல்வனை யழைத்து வரும்படி கட்டளையிடவுங் கூர்மைதங்கிய பற்களையுடைய
அசுரர்களிற் சிலர் சென்று அவனைக்கொண்டு வந்தார்கள். எ - று. (கச)

கதுமென ப்புகு மதலையை நோக்கின னோதுறு மாதியைக் கருதா,
வெதுவு ரைத்தனை மைந்தநீ யெனனலு மியானுமற் றென்னையின் றருளி,
னுதவு நீயுமின் றுய்குவா னுரைத்தன னுனக்குமற் றொருவர்க்கு
மெட்டா, வதுப ழம்பொரு ளோநமோ நாராய ணாவெனு முழு
மறைக் காதி.

(இ - ள்.) அவ்விடத்தில் விரைவாகவந்த தன்புதல்வனைப்பார்த்து, மகனே!
உனக்குக்கூறிய முதல்வாக்கியத்தைக் கவனியாமல் வேறு நீ யாது கூறினையெ
னக்கேட்டவுடன், அப்புதல்வன் நானும் என்னை ஈன்றளித்த நீயும் இப்பொ
ழுதே ஈடேறும்படி ஒன்றைச்சொன்னேன். அவ்வாக்கியப் பொருளானது உன
க்கும் உலகிலுள்ள வேறேனைய ஒருவருக்கும் எட்டாதது. நான்குவேதங்களுக்
கும் முதன்மையான ஓம் நமோ நாராயணாய என்னும் பழம் பொருளா
மென்றான். எ - று. (கரு)

கருகு சிந்தைய னங்கது கேட்டலுங் கனலெழுக் காச்சிய சலாகை,
யிருசெ விதொளை நுழைந்தெனச் சுருக்கொளக் கறித்தனன் எயிறு
தீப பிறக்க, வெருவி யண்டமு முலகமுங் குலுங்கின விண்ணவர் திசை
திசை மறைந்தார், திருகு சீற்றமிக் கிருவிழி வடவைகான் றெழுந்தது
செழும்புகைப் படலம்.

(இ - ள்.) வெந்த மனமுடைய இரணியாசுரன் அவ்வாக்கியத்தைக்கேட்ட
மாத்திரமே, தீப்பொறி சிந்தும்படி காச்சிய இருப்புச்சலாகையை இரு செவி
களிலும் நுழைத்ததுபோலச் சுரீரென்று கோபம் மூளும்படி தீப்பொறி சிந்தப்
பற்களைக்கடித்தான். அப்போது அண்டகோடிகளும் நிலவுலகமும் பயமெய்திக்
குலுங்கின. தேவர்கள் திசைகளிலெல்லாம் மறைந்தார்கள். மாறுபட்ட கோபம்
அதிகரித்ததனால் அவ்விரணியனுடைய இருவிழிகளும் வடவாமுகாக்கினியைக்
கக்கின. அவ்வக்கினியிலிருந்தும் ஓங்கிய புகைப்படலம் தோன்றியது. எ - று.

சீறு சீற்றமிக் கிருந்தவா றொருதனிச் சிறுவனென் றுணர்ந்திலன்
றீயோன், கோறிர் வாளொற்ற தென்றனன் கங்கிலே தெயிர்த்தனர் கொ
லைத்தொழிற் குரியோர், மீறினந்தக மெடுத்தெடுத் தெறிந்தன ரன்னவை

பீற்றன செல்வாற், கீறீற்றன வாயினு மற்றில மதலேபாற் கிளைத் துணைப் புயத்தின்.

(இ - ள்) கொதிப்புள்ள கோபமதிகரித்தபடியால் தீயோனாகிய இரணியன் ஒப்பற்ற தன் ஒரே பெருமை புதல்வனென்றெண்ணாமல், அவ்வசுரர்களைப்பார்த்து, நீங்கள் வாளை வீசி இவனைக்கொன்று விடுங்களென்று கட்டளையிட்டான்; அதனைக்கேட்ட கொலைத்தொழில் செய்பவர்கள் அதுபோலவே கோபமெய்தியவர்களாய், எண்ணிறந்த வாட்படைகளை யெடுத்தெடுத்து வெட்டினார்கள். அவர்கள் வெட்டப்புகுந்த வாளாயுதங்கள் துண்டுபட்டன. அவன்றோளில் மெல்லாலின் அளவேனும் வெட்டுப்பட்டதில்லை. எ - று. (கஎ)

விடங்கொடுத்துயிர் செகுத்துறப் பணித்தனன் கொடுத்தன ரவ் விடமவற்குத், தடந்திரைக்கடலாரமு தாயது நோக்கலுந் தழல்விழிச் சுடிகைப், படங்கொளெண்வகை நாகமுங் கடித்துறப் பணித்தனனாங் கவை பருவா, யிடங்கொளக்கடித் திறுக்கலு நெறுக்கெனத் தெறித் தன வளைந்தவா ளெயிறு.

(இ - ள்.) அதன்பின், விஷமூட்டி அவனுயிரை யகற்றும்படி கட்டளையிட்டான். அப்படியே விஷமூட்டினார்கள். அந்த விஷமானது அப்புதல்வனுக்குப்பரந்த அலைகளையுடைய திருப்பாற்கடலிலுதித்த சுவைமிகுந்த அமுதமாயிற்று. அதைக்கண்டமாத்திரமே, தீயைச்சிந்தும் விழிகளையும் முடியோடு கூடிய படத்தையுமுடைய அஷ்டமா நாகங்களும் கடிக்கும்படி கட்டளை தந்தான். அவ்வஷ்ட நாகங்களும் பிளவுபட்ட தங்கள் வாயாற்கவ்விக்கடித் திறுகியபோது, அவற்றின் கூர்மையும் வளைவுமுடைய பற்கள் திடீரென்று தெறித்துப்போயின. எ - று. (கஅ)

பருத்த கூர்மருப் போரிரண் டிரட்டியப் படுமதப் பனைக்கைமால் யானை, செருத்த வெஞ்சினத் திட்டையுட் கொணர்திரென் றிசைத் தலுங் கொணர்ந்தனர் தீயோர், வருத்த வான்மருப் பூன்றுறப் பாய் தரப் பணித்தன னடுதொழின் மறவோன், றெருத்த வாழையந் தண் டென முறிந்தனக் களிற்றுடைத் துணைப்பனை மருப்பு

(இ - ள்.) பிரிவுபட்ட கூரிய நான்கு தந்தங்களையும் பனைபோலும் துதிக் கையையுமுடைய பெரிய யானைகளாகிய கொல்லத்தக்க கடுங்கோபமெய்திய அஷ்டதிக்கஜங்களையும் கொண்டுவருகவெனக் கட்டளையிட்ட மாத்திரமே, தீயோர்களாகிய அசுரர்கள் அப்படியே கொண்டுவந்தார்கள். அப்போது அவ் யானைகளின் தனித்தனியான நான்கு தந்தங்களும் இவனுடலில் ஊன்றப் பாயும்படி செலுத்துங்களென்று கொலைத்தொழில் பொருந்திய கொடிய இரணியன் கட்டளையிட்டான். அப்படி அவர்கள் செய்தபோது அவ்யானை களின் பருத்த நான்கு கொம்புகளும் கூட்டமான வாழைத்தண்டுபோல முறிபட்டன. எ - று. (க௯)

உயிரி றக்கல னின்றினு மென்பன வுணர்ந்தன னுருந்துருத் தெழுந்தான், குயின்ற வந்தெழு நெடுவரை யுச்சியிற் கொண்டுசென் றுருட் டிறவீக்கிச், செயிரு றத்தனித் தள்ளுமி னென்றலுந் தள்ளின ரிருந்தி

லன் சிறுவன், வெயிறு மிழ்ந்தெறி கனைகழ லசுரர்கோன் செய்வதொ
ன்று மோர்ந்திலன் வெகுண்டான்.

(இ-ள்.) இவன் நாம்செய்த ஒன்றனாலும் இறந்திலன் என்பதுணர்ந்த இரணியன் மிகக்கோபித்துக்குதித்தான் மேகங்கள் மேலோங்கித் தோன்றும் நீண்ட மலையின்மேலுள்ள உச்சியிற்கொண்டுபோய் அவனவயவங்களெல்லாம் இற்றுப்போம்படி கட்டி இறக்கும்படி தனியாய் உருட்டி விடுங்களென்று கட்டளையிடவும், அப்படியே அவர்களுருட்டினார்கள். அப்போதும் அப்புதல்வன் இறக்கவில்லை. கிரணங்களைச்சிந்தி ஒளிவிடுகின்ற ஒலிதங்கிய வீரகண்டாமணியணிந்த அசுரர் தலைவனாகிய இரணியன் செய்வகையொன்றுந் தெரியாதவனாய்க்கோபங்கொண்டான். எ - று. (௨௦)

மருங்கு வெம்பொறைக் குன்றமிட் டசைத்தர வீக்கினர் வளைமு
கந் தெறியு, மிருந்தி ரைக்கட லிட்டன ரச்சிலை யாங்கவற் கேந்திய புணை
யாப், பொருந்த டந்திரைக் கரைகொடு சேர்ந்தது மெழுந்தன னரு
மறைப் புதல்வன், றிருந்து நாயக னடியவர்க் கடியரை யென்செயுங்
கொடுந்திறற் றீமை.

(இ-ள்.) அப்புதல்வனிடையிலே மிகப்பாரமான மலையைச்சேர்த்து இறுகக்கட்டினவர்களாய் அலைகள் சங்குகளை முகந்தெறியும் பெரிய சமுத்திரத்தில் வீழ்த்தினார்கள். அம்மலைப்பாறையானது அப்புதல்வனைத்தாங்குகின்ற தெப்பமாக அலைகள் மோதுகின்ற பரந்த கடற்கரையிற்கொண்டுவந்து சேர்த்தவுடனே, அரிய வேதங்களையுணர்ந்த அப்புதல்வன் நிலத்தின்மேலேறினன். கொடூரவல்லபந்தங்கிய தீமைகளெல்லாம் திருத்தமாகிய கடவுளுக்கு அடியரானவர்க்கு அடிமைப்பட்டவரை யாது செய்யும்? எ - று. (௨௧)

எவைசெ தாலுங்கொலென் றியற்றலு மாறாயி றிறந்தில னிவனென
வெண்ணாக், கவைய வாளெயிற் றடுதிற லசுரர்கோ னுருமெனக் கனன்
றனன் கனலா, வவையி னோர்தனிப் புதல்வனை வரவெதி ரழைத்தன
னங்கவ னடைந்தா, னிவர்கொடுஞ்சிகை வடவையுங் குளிர்ப்புற விடை
யறா தெரியெழ விழித்தான்.

(இ-ள்.) பிளவுபட்டதுபோன்ற கூரிய பற்கள்பொருந்திய கொல்லத்தக்க அசுரர் தலைவனாகிய இரணியன் எச்செயல்கள் இவனைக்கொல்லுமென்று ஆராய்ந்துசெய்தாலும், அவற்றாலெல்லாம் நிறைந்த பிராணனை இவன் இழக்கவில்லையேயென்று சிந்தித்து, இடியேறுபோன்று கர்ச்சித்துக் கோபித்தான். அப்படிக்கோபித்து ஒப்பற்ற தன் ஏகபுத்திரனைச் சபைக்குநேரே தருவித்தான். அப்படியே அவன் வந்தவுடனே மேலோங்கிய நீண்ட கொழுந்துவிட்ட வடவாமுகாக்கினியும் குளிர்ச்சியெய்தும்படி ஓயாமல் தீப்பொறி சிந்த நோக்கினான். எ - று. (௨௨)

என்னை யன்றிமற் றுலகளித் தமைப்பதற் குளதென விசைத்தவக்
கடவு, டன்னை யென்னெதிர் காட்டுதி யாங்கவன் யாவனென் றறிகுவன்
றனியோய்,பின்னை யுன்னிலை புரைக்குவன் காட்டலை யாமெனி னினைது
பேரியாக்கை, தின்ன வெண்ணினெ னென்றன னசுரர்கோ னுணர்ந்து
வா னருமறைச் செல்வன்.

(இ - ள்.) என்னையல்லாமல், இவ்வுலகினைப்படைத்தக்கர்த்தற்கு வேறு பொருளுண்டென்று நீ சொல்லிய அக்கடவுளை என் கண்ணுக்கெதிரே காட்டுவாயின், அப்போது அவன் யாவனென்று யான் உணர்ந்துகொள்வேன். ஒப்பற்றவனே! நீ சொல்வதுபோல அதன் பிறகு நானுஞ்சொல்வேன். அப்படிக்காட்டாது விடுவாயாகில், உன் பெரிய உடலைத்தின்றுவிடும் வண்ணம் கருதுவேனென்று இரணியன் சொன்னான். அப்போது அரிய வேதமுணர்ந்த அப்புதல்வன் தன் தந்தைக்கு உணர்த்துவானாயினான். எ - று. (௨௩)

கலிநிலைத்துறை.

நீயு நின்னுழைத் தோன்றிய செருக்குநிற் பயந்த
தாயு மற்றுள தந்தையுந் தனிப்பதம் யாவு
மாய வஞ்சமு ஞானமும் வரம்பறு வாழு
மோர்வில் காலமு மவனல தன்றிமற் றுளதோ.

(இ - ள்.) நீயும் உன்பால் விளங்கிய அகங்காரமும் உன்னைப்பெற்ற தாயும் தந்தையும், இன்னும் உனக்குள்ள ஒப்பற்ற பதவிகள் யாவும் மாயத்தன்மை பொருந்திய வஞ்சகங்களும் அறிவும் அளவற்ற வரங்களும் ஒழியாதிருக்குங் காலமுமாகிய இவற்றில் யாதாவதொன்று அக்கடவுளை நீங்கவிருக்கின்றதோ?

ஓதி யோதிநின் றுணர்தொறு முணர்ச்சிதந் துதவு
மாதி யாவதுஞ் சராசர மனைத்துமா யடங்கும்
பேத பேதமும் பிருதிவி முதற்பெரும் பூதச
சோதி யானது மவனல தில்லைகாண் டொகுப்பின்.

(இ - ள்.) நூல்களைக் கற்றுக்கற்றுத் தெளிந்துணரும்போதெல்லாம் அறிவை யூட்டி யனுசரிக்கும் முதற்பொருளாவதும், நிலையியற்பொருள் இயங்கியற்பொருளாகி யொடுங்குகின்ற பேதமும் அபேதமும், பிருதிவி முதலாகச்சொல்லும் ஐம்பெரும் பூதங்களாய் விளங்கும் சோதி வடிவமாவதும், சுருக்கிச் சொல்லுமிடத்தில் அக்கடவுளையன்றி வேறின்று. காண்பாயாக. எ - று. (௨௪)

நினைக்கு நெஞ்சமு நினைத்துறப் படுவன யாவு
மனைத்தெ னப்படுஞ் சராசர பேதமு மவனே
யுனைக்கொ டின்னவை புரிகுவ தனதுயி ரிறப்ப
வினைக்கொ டுந்திறல் விளைப்பதூஉ மாங்கவன் விளம்பின்.

(இ - ள்.) எண்ணுகின்ற மனமும், எண்ணப்படுவனவாகிய வனைத்தும், எல்லாமென்று சொல்லப்படுகின்ற சராசர பேதங்களும் அக்கடவுளேயாகும், மேலுஞ்சொல்லுமிடத்தில், உம்மைக்கொண்டு உன்னுயிர் அழிக்கும்படி கொடிய இவ்வினையின் வல்லபங்களாகிய இவைபோல் வனவற்றைச்செய்வதும் செய்விப்பதும் அக்கடவுளேயாம். எ - று. (௨௫)

தேவர் நாயகன் றிருமக ணாயகன் சிறந்த
பூமி நாயகந் தந்தரு ணாயகன் பொறைதீர்
பாவ காரிய குணம்புகா வடியருட் பரிக்குங்
காவ லாயகன் றன்னிலை யிந்நிலை காண்டி.

(இ - ள்.) தேவர்கள் தலைவரும் லக்ஷ்மிநாயகரும் சிறப்புற்ற தாமரைத் தலைவனாகிய பிரமனைப்பெற்ற தந்தையுர, பொறாமையற்ற பாவச்செய லுடையார் மனதிற்சேராதவரும், தம்மடியார் மனதிற் குடியிருந்து காக்கும் கடவுளுமாகிய திருமாலின் தன்மை இத்தன்மையாம். காண்பாயாக. எ - று. ()

என்றுரைத்தசொற் கேட்டலும் பிறைமுறுக் கெயிறு
தின்று தின்றுநின் றேவனிச் சிறுதனி மதலை
நின்று காண்டுறக் காட்டுதி யலையெனி னின்னைக்
கொன்று தின்பனென் றுறப்பினை னழலெழக் கொதித்தான்.

(இ - ள்.) எனக்கூறிய வார்த்தையைக்கேட்டமாத்திரமே பிறைச்சந்திரன் போல்விளைந்து முறுக்குற்ற பற்களை அடிக்கடி கடித்துக்கொண்டு நின்று அவன் யார்? அவனைத்தனியேயுள்ள இச்சிறு தூணிலிருந்து நான் பார்க்கும்படி காட்டக்கடவாய். அப்படிககாட்டாதொழியின், உன்னைக்கொன்று தின்பே னென்றதட்டி, தீப்பொறி சிதறககோபித்தான். (இரணியன்) எ - று. (உஅ)

உருத்த காலையிற் குமுறிய தரிபகத் தலைவாச
செருக்கு வெருஞ்சினத் தொடுந்து மானுடச சீய
மருக்க மண்டலந் தணவிய தனமுடிச சிகரந
திருத்த டம்புயஞ் செலசொலக் கிழிந்தன திசந்தம்.

(இ - ள்.) அப்படிப் பயப்படுத்தியகாலத்திலே, அவன் சுட்டிய தூணிலிருந் தும் நரசிங்கமூர்த்தமானது கர்ச்சனைகாட்டி அழியாத கோபத்தோடும் கர்வத் தோடும் உதித்தது. அம்மூர்த்தத்தின் அழகிய கிரீடமணிந்த சிரமானது சூரிய மண்டலத்தை யளாவியது. அழகும் விசாலமுந்தங்கிய தோள்கள் செல்லுந்தோ றும் எண்டிசைகளின் முடிவையும் ஊடுருவிச்சென்றன. எ - று. (உகூ)

கண்ணளப்பரி தாகிய திருவுருக் கரந்து
விண்ணடங்கிய தடுசின வடவைபீக் கொளலால்
வெண்ணிறக்கொழுங் கொடிப்புகை விரவிய விழித்தீத்
திண்ணெடுந்திரைக் கடலறப் பருகின சிதறி.

(இ - ள்.) கண்களினாற் பார்த்து அளவிடற்கரிய திருவுருமறைந்து ஆகா யத்திலடங்கியது. கொல்லததக்க கோபமென்றும் வடவாக்கினியானது அதிக ரித்தலால் வெண்ணிறமுடைய செழிப்பான கொடிப்புகைகூடிய கண்களி லுதித்ததீப்பொறிகள் எங்குஞ்சிதறி, வலியநெடிய அலைகள்பொருந்திய கடனீர் முழுதும் வரளும்படிபருகின. எ - று. (௩௰)

கிளைத்த வாளெயிற் றிடைக்கிடை காவதங் கிடந்த
வளைத்த வாளெயிற் றளவையா ரளப்பவர் மன்றே
துளக்கி மேருவை யுருவுறப் பொதுத்ததைத் தொளைத்துப்
பிளக்கும் வள்ளுகிர்த் திருக்கரம் பிறந்தன வநந்தம்.

(இ - ள்.) அம்மூர்த்தத்திற் குண்டான ஒளிதங்கிய பற்களுக்கு இடைக்கி டையே காததூரம் வெளிகளிருந்தன. வளைவாயிருக்கும் கூர்மைதங்கிய அப்பற் களின் அளவினை அளவிடுவோர் எவர்? மேருமலையையும் நடுங்கச்செய்து தொளை

படும்படி துவாரஞ்செய்து பிளக்கும்படியான கூர்மைதங்கிய நகங்களையுடைய அநேகந் திருக்கரங்களும் உதித்தன. எ - று. (௬௧)

அதிரின் மண்முத லண்டகோ ளகையுநின் றதிர்ந்து
பிதிரு மாதிரஞ் செவிடுபட் டெழுதிரைப் பெருநீர்
பொதியு மாநில வடிம்புசூழ் பூட்கைமால் யானை
குதிம தம்புலர்ந் தலறுவ கொடுங்கைமே னீட்டி.

(இ - ள்.) அதிர்ச்சியினாலே நிலவுலகமுதலாகச் சொல்லும் அண்டகோளகைகளும் நிலைகலங்கியிருந்து அதிர்ச்சியெய்திப் பிதிர்கின்றன. எண்டிசைகளுஞ் செவிடுறும்படி சத்தசாகரங்களின் வெள்ளம் பெருகும். பெரிய நிலவுலகின் அடித்தட்டில் சூழ்ந்திருக்குந் துதிக்கையோடுகூடிய சிறந்த யானைகளாகிய அஷ்டதிக் கஜங்களும் வளைந்த தங்கள் துதிக்கைகளை உயரவெடுத்து, ஒழுகுகின்ற மதசலம் வரண்டு பிளிறிடுகின்றன. எ - று. (௬௨)

செங்கெ ழுங்கதிர்ப் பரிதிபோய்க் குடகடற் சிலம்பு
போநதி றங்குறு புன்குறு மாலையம பொழுதிற்
காந்து வெஞ்சினத் தடுகொலை யவுணனைக் கனலாப்
பாய்ந்து வாயிலி னிருந்தவன் றனைமடிப் படுத்தி.

(இ - ள்.) சிவந்தெழுகின்றகிரணங்களையுடைய சூரியன்போயமேற்றிசைக் கடலிலுள்ள அத்தமயகிரியை யணுகி இறங்குகின்ற (மறைகின்ற) அற்பமாகிய சிறுமாலைப் பொழுதில், அங்கே நின்றுகொண்டிருந்த கொடுமை மிக்க கடுங் கோபத்தாற் கொல்லுகின்ற கொலைத்தன்மை பொருந்திய இரணியனைக் கோபித்துப் பாய்ந்து மடியிலே தள்ளிக்கொண்டு எ - று. (௬௩)

படுத்தி மாமடிக் கிடத்தியப் பதகனை வகிர்ந்து
குடர்ப்பி டுங்கிமே னிவந்தகை யாயிரங் கோடி
விடுத்த செந்துளிக் குருதிகீழ் விழுந்தொறு மொருங்கே
மடுத்து நீட்டிய திருக்கரத் தளவையார் வகுப்பார்.

(இ - ள்.) அப்பாவியாகிய இரணியனைத்தள்ளிச் சிறந்தமடியிலே கிடத்திக் கொண்டு பிளந்து, அவன் குடலைப்பிடுங்கி, அப்பொழுது அவனுடலிலெழுகிய செந்நிறந்தங்கிய உதிரத்துளிகள் பூமியில்விழும்போதெல்லாம் மேலோங்கிய கைகள் ஆயிரகோடியாகத் தோன்றி அவற்றையெல்லாம் பருகின. அப்பொழுது நீட்டிய அத்திருக் கரங்களின் அளவினை யவர்தாம் அளவுபடுத்திச் சொல்லுவார்கள் எ - று. (௬௪)

உருத்தெ ழப்படுங் குருதிநீ ரூற்றறக் குடித்துச்
செருக்கெ ழுந்தது மருண்டது பெருநிலத் திகந்தங்
கருத்தி னன்னது தன்னிலை மறந்தது காணுப
பெருத்த மாநிலத் துயிர்த்தொகை வெருவுறல் பிறந்த.

(இ - ள்.) சுரந் தொழுகுகின்ற உதிரநீரை *அவ்வூற்று வரளும்படி பருகி மயக்க மெய்திக்கர்வித்து, பெரிய பூலோகத்தின் திக்குகளின் முடிவுவரையிலோடியது. அந்நரசிங்க மூர்த்தம் தன் மனதில் தன்நிலைமையை மறந்திருப்பதைக்

கண்ணி பெருமைவாய்ந்த பெரிய பூமியிலுள்ள பெரிய சிவகோடிகளுக்கெல்லாம் அச்சமுண்டாயிற்று. எ - று. (௩௦)

ஏறும்வ லிப்புயத் திரணிய னுரத்தெழு மிரத்த
வெறிம யக்கினு லாணவச் செருக்கொடு வெகுண்டு
பொறிவ ரிப்பணங் கிடந்தபே ருலகுதான் புரக்குஞ்
செறியு யிர்த்தொகை வாரிவாய்ப் பெய்ததச் சீயம்.

(இ - ள்.) மிகுவல்லபம் பொருந்திய தோள்களையுடைய இரணியன் மார்பினின்று பெருகிய உதிரத்தாலுண்டான பித்துக்கொண்ட மயக்கத்தினால் அந்நரசிங்க மூர்த்தம் அகங்காரத்தோடுங் கர்வத்தோடுங் கோபித்து, புள்ளிகளோடு வரிகளையுடைய ஆதிசேடன் பணமுடியின்மீதுள்ள பெரிய நிலவுலகிற்பொருந்தி நிறைவுற்ற சீவராசிகளைச்சேர்த்து வாயிலிட்டுக்கொண்டது. எ - று. (௩௧)

உலகு மண்டமுங் கரந்துறைந் தொளிப்பன காணு
தலம ரச்சூழுன் மானிட மடங்கலை யஞ்சிப்
புலவர் யாவரு நான்முகப் புனிதனும் புகுந்தார்
நிலவு வேணிபொற் கயிலையி னெடுநிலை வாயில்.

(இ - ள்.) பூலோகத்திலும் அண்டகோடிகளிலும்மறைந்திருந்து ஒளிந்துக்கொள்வதாகிய நரசிங்க மூர்த்தத்தைக் காணாதவர்களாய்ப் பயந்து மனமலையச் சுழன்றுகொண்டிருந்த தேவர்கள் யாவரும், நான்கு முகங்களுடைய பிரமனும், சந்திரனைத்தரித்த சடையையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருக்கைலாயகிரியின் நெடிய நிலைகளையுடைய கோபுரவாயிலிற் சேர்ந்தார்கள்.

வாயில் காப்பவர் தடுத்தனர் நந்தியவ் வாயின்
மேயி னுரெவ ரென்றலுங் கணநிரை விளம்பப்
பாயொ லித்திரைப் பகீரதி வேணியெம் பரனைச்
சேய சேவடி தொழுசொலி விடுத்தனன் சென்றார்.

(இ - ள்.) கோபுரவாயிற் காவலர்கள் தடுத்தார்கள். அப்பொழுது திருநந்திதேவர் அவ்வாயிலில் வந்தவர்கள் யாரென்று வினவவும், கணாதிபர்கள் அவர்களை இன்னாரின்னாரெனக் கூற, பாய்ந்தொலிக்கின்ற அலைகளையுடைய கங்கையைத்தரித்த சடைமுடியையுடைய எமது சிவபெருமான் சிவந்த பாதங்களை வணங்கும்படி போதற்கு விடைகொடுத்தனர். அதன்மேல் உள்ளேசென்றார்கள்.

சென்றெ திர்ந்தன ரிறைஞ்சின ரயன்முதற்றேவர்
நின்று மெய்ப்புள கெழுந்தனர் தொழுதனர் நின்றார்
குன்ற வில்லியங் கொடிச்சடை வானவ னயனுக்
கன்றி ரங்கினன் பொதுவறக் கருணைநோக் களித்தான்.

(இ - ள்.) பிரமாதிதேவர்கள் திருச்சந்நிதியிற் புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பணிந்து திருமுன்னின்று உடல் புளகாங்கிதமெய்தி வணங்கினின்றார்கள். மேருமலையை வில்லாகவுடையவரும் அழகிய (பவளக்)கொடிபோலுஞ் சடையை யுடையவருமாகிய சிவபெருமான், பிரமன்மேல் இரக்கமெய்தியவராய்ப் பொதுத்தன்மை நீங்கச் சிறப்பாய்க் கிருபாநோக்கஞ் செய்தனர். எ-று,

ஐய னேபெமக் கரிதுறு மருமறைக் கெட்டா
மெய்ய னேதனி விமலனே மழுப்படை பொறுக்குங்
கைய னேமணி கண்டனே கருதுறு வெவர்க்கும்
பொய்ய னேயினை யடைந்தனம் புகல்பிறி தில்லை.

(இ - ள்.) ஐயனே! எங்கட்கரிதாயுள்ள சிறந்த வேதங்களுக்கு மெட்டாத உண்மையானவரே! ஒப்பற்ற மலரகிதரே! மழுவாயுதத்தைத் தாங்கிய திருக்கைகளையுடையவரே! ஸ்ரீகண்டருடையவரே! தேவரீரைத்துதிசெய்யாத எல்லாருக்கும் பொய்ம்மையானவரே! தேவரீரைச் சரணமடைந்தோம். அடியேங்கட்கு வேறுபுகலிடமில்லை. எ - று. (௪௰)

கங்கை யாயடு சிலைமதற் பொடித்தகண் ணுதலாய்
மங்கை பாகனே முனிவரர் விடுத்துறும் வடவைச்
செங்கை யாய்திரி திரிபுரந் தீயெழச் சிரித்த
புங்க வாநினை யடைந்தனம் புகல்பிறி தில்லை.

(இ - ள்.) கங்கையை யணிந்தவரே! பலரையும் வருந்தச்செய்யும் கருப்பு வில்லேந்திய மன்மதனை யெரித்த நெற்றிக்கண்ணையுடையவரே! உமாசமேதரே! தாருவனமுனிவர் செலுத்திய வடவாமுகாக்கினியைப் பொருந்திய செவந்த திருக்கரமுடையவரே! எங்குந்திரிந்த திரிபுரங்களும் தீயாம்படிபுன்னகைபுரிந்த கடவுளே! தேவரீரைச் சரணடைந்தோம். அடியேங்கட்கு வேறுபுகலிடமில்லை.

பொன்னி றத்தவா ளசுரனை யாருயிர் போக்கப்
பின்னு வெண்டிரைப் பாற்கடற் றுயின்றருள் பெருமான்
மன்னு வெஞ்சின மானுட மடங்கலாயத் தோன்றி
யன்ன வற்செகுத் தடங்கலன் சீறறமிக் கயர்ந்தான்.

(இ - ள்.) பொன்னிறமுடைய ஒளிதங்கிய இரணியனென்னும் அரக்கனை உயிரொழிக்கும்படி, பின்னிக்கொண்டுள்ள வெள்ளிய அலைகளையுடைய க்ஷீராப்தியில் யோகநித்திரை செய்யுந திருமால், நிலைபெற்ற கடுங்கோபமுள்ள நரசிங்க மூர்த்தமாயுதித்து அவனைக் கொன்றும் கோபமடங்காதவராய் மிகவும் மயங்கினர். எ - று. (௪௧)

நினைத்து நீயுள வாக்கிய நெடுநிலத் தாக்கை
யனைத்தும் வாயிலிட் டதுக்குவ தாணவத் தவலந்
தனைப்பெ ருக்கிநின் றெம்மனோ ரேக்குறச் சலிக்கும்
வினைக்கொ டுந்தொழி லொழித்தெமர் வெருவர லொழியாய்.

(இ - ள்.) தேவரீர் திருவுளத்திற் கருதிப்படைத்த நெடிய உலகத்திலுள்ள உடல்களையெல்லாம் தன்வாயிற்பெய்து மெல்லுகின்றது. அகங்காரக்கொடுமைகளை யதிகப்படுத்திக்கொண்டு எங்களைப்போன்றவர்கள் ஏக்குறும்படி இளைத்துக்கொண்டிருக்கின்றது. அதன் செய்கையாகிய குரூரத்தொழில்களை விலக்கி எங்களுக்குற்ற பயத்தைத் தீர்த்தருள்வீராக. எ - று. (௪௨)

எனவி ரத்தனு மெம்பிரான் றிருவரு ளிரங்கி..
வினைய மெந்திறல் வீரபத் திரப்பெரும் பெயரோன்

றனைய ழைத்தெரி தழல்விழி மானுட மடங்கற்
கினைவு வெருசெரு வொழித்தியென் றிசைத்தலுஞ் செல்வன்.

(இ - ள்.) என்றிப்படி யாசித்தவுடனே, எமது சிவபெருமான் திருவருளு டையராய்த் திருவுளமிரங்கி, தீவினைகளை யழிக்கும் வல்லபமுடைய வீரபத்திர னென்னும் பெரிய பெயருடைய கடவுளையழைத்து, தீப்பொறி சிந்தும் விழிக ளையுடைய நரசிங்கத்தின் கோபத்தாலுண்டாகிய கொடும்போரை விலக்கக்கட வாயென்று கட்டளையிடவும், அதனைக்கேட்ட வீரபத்திரக்கடவுள். எ - று.

சரபப் பேருரு வெடுத்தன னாலொழி தடக்கை
விரவித் திண்சிறை வெள்ளிடை புதைத்துற மீப்பாய்ந்
தூரவுத் திண்பத மெட்டினுங் கிளைத்தவொள் ளுகிராற்
கிரணப் பொற்கிரி யெடுப்பினுங் கிழங்கெனக் கிழியும்.

(இ - ள்.) சரபப்பக்ஷியின்பெரியவடிவேற்று எண்ணிறந்தனவாய்ப்பரந்த கைகளைப் பெற்று, வலியசிறகுகள் ஆகாயத்திற் படியும்படி உயரத்திற்பறந்து, வலிதங்கிய கடினமான கால்கள் எட்டிலும் தோன்றிய வெண்ணிறமான நகங் களால், ஒளிவீசும் மேருமலையை யெடுத்தாலும் சாதாரணமான கிழங்குபோலக் கிழிபட்டுப்போம். எ - று. (௬௫)

வளைத்த வாயலை கடிப்புறின் மாதிரங் குலுங்குங்
கிளைத்த வெஞ்சிறை யடிக்கொளி னுலகுசூழ் கிடந்த
வுளைத்த டந்திரை சுவற்றியண் டங்களங் குரித்து
முளைத்த வாம்பியிற சிதைக்குமச் செயலையார் மொழிவார்.

(இ - ள்.) வளைவுள்ள வாயாகிய மூக்கினையடித்தால் பூமியுங் குலுங்கும். பிரிந்த பெரிய சிறகுகளை யடித்தால் நிலவுலகத்தைச் சூழ்ந்துள்ளகடலின் விசா லமான அலைகளைச் சுவறச்செய்து சேறுபடுத்தி அண்டகோடிகளை யெல்லாம் முளைத்துத்தோன்றிய காளானைப்போன் றழிக்கும். அச்சரபத்தின் செய்கையை எவர்தாமெடுத்துச் சொல்லுவர். எ - று. [ஆம்பி=காளான்.] (௬௬)

போர்த்த வெஞ்சிறைக் கலுழனப் பொறிப்பெடை யளகின்
பார்ப்பெ டுத்தெனப் பாய்ந்தது படுபிட ரழுக்கிக்
கூர்த்த வள்ளுகிர் கோபுறப் புதைத்தது குருதி
யீர்த்தெ டுத்தது பெருந்திரை யிருங்கடன் மடுப்ப.

(இ - ள்.) போர்வையாய்க் கொண்ட கொடுஞ்சிறகுகளையுடைய அச்சரபம் புள்ளிகள் பொருந்திய பெட்டைப் பறவையானது தன் குஞ்சையெடுப்பது போலப்பாய்ந்தது. அந்நரசிங்க மூர்த்தத்தின பிடரினை யமுக்கிக்கூர்மை தங்கிய வெள்ளிய நகங்கள் பதியும்படி யூன்றியது. உடனே அந்நரசிங்கத்தின் உடலினி ன்றும் உதிரமானது நீண்ட அலைகளையுடைய பெரியகடலும் நிரம்பும்படி பீறெ டுத்துப்பாய்ந்தது. எ - று. (௬௭)

கறித்து மிழ்ந்தது கரங்களைக் கதிர்முடிச் சிரத்தைக்
கொறித்து மிழ்ந்தது குருதிகொப் புளித்தது பஃறேறுண்
முறித்த முக்கிய இடிக்குர லெழுப்பிய முழக்கிற்
செறித்த பன்சேரக் கிமைத்தயி ரிமங்கச சியம்.

(இ - ள்.) அச்சரபம் நரசிங்கத்தின் கைகளையென்று துப்பியது. ஒளிதங்கிய கிரீடமணிந்த சிரசைக் கொறித்துப் பொடியாக்கித்துப்பியது. உதிரமுழுவதையும் வாயாற்கொப்புளித்தது. பலதேகங்களைத் துண்டுசெய்து அழுத்தியது. இடிமுழக்கம் போலத்தொனியெழுப்பியது. அப்பொழுது நரசிங்கம் தனக்குள் ளேநிரம்பிய அற்பத்தன்மையுடைய கர்வமகன்று உயிரிழந்தது. எ - று. (சஅ)

விரித்த வாயல கொடுக்குறக் கடித்ததன் மெய்த்தோ
லுரித்து வாங்கியச ராபமென் றுருத்தவோ ருருவம்
பிரித்து மீண்டனன் வீரபத் திரனெனும் பெயரோன்
சிரித்து முப்புர மெரித்தவன் றன்பாலிறைச சென்றான்.

(இ - ள்.) விரிந்தவாயாகிய தன் ஆயுதத்தால் இறுகும்படி கடித்து, அந்த நரசிங்கத்தின் உடலிலுள்ள தோலையுரித்தெடுத்துக்கொண்டு வீரபத்திரரெனும் பெயர்பெற்ற மூர்த்திசரபபட்சியாய் எல்லோரும் அஞ்சும்படியேற்ற ஒப்பற்ற அவ்வுருவத்தையகற்றித் திரும்பி, புன்னகையாற் புரம்பொடித்தவராகிய சிவ பெருமான்பாலெழுந்தருளினர். எ - று. (சகூ)

உரிந்த போதனு வட்டெழு நதியோடு மொருபாற்
சரிந்த வேணியோன் முன்னரி னமைத்தடி தாழாப்
புரிந்த மான முற திருகரந் தொழுதயல் போனான்
பரிந்த நான்முகத் தவனொடு மிமையவர் பணிந்தார்.

(இ - ள்.) உரித்த பெரியதோலை, ஊற்றெடுக்கும் கங்காநதியோடு ஒருபக்கலிற் சரிந்த சடையையுடைய சிவபெருமான் சந்நிதியில் வைத்து, அவர்பாதங்களில் வணங்கி, விரும்பிய விமானமேலாரோகணித்து இருகரங்களாலும் சிவ பெருமானை நமஸ்கரித்துக்கொண்டு, அக்கைலாயகிரிக்கருகிலுள்ளதமதிருப்பிடத்திற்கெழுந்தருளினர். உடனே அவரைப் பரிவுள்ளவர்களாகிய நான்குமுகங்களையுடைய பிரமனொடு ஏனைய தேவர்களும் பணிந்தார்கள். எ - று. (௫௦)

பங்க யாசனத் தயன்முதற் றேவர்நம் பரனைப்
பொங்கு பேருவ கைப்பட பணிந்தனர் புரக்கு
மெங்க ளையக வீதுடை யாக்கொளென் றிசைத்தா
ரங்க ளையக னன்னது புரிதுமென் றசைத்தான்.

(இ - ள்.) கமலாசனமுடைய பிரமன்முதலிய தேவர்கள் நமது சிவபெருமானை, விசேஷித்த பேரானந்தத்தோடு வணங்கி எங்களை யிரட்சிக்கும் எமது தலைவரே! இத்தோலைத் தேவரீர் ஆடையாகத் தரித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அருட்கண்ணையுடைய சிவபெருமான் அப்படியேசெய்வோமென்று அத்தோலை ஆடையாகத்தரித்தருளினர். எ - று. (௫௧)

அரந்தை தீர்த்தன மெனத்தொழு தாங்கவ ரகன்றார்
பரந்த பாற்கடற் பள்ளியோ னப்பவுந் தொலைப்பான்
கரந்தை சூடினா னருச்சனை புரிந்தவை கழியப்
புரந்த பூமக ளையகன் றன்னுழைப் புகுந்தான்.

(இ - ள்.) தேவர்கள் யாவருந் துயரமகன்றேமென்று [illegible] நீங்கினார்கள். பரவியஞ்ஞாப்தியில் அறிதுயில்கொள்ளுந்திருமால், அந்நரசிங்காவதாரத்தால் உண்டாகிய பாதகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி விரும்பி, பொற்கரங்களைத்தருகிய சிவபெருமான் பாதங்களையர்ச்சித்து, அப்பாதகம் நீங்கியவுடனே, உலகத்தைக் காத்துவந்த திருமகள் கணவராகிய திருமால் தமது பதவிக்கு எழுந்தருளினர்.

நரசிங்காவதாரச்சருக்கம முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௧௭-க்குத் திருவிருத்தம். ௨அ௨அ.

பதினெட்டாவது

வாமனாவதாரச் சருக்கம்.

பொன்னி நன்னதி வளந்தரு வளவயற் புனனாட்
டன்ன மேயவண் டிறைக்கடன் மருங்குதெந் கடுப்ப
மின்னு வார்சடை யவனுறை வேதவா ரணிய
மென்னு மோர்சிவ சினகா மாங்கவ ணிருக்கும்.

(இ - ள்.) நல்ல காவிரிநதிவளங்களைக் கொடுத்தலால் விளைகின்றவயல்கள் பொருந்திய [புனல் நாடு - நீர் நாடென்றும்] சோழநாட்டில், அன்னங்கள் வசிக்கின்ற குளிர்ந்த திரைகளையுடைய கடற்கரையில் தென்றிசைக்கருகே, மின்னுகின்ற நீண்டசடையையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் திருமறைக்காடென்றும் ஒப்பற்ற சிவஸ்தலம் இருக்கின்றது. எ - று. (௧)

ஒழுக்கு வார்சடை யெமபிரா னோர்மருங் கிருக்கு
முழுதத வாண்மதி முகத்திறை டிருப்பெயர் ஞானம்
பழுத்த நாயகி யத்தலம் பழமறை யனைத்துந்
தொழுந்த குநதின மரிமுதற் றேவருந் தொழுவார்.

(இ - ள்.) ஒழுங்காக நீண்டசடையையுடைய எமது சிவபெருமானுக்கு ஒருபக்கலிலமர்ந்துள்ள ஒளிமிகுந்த பூரண சந்திரன்போன்ற முகத்தையுடைய உமாபிராட்டியார் திருநாமம் ஞானம்பழுத்த நாயகி. அந்தஸ்தலமானது பழைய வேதங்கள் யாவும் நாடோறும் வணங்கத்தக்கது. திருமால் முதலிய தேவர்களும் அங்கே வணங்குவார்கள். எ - று. (௨)

ஆய வேதவா ரணியமுற் றருந்தவர் யாருந்
தூய மாதவம் புரிகுவ ராலயஞ் சூழ்வார்
பாய வெள்விடை யவனடி யுவரகப் பதுமக்
கோயி லொத்ததும் மறைவனத் தனிமதிட் கோயில்.

(இ - ள்.) அந்தத்தவஞ்செய்வோரெல்லாம் அத்தகைத்தாகிய திருமறைக்காட்டையடைந்து, புனிதமான பெருந்தவத்தைச் செய்வார்கள் அச்சிவாலயத்தைப் பிரதக்கணஞ் செய்வார்கள். திருமறைக்காடென்னும் ஸ்தலத்திலுள்ள அழகிய மதிலையுடைய திருக்கோயிலானது, பாய்ந்து செல்லும் வெண்ணிறந் தங்கிய இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமானடியார்களின் இதயதாமரையாகிய திருக்கோயிலை நிகர்த்தது. எ - று. (௩)

அத்த லத்திறோ ரங்குலி னரனொடு மழலைத்
தத்தை யன்னநா ணம்பழுத் தவணுறு மலர்ப்பூ
மொய்த்த பள்ளியி னிருந்தது முன்னரிற் றீப
நெய்த்த லைச்சுடர் மழுங்குற வெபபிரா னிகழ்ந்தும்.

(இ - ள்.) அந்த ஸ்தலத்திலே ஓரிராப்பொழுதில் சிவபெருமானோடு கிளி போலும் மழலைச்சொற்களைப்பேசும் உமாபிராட்டியாராகிய ஞானம்பழுத்தநாயகியார், வாசம் வீசும் அழகிய மலர்கள் நிறைந்த சயனத்திலிருக்கும்போது, அவ்விருவர் திருமுன்னரெரிந்துகொண்டிருந்த ஒளியுள்ள நெய்த தீபத்தின் காந்தி மழுங்கவும், எமது சிவபெருமான் திருவாயமலர்ந்தருளுகின்றார். எ - று. (௪)

உவந்த வன்பொடு மித்திரி தூண்டுவா ருளரே
னிவந்த மூவுல கரசளிக் குதுமென நிமல
னிவர்ந்த பூங்குழ லிக்கபா டந்திறந் தெய்தித்
துவண்ட வாதிரி தூண்டுவ தியாரெனச் சொன்னாள்.

(இ - ள்.) சந்தோஷித்த அன்புடனே இத்தீபத்திலிருக்குந் திரியைத்தூண்டுவாருண்டானால், அப்படித் தூண்டுவோருக்கு மேன்மை மிக்க திரிலோகராச்சியாதிபத்தியம் அளிப்போமென்று சிவபெருமான் பிராட்டியாரோடு திருவாய் மலர்ந்தருளினர். மலர்மாலை யணிந்த கூந்தலையுடைய உமாதேவியார் இக்கதவைத்திறந்து இங்கெய்தி, துவண்ட நெடியதிரியைத் தூண்டுபவர் ஒருவருளரோ வென்றனர். எ - று. (௫)

கால மீதிலத் தொடர்வழி யிறங்கியோர் கருப்பை
கோல மென்சுடர்த் தட்டினெய் குடித்தலு மதன்பா
லாலு மென்றிரி யசைந்துநீண் டதுவது காணுப்
பால லோசன னகைத்தன னம்பிகை பகர்வாள்.

(இ - ள்) இப்படிச் சம்பாஷிக்குஞ் சமயத்தில், ஓரெலியானது மேற்பரப்புவழியாகக் கீழேயிறங்கி, அழகுற்றிருக்கும் அத்தீபத்தின் தட்டிலுள்ள மிருதுவான நெய்யைக் குடித்தவுடன் அவ்வெலியின் வாலசைதலினால் மிருதுவான தீபத்திலுள்ள அத்திரியசைந்து நீண்டது. அதனை நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் நோக்கி நகைத்தனர். அப்பொழுது அருகிருந்த பிராட்டியார் திருவாய்மலர்ந் தருளுகின்றார். எ - று. (௬)

இனிக்கொ டுத்திர்மூ வுலகமு மீங்கிதற் கென்னாத்
தனித்த கண்ணுத லவித்தன மெனுமொழி சாற்றக்
கனித்த நெய்குடித் தத்திரி தூண்டலுங் கடைபோய்ப்
புனைந்த வார்கழ லவுணரு யரசிற் பொலிந்தான்.

(இ - ள்) இங்ஙன்ன இவ்வெலிக்கு இனி மூவுலகங்களின் அரசாட்சியுங் கொடுத்தருளவீராக வெனக்கூற, ஒப்பற்றவராகிய சிவபெருமான் அங்ஙனமே யருளினோமென்னும் வார்த்தையைத் திருவாய்மலர்ந்தவுடனே, மதுரமான நெய்யைப்பருகி மீண்டும் அத்திரியைத்தூண்டுதலால், தேகாந்தியத்திற்போய் அசுரர்களிலே அலங்கரித்த நீண்ட வீரகண்டாமணி தரித்த மன்னனாய் விளங்கினான். எ - று. (௭)

எடுத்த மூவுல கத்தினுக் கோரிறை யாகி
விடுத்த வெண்குடை நிழற்றினன் விண்ணவர் பெருமான்
கடுத்த சிந்தையிற் றனைத்தொழப் பணித்தனன் கடும்போ
ரொடுக்கி யாண்டனன் மாவலி யெனும்பெய ருவந்தான்.

(இ - ள்) அப்படிப் பிறந்தவன் மாவலியென்னும் பெயருற்றவனாய், மேன்மைதங்கிய மூவுலகங்கட்கும் ஒரே மன்னனாய், விரிவாயிருக்கும் வெண் கொற்றக் குடையை நிழற்றி, தேவர்கள் தலைவனாகிய இந்திரனும் வருந்திய மனத்தோடு தன்னை வணங்கும்படி கட்டளையிட்டு, கொடூரமான யுத்தத்தைத் தவிர்த்து அரசு செய்தான். எ - று. (௮)

பொதுக்க டிந்தன னொருதனிக் கோன்முறை புரந்தான்
மதுத்த டஞ்சினைக் கற்பக வனமெலா நுகர்ந்தா
னொதுக்கு பாதலத் திட்படு வளந்தனி யுவந்தான்
விதுக்கொ ழுஞ்சடைப் பரமனை யாவரே விழைவார்.

(இ - ள்.) பொதுத்தன்மை நீக்கி, ஒப்பற்ற செங்கோன் முறைமை தவறாது அரசு செய்துவந்தான். தேன் சொரியும் பரந்த கிளைகளையுடைய கற்பக விருக்ஷந்தங்கிய தேவலோகத்திலுள்ள வளப்பங்களெல்லாவற்றையும் அநுபவித்தான். கீழ்ப்பட்டுள்ள பாதல லோகத்தில் விளங்கும் வளங்களெல்லாவற்றையும் தானே யநுபவித்தான். ஆனபடியால் இளஞ்சந்திரனைத் தரித்த சடையையுடைய சிவபெருமானை எவர்தாம் விரும்பமாட்டார்கள்? எ - று. (௯)

இந்தி ரப்பெருங் கடவுளை முதலினோர் யாரும்
வந்தி ரந்துதங் குறைசொல வழங்குவ தானா
னந்த ரத்தவ ரலமரு நெஞ்சின ராகிச்
சந்தி தோறுமற் றவன்கொலுக் காத்தனர் சரிப்பார்.

(இ - ள்.) பெருமைதங்கிய இந்திரனாகிய கடவுள் முதலிய கடவுளரெல் லெல்லாரும், இவன்பால் வந்து தங்கள் குறைகளைத் தெரிவித்துக்கொள்ள, அவ ரவர்கட்கு வேண்டுவனவற்றைக் கொடுப்பவனாயினான். தேவலோகவாசிகளாகிய தேவர்கள் யாவரும் சுழல்கின்ற மனமுடையவர்களாய் மாவலியின் கொலு மண் டபத்தைக் காலங்கடோறும் காத்துக்கொண்டு திரிவார்கள். எ - று. (௧௦)

பரிப்பெ ருங்கடல் பணைமருப் பொருதனிப் பனைக்கைக்
கரிப்பெ ருங்கட லடுபுலித் திரளெனக் கரந்து
விரித்த வெஞ்செருச் சேனைமிக் குயர்ந்தனர் விண்ணோர்
புரித்த வேவலி னுக்கவுன் பணித்தன புரிவார்.

(இ - ள்.) குதிரைகளென்னும் பெரிய கடலேயும், பெருத்த தந்தங்களோடு மலையைப்போன்ற ஒப்பற்ற ஓர் துதிக்கையையு முடைய யானைகளென்னும் பெருங் கடலேயும், சொல்லத்தக்க புலித் தொகுதிபோலக் கருகிற மெய்யினர்களாய், மிகுந்த குரூரமாகிய போரினை விளைக்கும் சேனைகள் மிகப் பெருகின. தேவர்கள் யாவரும் அவன் இச்சித்த ஏவலின் வழியே கட்டளை கொடுத்தவற்றைச் செய்வார்கள். எ - று. (கக)

கண்டு நோக்கியுட் கவன்றனன் காசிப னென்போன்
மண்டு வெஞ்செருக் குலிசிதன் மகனுடை மறுக்கந்
திண்டிறற்படை யைந்துடை நாரணன் றிருத்தாள்
கொண்டு சிந்தையி னமைத்தன னருந்தவங் குறித்தான்.

(இ - ள்.) காசிப முனிவரென்பவர் தமது புதல்வனாகிய மிக்க பெரும் போர புரியத்தக்க வச்சிராயுத தாரனாகிய இந்திரனுடைய மனத் துயரத்தைத் திருவுள்ளத்தி லறிந்து நோக்கி, மிக்க வலிதங்கிய பஞ்சாயுதங்களைத் தாங்கிய திருமாலின பாதங்களைத் தியானஞ்செய்து தமது திருவுள்ளத்திலிருத்தி அரிய தவத்தைச் செயதனர். எ - று. (கஉ)

வருத்து மாதவ மையிரண் டாயிரம் வருடந்
திருத்தி நோற்றன னந்நிலே திருமகள் கொழுநன்
மருத்த பைந்துழாய் மார்பினன் வன்சிறை யுவணத்
தெருத்த மீப்பொலிந் தாங்கவற் கெதிருற வெதிர்ந்தான்.

(இ - ள்.) தேகத்தை வருத்துகின்ற பெருந் தவத்தைப் பதினாயிர வருட காலம் திருத்தமாக விபற்றினர். அக்காலத்தில் லக்ஷ்மீ நாயகரும், வாசநதங்கிய பசிய துளசி மாலே தரித்த மார்பினை யுடையவருமாகிய திருமால் வலிமை வாய்ந்த சிறகுகளைப் பெற்ற கருடன் பிடரியின்மேல் ஆரோகணஞ் செய்து அந்தக் காசிப முனிவருக்குப் பிரதியட்சமாகத் தரிசனந் தந்தனர், எ - று.

முண்ட கத்திரு நாயக னெதிர்ந்துற முனிவன்
கண்டு போற்றினன் கட்பனி தூங்குறக் கனிந்தா
னண்டர் நாயக வினிதெழுந் தருளமற் றடியேன்
கொண்ட மாதவ மெதுகொலென் றென்புறக் குழைந்தான்.

(இ - ள்.) தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் திருமகள் கொழுநராகிய திருமால் தரிசனந் தந்தவுடனே, காசிப முனிவர், அவரைத் தரிசித்துத் துதி செய்து கண்ணீர் சொரியும்படி மனமுருகினர். தேவர் தலைவரே! தேவரீர் இனிமையோடு இங்கெழுந் தருளுவதற்கு அடியேன் செய்துள்ள பெருந்தவம் யாதோ? என்று என்பும் நெக்குவிடக் குழைவுற்றனர். எ - று. (கங)

உருகு சிந்தையி னுவந்துறு முனிவனை நோக்கி
யரிது மாதவ மிழைத்தனை யாந்தர லெதுவோ
புரிதி யென்றன னிந்திரன் பொன்னிறு டனைத்துந்
தருவு மாவலி பறித்தன னவைதரத் தகுமால்.

(இ - ள்.) இப்படி மனவுருக்கத்தோடு சந்தோஷித்த காசிப முனிவரை நோக்கி, நீ செயற்கரிய அரும் பெருந்தவஞ் செய்தனை. நாம் உமக்குத் தர வேண்டிய வரம் யாதோ? அதனை விரும்புக எனக் கட்டளை தந்தனர். இந்திரனுடைய தேவலோகங்களெல்லாவற்றையும் கற்பக விருட்சத்தையும் மாவலி அபகரித்துக் கொண்டான். ஆதலால் அவற்றையெல்லாம் மீட்டும் அவனுக்குக் கொடுத்தருள வேண்டும். எ - று. (௧௫)

பிறங்கு வச்சிரத் தவற்குநீ பின்னெனப் பிறந்து
மறங்கொண் மாவலி யடுதிறன் மடிந்திற மடித்தாக்
கறங்கு வார்செவி வெண்ணிறக் கடும்பகட் டொருத்தற்
சிறந்த பேரர சளித்தியென் றருந்தவன் செப்ப.

(இ - ள்.) பிரகாசம் பொருந்திய வச்சிராயுதந் தாங்கிய இந்திரனுக்குத் தேவரீரே சகோதரராகத் திருவவதாரஞ் செய்து கொடிய மாவலியின் குரூரமாகிய வல்லபம் அழிந்திறக்கும்படி கொன்று அசைந்துகொண்டிருக்கும் நெடிய காதுகளும் வெண்ணிறமும் வலிமையுமுடைய ஆண் யானைமேலாரோகணித்து, சிறப்பு மிகுந்த பெரிய அரசாட்சிபுரிவாயாக என்று, அருந்தவஞ்செய்த காசிப முனிவர் வரங்கேட்கவும். எ - று. (௧௬)

ஆது செய்குமென் றருளினை னாயிர மிதழ்ப்பூ
மாது மார்பினன் போயினன் வரமுனி யவற்குக்
காதன் மைந்தனிற் றோன்றினை னாள்சில கழிந்த
தீதி னான்மறை யளந்தனன் வளாந்தனன் சிறுவன்.

(இ - ள்.) ஆயிரவிதழ்களையுடைய செந்தாமரை மலரில் வசிக்கும் திருமகள் பொருந்திய மார்பையுடைய திருமால், அங்ஙனமே புரிவோமென்று திருவாய் மலர்ந்தருளினர். அதன்மேல், சிறப்புற்ற அக்காசிபமுனிவருக்குப் பிரியமுள்ள புதல்வராயவதரித்தனர். சிலபகல் கழிந்ததன்பிறகு, அப்புதல்வர் குற்றமற்ற நான்குவேதங்களையும் முற்று முணர்ந்து வளர்ந்து வந்தனர். எ - று. (௧௭)

வரமு னிக்குலத் துயர்ந்தருண் மாதவன் புனைய
விரத நூல்புனைந் தருமறைச டங்கொடு மேவிப்
பரவு மாதவர் யாவரு முவந்துறப் பயின்றான்
முரனு டைத்தன துளக்குறிப் பொருவர்க்கு மொழியான்.

(இ - ள்.) சிறந்த முனிவர் குலத்தில் மேன்மைபெற்ற காசிப முனிவர் (அப்புதல்வர்) தரிக்கும்படி வேதவிதிக்கிரமங்களோடு வேதியர்க்குரியவிரதமாகிய உபவீதமணிந்து, மாறுபட்டுள்ள தமது திருவுள்ளக் குறிப்பை ஒருவனுக்குமுரையாதவராய், தம்மைத் துதிசெய்கின்ற பெருந்தவம் பொருந்திய முனிவர்கள் யாவரும் சந்தோஷிக்கும்படி வளர்ந்து வந்தனர். எ - று. (௧௮)

உணர்த்த வேண்டுவ தியாவையு முணர்த்தற்கு துணர்ந்தான்
றணப்ப ருந்துறை யாகமத் தடங்கடல் கடந்தான்
புணர்த்த தாமரை நான்முகத் துணர்த்துவ பொலிந்தான்
மணத்த பச்சொளித் தருப்பையால் வயங்கிய கரத்தான்.

(இ - ள்.) அப்புதல்வர் தெரிவிக்கவேண்டிய வெல்லாவற்றையும் பிறர் தெரிவிக்காமலே தெரிந்துகொண்டார். விலக்குதற்கரிய துறையையுடைய ஆகமங்களென்னும் பரந்த கடலைக்கடந்தனர். மணம் வீசப்பசிய நிறத்தோடு,பிரகாசிக்குந் தருப்பைப் புல்லாலாகிய பவித்திரமணிந்த திருக்கரமுடைய காசிப முனிவர், இதனைக் கமலாதனத்துள்ள பிரமனுக்கு உணர்த்தச் சென்றனர்.

அனைய காலையின் வானவர் யாவரு மடைந்து
நினையு நெஞ்சொடும் வணங்கின ரேத்தினர் நின்று
புனைபொ லன்கழன் மாவலி வேள்வியொன் றியற்றி
வனைபொ லன்கலன் முதலிய யாவையும் வழங்கும்.

(இ - ள்.) அப்படிப்பட்ட காலத்தில், தேவர்கள் யாவரும் அங்கெய்தி, தியானிக்கின்ற மனத்தோடு வணங்கித் துதிசெய்து நேரேநின்று, சத்திக்கின்ற பொன்னாலாகிய வீரக்கழலணிந்த மாவலியென்பவன் ஒருயாகத்தைச்செய்து, அலங்காரந் தங்கிய பொற்காசுகள் திருவாபரணங்கள் முதலியவற்றை யெல்லாம் பலர்க்குந் தானங் கொடுக்கின்றான். எ - று. (௨௦)

எனவு ரைத்தனர் வானவ ரஃதுணர்ந் திரங்கி
நினையு நெஞ்சொடு முவந்தனன் மறைக்குல நிமல
னனையர் போதியென் றருளின னற்றமுற் றறிந்தான்
வனைபொ லன்கழன் மாவலிக் கருகுற வருவான்.

(இ - ள்.) என்று அத்தேவர்கள் தெரிவித்தார்கள். அந்தணர்குலத்துதித்த அமலராகிய காசிபமுனிவர் அதனையுணர்ந்து ஒரு கருத்துக்கொண்ட மனத்தோடு களித்தனர். அத்தேவர்களைப் போல்வருகவென்று பிரமன்விடைதந்தனுப்பினன். பிறகு காசிப முனிவர் தக்கசமயமறிந்தவராய், பொற்கழல் தரித்துள்ள மாவலியினிடம் வருகின்றார். எ - று. (௨௧)

இத்தி றத்தினன் மாவலி யெனும்பெயர்த் திறலோன்
மெய்த்த நான்மறை வேள்வியின் றிறனுற விளைத்து
மொய்த்த மாமணிக் கதிரொளி முறைமுறை பரப்பு
மத்த னித்திரு மண்டபக் கொலுவுணர்ந் தடைந்தான்.

(இ - ள்.) மாவலியென்னும் பெயர்பெற்ற வல்லமையுடையவன், அச்சமயத்தில் இப்படி உண்மையான நான்கு வேதங்களிற்கூறிய விதிப்படியாக, கிர்த்தியங்களைச்செய்து, நெருங்கியிருக்கும் சிறந்த இரத்தின கிரணங்களின் காந்தியானது வரிசைவரிசையாகப் பரவிய ஒப்பற்ற மேன்மைதங்கிய அழகிய கொலு மண்டபத்தைக்கண்டு சேர்ந்தனர். எ - று. (௨௨)

உதய மால்வரை நெடுமுகட் டுச்சியின் றதிக்குங்
கதிர்செய் மாமுடி யிளவெயி லெறிப்பவக் கதிர்மேற்
பதமி வந்தெழு ளெழுமெனப் பனிக்கதிர் விரிக்கும்
புதுநி லாவென வெண்குடை விளங்கிமீப் பொலிய.

(இ - ள்.) பெரிய உதயகிரியின் நீண்ட சிகரத்தின் உச்சியினின் றுதிக்கின்ற சூரியன்போன் றுள்ள மேன்மைதங்கிய கிரீடமானது இளங்கிரணங்களை

வீசும் அக்கிரணத்தின் மீது கால்வைத் தேறித் தெளிந்த அமுதம்போன்ற குளிர்ந்த கிரணங்களைப் பரப்புகின்ற பூரணசந்திரனை யொத்த வெண்கொற்றக் குடை பிரகாசித்து மேலே விளங்கவும். எ - று. (உ௧)

பொன்னி லங்கிய கதிர்மணிப் புனைகழ லடிக்கீ
ழுன்ன ரும்பசும் பொற்றிறைக் குப்பையி னோங்கிப்
பின்னல் வெண்டிரை நெடுநிலப் பெருங்குடைத் தனிக்கோன்
மன்னர் பொன்முடி தேய்த்துகு தாதிடை வயங்க.

(இ - ள்.) பொன்னாற் செய்து விளக்கமுற்ற, கிரணங்களை வீசும் மணிகள் பதித்தலங்கரித்த வீரக்கழலணிந்த பாதத்தின் கீழாக, நினைத்தற்கரிய பசும் பொன்னாகிய [திறை] பகுதிப் பொருளைக் குப்பைபோ லுயரும்படி கொட்டி, பின்னிக்கொண்டுள்ள வெண்மையாகிய அலைகளையுடைய கடல்சூழ்ந்த நெடிய உலகிலுள்ள, பெரிய சந்திரவட்டக் குடையையும் ஒப்பற்ற செங்கோலையுமுடைய மன்னர்கள் தமது பொற்கிரீடங்களைத் தேய்த்தலாற் சிந்துகின்ற பொற் பொடிகள் நடுவே விளங்கவும். எ - று. (உ௨)

வேரி நாண்மலர்க் கற்பக நறுந்துணர் விடுக்குந்
தாரொ ராங்குழைந் தொருபுடை வெரிநுறச் சரிந்த
கார்கொ ழுந்துறுங் குழலிய ரெடுத்திடு கவரி
வார்கொ ழுந்தகன் மார்பினுந் தோளினும் வருட.

(இ - ள்.) மணந்தங்கிய தேனைச் சிந்திக்கொண்டிருக்கும் வாசந்தங்கிய அன்றலர்ந்த கற்பகமலர் மாலையோடே குழைவுற்று முதுகின் ஒருபக்கலிற் சரிந்துள்ள, மேகமானது கொழுந்துவிட்டாற் போன்ற கூந்தலையுடைய அரம் பாஸ்திரீகள் கைகளிற்றாங்கி வீசும் வெண்சாமரைகள், நீட்சிபெற்றும் அகன் றும் விளங்கும் தோள்களிலும் மார்பிலும் தடவவும். எ - று. (உ௩)

எம்மை நோக்குமென் றெடுத்தசைம் முகிழ்ப்பிட் டிறக்கார்
கொமமை வெம்முலை மகளிரும் விண்ணவர் குழாமு
மம்ம வீங்கிவ னுளக்கருத் தென்கொலென் றயிர்த்துத்
தம்மி லஞ்சிநெஞ் சலமரப் புடைபுடை தழுவ.

(இ - ள்.) குவிவாகிய வலிய தனங்களையுடையமாதர்களும் தேவர்கள் தொகுதியும் எங்களைப்பார்ப்பானோ வென்று, சிரசின்மீது குவித்த கைகளாகிய அரும்புகளைத் தாழே தாழ்த்தாதவர்களாய், இவன் மனதின் கருத்து யாதோ வென்று ஐயமெய்தி, தங்களுக்குள்ளே பயமெய்தியவர்களாய் மனஞ்சுழலும் படி அருகிலும் பக்கலிலும் தழுவிநிற்கவும் எ - று. (உ௪)

ஓவ ருந்திறற் பேரெழி லுருவமுற் றடங்கப்
பூவை வாய்ச்சியர் கருநெடுங் கண்ணிழல் புதைப்பத்
தேவர் யாவரு மசுரர்மற் றியாவருந் திகைத்து
வாவு திண்பரி யிந்திர னிவனென மதிப்ப.

(இ - ள்.) கெடுதற்கரிய தன்மைபொருந்திய பேரழகுள்ள அவன் உருவ முழுவதும் அடங்கும்படி நாகணவாய்ப்பறவைபோலும் சொல்லையுடைய மாதர்

களின் கருநிறமெய்திய நெடியவிழிகளின் நிழல்படியவும்; தேவர்கள் யாவரும் அசுரர்கள் யாவரும் திகைத்து, வலியுள்ளதாய்த் தாவிச்செல்லுங்குதிரையை யுடைய இந்திரன் இவனென்று மதிக்கவும். எ - று. (௨௭)

திருந்து குங்குமச் சேதகத் திருநெடு மருமத்
திருந்த பன்மணிக் கலனுமிழ்ந் தெறிகதிர்க் கற்றை
யொருங்கு ணர்ந்தவர்க் குளப்படு மந்திரத் துளராய்
மருங்கு நிற்பவர் கட்புலத் தவிரொளி மறைப்ப

(இ - ள்.) திருத்தமாகிய குங்குமக்குழம் பணிந்துள்ளதாய் அழகுற்று நீண்டமார்பில் அணிந்திருக்கும் பலவகை இரத்தினாபரணங்கள் கக்கிவீசுகின்ற கிரணத்தொகுதி, முழுதொருங்குணர்ந்த முநிவோர்கள் திருவுள்ளத்தில் தியானிக்கின்ற மந்திரங்களின் ஒளிபோலப் பக்கலிலிருப்போருடைய கட்புலத்தில் விளங்குகின்ற காந்தியை மறைக்கவும். எ - று. (௨௮)

வான ரம்பையர் மாநில மடந்தையார் வரம்பி
லேனை நாகர்த மிருக்கைய ரிளமயி லனையார்
கான நாடக நாட்டியக் காநவியொத் திசைப்ப்
பேணி வந்தெழு சதிமுறை மென்மெல மிதிப்ப.

(இ - ள்.) தேவலோகத்திலுள்ள அரம்பா ஸ்திரீகளும், பெரிய பூலோகமாதர்களும் எண்ணில்லாத ஏனைய நாகலோகத்தில் வசிப்பவர்களான இளமை தங்கிய மயில்போலுஞ் சாயலையுடைய மாதர்களும், மேம்பாடு தங்கியுயர்ந்த சதிமுறைக்குப் பொருந்த மெல்ல மெல்லக் கால்கள் பெயர்க்கும்படி நாடகத்திற்குரிய நடனத்தை இசையோடு செய்யவும். எ - று. (௨௯)

பள்ளத் தெண்டிரைப் பரவைநீர் நெடுநிலப் பரப்பி
னுள்ளப் பட்டெழு வறியவர் மறையவ ருவப்பக்
கள்ளொ த் தீரித பூவிழ்ந்தசெங் கமலமொத் தொருகை
வள்ளற் றன்மையி னளிய பெருநிதி வழங்க.

(இ - ள்.) ஆழமுற்றுத் தெளிந்த அலைகளையுடைய நீர் நிரம்பிய கடல் சூழ்ந்த நெடிய நிலவுலகத்தின் பரப்பில், தியாகங்கொடுக்கப் பெறுவோமென்னுங் கருத்துட்கொண்டடைகின்ற தரித்திரரும் அந்தணரும் சந்தோஷிக்கும்படி குளிர்ந்த இதழ்கள் மலர்ந்த தாமரைபோன்ற அவன் வலக்கையானது, உதாரத்துவத்திறத்தினால், அத்தாமரைமலர் பொழிகின்ற தேனைப்போல விசேட திரவியங்களை வாங்கித்தானஞ் செய்யவும். எ - று. (௩௦)

பூவு நீருமிட் டிருநில மெமக்கெனப் புரந்தா
ளுவு மாநிதிக் குப்பையு மெங்கரத் தளித்தான்
பாவை கன்னிகை யளித்தன னெமக்கெனப் பகராத்
தேவு நான்மறை யந்தணர் புறமபுகச் செல்ல.

(இ - ள்.) எங்களை யபிடேகித்து மலர்களா லர்ச்சித்து விசேட நிவேத்யத்தை எங்களுக்கு உரித்தாம்படி செய்தான், எங்கள் கைகளில் பசுவையும் பொருந் திரவியத்தையும் கொடுத்தான், அன்றியும் பதுமைபொத்த கன்னிகையை

...ங்களுக்குக் கொடுத்தானென்று (தனித்தனி) சொல்லிக்கொண்டு (யாசகர்கள்) வெளிப்படச் சென்றுகொண் டிருக்கவும். எ - று. (௯௧)

கயற்க ருங்கட லுலகுளோ ரேற்றவை கருதிப்
புயற்பொ ழிநதெனப் பொழிந்தில மென்பது புலந்து
வியப்பெ ழுந்தன துளத்தொடும் வேதவே தியராய்
நயப்பி னேற்பவர் வருநெறி கட்புல நடப்ப.

(இ - ள்.) மச்சங்கள் சஞ்சரிக்குங் கருங்கடலாற் சூழப்பெற்ற உலகிலுள்ளார் யாவரும் எண்ணி யாசித்த பொருள்களை மேகம் பொழிவதுபோலே ஓயாமற் சொரிநதிலோமென்று கருதி வாட்டமெய்தி, பின்னர்ச்சந்தோஷ மதிகரிக்கும் சித்தத்தோடு வேதங்களை யுணர்ந்த வேதியர்களாய் விருப்பத்தோடு தானமேற்பவர்கள்வரும் வழியிலே தன் விழிகள் சென்றுகொண்டிருக்கவும், எ - று.

யாந்த ளாயிரம் பஃறலைப் பரப்புறப் பரந்து
காந்து பன்மணி யிளவெயி லெறிப்பவெங் கனலிற்
சேந்த கட்டிணை வாளரி வெரிநுறச் செறிப்ப
வேந்து பொற்றகட் டாசனத் தினிதுவீற் றிருந்தான்.

(இ - ள்.) ஆதிசேடன் ஆயிரமென்னும் தன் பல தலைகளையும் பரவும்படி பரப்பி யொளிர்வதுபோல, பலவகைப்பட்ட இரத்தினங்கள் இளங் கிரணங்களை வீச, கொடிய நெருப்புப்போற் செவந்துள்ள இருவிழிகளைப் பெற்ற காந்தி பொருந்திய சிங்கங்கள் தமது முதுகின்மேற் பொருநதும்படி சுமந்து கொண்டிருக்கும் பொற்றகட்டா லாகிய ஆசனத்தின்மேலே இனிதாய் வீற்றிருந்தனன். எ - று. (௯௩)

கொள்வ யாவையுங் கொடுத்தனன் குறைநிரப் பினனு
யுள்கு சிந்தையி னுவகைநின் றிரைதெழு முவப்பிற
கள்வி டுந்தொடை மோலியா னிருந்தலுங் கருதாத்
தெள்வ ரும்பழ நான்மறை வாமனன் செல்வான்.

(இ - ள்.) தானங்கொள்ளத்தக்க எல்லாவற்றையும் எல்லாருக்குங்கொடுத்தவனாகி, பலர் குறைவுபாட்டையும் பூரணப்படுத்தினவனாகி, அவற்றைஎண்ணிய சித்தத்தோடு களிப்புண்டாகி அதிகரித்துயர்கின்ற சநதோஷத்தினால், தேன் சிந்தும் மலர் மாலையணிநத கிரீடத்தையுடைய மாவலி வீற்றிருக்கையில் அச்சமயத்தைச் சிந்தித்துப் பழமையா[illegible]ன்கு வேதங்களையுந் தெளிந்துணர்ந்த வாமனர் அங்கே செல்லுகின்றன[illegible]. (௯௪)

பஞ்சி னொல்கிய பதத்தினன் ப[illegible]முறை பதிப்பா
னெஞ்சி னொல்குறு நெடுநில நெ[illegible]பென மதிப்பான்
முஞ்சி யன்பசுந தருப்பையன் மன்பதை முகத்தி
னெஞ்ச நோக்கினன் விசித்திடுங் கோவணத் துடையான்

(இ - ள்.) பஞ்சைக்காட்டிலும் மெல்லிய பாதமுடையவரும், பலமுறை கடவுளைச் சிந்தித்து மனமுருகுகின்றவரும், நெடிய நிலவுலகைக் கண்டு தீப்போன்று மனதிற் பயமெய்துபவரும், முஞ்சிப் புல்லையும் பசுநிறந்தங்கிய தருப்பைப் புல்லையு முடையவரும், மனிதர் முகத்தைக்கண்டால் நாணமெய்தும் பார்வை யுடையவரும், கோவணவுடை தரித்துக்கொண்டுள்ளவரும் எ - று

றூலொ டும்படச் சாத்துமான் ரேலின னுவலிற்
பாலெ னத்தெளி மூறுவலன் பவித்திர விரல
னூலு மாமறை யோருரு வெடுத்ததே யனையான்
கால மோர்ந்தறி யாகமப் பெருங்கலைக் கடலான்.

(இ - ள்.) உபவீதத்தோடு கலக்க வணிந்துள்ள மான்றோலுடையவரும், வசனிக்கும்போது பால்போலுந் தெளிவான புன்னகை யுடையவரும், பவித்திர மணிந்துள்ள விரலுடையவரும், ஒலிக்கின்ற சிறந்த வேதங்களெல்லாம் ஒருவடி வெடுத்தாற் போன்றவரும், முக்கால வர்த்தமானங்களையும் ஆய்ந்தறிதற் கேது வாகிய ஆகமமென்னும் பெரிய சாத்திரகடல் போன்றவருமாக, எ - று. (௬௬)

வரவு நோக்கின னடுதிறன் மாவலி வாக்கண்
டுரவு சிந்தைநெக் குருகின னெதிரெழுந் துற்றான்
பரவி யாங்கவற் கியைவன யாவையும் பயின்றான்
விரவு மாமணி யாசனத் திருத்தினன் விருப்பான்.

(இ - ள்) இத்தகைய வடிவோடு அங்கே யெழுந்தருளவும், மிகு வல்லபம் படைத்த மாவலியென்போன் இவர் வருகையைநோக்கி உணர்ச்சியுள்ள சிந்தை யோடு மனம் நெக்குவிட்டுருகியவனாய், எதிர்கொண்டு சென்று நெருங்கித் துதி செய்து மிக்க விருப்போடு அவருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை யெல் லாஞ் செய்து, சிறந்த இரத்தினங்கள் பதித்த ஓராதனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். எ - று. (௬௭)

கொள்ளை மாதவ மியாவையு மொருவழிக் கொண்ட
பிள்ளை நீயிவ ணெய்தயான் பெற்றபே றெளிதோ
வுள்ளம் வேண்டுவ யாகொலென் றடிக்கடி யுவந்தான்
வெள்ள வார்கடற் றுயிலொழிந் தெய்தியோன் விளம்பும்.

(இ - ள்.) அநேக கோடிகளாய்ப் பரந்துள்ள பெருந்தவங்கள் யாவும் ஒரு ருவெடுத்த பிள்ளைப் பருவமுடைய தேவரீர் இங்கெய்தும்படியாக அடியேன் பெற்றுக்கொண்ட பயன் எளிதானதோ? தேவரீர் திருவுளத்தில் எண்ணியது யாதோ? என்றடிககடி விருப்போடு வினவினன். வெள்ளமாய்ப் பரந்த நீண்ட பாற்கடலில் அறிதுயில் புரிவதகன்று வநத வாமனர் திருவாய்மலர்ந்தருளு கின்றார். எ - று. (௬௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மறைமுக மொழிந்த வேள்வி யாவையு மாயின் முற்றுந்
துறைமுக நடந்த சிந்தைத் தூயைநீ நின்னில் யாரே
நிறைகுணத் தயர்ந்தோர்க் கீந்து மேம்படு நிலையி னின்று
ரறைகழ லரச கேளா வதிசய மடைந்த தெம்பால்.

(இ - ள்.) வேதத்திற் சொல்லிய யாகங்களெல்லாவற்றையும் முறைப்படி முடிக்கும் வழியிற் சென்ற மனமுடைய புனிதமானவன் நீயே. சத்திக்கின்ற வீரக்கழல் தரித்தமன்னனே! சத்துவகுணமுடைய சாதுக்களுக்குத் தானஞ் செய்து உன்போல மேம்பாடான நிலைமையிலிருந்தவர்கள் வேறெவர்கள்? இப் படிநீ செய்வது கேள்வியுற்று எம்முடைய மனதில் அதிசயம் உண்டாயிற்று.

கோட்படு குலிசி தன்பாற் குறுகல முலக மீன்ற
நாட்படு கமலத் தோனிற் சார்கலந் தகைசால் வேள்வி
நாட்பட நடத்தி முற்று நின்னுழை நறுகி னேமோர்
வேட்கையி னஃது நம்பாற் றந்தற வேண்டு மென்றான்.

(இ - ள்.) பலரையும் வெல்லுங்கொள்கையுடைய வச்சிராயுதமேந்திய இந்திரன்பாற் போனோமில்லை. உலகங்களைப் படைத்த நாளத்தையுடைய கமலாதனனாகிய பிரமன் பாற்போனோமில்லை. பெருமைமிக்க யாகங்களைப் பலகாலமாக நடத்திமுடிக்கின்ற உன் பால் ஒருவிருப்பெய்திவந்தோம். விரும்பிய அப்பொருளை நம்பாற்றரவேண்டுமென்றுரைத்தருளினர். எ - று. (௪௦)

எத்தவம் புரிந்தே னைய வஃதுநீ யியையந்து கேட்ப
மத்தமால் யானை வேக வயப்பரி கொடிஞ்சி மான்றேர்
மொய்த்தமா நிதியக் குப்பை கலன்பல முதல யாவுஞ்
சித்தமோர்ந் தருளி னின்னே வழங்குவன் செல்வ வென்றான்.

(இ - ள்.) ஐயனே! யான் யாது தவம்புரிந்தேன்? தேவரீர்விரும்பிய அதனை மனமிருப்போடுகேட்பீராக. மதமயக்குடைய பெரிய யானை - வேகத்தையுடைய வல்லமைபொருந்திய குதிரை - சிகரத்தோடு கூடிக் குதிரைகள் பூட்டிய தேர் - விசேடமாய்ச் சிறந்த திரவியக் குவியல்கள் - பலவகையாபரணங்கள் முதலியனவெல்லாந் தேவரீர் திருவுள்ளத் துணர்ந்து, தெரிவிப்பீராயின், செல்வமுடையோரே! இப்போதே கொடுப்பேன். எ - று. (௪௧)

நெடுமுடிக் கொடிஞ்சி மான்றேர் நீணிதி நிறைந்த குப்பை
படுமணிக் கலன்க ளம்பொற் பசுந்துகி ற்றானை தானை
விடுபரி முதல யாவும் வேண்டலம் வேண்டி னேமெம்
மடிதொடு மளவை மூன்று நின்னிலத் தளித்தி யென்றான்.

(இ - ள்.) நீண்ட சிகரம் போன்றகொடிஞ்சி யுடைத்தாய்க் குதிரைகள் பூட்டிய தேர்களும், மிக்கதிரயம் நிரப்பிய குவியலும், ஒளிதங்கிய இரத்தினாபரணங்களும், பசும்பொன்னாலாகிய அழகிய ஆபரணங்களும், பீதாம்பரங்களும், சேனைகளும், செலுத்தத்தக்க குதிரைகளுமாகிய இவற்றையெல்லாம் விரும்பினோமில்லை. உம்முடைய பூமியில் எம்முடைய பாதத்தால் அளக்கப்படுவதாகிய மூன்றடி நிலமே விரும்பினோம். எமக்குத் தானஞ்செய்க வென்றிரந்தனர்.

மூவடி மண்ணி னைய செய்வதென் மொழிதி யென்னத்
தேவுயர் தவத்துச் சிந்தை செய்தவ னிருந்து செய்வே
மாவது புரிதி யென்று வறைந்தன னமல னன்னோ
னீவது முயன்றான் வெள்ளி யருகுநின் றினைய சொல்வான்.

(இ - ள்.) ஐயா! மூன்றடி நிலத்திலே தேவரீர் யாதுசெய்வது? திருவாய் மலர்ந்தருள்கவெனப் பிரார்த்திக்க, கடவுளைத் தியானஞ்செய்துகொண்டு அங்கேயே யிருந்துபெருந்தவஞ் செய்வேன். ஆதலால், அம்மூன்றடி நிலத்தைத் தானஞ்செய்கவென்று வாமனாவதாரங்கொண்ட திருமால் திருவாய்மலர்ந்தனர். அதனைக் கேட்ட மாவலி அப்படியே தானஞ்செய்தற்கு எத்தனித்தான். அப்போது சுக்கிரன் (அசுரகுரு) பக்கலிலிருந்து இப்படிச்சொல்லுகின்றான். [illegible]

பிள்ளையென் றிவனை யோர்த லேழைமை பெருந்தோட் டெந்தி
வள்ளவாய்க் கமலத் தோற்கு மளவொழி வரம்பி னின்றான்
பள்ளநீர் வேலை ஞால முழுவதும் பயந்து பல்வே
றெள்ளுமெண் ணெயுமொத் தெல்லா வுயிர்தொறு மியைந்து நின்றான்.

(இ - ள்.) (இங்கே யாசிக்கவந்துள்ள) இவரைச் சிறுவரென்றுமதித்தல் அறியாமையாகும். இவரோ பெரிய இதழ்களுடைய தாய்க் கிண்ணம்போல வாய் படைத்த தாமரையி னடுவேயுள்ள பிரமனுக்கும் அளவிடற்கரிய நிலைமையிலுள்ளவர். அன்றியும் ஆழமுடைத்தாய் நீர் நிறைந்த கடல்சூழ்ந்த உலகமுழுவதையும் படைத்து எல்லாச் சீவராசிகடோறும் பல்வேறுவகையாய் எள்ளும் எண்ணெயும்போல் நிறைந்துள்ளவர். எ - று. ([illegible])

பாயிர முகத்து நாற்கும் பழமறைப் பொருட்கு மெட்டாச்
சேயவன் செய்வ செய்வோன் செயபபடுங் கருவி யாகி
மேயினே னுலக மெல்லா முண்டவன் விளங்கா மாயத்
தாயவன் றன்மை நின்னா லளப்பரி தைய வென்றான்.

(இ - ள்.) பரப்பாகச் சொல்லப்பட்ட சாத்திரங்கட்கும் பழமையாகிய வேதக்கருத்துக்குமெட்டப்படாத அதிதூரத்திலுள்ளவர். செய்தொழில் செய்வோன் செய்யுங்கருவி என்பன மூன்றுந் தாமேயாகி விளங்குகின்றவர். உலகங்களையெல்லாம் உண்டுமிழ்ந்தவர். தெளிவற்ற அருமையுடைய மாயத்தன்மையால் அவர் நிலைமையை, ஐயனே! உன்னால் அளப்பரிதாகுமென்று கூறினன்.

கொடுப்பன முறையி னோர்ந்து கொடுத்தநீ கொடுப்ப தோர்பா
லடுத்துநின் றொழிப்ப தாகா நின்கருத் தளந்து கோடி
யிடுத்தன னொழிந்தே னென்றான் வெள்ளியும் விரைந்து மாயோன்
மடுத்தெறி சிறைக்கா னல்குங் கலுழனை மனத்தி னோர்ந்தான்

(இ - ள்.) தானஞ் செய்பவற்றை முறைப்படியுணர்ந்து கொடுத்துவந்த நீ, இப்போது கொடுப்பதை மட்டும் ஒரு பக்கலிற்சேர்ந்து நின்று நான்தடைசெய்வது தகாது. ஆதலால் உன் கருத்தில் ஆராய்ந்துகொள்ளக்கடவாய். இதோ நான் விட்டுப்போகின்றேனென்று சுக்கிரன் சொல்லினன். அப்பொழுது வாமனராயிருக்கின்ற மணநதங்கிய துளசிமாலை தரித்ததிருமால் நிறைந்து வீசுங்காற்றைச் சிறகுகளுண்டாக்குகின்ற கருடனைத் திருவுளத்தெண்ணினர். எ - று.

கஞ்சமொத் தலர்ந்த மேக வண்ணனாற் கருதப் பட்ட
வெஞ்சிறைக் கலுழன் றாழா வெள்ளியை யள்ளிக் கொண்டான்
மஞ்சிவர்ந் தியங்கா நின்ற வானிவர்ந் தெழுந்தா னேகி
யஞ்சின னலங்கற் றிண்டோள் வாளெயிற் றசுரர் கோமான்.

(இ - ள்.) தாமரைமலர்கள் பூத்த மேகம்போலுந் திருமேனியையுடைய திருமாலினாற் கருதப்பட்ட பெருஞ் சிறகுகளையுடைய கருடன் இறங்கிச் சுக்கிரனைத் தூக்கிக்கொண்டு உடனே மேகங்கள் வந்து குடியிருந்து சஞ்சரிக்கும் ஆகாயத்தின்மேற் பறந்தான். அதனை மாலைதரித்த தோள்களையும் கூர்மைதங்கிய பற்களையுமுடைய அசுரர் தலைவனான மாவலிகண்டு பயந்தான். எ - று.

உந்தியம் பொகுட்டி னண்ட மெவற்றையு மூவப்பி னீன்ற
பைந்துழா யலங்கன் மாயோ னெம்முழைப் பரிவி னெய்தி
முந்நிகின் றெனது மண்மேன் மூவடி யிரப்ப வெம்மோர்
தந்தமா தவங்கொ லின்னே யளிப்பது தரும மென்ன.

(இ - ள்.) தமது அழகிய உந்தித்தாமரையினின்றும் அண்டகோடிகளை யெல்லாம் சந்தோஷத்தோடு பெற்றவராகிய பசிய துளசிமாலை யணிந்த திருமால் என்னிடத்தில் அன்புடன்வந்து என்கண் ணெதிரே நின்றுகொண்டு என் நிலத்திலே மூன்றடிமண் யாசித்தற்கு எம்முன்னோர்கள் செய்த பெருந்தவந் தானோ? ஆனபடியால் அவருக்குத் தானஞ்செய்வதே தருமமாகுமென்று. எ-று.

முருகவிழ் மலரோ டள்ளி முக்கைநீர் முகந்து விட்டா
னருண்முறை யங்கை யேந்தி நிலத்திடைக் கவிழ்த்தா னையன்
றிருகுவா ளெயிற்று வேந்த னுதவிய திவலைத் தெண்ணீர்
தருநிழ லவற்கு முன்னை யமிழ்தினுந் தக்க தன்றே.

(இ - ள்.) மணம்வீசப்பெற்ற மலரோடெடுத்து முன்கையினால்நீரையள்ளி விட்டான். அப்பொழுது குறள்வடிவேற்ற திருமால் திருவருண்முறைமையால், அந்நீரைத் தமதுள்ளங்கையிலேற்றுப் பின்னர் நிலத்தில் விடுத்தனர். முறுக்குடையதாய் ஒளிதங்கிய பற்களையுடைய மாவலி, வாமனர் கையில்விடுத்த துளிகளோடு கூடிய தெளிந்த நீரானது, கற்பகவிருட்சத்தின் நிழலிலுள்ள தேவர்களுக்கு முற்காலத்திற்றந்த அமுதத்தைக் காட்டிலுஞ்சிறந்தது. எ - று.

சேண்பட நிவந்த தெந்தை திருமுடிச் சிகரந் தீண்டி
மாண்படு திசைக ளெல்லா மறைத்தன புயங்கண் மண்மேற்
கோண்படு திகந்த முற்றுங் கரந்தன வுருவங் கூர்ந்து
காண்பன வெல்லாந் தானே யென்பன காட்டி நின்றான்.

(இ - ள்.) அப்பொழுது எந்தையாகிய திருமாலின் கிரீடத்துச்சி ஆகாயமளாவி யுயர்ந்தது. அவர்தோள்கள் மாட்சிமைபெற்ற திசைகளிலெல்லாம் நீண்டு அவற்றை மறைத்தன. நிலவுலகத்தின் மேற்கொள்ளப்படுகிற திசைகளின் முடிவுகள் முழுவதும் அவர் அவயவங்களை யெல்லாம் மறைத்தன. இவ் விசுவரூபத்தால் ஆன்மாக்கள் தெளிந்து பார்ப்பவை யெல்லாம் தாமேயாயிருக்கின்றாரென்பதை விளக்கி நின்றனர். எ - று. (௩௦)

எந்திரு நிலத்தை யோர்தா ளடக்கிய தெவையுந் தாங்கித்
தோய்ந்தெழு வடபான் மேருச் சுற்றுவிட் டெழுந்து மீப்போம்
பாந்தளி னிவந்த தோர்தா ளோர்பதத் தளவை காணான்
சாய்ந்தனன் மகுடச் சென்னி மாவலி தகுவர் கோமான்.

(இ - ள்.) ஆதிசேடனாற் றாங்கப்பட்ட பெரிய நிலவுலகத்தை அவருடைய ஒருபாதம் அடக்கிற்று. மற்றொருபாதமானது அண்டகோடிகளை யெல்லாம் தாங்கிக்கொண்டு நிலத்திலழுந்தி வளர்ந்திருக்கும் வடதிசையிலுள்ள மேருமலையைச் சூழ்ந்து உன்னதமாய்ச் செல்லும் சர்ப்பம்போனோங்கியது. வேறோரடியளப்பதற்கு இடங்காணாதவராய்; அசுரர் தலைவனாகிய மாவலி மகுடமணிந்த தலையை வளைத்தனன். எ - று. (௩௧)

சங்குசக் கரங்கை தாங்கு தாமரைக் தடக்கட் பச்சைக்
கொங்கலர் துளவோ னீலப் பொருப்பென நிவந்த கோல
மங்கண்மா ஞாலத் துள்ளோ ரசும்புறு பசும்பொ னாட்டோர்
பொங்குபே ரன்பி னோடுங் கண்டுகண் புலப்ப நின்றார்.

(இ - ள்.) சங்கு சக்கரங்களைத் திருக்கரத்திற் றாங்கிய, தாமரைமலர்போலும் பரந்த கண்களையுடைய, மணங்கமழுந் துளவமாலை யணிந்த திருமால், நீலமலைபோலவளர்ந்த அவ்விசுவரூபத்தை இடமகன்ற பெரிய பூமியிலுள்ள மாந்தர்களும், பசும்பொன் மயமாய் வழுவழுப்புள்ள தேவலோகத்திலுள்ள தேவர்களும் மிகுந்த பேரன்போடு தரிசித்துக் கண்கள் களிப்பெய்தும்படி யிருந்தார்கள். எ - று. (௩௨)

விண்முக டளந்து நின்ற சேவடித் தலத்து விண்ணோர்
தண்மல ரிடைய றாது சொரிதலாற் றன்னை நீங்கா
மண்மகள் குளிர்பப நின்ற மலரடி மறையப் போர்த்துத்
திண்மரு திகந்த மெட்டு நாறின தெய்வத் தண்பூ.

(இ - ள்.) ஆகாயமுகட்டை யளந்துகொண்டிருந்த அவ் வாமனருடைய பாததாமரையில், தேவர்கள் குளிர்ச்சி தங்கிய கற்பக மலர்களை இடைவிடாது சொரிந்துகொண்டிருப்பதால், தம்மைவிட்டு நீங்காத நிலமகள் குளிர்ச்சி யெய்தும்படி அளந்துகொண்டிருந்த மற்றொரு பாததாமரை மறைவுபடப் பொதிந்து தேவலோகத்திலுள்ள குளிர்ந்த கற்பக மலர்களின் மிக்க மணமானது அஷ்டதிக்குகளிலும் பரிமளித்தது. எ - று. (௩௩)

தாமரைத் தவிசின் மேலோ னிந்திரன் முதலோர் தந்த
தேமரு தருவி னோங்குந் திண்சினை முகிழ்த்த மென்பூப்
பாமரு நெடுநீ ராடை யகனிலம் பரக்க லாலப்
பூமக ளென்னுந் தன்மை காட்டினள் புவனப் பூவை.

(இ - ள்.) கமலாசனத்தின்மீது விளங்கும் பிரமதேவன் இந்திரன் முதலானோர் அர்ச்சித்த தெய்வீகம்பொருந்திய கற்பகவிருக்ஷத்திற் றழைத்த வலிய கிளைகளில் அரும்பிய மிருதுவான மெல்லிய மலர்கள், பரவிய சமுத்திரத்தை ஆடையாக வுடுத்த இடமகன்ற நில வுலகமாகிய பூமிதேவியின்மீது பரம்பியிருத்தலால் அப்பூமிதேவியானவள் தானே பூமகளென்னுந் தன்மையைக் காட்டினின்றனள். எ- று, (௩௪)

மீயுயர் விசும்பு பூத்த மீனின மெல்லிலன் குல்லைப்
பாயொளி மருமந் தாழு முத்தினைப் பகையா நிற்பச்
சேயொளி பரப்பி வையத் திருளறச் சிதைக்குந் தெய்வக்
காய்கதிர்க் கடவுண் மற்றோர் கவுத்துவ நிகர்பப தம்மா.

(இ - ள்.) மிக வுயர்வான ஆகாயத்தில் விளங்கும் நக்ஷத்திரக் கூட்டங்கள், மிருதுவாகிய துளபத்தின் பசிய நிறமானது பாய்கின்ற ஒளிதங்கிய திருமால் தமது திருமார்பிலணிந்துள்ள முத்துமாலையை விரோதித்துக்கொண்டிருக்கவும், அதி தூரத்திலிருந்து பிரகாசித்து உலகிலுள்ள இருட்டொகுதி யகலும்படி வழிக்கின்றவனும் தெய்வீகமாய் வெப்பந்தங்கிய கிரணங்களை யுடையவனு [illegible]மாகிய சூரியன், மற்றோர் கௌஸ்துப மணிபோன்று விளங்கினன். எ - று. ([illegible])

மந்தரந் திரித்து முன்னைப் பாற்கடல் வயிறு நோவ
வெந்திரத் தியற்றி நின்று கடைந்தநா ளிமையோர் போற்று
மிந்திர னரசி னோங்க வக்கட லிடத்து நின்றோர்
சந்திர னெழுந்த வாபோற் றனிக்குடை நிவந்த தன்றே.

(இ - ள்.) முற்காலத்திலே மந்தரகிரியைச் சுழற்றி ஓர் யந்திரமாக நாட்டித் திருப்பாற்கடலின் வயிறு நோகும்படி கடைந்தகாலத்தில், தேவர்கள் துதி செய்கின்ற இந்திரன் தேவலோக அரசாக்ஷியில் மேம்பாடெய்தும்படி அந்த க்ஷீராப்தியினின்று ஒரு சந்திரன் உதித்தாற்போல ஒப்பற்ற ஒருகுடையானது அவர் திருமுடிமே லோங்கியது. எ - று. (௯௪)

கற்பக நாடு காக்கு மாயிரந் தடங்கட் புத்தேண்
மற்பகத் திரண்ட திண்டோள் வானவ ரெவரு மெய்தி
யற்பகற் றுரந்த வாபோ லருந்துயர் கழிய நின்றார்
முற்பக லெவர்க்கு மெட்டா முளரியம் பதத்து வீழ்ந்தார்.

(இ - ள்.) தேவலோகத்தை ரக்ஷிக்கின்ற ஆயிரங் கண்களையுடைய இந்திரனும், யாவர் வலிமையுங் கெடும்படி திரண்ட திண்ணிய தோள்களையுடைய தேவர்களெல்லாரும் வந்து, சூரியகாந்தியில் இருளை யகற்றினார்போலத் தங்களுக்கிருந்த கொடுந்துன்பமொழிந்து முற்காலத்தில் யார்க்குமெட்டாதிருந்த அத் திருமாலின் தாமரை மலர்போல அழகிய திருவடிகளில் வணங்கினார்கள்.

எந்தைநீ யெம்மை நோக்கி யெய்திய விடுக்கண் டீர்ப்பான்
வந்தனை யுனக்கென் றோர்ந்து செய்தகைம் மாறு முண்டே
தந்தையாய்த் தவமா யீன்ற தாயுமாய்த் தரும மாயெஞ்
சிந்தனை கரந்து நின்றாய் தேவனே போற்றி போற்றி.

(இ - ள்.) எமது தந்தையே! அடியேங்களைக் குறித்து எங்களுக்குற்ற துன்பத்தை யகற்றும்பொருட்டு எழுந்தருளினீர். தேவரீருக்கென்று அடியேங்கள் ஆராய்ந்துசெய்த பிரதியுபகாரம் ஏதாயினுமுண்டோ? எங்களுக்குத் தந்தையாகவும் தவமாகவும் தாயாகவும் அடியேங்கள் புரியும் புண்ணியமாகவும் எங்கள் சித்தத்தில் மறைந்திருந்தீர். எங்கள் பெருமானே! அடியேங்களைக் காக்க காக்க.

என்றடி யிறைஞ்சி வாழ்த்து மிந்திரன் முதலோர்க் கின்னே
தன்றனிக் கருணை கூர்ந்தான் றருநிழ லரசு தந்தா
னின்றவோ ரடியு நேரா மாவலி நெடும்பொற் சென்னிக்
கன்றளித் தமைத்தா னல்லன் சீறின னமல நாதன்.

(இ - ள்.) என்று கூறித் திருவடிகளில் வணங்கித் துதிசெய்யும் இந்திரன் முதலிய தேவர்களுக்கு உடனே ஒப்பில்லாத திருவருள்பாலித்து, கற்பகவிருக்ஷ நிழலில் வீற்றிருக்கும் அரசுரிமையையும் தந்தனர். மிகுதியாயுள்ள ஓரடியையும் அளப்பதற்கு இடமில்லாமையால் மாவலியின் நீண்ட பொற்கிரீடந்தரித்த சிரசின்மேல் அத்தினத்திற் சாத்திப் பதித்தனர். அன்றியும் திருமால் கோப மெய்தினர். எ - று. (௯௬)

எயிற் றசுரர் கோமான் மாவலி யென்போன் றன்னைக்
காரகப் படுத்தி மற்றைக் கடிகம ழலங்கற் றுளவத்
தாரகப் படுத்த மாயோன் றன்னிக ரின்மை நோக்கிப்
பேரக லண்ட மெல்லாம் பிளப்பதற் குருத்து நின்றான்.

(இ - ள்.) பிளவுற்ற பற்களையுடைய அசுரர் தலைவனாகிய மாவலியைச் சிறையிலகப்படுத்தி மணங்கமழும் மாலையாகத் துளசிமாலை தரித்த திருமால், தனக்குச் சமானமானவர்க ளொருவரு மில்லாமையைக்கண்டு, விரிந்து பரந்த அண்டகோடிக ளெல்லாவற்றையும் பிளப்பதற்காகக் கோபித்துநின்றனர்.

வெருவின ரிமையோ ரின்னோ னுங்கது விளைப்ப நோக்கி
யொருவழிக் குழுமித் தெய்வக் கயிலையஞ் சார லுற்றார்
செருகிய குடில வேணி யெம்பிரான் றிருமுற் சென்றார்
பரிபுர மிழற்றும் பாத பங்கயம் பணிவ தானார்.

(இ - ள்.) இப்படி வாமனாவதாரங்கொண்ட திருமால் அப்படிக் கொடுமை செய்வது நோக்கி, தேவர்கள் பயமெய்தியவர்களாய் ஒன்றுசேர்ந்து, தெய்வீகந் தங்கிய அழகிய திருக்கைலாயகிரிச் சாரலையடைந்து, வட்டவடிவமாய்ச் செருகிய சடையையுடைய எமது சிவபெருமான் திருமுன்னே சென்று, சிலம்புகள் சத்திக்கின்ற திருவடித்தாமரைகளை வணங்கினார்கள். எ - று. (கக)

வெள்ளைவா ரணனு மற்றை விண்ணவ ரெவரும் வெள்ளைப்
பிள்ளைநாண் மதியஞ் சூடு மெந்தையெம் பெருமாற் போற்றி
வள்ளவாய்க் கமலை கேள்வன் மாவலி பொருட்டா லெம்மோர்க்
குள்ளநெக் குருகி யார்க்கு மளப்புறா வுருவங் கொண்டான்.

(இ - ள்.) வெள்ளையானையை வாகனமாகவுடைய இந்திரனும், ஏனைய தேவர்கள் யாவரும் வெண்ணிறந்தங்கிய மூன்றாநாளுதிக்கும் இளம்பிறையைத் தரித்த எமது தந்தையுந் தலைவனுமாகிய சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து, கிண்ணம்போல மலர்ந்த தாமரைமலரிலிருக்கும் லக்ஷ்மீநாயகராகிய திருமால் எங்களுக்காகத் திருவுள்ளம் நெக்குருகினவராய் மாவலியை யழிக்கும்பொருட்டு எவர்களுக்கும் அளவிடற்கு முடியாத விசுவரூபங்கொண்டருளினர். எ - று.

கொண்டபே ருருவந் தன்னாற் கோமுறை யெனக்குத் தந்தான்
றிண்டிற லசுரற் பற்றி யரும்பெருஞ் சிறையி லிட்டா
னண்டமு மண்டந் தாங்கு மேருவு மதனைச சூழுந்
தண்டலில் புவன மெலலாந் தட்டுவிட் டுருவி நின்றான்.

(இ - ள்.) அப்படிக்கொண்ட விசுவரூபத்தால் அடியேனுக்கு அரசாளு முறைமையைத் தந்தனர். மிக்க வல்லமைதங்கிய மாவலியென்னும் அசுரனைப் பற்றிப் பெரிதாயுள்ள கடுஞ்சிறையிற் போட்டனர். இப்போது உலகினையும் இவ்வுலகினைத் தாங்கும் மேருமலையையும் அம்மேருமலையைச் சூழ்ந்த கெடுதியற்ற அண்டகோடிக ளெல்லாவற்றையும் தாண்டிக்கொண்டு ஊடுருவி நின்றனர். எ - று. (கஉ)

அன்னது தடுத்தி யாயி னமரரு முனிவர் யாரு
நின்னடித் தொண்டு நீங்கா நெறிநிற்கு நிலையி னிற்பா
ரென்னவு மிமய வெற்பீன் றளித்திட வுலக மீன்ற
கன்னியோர் பாக னேவ வயிரவக் கடவுள் சென்றான்.

(இ - ள்.) இப்பொழுது அக்குறளுருவைத் தேவரீர் தடுத்தருள்வீரானால், தேவர் முனிவர் முதலிய எல்லாரும் தேவரீருடைய திருவடித் தொண்டினைப் பிரியாத மார்க்கத்துடன் அவரவர்க்குரிய நிலைமையி லிருப்பார்கள் எனப் பிரார்த்தித்த மாத்திரமே, இமயமலையரசன் தவத்தினாற் புத்திரியாகப்பெற்றுக் கொள்ள, உலகங்களை யெல்லாம் தந்தருளிய ஜகன்மாதாவாகிய உமாபிராட்டியை ஒருபாகத்திலுடைய சிவபெருமான் வைரவக் கடவுளை யேவவும், அவர் வாமனர்பாற் சென்றனர். எ - று. (௬௪)

சென்றன னெதிரா நின்றோ ராணவச் செருக்கி னிற்கு
மன்றலந் துளவி னாற்கு மாமயக் கொழிய நேரா
வின்றியல் பிறவுஞ் சொன்னா னஃதவன் சிறிது மெண்ணான்
கன்றிய வெகுளி மிக்கான் வைரவக் கடவுட் செல்வன்.

(இ - ள்.) வைரவக்கடவுள் எதிராகப்போய், ஒப்பற்ற ஆணவத்தால் அகந்தையுற்றிருக்கும் வாசனைவீசுகின்ற துளசிமாலைதரித்த திருமாலாகிய வாமனருக்கு மிக்க மயக்கமானது நீங்கும்பொருட்டு, ஒவ்வாதிருக்கின்ற இயல்பற்ற அவருடைய செய்கைகளையும் பிறவற்றையும் எடுத்துச்சொல்லினர். அப்படிக் கூறியவற்றை அவ்வாமனர் சிறிதுங் கருதவில்லை. வைரவக் கடவுளென்னும் பெயரையுடைய சிவமூர்த்தி கொடூரமாகிய பெருங்கோப மிகுந்தனர். எ - று.

பற்றினன் வயிரத் தண்டம் பகிரண்ட மதிர வோச்சிச்
சுற்றினன் னுருமுக் காலத் தெழித்தனன் றுளவ மார்பி
னெற்றின னெற்ற லோடு மெறிபடு சண்ட வாயு
முற்றுற விற்று வீழு மூரிவெங் கிரியிற் சாய்ந்தான்.

(இ - ள்.) ஒருவச்சிர தண்டாயுதத்தைத் திருக்கையிலேந்திப் பகிரண்டங்களெல்லாம் அதிரும்படி சுழற்றி, இடி கக்கும்படி கர்ச்சித்தவராய், துளசிமாலை தரித்த அத்திருமாலாகிய வாமனர் மார்பிற் றாக்கினர். அப்படித் தாக்கியவுடனே, யுகாந்தப் பிரளயத்தில் வீசும் சண்டமாருதமானது அதிகரித்ததினால் அடியோடு பிளந்துவிழும் வலிதங்கிய பெரிய மலைபோன்று கீழேவிழுந்தனர்,

கருநிறக் கமஞ்சூன் மேகக் காரத னுரித்து வாங்கித்
திருநிறத் தமையக் காள கஞ்சுக மென்னச் சேர்த்தி
வெரிநுறப் பிடுங்கு மென்பு தண்டென விடுத்துக் கொண்டான்
மருமலர்த் துளவ மாயோ னணவ மயக்கந் தீர்ந்தான்.

(இ - ள்.) கருநிறமெய்திப் பூர்ண கர்ப்பமுடைய மேகம்போன்ற திருமாலின் கரியதோலை யுரித்தெடுத்து, அழகிய தமது மார்பிற் பொருந்தும்படி கருநிறச் சட்டையை யணிந்துகொண்டு, அவர் முதுகினின்றும் பறித்த முதுகந் தண்டெலும்பைத் தண்டாயுதமாகத் தமதுகையிற் பற்றிக்கொண்டனர். உடனே வாசனைவீசும் மலர்மாலையும் துளசிமாலையு மணிந்த திருமால் ஆணவத்தினால் தமக்குண்டாகிய மயக்கம் நீங்கப்பெற்றனர். எ - று. (௬௭)

வரன்முறை புணர்ந்த மாயோ னாணவ மயக்கால் வந்த
புரைதவப் பவள வேணிப் புண்ணியப் பொருப்பை யோரா
விரைநறு மலரிட் டேத்தி யருச்சனை விழைபா னின்றான்
கரையழி செருக்கு நீத்தான் பெற்றனன் கடவுட் டன்மை.

(இ - ள்.) தாம் வாமனராக அவதரித்த காரணத்தைத் தெரிந்த திருமால் அதன்பின் தாம்கொண்ட ஆணவப் பிராந்தியால் நேர்ந்த குற்றங்களகலும்படி பவளம்போலும் செவந்த சடையையுடைய புண்ணிய மலைபோன்ற சிவபெருமானைத் தியானஞ்செய்து நறுமணங்கமழும் மலர்களால் அர்ச்சித்துப் பூசிக்க விரும்பித் துதித்துக்கொண்டிருந்தனர். அதனால் அளவிறந்திருந்த ஆணவச் செருக்கு நீங்கினவராய்ப் பழையபடியே தெய்வத்தன்மை யடைந்தனர். எ-று.

வாமனாவதாரச் சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் கஅ-க்குத் திருவிருத்தம். உஅகூ.

பத்தொன்பதாவது

பரசுராமாவதாரச் சருக்கம்.

பிருகுமா முனிவன் றான்ற னருளிய பிறழாச் சாப
முருவங்கொள் றின்ன செய்து மொழிநதில தொலிநீர் வேணி
திருவரு ளின்மை யன்றோற் கடைந்தன தெரிந்து சொற்றேம்
பொருதிறற் றிகிரி மாயற் கருளிய புகல்வா மின்னும்.

(இ - ள்.) சிறந்த பிருகுமுனிவர் பூர்வத்திற் கூறிய தவறாத சாபமானது ஓங்கிநின்று இப்படி அவதாரங்கள் செய்தும் நீங்கவில்லை. சப்திக்கின்ற கங்கையையணிந்தசடையையுடைய சிவபெருமான் திருவருளில்லாமையால் அத்திருமாலுக்கெய்திய வகையைத்தெரிநது கூறினோம். போர்புரியுஞ் சக்கராயுதமுடைய திருமாலுக்கு அநுக்கிரகித்த வகையை மேலுஞ் சொல்லுவோம். எ - று. (க)

ஒருங்கிய மனத்தி யோக முற்றுணர்ந் தொருவா நின்றோ
னருந்தவ முருவு வேண்டி யருந்தவஞ் செய்த தன்னோன்
கருங்கட னிலத்துக் காம முதலிய கடந்தோன் றெய்வப்
பெருங்கு ணச்சம தக்கினி யென்றொரு பேரி னின்றோன்.

(இ - ள்.) ஒன்றுபட்ட மனத்தையுடைய யோகமார்க்கத்தை முழுவது முணர்ந்து அந்நெறியில் நீங்காதிருந்தவரும், அரியதவமே மாநுடவடிவத்தை விரும்பி அரிய தவம்புரிந்ததை யொத்தவரும், கரியகடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தில் காமமுதலியவற்றைச் செயித்தவரும், தெய்வீகத்தங்கிய பெருங்குணமுடையவருமாகிய சமதக்கினியென்ற ஒப்பற்றபேரொளிவிளங்கிய முனிவர் ஒருவருளர். எ - று. (உ)

ஆங்கவற் குயிரே யன்ன வருந்தவச் சிறப்பி னின்றாள்
வாங்கரும் கற்பின் றெய்வப் பத்தினி மடவாண் மெல்லென்
றேங்கிய நுசுப்பி னெல்கு மிரேணுகை யென்பா டன்பாற்
றேங்கமழ் துளவத் தோளான் றிருவவ தாரஞ் செய்தான்.

(இ - ள்.) அச்சமதக்கினி முனிவருக்கு உயிரையே யொத்தவளும், செய்தற்கரிய தவத்தின் மேம்பாட்டிலிருப்பவளும், அரிய கற்பினையுடைய தெய்வீகமுள்ள பத்தினியாக வாய்த்தவளும், மிருதுவாகிய ஏக்கமுற்றுத் துவளுகின்ற இடையை யுடையவளுமாகிய இரேணுகை யென்பவளிடத்தில், மணம் வீசும் துளசிமாலைதரித்த தோளையுடைய திருமால் திருவவதாரஞ் செய்தனர்.

மெய்த்தவச் செல்வ னேக்கி வேட்கைமிக் கெழுந்தான் போந்து
நெய்த்தலைக் குழவி யின்ப நுகர்ந்தன னெகிழ்ந்த சிந்தைத்
தத்தரிச் சிலம்பி னார்க்குந் தளர்நடை தழுவ நின்றான்
வித்தகற் குதவ வேண்டுங் கலையெலாம் விளங்கச் செய்தான்.

(இ - ள்.) உண்மைத்தவச் செல்வராகிய சமதக்கினி முனிவர் புத்திரோற்பத்தியைக்கண்டு விருப்ப மிகுந்துவந்து, மிருதுவான தலையையுடைய அக்குழந்தையி னின்பத்தை யநுபவித்தனர். மனவுருக்கமுற்றனர். அக்குழந்தை பருக்கைக்கற்கள் பொருந்திய சிலம்பணிந்த பாதங்களால் தத்திச் செல்வதாகிய தளர்நடைப் பருவம்வாய்ந்தது. அதன்பின், வித்தியாப்பியாசஞ் செய்யத்தக்க பருவத்தில் அறிவுடைய அக்குழந்தைக்குக் கற்பிக்கவேண்டிய நூல்களையெல்லாம் தெளியும்படி தந்தை யோதுவித்தனர். எ - று. (௯)

பருவமோ ராறு செல்லத் தலைப்படும் பருவந் தன்னிற்
றிருமகள் கொழுநற் கன்னா னான்முறைச சடங்கு செய்தான்
கருணையோ ருருவு கொண்டா லன்னவன் கடனீ ராடைப்
பெருநிலம் பரவ நின்றான் பெருந்தவத் தலைவன் செல்வன்.

(இ - ள்.) ஆறுவயது நடக்கத் தொடங்கும் காலத்தில், லக்ஷ்மிநாயகராகிய அக்குழந்தைக்குச் சமதக்கினிமுனிவர் முறைப்படி உபவீதச்சடங்கைச்செய்தனர். பெருந்தவச் செல்வராகியசமதக்கினி முனிவருடைய புத்திரரான கருணையே ஓருருவெடுத்தாற்போன்ற அப்புத்திரர் நீர் நிரம்பிய கடலே ஆடையாயுடுத்த பெரிய நிலவுலகம் போற்றும்படி யிருந்தனர். எ - று. (௰)

எழுதியோர்ந் துணர வொண்ணா விருக்கெனுங் கடலு மிந்தச்
செழுமறைக் கடலி னோங்கு மாகமத் திரையு நீந்தி
முழுதுணர் வரம்பி னின்று னஃதன்றி முன்ன ரீன்ற
தொழுதகைத் தந்தை நோக்கிச சொற்றன துறந்து நில்லான்.

(இ - ள்.) எழுதி யாராய்ந்தறியப்படாத [எழுதாக்கிளவியாகிய] வேதமென்னுங் கடலையும், செழுமை தங்கிய இவ்வேதக்கடலின் ஓங்குகின்ற ஆகமங்களென்னும் அலைகளையுந் தாண்டி, முற்றுணர்ந்த முடிவிடத்திருந்தனர். அதுவேயன்றி, முதலிலே தம்மைப்பெற்ற யாவராலும் வணங்கற்குரிய தன்மைபொருந்திய தந்தை தம்மைநோக்கித் தந்தகட்டளையைக் கடந்திருக்கும்

இப்பரி சொழுகுங் காலை யீன்றவற் பயந்த தந்தை
துப்புறழ் குடில வேணிக் கருச்சனை தொகுக்குங் காலைக்
கப்பிள முலையி ரேணு கையெனுங் கற்பி னிற்பா
ளப்பெடுத் திரட்டி யென்று மாங்கவற் கருளா நிற்பாள்.

(இ - ள்.) இப்படி நடக்குங் காலத்தில், இவளைப்பெற்ற தந்தையாகிய சமதக்கினி முனிவர், பவளத்தை யொத்த நிறமுடைத்தாய் வட்டவடிவாய்ச் சுற்றிய சடையையுடைய சிவபெருமானை யர்ச்சிக்குஞ் சமயத்தில், கப்புவிட்டாற்போன்ற இளமைதங்கிய முலையையுடைய இரேணுகை யென்பவள், எக்காலத்திலும் அவர்பூசைத்திருமஞ்சனத்திற்குத் தீர்த்தத்தையெடுத்துத்திரட்டிக் கொடுத்துவருவாள். எ - று. (எ)

இற்படு கற்பி னோரைக் கெழுதிய திலக மன்ன
ளற்படு கூந்த லோர்நா ளறலெடுத் திரட்ட வென்று
நிற்புழிக் ககன மீக்கந் திருவனோ நிழலைக் கண்டாள்
கற்படு மனத்த ளந்நாட் சிறிதுளங் கவல்வ தானாள்.

(இ - ள்.) இல்லற நடத்துங் கற்பினையுடைய மாதர்கள் நெற்றியிலிட்ட திலகம்போன்ற, இருள்போலுங் கூந்தலையுடைய இரேணுகை, ஒருநாள் திருமஞ்சன தீர்த்த மெடுத்துத்திரட்ட நிற்கும்போது, ஆகாயத்தின்மேற்செல்லும் ஒருகந்தர்வனுடைய நிழலைநோக்கி, கற்புநிலைமையிற் பதிந்த மனம்வருந்தினளாயினள். எ - று. (அ)

வளைத்தளிர்ச் செங்கை மாட்டி வாரநீர் திரண்டு வாராக்
கிளைத்துளி சிதறி யோட வெருவினள் கிளிமென் சொல்லா
டளிர்க்கையான் மறுத்தும் வாரத் திரண்டில தளிநீ ரன்று
ளிளைத்தன ளுசுபபை யொத்தா ளேங்கின ளுருவ மெல்லாம்.

(இ - ள்.) கிளிபோலும் மிருதுவான சொற்களையுடைய அவ்விரேணுகை, வளையலணிந்து தளிர்போன்றுள்ள தன் கையிற் குடத்தைப்பற்றி நீர்முகக்கையில் அந்நீர் வழக்கப்படி திரண்டுவாராமல், கிளைகளான துளிகளாய்த் தெறித்தோடவும் பயமெய்தியவளாய், மீண்டும் தளிரையொத்த தன்மையான் முகந்தபோதும் குளிர்ந்த நீரானது திரளவில்லை. அப்பொழுது அவ்விரேணுகை தன்னுடல் முழுமையும் இடையேபோ லிளைத்து ஏக்கமெய்தினள். எ - று. (கூ)

கரநெரித் துதரம் வைக்குங் கண்ணிணை சுழலா நிற்கும்
வரனுடைத் தெய்வ நோக்கு மில்லற மாட்சி பார்க்கும்
விரதமா தவனை யெண்ணு மெள்குறும் வெதும்பும் விம்மு
மரவுதீக் கிட[illegible] லென்ன வாகமவெந் தழலா நிற்கும்.

(இ - ள்.) தன் கைகளை நெரித்துக்கொண்டு வயிற்றில் வைத்துப் பிசைவாள். வரத்தைக் கொடுக்குந் தெய்வத்தை மனதிற் சிந்திப்பாள். தன் இல்லறத்தின் சிறப்பைப் பார்ப்பாள். விரதத்தோடு பெருந்தவமேற்கொண்ட முனிவரைச் சிந்தித்து அஞ்சுதலுடையாள். மனம் வெதும்புவாள். புலம்புவாள். பாம்பானது நெருப்பில் வீழ்ந்தாற்போல உடல்வெப்பமெய்தி நெளிவாள். எ - று.